[illegible]

[illegible]

[illegible]

DIGITIZED

X2.3: 417x93
M69
16988

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர்
அருளிச்செய்த நாற்பது பிரபந்தங்கள்
அடங்கிய

# பதினோராந் திருமுறை.

இஃது
மதுரைத்தேவஸ்தான சபையார்களுள் ஒருவரும்
சிவகங்கையைச் சார்ந்த புதூர்
இராமநாதச்செட்டியார் குமாரருமாகிய
**வேங்கடாசலச்செட்டியார்**
கேட்டுக்கொண்டபடி
யாழ்ப்பாணத்து நல்லூர்
**ஆறுமுகநாவலரால்**
பலபிரதிரூபங்களைக்கொண்டு ஒருவாறாராய்ந்து,

சென்னபட்டணம்:
வர்த்தமானதரங்கிணீசாலையச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

சுக்கில௵ வைகாசி௴.

Copyright Reserved.

116986





# சிறப்புப்பாயிரம்.

---

மதுரைத்திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளாதீனத்து

வித்துவான் குறுக்கை

குமாரசுவாமிப்பிள்ளை

உலகுதொழு திமதுரைச் சிவபெருமான் வாக்கா
லுரைத்தருளுந் திருமுகப்பா சுரமுதலாப்பொருந்திக்
குலவுதெருட் பதினொராந் திருமுறையைப் புத்தூர்க்
குணமருவு பிரமநாதச் செட்டியார்பா
லிலகுசிவ பத்தியொடு தனதனெனத் தோன்றி
நேயமுறை வேங்கடா சலக்குரிசி லச்சி
னலகில்புக ழோயியற்றித் தருகவெனச் சோதித்
தாறுமுக நாவலனுஞ் சிறப்பிப்பித் தனனே.

தேவாரத்திற்போலவே பதினொராந்திருமுறைப் பிரபந்தங்களிற் சிலவற்றினும் சில செய்யுள்களும் அடிகளும் சீர்களும் இறந்துபோயின. இறவாதுள்ளவைகளினும் பல மிகப் பிழைபட்டிருக்கின்றன. பலவிடங்களினின்றும் வருவிக்கப்பட் [illegible] ங்களெல்லாவற்றினும். இக்குறைபா [illegible] ற்று... ஆதலாற் சிற்றறிவினையுடைய பசுவாகக் கருதப்பட்ட சிறியேன் சிவானுபூதிப் பெருவாழ்வையுடையோர் திருவாக்கிலே இறந்தவற்றைப் பூர்த்தி செய்தற்கும், பிழைபட்டவற்றை வேறு பிரதிருபங்கொண்டு திருத்துதற்கும் அதிகாரியல்லேன்.

# சூசிபத்திரம்.


| | | பக்கம். |
|---|---|---|
| | க. திருவாலவாயுடையார். | |
| க. | திருமுகப்பாசுரம். - - - - - - - - | க |
| | உ. காரைக்காலம்மையார். | |
| க. | திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். - - - | உ |
| உ. | திருவிரட்டை மணிமாலை. - - - - - - | ௩ |
| ௩. | அற்புதத் திருவந்தாதி. - - - - - - - | ௬ |
| | ௩. ஐயடிகள் காடவர்கோ னாயனார். | |
| க. | க்ஷேத்திரத் திருவெண்பா. - - - - - | உ௩ |
| | ௪. சேரமான்பெருமாணாயனார். | |
| க. | பொன்வண்ணத்தந்தாதி. - - - - - - | ௩௧ |
| உ. | திருவாரூர் மும்மணிக்கோவை. - - - - - | ௪உ |
| ௩. | திருக்கைலாய ஞானவுலா - - - - - - | ௫உ |
| | ௫. நக்கீரதேவர். | |
| க. | கைலைபாதிகாளத்திபாதியந்தாதி. - - - - | ௬௩ |
| உ. | திருவீங்கோய்மலையெழுபது. - - - - - | ௭0 |
| ௩. | திருவலஞ்சுழி மும்மணிக்கோவை. - - - - | ௭௬ |
| ௪. | திருவெழுகூற்றிருக்கை. - - - - - - | ௮௩ |
| ௫. | பெருந்தேவபாணி - - - - - - - - | ௮௫ |
| ௬. | கோபப்பிரசாதம். - - - - - - - - | ௯௭ |
| ௭. | காரெட்டு. - - - - - - - - - | க0க |
| ௮. | போற்றித்திருக்கலிவெண்பா - - - - - | க0உ |
| ௯. | திருமுருகாற்றுப்படை - - - - - - - | க0௫ |
| க0. | திருக்கண்ணப்பதேவர் திருமறம். - - - - | கக௭ |
| | ௬. கல்லாடனார். | |
| க. | திருக்கண்ணப்பதேவர் திருமறம். - - - | கஉ௩ |
| | ௭. கபிலதேவர். | |
| க. | மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை. - | கஉ௫ |
| உ. | சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை. - | கஉ௯ |
| ௩. | சிவபெருமான் திருவந்தாதி. - - - - | க௩௩ |

## ௮. பரணதேவர்.

௧. சிவபெருமான் திருவந்தாதி. - - - - - ௧௪௮

## ௯. இளம்பெருமானடிகள்.

௧. சிவபெருமான் திருமும்மணிக்கோவை. - ௧௬௩

## ௧0. அதிராவடிகள்.

௧. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை. - ௧௭0

## ௧௧. பட்டினத்துப்பிள்ளையார்.

௧. கோயில் நான்மணிமாலை. - - - - - - ௧௭௫
௨. திருக்கழுமல மும்மணிக்கோவை. - - ௧௮௪
௩. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. - - ௨00
௪. திருவேகம்பமுடையார் திருவந்தாதி. - - ௨௨௧
௫. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது. - - ௨௩௫

## ௧௨. நம்பியாண்டார் நம்பி.

௧. விநாயகர் திருவிரட்டைமணிமாலை. - - ௨௪௪
௨. கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம். - - - ௨௪௭
௩. திருத்தொண்டர் திருவந்தாதி. - - - - ௨௫௭
௪. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி. - - ௨௭௩
௫. " திருச்சண்பைவிருத்தம் ௨௮௪
௬. " திருமும்மணிக்கோவை. ௨௯0
௭. " திருவுலாமாலை - - ௨௯௧
௮. " திருக்கலம்பகம். - ௩0௧
௯. " திருத்தொகை - - ௩௨௫
௧0. திருநாவுக்கரசதேவர் திருவேகாதசமாலை. - ௩௨௭

ஆக பிரபந்தங்கள் ௪0.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பதினொராந் திருமுறை.

---

திருவாலவாயுடையார்
அருளிச்செய்த

## திருமுகப்பாசுரம்.

---

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

## திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.

பண் — நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொங்கைதிரங்கிநரம்பெழுந்து குண்டுகண்வெண்பற்குழிவயிற்றுப், பங்கிசிவந்திருபற்கணீண்டு பரடுயர்நீள்கணைக்காலோர்பெண்பேய், தங்கியலறியுலறுகாட்டிற் றாழ்சடையெட்டுத்திசையும்வீசி, யங்கங்குளிர்ந்தனலாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (க)

கள்ளிக்கவட்டிடைக்காலைநீட்டிக் கடைக்கொள்ளிவாங்கிமசித்துமையை, விள்ளவெழுதிவெடுவெடென்ன நக்குவெருண்டுவிலங்குபார்த்துத், துள்ளிச்சுடலைச்சுடுபிணத்தீச் சுட்டிட்டுமுறமுந்தனிந்தழுந்தி, யள்ளியயில்கின்றாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (உ)

வாகைவிரிந்துவெண்ணெற்றொலிப்ப மயங்கிருள்கூர்நட்டமாளாயாங்கே, கூகையொடாண்டலைபாடவாந்தை கோடதன்மேற்குதித்தோடவீசி, யீமைபடர்தொடர்கள்ளிநீழ லீமமிடுகாட்டகத்தே, யங்கங்குளிர்ந்தனலாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (ங)

குண்டிலோமக்குழிச்சோற்றைவாங்கிக் குறுநரிதின்னவதனைமுன்னே, கண்டிலோமென்றுகனன்றுபேய்கள் கையடித்தோடிடுகாடரங்கா, மண்டலநின்றங்குளாளமிட்டு வாதித்துவீசியெடுத்தபாத, மண்டமுறநிமிர்ந்தாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே.



விழுதுநிணத்தைவிழுங்கியிட்டு வெண்டலைமாலைவிரவப்பூட்டிக், கழுதுதன்பிள்ளையைக்காளியென்று பேரிட்டுச்சீருடைத்தாவளர்த்துப், புழுதியுடைத்தமுலைகொடுத்துப் போயினதாயைவரவுகாணா, தழுதுறங்கும்புறங்காட்டிலாடு மப்பனிடந்திருவாலங்காடே. (ரு)

பட்டடிநெட்டுகிர்ப்பாறுகாற்பேய் பருந்தொடுகூகைபகண்டையார்ந்தை, குட்டியிடமுட்டைக்கூகைப்பேய்கள் குறுநரிசென்றணங்காடுகாட்டிற், பிட்டடித்துப்புறங்காட்டிலிட்ட பிணத்தினைப்பேரப்புரட்டியாங்கே, யட்டமேபாயநின்றாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (சு)

சுழலுமழல்விழிக்கொள்ளிவாய்ப்பேய் சூழ்ந்துதுணங்கையிட்டோடியாடித், தழலுளெரியும்பிணத்தைவாங்கித் தான்றடிதின்றணங்காடுகாட்டிற், கழலொலியோசைச்சிலம்பொலிப்பக் காலுயர்வட்டணையிட்டுநட்ட, மழலுமிழ்ந்தோரிகதிக்கவாடு மப்பனிடந்திருவாலங்காடே. (எ)

நாடுநகருந்திரிந்துசென்று நன்னெறிநாடிநயந்தவரை, மூடுமுதுபிணத்திட்டமாட்டே முன்னியபேய்க்கணஞ்சூழச்சூழக், காடுங்கடலுமலையுமண்ணும் விண்ணுஞ்சுழலவனல்கையேந்தி, யாடுமரவப்புயங்கனெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (அ)

துத்தங்கைக்கிள்ளைவிளரிதார முழையிளியோசைபண்கெழுமப்பாடிச், சச்சரிகொக்கரைதக்கையோடு தகுணிதந்துந்துபிதாளம்வீணை, மத்தளங்கரடிகைவன்கைமென்றோற் றமருகங்குடமுழாமொந்தைவாசித், தத்தனைவிரவினோடாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. (கூ)

புந்திகலங்கிமதிமயங்கி யிறந்தவரைப்புறங்காட்டிலிட்டுச் சந்தியில்வைத்துக்கடமைசெய்து தக்கவரிட்டசெந்தீவிளக்கா முந்தியமரர்முழவினோசை திசைகதுவச்சிலம்பார்க்கவார்க்க வந்தியின்மாநடமாடுமெங்களப்பனிடந்திருவாலங்காடே. (க0)

ஒப்பினையில்லவன்பேய்கள்கூடி யொன்றினையொன்றடித்
தொக்கலித்துப், பப்பினையிட்டுப்பகண்டைபாடப் பாடிருந்தந்
நரியாழமைப்ப, அப்பனையணிதிருவாலங்காட்டெ மடிகளைச்செ
டிதலைக்காரைக்காற்பேய், செப்பியசெந்தமிழ்பத்தும்வல்லார்
சிவகதிசேர்ந்தின்பமெய்துவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## மூத்ததிருப்பதிகம். பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டியிலவமீகைசூரைகாரைபடர்ந்தெங்குஞ்
சுட்டசுடலைசூழ்ந்தகள்ளிசோர்ந்தகுடர்கௌவப்
பட்டபிணங்கள்பரந்தகாட்டிற்பறைபோல்விழிகட்பேய்
கொட்டமுழவங்கூளிபாடக்குழகனாடுமே. (௧)

நிணந்தானுருகிநிலந்தானனைப்பநெடும்பற்குழிகட்பேய்
துணங்கையெறிந்துசூழுநோக்கிச்சுடலைவிழிந்தெங்குங்
கணங்கள்கூடிப்பிணங்கள்மாந்திக்களித்தமனத்தவா
யணங்குகாட்டிலனல்கையேந்தியழகனாடுமே. (௨)

புட்கள்பொதுத்தபுலால்வெண்டலையைப்புறமேநரிகவ்வ
வட்கென்றழைப்பவாந்தைவீசவருகேசிறுகூகை
யுட்கவிழிக்கவூமன்வெருட்டவோரிகதித்தெங்கும்
பிட்கநட்டம்பேணுமிறைவன்பெயரும்பெருங்காடே. (௩)

செத்தபிணத்தைத்தெளியாதொருபேய்சென்றுவிரல்சுட்டிக்
கத்தியுறுமிக்கனல்விட்டெறிந்துகடக்கப்பாய்ந்துபோய்ப்
பத்தல்வயிற்றைப்பதைக்கமோதிப்பலபேயிரிந்தோடப்
பித்தவேடங்கொண்டுநட்டம்பெருமானாடுமே. (௪)

முள்ளிதீந்துமுளரிகருகிமூளைசொரிந்துக்குக்
கள்ளிவற்றிவெள்ளில்பிறங்குகடுவெங்காட்டுள்ளே
புள்ளியுழைமான்றோலொன்றுடுத்துப்புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளியிடமுமதுவேயாகப்பரமனாடுமே. (௫)



வாளைக்கிளரவளைவாளெயிற்றுவண்ணச்சிறுகூகை
மூளைத்தலையும்பிணமும்விழுங்கிமுரலுமுதுகாட்டிற்
றாளிப்பனையினிலைபோன்மயிர்க்கட்டழல்வாயழல்கட்பேய்
கூளிக்கணங்கள்குழலோடியம்பக்குழகனாடுமே. (௬)

கொந்திக்கிடந்தசுடலைதடவிநுகரும்புழுக்கின்றிச்
சிந்தித்திருந்தங்குறங்குஞ்சிறுபேய்சிரமப்படுகாட்டின்
முந்தியமரர்முழவினோசைமுறைமைவழுவாமே
யந்திநிருத்தமனல்கையேந்தியழகனாடுமே. (௭)

வேய்களோங்கிவெண்முத்துதிரவெடிகொள்சுடலையு
ளோயுருவிலுலாவூகூந்தலைநெருப்புவாய
பேய்கள்கூடிப்பிணங்கண்மாந்தியணங்கும்பெருங்காட்டின்
மாயனாடமலையான்மகளுமருண்டுநோக்குமே. (௮)

கடுவனுகளுங்கழைசூழ்பொதும்பிற்கழுதும்பேயுமா
யிடுவெண்டலையுமீமப்புகையுமெழுந்தபெருங்காட்டிற் [ப்
கொடுவெண்மழுவும்பிறையுந்ததும்பக்கொள்ளென்றிசைபாட
படுவெண்டுடியும்பறையுங்கறங்கப்பரமனாடுமே. (௯)

குண்டைவயிற்றுக்குறியசிறியநெடியபிறங்கற்பே
யிண்டுபடர்ந்தவிருள்சூழ்மயானத்தெரிவாயெயிற்றுப்பேய்
கொண்டுகுழலிதடவிவெருட்டிக்கொள்ளென்றிசைபாட
மிண்டிமிளிர்ந்தசடைகடாழவிமலனாடுமே. (௧௦)

சூடுமதியஞ்சடைமேலுடையார்சுழல்வார்திருநட்ட
மாடுமரவமரையிலார்த்தவடிகளருளாலே
காடுமலிந்தகனல்வாயெயிற்றுக்காரைக்காற்பேய்தன்
பாடல்பத்தும்பாடியாடப்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

# திருவிரட்டைமணிமாலை.

---

கிளர்ந்துந்துவெந்துயர்வந்தடும்போதஞ்சிநெஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருந்துதவிர்திகண்டாய்தளராதவன்றி
வளர்ந்துந்துகங்கையும்வானத்திடைவளர்கோட்டுவெள்ளை
யிளந்திங்களுமெருக்குமிருக்குஞ்சென்னியீசனுக்கே. (க)

ஈசனவனல்லாதில்லையெனநினைந்து
கூசிமனத்தகத்துக்கொண்டிருந்து — பேசி
மறவாதுவாழ்வாரைமன்னுலகத்தென்றும்
பிறவாமைக்காக்கும்பிரான். (உ)

பிரானென்றுதன்னைப் பன்னாட்பரவித் தொழுவாரிடர்கண்
டிரானென்னநிற்கின்றவீசன்கண்டீரினவண்டுகிண்டிப் [ளாவா
பொராவின்றகொன்றைப் பொதும்பர்க்கிடந்து பொம்மென்று
யராவின்றிளைக்குஞ்சடைச்செம்பொனின்முடியந்தணனே.

அந்தணனைத்தஞ்சமென்றாட்பட்டாராமே
வந்தணைந்துகாத்தளிக்கும்வல்லாளன் — கொந்தணைந்த
பொன்கண்டாற்பூணுந்தகோணாகம்பூண்டானே
யென்கண்டாய்நெஞ்சேயினி. (௩)

இனிவார்சடையினிற்கங்கையென்பாளையங்கத்திருந்த
கனிவாய்மலைமங்கைகாணிலென்செய்திகையிற்றேயாள்
முனிவார்திரிபுரமூன்றும்வெந்தன்றுசெந்தீயின்மூழ்கத்
தனிவார்கணையொன்றினான்மிகக்கோத்தவெஞ்சங்கரனே. (௪)

சங்கரனைத்தாழ்ந்தசடையானைச்சடைமேற்
பொங்கரவம்வைத்துகந்தபுண்ணியனை — யங்கொருநா
ளாவாவென்றாழாமைக்காப்பானையெப்பொழுது
மோவாதுநெஞ்சேயுரை. (௫)



உரைக்கப்படுவதுமொன்றுண்டுகேட்கிற்செல்வாருடை
யே, விரைக்கின்றபாம்பினையென்றுந்தொடேலிழிந்தோட்டந்
தெங்குருந்,திரைக்கின்றகங்கையுந்தேனின்றகொன்றையுஞ்செஞ்
சடைமேல், விரைக்கின்றவன்னியுஞ்சென்னித்தலைவைத்தவேதி
யனே. (எ)

வேதியனைவேதப்பொருளானைவேதத்துக்
காதியனையாதிரைநன்னாளானைச் — சோதிப்பான்
வல்லேனமாய்ப்புக்குமாலவனுமாட்டாது
இல்லேனமாவென்றானீடு. (அ)

கிழாயினதுன்பவெள்ளக்கடற்றள்ளியுள்ளுறப்போய்
விழாதிருந்தின்பம்வேண்டுமென்பீர்விரவார்புரங்கள்
பாழாயிடக்கண்டகண்டனெண்டோளன்பைம்பொற்கழலே
தாழாதிறைஞ்சிப்பணி[illegible]தலைக்கணியே. (௯)

தலையாயவையாறினையுஞ்சாதித்துத்தாழ்ந்து
தலையாயினவுணர்ந்தோர்காண்பர் — தலையாய
வண்டத்தானாதிரையானாலமுண்டிருண்ட
கண்டத்தான்செம்பொற்கழல். (௧௦)

கழற்கொண்டசேவடிகாணலுற்றார் தம்மைப்பேணலுற்றார்
பிழைக்கண்டபோழ்தத்தும் நில்லாவினைகளோதாமின்றித் [ளைய
கழற்கொண்டசோதிச் செம்மேனியெம்மானைக் கைம்மாமலை
தொழக்கல்லுமிற்றிக்கருப்போதுன்னிநம்மடுக்கொல்வினையே.

தொல்லைவினைவந்தணுகாமுன்றொழாமே
யொல்லைவணங்கியுமையென்று — மெல்லியலோர்
கூறுடையைக்கூற்றுருவாங்காலன்றாளவாய்த்திலங்கு
நீறுடையைநெஞ்சேநினை. (௧௨)

நினையாதொழுதிகண்டாய்நெஞ்சமேயிங்கோர்தஞ்சமென்று
மனையாளையுமக்கடம்மையுந்தேறியோராதுபுக்கு
நனையாச்சடைமுடிமேலாற்றானதொந்தாதசெந்தீ
யனையானமரர்பிரானண்டவாணனடித்தலமே. (௧௩)

அடித்தலத்தினின்றரக்கனைக்கான்றுதோளு
மூடித்தலமுமிறுத்தவாறென்—முடித்தலத்தி
லாறுடையானுவனையடியவனனி
னீறுடைநெய்யாடிக்கு, (கச)

நீயின்றுதானவர்மாமதின்மூன்றுமிருந்தடனே
தீயின்றவேலைச்சிலைதொட்டவாறென்றிருந்துவல்வாய்ப்
பேயின்றுபாடப்பெருங்காட்டரங்காப்பெயர்ந்துநட்டம்
போயின்றுயர்த்தொழச்செய்யுமெய்ச்சுற்றப்புண்ணியனே.

புண்ணியங்கள்செய்தனவும்பொய்கெடுக்கட்சாராமே
யெண்ணியோராறிவைசந்தவாற்—றிண்ணிய
கைம்மாவினீருரிவையுமுருவும்போர்த்துகந்த
வம்மானைக்காட்டபட்டவன்ப, (கசு)

அன்பாலடைவதெய்வாறுவொன்மேலதோர்ட்டரவந்
தன்பாலொருவனைச்சாரவொட்டார்தந்தேவியுமன்றி
முன்பாயினதலையோடுகள்கோத்தவையார்த்துவெள்ளை
யென்பாயினவுமணிந்தங்கோரேறுகந்தேறுவதே. (கஎ)

ஏறலாலேறமற்றில்லையேயெம்பெருமா
னூறெலாம்பாயுமவிர்சடையார்—வேறேர்
படங்குலவுநாகமுமிழ்பண்டமரர்க்குய்த்த
தடங்கடனஞ்சுண்டார்தமக்கு. (கஅ)

தமக்கென்றுமின்பணிசெய்திருப்பேமுக்குத்தாமொருநா
ளெமக்கென்றுசொன்னலுருத்தங்கொலாமிளையாதுமின்றிச்
சுமக்கின்றபிள்ளைவெள்ளேறொப்ப தொன்றுதொன்னடைக்கணி
யுமைக்கென்றுதேடிப்பெறுதடனேகொண்டுவந்தமையோ. [வோ

உத்தமராய்வாழ்வாருலர்தக்காலுற்றார்கள்
செத்தமரம்பேக்கித்தீயாமு—மத்தமரும்
நீனாழிகஞ்சுண்டசெய்யாடிதன்றிறமே
சேனாழிநெஞ்சேநினைந்து. (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

# அற்புதத்திருவந்தாதி.

———0———

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்தவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர். (க)

இடர்களையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறாக்கோலத்தெரியாடுமெம்மானார்க்
கன்பறாதென்னெஞ்சவர்க்கு. (உ)

அவர்க்கேயெழுபிறப்புமாளாவோமென்று
மவர்க்கேநாமன்பாவதல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ்சூடுமவர்க்கல்லான்மற்றொருவர்க்
காகாப்போமெஞ்ஞான்றுமாள். (ங)

ஆளானோமல்லல்லவியமுறையிட்டாற்
கேளாததென்கொலோகேளாமே—நீளாகஞ்
செம்மையாகித்திருமிடற்றுமற்றொன்று
மெம்மையாட்கொண்டவிறை. (ச)

இறைவனேயெவ்வுயிருந்தோற்றுவிப்பான்றோற்றி
யிறைவனேயீண்டிறக்கஞ்செய்வா—னிறைவனே
யெந்தாயெனவிரங்குமெங்கண்மேல்வெந்துயரம்
வந்தாலதுமாற்றுவான். (ரு)

வானத்தானென்பாருமென்கமற்றும்பர்கோன்
றானத்தானென்பாருந்தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்டமெய்யொளிசேர்கண்டத்தா
னென்னெஞ்சத்தானென்பனியான். (சு)

யானேதவமுடையேனென்னெஞ்சேநன்னெஞ்சம்
யானேபிறப்பறுப்பானெண்ணினேன்—யானேயக்
கைம்மாவுரிபோர்த்தகனலாடும்வெண்ணீற்ற
வெம்மானுக்காளாயினேன். (எ)

ஆயினேனாள்வானுக்கன்றேபெறற்கரிய
தாயினேனஃதன்றேயாமாறு—தூய
புனற்கங்கையேற்றான்பொன்வரையேபோல்வா
னனற்கங்கையேற்றானருள். (அ)

அருளேயுலகெலாமாள்விப்பதீச
னருளேபிறப்பறுப்பதானால்—அருளாலே
மெய்ப்பொருளைநோக்கும்விதியுடையேனெஞ்ஞான்று
மெப்பொருளுமாவதெனக்கு. (கூ)

எனக்கினியவெம்மானையீசனையானென்று
மனக்கினியவைப்பாகவைத்தே—னெனக்கவனைக்
கொண்டேன்பிரானாகக்கொள்வதுமேயின்புற்றே
னுண்டேயெனக்கரியதொன்று. (க0)

ஒன்றேநினைந்திருந்தேனொன்றேதுணிந்தொழிந்தே
னொன்றேயென்னுள்ளத்தினுள்ளடைத்தே—னொன்றேகாண்
கங்கையான்றிங்கட்கதிர்முடியான்பொங்கொளிசே
ரங்கையாற்காளாமது. (கக)

அதுவேபிரானாமாறாட்கொள்ளுமாறு
மதுவேயினியறிந்தோமானா—லதுவே
பனிக்கணங்குகண்ணியாரொண்ணுதலின்மேலோர்
தனிக்கணங்குவைத்தார்தகவு. (கஉ)

தகவுடையார்தாமுளரேற்றாரதலஞ்சாரப்
புகவிடுதல்பொல்லாதுகண்டீர்—மிகவடர
ஊர்ந்திடுமாநாகமொருநாண்மதிமகனைச்
சார்ந்திடுமேலேபாவந்தான். (கங)



தானேதனிநெஞ்சந்தன்னையுய்த்தொள்வான்
றானேபெருஞ்சேமஞ்செய்யுமாற்—றானேயோர்
பூணாகந்தாற்பொலிந்துபொங்கழல்சேர்நஞ்சமிழு
நீணாகத்தானைநினைந்து. (கச)

நினைந்திருந்துவானவர்கணீண்மலர்ப்பாதம்
புனைந்துமடிபொருந்தமாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான்செஞ்சடையாய்வேதியனேயென்கின்றே
னென்செய்வான்கொல்லோவினி. (கரு)

இனியோநாமுய்ந்தோமிறைவனருள்சேர்ந்தோ
மினியோரிடரில்லோநெஞ்சே—இனியோர்
வினைக்கடலையாக்குவிக்குமீளாப்பிறவிக்
கனைக்கடலைநீந்தினோங்காண். (கசு)

காண்பார்க்குங்காணலாந்தன்மையனைக்கைதொழுது
காண்பார்க்குங்காணலாங்காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச்சிந்தையுளேதோன்றுமேதொல்லுலகுக்
காதியாய்நின்றவரன். (கஎ)

அரனென்கோநான்முகனென்கோவரிய
பரனென்கோபண்புணரமாட்டேன்—முரணழியத்
தானவனைப்பாதத்தனிவிரலாற்செற்றானை
யானவனையெம்மானையின்று. (கஅ)

இன்றுநமக்கெளிதேமாலுக்குநான்முகற்கு
மன்றுமளப்பரியனானானை—யென்றுமோர்
மூவாமதியானைமூவேழுலகங்க
ளாவானைக்காணுமறிவு. (கக)

அறிவானுந்தானேயறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானேவிரிசுடர்பாரகாச
மப்பொருளுந்தானேயவன். (உ0)

அவனேயிருசுடர்தீயாகாசமாவா
னவனேபுவிபுனல்காற்றாவா—னவனே
யியமானனாயட்டமூர்த்தியுமாய்ஞான
மயனாகிநின்றானும்வந்து. (உக)

வந்திதனைக்கொள்வதேயொக்குமிவ்வாளரவின்
சிந்தையதுதெரிந்துகாண்மினோ—வந்தோ
கிராகிருண்டனையகண்டத்தெங்கள்
பிரானிருஞ்சென்னிப்பிறை. (உஉ)

பிறையும்புனலுமனலரவுஞ்சூடு
மிறைவரெமக்கிரங்காரேனுங்—கறைமிடற்ற
வெந்தையார்க்காட்பட்டேமென்றிருக்குமே
யெந்தையாயுள்ளமிது. (உங)

இவன்றேயீசன்றிருவுருவமாமா
றிவன்றேயெனக்கோர்சேமம்—இவன்றே
மின்றாஞ்சுடருருவாய்மீண்டாயென்சிந்தனைக்கே
யின்றாஞ்சுழல்கின்றதிங்கு. (உச)

இங்கிருந்துசொல்லுவதெனெம்பெருமானென்றுதே
யெங்கும்பலிதிரியுமெத்திறமும்—பொங்கிரவி
லேமவனத்தாடுவதுமென்றுமக்கென்றாராய்வோ
மாமவனைக்காணலுற்றஞான்று. (உரு)

ஞான்றவீழ்ச்சடைகள்பொன்வரைபோன்மின்னுவன
போன்றகறைமிடற்றான்பொன்மார்பின்—ஞான்றிலங்கு
மிக்கயலேதோன்றலினோங்கிவிளங்குமே
யக்கயலேவைத்தவரவு. (உசு)

அரவமொன்றாகத்துநீயணிந்துபூணேல்
பரவித்தொழுதிரந்தோம்பன்னாண்—முரணழிய
வொன்றோடொன்றொவ்வாவெயிலுமோரம்பாலெய்தானே
பொன்னாரமற்றொன்றுபூண். (உஎ)



பூணாகவொன்றனைப்பூண்டொன்றுபொங்கதனி
நாணாகமேன்மிளிரநன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற்சூடுவதுமெல்லாம்பொறியிலியேற்
கென்முடிவதாகவிவர். (உஅ)

இவரைப்பொருளுணரமாட்டாதாரெல்லா
மிவரையிகழ்வதேகண்டு—மிவர்தமது
பூக்கோலமேனிப்பொடிபூசியென்பணிந்த
பேய்க்கோலங்கண்டார்பிறர். (உகூ)

பிறரறியலாகாப்பெருமையருந்தாமே
பிறரறியும்பேருணர்வுந்தாமே—பிறருடைய
வென்பேயணிந்திரவிற்றீயாடுமெம்மானா
ரன்பேயுந்தாமுமகிழ்ந்து. (ஙo)

மகிழ்திமடநெஞ்சேமானுடரினீயுந்
திகழ்ந்தபெருஞ்செல்வஞ்சேர்ந்தா—யிகழாதே
யாரென்பேயேனுமணிந்துழல்வார்க்காட்பட்ட
பேரன்பேயின்னும்பெருக்கு. (ஙக)

பெருகொளியசெஞ்சடைமேற்பிள்ளைப்பிறையி
னொருகதிரேபோற்றொழுகிற்றொக்குந்—தெரியின்
முதற்கண்ணான்முப்புரங்களன்றெரித்தான்மூவா
நுதற்கண்ணான்றன்மார்பினூல். (ஙஉ)

நூலறிவுபேசிநுழைவிலாதார்திரிக
நீலமணிமிடற்றானீர்மையே—மேலுவந்த
தெக்கோலத்தெவ்வுருவாயெத்தவங்கள்செய்வார்க்கு
மக்கோலத்தவ்வுருவேயாம். (ஙங)

ஆமாறறியாவேவல்வினைகளந்தரத்தே
நாமாளென்றேத்தார்கண்முன்றம்—வேமா
றொருகணையாற்செற்றானையுள்ளத்தாலுள்ளி
யருகணையார்தாமடைந்து. (ஙச)

அடுங்கண்டாய்வெண்மதியென்றஞ்சியிருள்போ
யிடங்கொண்டிருக்கின்றதொக்கும்—படங்கொ

அணிமிடற்றதேயழவாயரவைச்சுற்றாம்போல
மணிமிடற்றினுள்ளமறு. (௩௫)

மறுவுடையகண்டத்தீர்வார்சடைமேனாகந்
தெறுமென்றுதேய்ந்துழலுமாலோ—வுறுவான்
றளரமீதோடுமேற்றானதனையஞ்சி
வளருமோபிள்ளைமதி. (௩௬)

மதியாவடலவுணர்மாமதின்மூன்றட்ட
மதியார்வளர்சடையினானை—மதியாலே
யென்பாக்கையாலிகழாதேத்துவரேயிவ்வுலகி
லென்பாக்கையாய்ப்பிறவாரீண்டு. (௩௭)

ஈண்டொளிசேர்வானத்தெழுமதியைவாளரவந்
தீண்டச்சிறுகியதேபோலாதே—பூண்டதோர்
தாரேறுபாம்புடையான்மார்பிற்றவழ்ந்திலங்கு
கூரேறுகாரேனக்கொம்பு. (௩௮)

கொம்பினையோர்பாகத்துக்கொண்டுகுழகன்ற
னம்பவளமேனியதுமுன்னரு—செம்பொ
னணிவரையேபோலும்பொடியணிந்தால்வெள்ளி
மணிவரையேபோலுமறித்து. (௩௯)

மறித்துமடநெஞ்சேவாயாலுஞ்சொல்லிக்
குறித்துத்தொழுதொண்டர்பாதங்—குறித்தொருவர்
கொள்ளாதவிங்கட்குறும்பெண்ணிகொண்டார்மாட்
டுள்ளாதார்கூட்டமொருவு. (௪0)

ஒருபாலுலகளந்தமாலவனாமற்றை
யொருபாலுமையவளாமென்றா—லிருபாலு
நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமா
னின்னுருவோமின்னுருவோநேர்ந்து. (௪௧)

நேர்ந்தரவங்கொள்ளச்சிறுகிற்றேநீயதனை
யீர்ந்தளவேகொண்டிசையவைத்தாயோ—பேர்ந்து
வளர்ந்துழலித்தாய்வளரமாட்டாதோவென்றே
யிளங்குழவித்திங்களிது. (௪௨)



இங்கிளங்குடிச்சில்பலிக்கென்றூர்திரியே
லெங்கள்பெருமானேயென்றிரந்து—பொங்கொளிய
வானோர்விலக்காரேல்யாம்விலக்கவல்லமே
தானேயறிவான்றனக்கு. (௪௩)

தனக்கேயடியனாய்த்தன்னடைந்துவாழு
மெனக்கேயருளாவாறென்கொல்—மனக்கினிய
சீராளன்கங்கைமணவாளன்செம்மேனிப்
பேராளன்வானோர்பிரான். (௪௪)

பிரானவனைநோக்கும்பெருநெறியேபேணிப்
பிரானவன்றன்பேரருளேவேண்டிப்—பிரானவனை
யெங்குற்றானென்பீர்களென்போல்வார்சிந்தையினு
மிங்குற்றான்காண்பார்க்கெளிது. (௪௫)

எளியதொவன்றேயழகாளயா
மளியசரிவிசீராவா—வொளிகொண்மிடற்
றெந்தையராப்பூண்டுழலுமெம்மானையுள்ளளிக்குத
சிந்தையராய்வாழுந்திறம். (௪௬)

இறந்தான்மடநெஞ்சேசென்றடைவதல்லாற்
பெறுத்தானுமின்றேபோதாய்—இறந்த
விருவடிக்கணேழைக்கொருபாகமீந்தான்
றிருவடிக்கட்சேருந்திரு. (௪௭)

திருமார்பிலேனச்செழுமருப்பைப்பார்க்கும்
பெருமான்பிறைக்கொழுந்தைநோக்கு—மொருநா
ளிதுமதியென்றொன்றாகவின்றளவுந்தேரா
ததுமதியொன்றில்லாவரா. (௪௮)

அராவினாத்தீனையவங்குழவித்திங்கள்
விராவுகதிர்விரியவோடி—விராவுதலாற்
பொன்றோடுவெள்ளிப்புரிபுரிந்தாற்போலாவே
தன்றோடேயொப்பான்சடை. (௪௯)

சடைமேலக்கொன்றைதருகனிகள்போந்து
புடைமேவித்தாழ்ந்தனவேபோலு—முடிமேல்

வலப்பாலைக்கோலமதியைத்தான்றன்பங்கின்
குலப்பாவைக்கேக்குழல். (௫0)

குழலார்சிறுபுறத்துக்கோல்வளையைப்பாகத்
தெழிலாகவைத்தேகவேண்டா—கழலார்ப்பப்
பேரிரவில்மப்பெருங்காட்டிற்பேயோடு
மாரழல்வாய்நீயாடுமங்கு. (௫௧)

அங்கண்முழுமதியஞ்செக்கரல்வானத்
தெங்குமிளிதெழுந்தாலொவ்வாதே—செங்கட்
டிருமாலைப்பங்குடையான்செஞ்சடைமேல்வைத்த
திருமாலைத்தோன்றவைத்தோர்சீர். (௫௨)

சீரார்ந்தகொன்றைமலர்நுழைப்பச்சேறலவி
நீரார்ந்தபேரியாறுநீத்தமாய்—போரார்ந்த
நாண்பாம்புகொண்டசைத்தகம்பீசனைமுடித்தான்
காண்பார்க்குச்செவ்வேயோர்கார். (௫௩)

காருருவக்கண்டத்தெங்கண்ணுதலேயெங்கொளித்தா
யோருருவாய்நின்னோடுழிதருவா—னீருருவ
மேகத்தாற்செய்தனையமேனியானின்னுடைய
பாகத்தான்காணுமேபண்டு. (௫௪)

பண்டமரஞ்சப்படவினஞ்சுண்டு
கண்டங்கறுத்ததுவுமன்றியே—யுண்டு
பனியுறவார்செஞ்சடைமேற்பான்மதியினுள்ளே
மணிமறுவாய்த்தோன்றுமது. (௫௫)

வடிவென்றனக்கருளிமேனித்தியாயிற்
சுடுவெண்பொடிநிறத்தாய்சொல்லாய்—படுவெண்
புலாற்றலையினுள்ளூன்புறம்பேசக்கேட்டோ
நிலாத்தலையிற்சூடினாய்நீ. (௫௬)

நீயுலகமெல்லாமிரப்பினுநின்னுடைய
தீயவரவொழியச்செல்கண்டாய்—தூய
மடவரலார்வந்துபலியிடாரஞ்சி
விடவரவமேலாடமிக்கு. (௫௭)



மிக்கமுழங்கெரியும்வீங்கியபொங்கிருளு
மொக்கவுடனிருந்தாலொவ்வாதே—செக்கர்போ
லாகத்தான்செஞ்சடையுமாங்கவன்றன்பொன்னுருவிற்
பாகத்தாள்பூங்குழலும்பண்பு. (௫௮)

பண்புணரமாட்டேனணிநீயேபணித்தக்கால்
கண்புணருநெற்றிக்கறைக்கண்டா—பெண்புணரு
மவ்வுருவோமாலுருவோவானேற்றாய்நீறணிவ
தெவ்வுருவோநின்னுருவமேல். (௫௯)

மேலாயமேகங்கள்கூடியோர்பொன்விலங்கல்
போலாமொளிபுதைத்தாலொவ்வாதே—மாலாய
கைம்மாமதக்களிற்றுக்காருரிவைபோர்த்தபோ
தம்மான்றிருமேனியன்று. (௬0)

அன்றுந்திருவுருவங்காணாதேயாட்பட்டே
னின்றுந்திருவுருவங்காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோநும்பிரானென்பார்கட்கென்னுரைக்கே
னெவ்வுருவோநின்னுருவமேது. (௬௧)

ஏதொக்குமேதொவ்வாதேதாகுமேதாகா
தேதொக்குமென்பதனையாரறிவார்—பூதப்பால்
வில்வேடனாகிவிசயனோடேற்றநாள்
வல்வேடனானவடிவு. (௬௨)

வடிவுடையசெங்கதிர்க்குமாறாய்ப்பகலே
நெடிதுலவிநின்றெறிக்குங்கொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன்றில்லாதசோதியாய்சொல்லாயா
னின்முடிமேற்றிங்களொளி. (௬௩)

நிலாவிலங்குவெண்மதியைநேடிக்கொள்வான்போ
லுலாவியுழிதருமாகொல்லோ—நிலாவிருந்த
செக்கர்வானமேயொக்குந்திருமுடிக்கே
புக்கரவங்காலையேபோன்று. (௬௪)

காலையேபோன்றிலங்குமேனிகடும்பகலின்
வேலையேபோன்றிலங்கும்வெண்ணீறு—மாலையின்

ணங்குருவேபோலுஞ்சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளேபோலும்மிடறு. (௬௫)

மிடற்றில்விடமுடையீருமிடற்றைநக்கி
விடற்றில்விடங்கொண்டவாறே—மிடற்றகத்து
மைத்தாமிருள்போலும்வல்லனைர்கரிதாலோ
வைத்தாடுமார்பிற்பாம்பு. (௬௬)

பாம்புமதியுமடமானும்பாய்புலியுந்
தாம்பயின்றுதாளருவினார்க்குதலா—லாம்பொ
னுருவடிவிலோங்கொலிசேர்கண்ணுதலான்கோலத்
திருவடியின்மேய்சிலம்பு. (௬௭)

சிலம்படியாளூடலைத்தான்றவிர்ப்பான்வேண்டிச்
சிலம்படிமேற்செவ்வரத்தஞ்சேர்த்தி—நலம்பெற்
றெதிராயசெக்கரிளமிக்கோலஞ்செய்தான்
முதிராமதியான்முடி. (௬௮)

முடிமேற்கொடுமதியான்முக்கணானல்ல
வடிமேற்கொடுமதியோமாய்க்கூற்றைப்—படிமேற்
குனியவலமாமடிமைகொண்டாடப்பெற்றே
மினியவலமுண்டோவெமக்கு. (௬௯)

எமக்கிதுவோபேராசையென்றுந்தவிரா
தெமக்கொருநாள்காட்டுதியோவெந்தா—யமைக்கவே
போர்த்தெரியாய்த்தன்னபுரிசடையாய்பொங்கெரி
மேலத்தெரியாய்த்தாடுமிடம். (௭0)

இடப்பாலவானத்தெழுமதியைநீயோர்
மடப்பாவைதன்னருகேவைத்தா—லிடப்பாகங்
கொண்டாண்மலைப்பாவைகூறென்றுங்கண்டிலங்காண்
கண்டாயேமுக்கண்ணாய்கண். (௭௧)

கண்டெந்தையென்றிறைஞ்சிக்கைப்பணியான்செய்யேனே
லண்டம்பெறினுமதுவேண்டேன்—துண்டஞ்சேர்
விண்ணாலுந்திங்களாய்மிக்குலகமேழினுக்குங்
கண்ணானாயீதென்கருத்து. (௭௨)



கருத்தினுனீகருதிற்றெல்லாமுடனே
திருத்தலாஞ்சிக்கெனநான்சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீரேற்றானடிக்கமலநீவிரும்பி
யுள்ளமேயெப்போதுமோது. (௭௩)

ஓதநெடுங்கடல்களெத்தனையுமுய்த்தட்ட
வேதுநிறைந்திலவென்பராற்—பேதையர்க
ளெண்ணுந்தம்பலியாலென்றோநிறைந்தவா
கண்ணுதலார்கபாலக்கலம். (௭௪)

கலங்குபுனற்கங்கையூடாடலாலு
மிலங்குமதியியங்கலாலு—நலங்கொள்
பரிசடையானீண்முடிமேற்பாம்பியங்கலாலும்
விரிசடையாங்காணில்விசும்பு. (௭௫)

விசும்பில்விதியுடையவிண்ணோர்பணிந்து
பசும்பொன்மணிமகுடந்தேய்ப்ப—முசிந்தெங்கு
மெந்தாய்தழும்பேறியபாவம்பொல்லாவா
மந்தாமரைபோலடி. (௭௬)

அடிபேரிற்பாதாளம்பேருமடிகண்
முடிபேரின்மாமுகடுபேருங்—கடக
மறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரு
மறிந்தாடுமாற்றாதரங்கு. (௭௭)

அரங்கமாப்பேய்க்காட்டிலாடுவான்வாளா
விரங்குமோவெவ்வுயிர்க்குமேழா—யிரங்குமே
லென்னாகவையான்றனெவ்வுலகமீந்தளியர்
பண்ணுளிரந்தாற்பணிந்து. (௭௮)

பணிந்தும்படர்சடையான்பாதங்கள்போதா
லணிந்துமணிந்தவரையேத்—துணிந்தென்று
மெந்தையார்க்காட்செய்யப்பெற்றவிதுகொலோ
சிந்தையார்க்குள்ளசெருக்கு. (௭௯)

செருக்கினால்வெற்பெடுத்தவெத்தனையோதிண்டோ
ளரக்கனையுமுன்னின்றடர்த்து—திருத்தக்க

மாலயனுங்காணாதாற்றிமகிழ்ந்தேத்தக்
காலனையும்வென்றுதைத்தகால். (௮0)

காலனையும்வென்றோங்கடுநரகங்கைகழன்றோ
மேலையிருவினையும்வேரறுத்தோங்—கோல
வரணாரவிந்தழியவெந்தீயம்பெய்தான்
சரணாரவிந்தங்கள்சார்ந்து. (௮௧)

சார்ந்தார்க்குப்பொற்கொழுந்தேயொத்திலங்கிச்சாராது
பேர்ந்தார்க்குத்தீக்கொடியின்பெற்றியவா—நேர்ந்துணரிற்
றாழ்சுடரோன்செங்கதிருஞ்சாயுந்தழல்வண்ணன்
வீழ்சடையேயென்றுரைக்குமின். (௮௨)

மின்போலுஞ்செஞ்சடையான்மாலொடிசைந்தா
லென்போலுங்காண்பார்கட்கென்றிரேற்—றன்போலும்
பொற்குன்றுநீலமணிக்குன்றுந்தாமுடனே
நிற்கின்றபோலுநெடிது. (௮௩)

நெடிதாயபொங்கெரியுந்தண்மதியுநேரே
கடிதாங்கடுஞ்சுடரும்போலுங்—கொடிதாக
விண்டார்கண்மும்மதிலும்வெந்தீயினிலழியக்
கண்டானுமுக்கணாங்கண். (௮௪)

கண்ணாரக்கண்டுமென்கையாரக்கூப்பியு
மெண்ணாரவெண்ணத்தாலெண்ணியும்—விண்ணோ
னெரியாடியென்றென்றுயின்புறுவன்கொல்லோ
பெரியானைக்காணப்பெறின். (௮௫)

பெறினும்பிறிதியாதும்வேண்டோநமக்கீ
தறினுமுருகொழியுமேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகணெற்றிமேல்வைத்தான்றன்பேயாய
நற்கணத்திலொன்றாயநாம். (௮௬)

நாமாலைசூடியுநம்மீசன்பொன்னடிக்கே
பூமாலைகொண்டுபுனைந்தன்பாய்—நாமோ
ரறிவினையேபற்றினாலெற்றேதடுமே
யெறிவினையேயென்றுமிருள். (௮௭)



இருளினுருவென்கோமாமேகமென்கோ
மருளின்மணிநீலமென்கோ—வருளெமக்கு
நன்றுடையாய்செஞ்சடைமேனக்கிலங்குவெண்மதிய
மொன்றுடையாய்கண்டத்தொளி. (௮௮)

ஒளிவிலிவன்மகனையொண்பொடியாநோக்கித்
தெளிவுள்ளச்சிந்தையினிற்சேர்வா—யொளிநஞ்ச
முண்டவாயஃதிருப்பவுன்னுடையகண்டமிருள்
கொண்டவாறென்னிதனைக்கூறு. (௮௯)

கூறெமக்கீதெந்தாய்குளிர்சடையைமீதழித்திட்
டேறுமிகப்பெருகினென்செய்தி—சீறி
விழித்தகலும்வாளரவும்வெண்மதியுமீர்த்துத்
தெழித்தோடுங்கங்கைத்திரை. (௯0)

திரைமருவுசெஞ்சடையான்சேவடிக்கேயாளா
யுரைமருவியாமுணர்ந்தோங்கண்டீர்—தெரியிலோ
ரிம்மைக்குமம்மைக்குமெல்லாமமைந்தோமே
யெம்மைப்புறனுரைப்பதென். (௯௧)

என்னையுடையானுமேகமாய்நின்றானுந்
தன்னையறியாததன்மையனும்—பொன்னைச்
சுருளாகச்செய்தனையஞ்சடையான்வானோர்க்
கருளாகவைத்தவன். (௯௨)

அவன்கண்டாய்வானோர்பிரானாவானென்று
மவன்கண்டாயம்பவளவண்ண—னவன்கண்டாய்
மைத்தமர்ந்தகண்டத்தான்மற்றவன்பாலென்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன்பாய்நீவிரும்பு. (௯௩)

விரும்பினுனிபிரியகில்லாயோவேறு
விருப்பிடமற்றில்லையோவென்றே—பொருப்பன்மகண்
மஞ்சுபோன்மால்விடையாய்நிற்பிரிந்துவேறிருக்க
வஞ்சுமோசொல்லாயவள். (௯௪)

அவனோர்குலமங்கைபாகத்தகலா
னிவனோர்குலமகளுமீதே—தவனாகி

றென்பணிவிலொன்றும்பிரிக்கறிவீரிங்கிவரு
னென்பணியார்சொல்லுமிவளிங்கார். (௯௫)

ஆர்வல்லார்காணவரனவனையன்பென்னும்
போர்வையதனாலேபோர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தானாமுந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தோமறைத்து. (௯௬)

மறைத்துலகமேழினையும்வைத்தாயோவன்றே
லுறைப்போடுமுன்கைக்கொண்டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்துநீயெரிப்பமூவுலகுமுள்புக்
களைந்தெழுந்தசெந்தீயழல். (௯௭)

அழலாடவங்கைசிவந்ததோவங்கை
யழகாலழல்சிவந்தவாறோ—கழலாடப்
பேயாடுகானிற்பிறங்கவனலேந்தித்
தீயாடுவாயிதனைச்செப்பு. (௯௮)

செப்பேந்திளமுலையாள்காணவோதீப்படுகாட்
டப்பேய்க்கணமவைதாங்காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தானங்காந்தனலுமிழுமைவாய
நாகத்தாயாடுநடம். (௯௯)

நடக்கிற்படிநடுங்குநோக்கிற்றிசைவே
மிடிக்கிலுலகனைத்துமேங்கு—மடுக்கற்
பொருமேறேயானேறுபொன்னொப்பாய்நின்னோ
டொருமேறேவொன்றுவதோ. (௧00)

உரையினிவ்விம்மாலையந்தாதிவெண்பாக்
கரைவினாற்காரைக்காற்பேய்சொல்—பரவுவா
ராராதவன்பினோடண்ணலைச்சென்றேத்துவார்
பேராதகாதல்பிறந்து. (௧0௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

ஐயடிகள்காடவர்கோனாயனார்

அருளிச்செய்த

# க்ஷேத்திரத்திருவெண்பா.

---

ஓடுகின்றநீர்மையொழிதலுமேயுற்றாருங்
கோடுகின்றார்மூப்புங்குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற்றம்பலமேநண்ணாமுன்னெஞ்சே
தில்லைச்சிற்றம்பலமேசேர். (௧)

கடுவடுத்தநீர்கொடுவாகாடிதாவென்று
நடுநடுத்துநாவடங்காமுன்னம்—பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ்சேராமுன்பன்மாடத்தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ்செப்பிக்கிட. (௨)

குந்திநடந்துகுனிந்தொருகைகோலூன்றி
நொந்திருமியேங்கிநுரைத்தேறி—வந்துந்தி
யையாறுவாயாறுபாயாமுன்னெஞ்சமே
யையாறுவாயாலழை. (௩)

காளைவடிவொழிந்துகையறவோடையுறவாய்
நரைத்துமணுகிநலியாமுன்—பாளை
யவிழ்கமுகம்பூஞ்சோலையாரூர்க்காளாய்க்
கவிழ்கமுகங்கூம்புகவென்கை. (௪)

வஞ்சியனநுண்ணிடையார்வாட்டடங்கணீர்சோரக்
குஞ்சிகுறங்கின்மேற்கொண்டிருந்து—கஞ்சி
யருத்தொருநந்திகொண்டுவாவென்னாமுனெஞ்சே
திருத்துருத்தியான்பாதஞ்சேர். (௫)

காலைக்கரையிழையாற்கட்டித்தங்கையார்த்து
மாலைத்தலைக்கணிந்துமையெழுதி—மேலோர்
பருக்கோடிமூடிப்பலரழாமுன்னந்
திருக்கோடிகாவடைநீசென்று. (௬)

மாண்டுவாயங்காவாமுன்னமடநெஞ்சே
வேண்டுவாயாகில்விரைந்தொல்லைப்—பாண்டவாய்த்
தென்னிடைவாய்மேயசிவனார்திருநாம
நின்னிடைவாய்வைத்துநினை. (எ)

தொட்டுத்தடவித்துடிப்பொன்றுங்காணாது
பெட்டப்பிணமென்றுபேரிட்டுக்—கட்டி
யெடுங்களத்தாவென்னாமுன்னேழைமடநெஞ்சே
நெடுங்களத்தான்பாதநினை. (அ)

அழுகுதிரிகுரம்பையாங்கதுவிட்டாவி
யொழுகும்பொழுதறியவொண்ணா—கழுகு
கழித்துண்டலையாமுன்காவிரியின்றென்பாற்
குழித்தண்டலையானைக்கூறு. (௯)

படிமுழுதும்வெண்குடைக்கீழ்ப்பாரெலாமாண்ட
முடியரசர்செல்வத்துமும்மை—கடியிலங்கு
தோடேந்துகொன்றையந்தார்ச்சோதிக்குத்தொண்டுபட்
டோடேந்தியுண்பதுநம். (௧௦)

குழீஇயிருந்தசுற்றங்குணங்கள்பாராட்ட
வழீஇயிருந்தவங்கங்களெல்லாந்—தழீஇயிருந்து
மென்னானைக்காவாயிதுகாவென்னாமுன்
றென்னானைக்காவடைநீசென்று. (௧௧)

குயிலொத்திருள்குஞ்சிகொக்கொத்திருமல்
பயிலப்புகாமுன்னநெஞ்சே—மயிலைத்
திருப்புன்னையங்கானற்சிந்தியாயாகில்
விருப்பின்னையங்காக்கினைந்து. (௧௨)



தாளையர்களீளையர்களாகிக்கருமயிரும்
பூளையெனப்பொங்கிப்பொலிவழிந்து—சூளையர்க
ளோகாளஞ்செய்யாமுனெஞ்சமேயுஞ்சேனை
மாகாளங்கைதொழுதுவாழ்த்து. (௧௩)

இல்லும்பொருளுமிருந்தமனையளவே
சொல்லுமயலார்துடிப்பளவே—நல்ல
கிளைகுளத்துநீரளவேகிற்றியேநெஞ்சே
வளைகுளத்துளீசனையேவாழ்த்து. (௧௪)

அஞ்சனஞ்சேர்கண்ணாரருவருக்கும்பதமாய்க்
குஞ்சிவெளுத்துடலங்கோடாமுன்—னெஞ்சமே
போய்க்காடுகூடப்புலம்பாதுபூம்புகார்ச்
சாய்க்காடுகைதொழுநீசார்ந்து. (௧௫)

இட்டகுடிநீரிருநாழியோருழக்காச்
சட்டவொருமுட்டைநெய்தான்கலந்—தட்ட
வருவாச்சாலென்றங்கழாமுன்னம்பாச்சிற்
றிருவாச்சிராமமேசேர். (௧௬)

கழிந்ததுநென்னற்றுக்கட்டுவிட்டுநாறி
யொழிந்ததுடனிராவென்னை—மழிந்த
இராமலையாய்க்கொண்டுபோவென்னாமுன்னெஞ்சே
சிராமலையான்பாதமேசேர். (௧௭)

இழவாடிச்சுற்றத்தாரெல்லாருங்கூடி
விழவாடியாவிவிடாமுன்ன—மழபாடி
யாண்டானையாரமுதையன்றயன்மாற்காணாமை
நீண்டானைநெஞ்சேநினை. (௧௮)

உள்ளிடத்தான்வல்லையேநெஞ்சமேயூழ்வினைகள்
கள்ளிடத்தான்வந்தகலவாமுன்—கொள்ளிடத்தின்
றென்றிருவாப்பாடியான்றெய்வமறைநான்கனையுந்
தன்றிருவாய்ப்பாடியான்றாள். (௧௯)

என்னெஞ்சேயுன்னையிரந்துமிரக்கின்றேன்
றன்னஞ்செய்வாயாயிக்காலத்தால்—வன்னெஞ்சே
மாகம்பத்தானையுரித்தானைவண்கச்சி
யேகம்பத்தானையிறைஞ்சு. (உ0)

காமூன்றிக்கண்ணிடுங்கொல்காலகுலையம்பற்றோர்
மரமூன்றிவாய்க்குதட்டமுன்னம்—புரமூன்றூ
ரிச்சரத்தாற்செற்றான்றிருப்பனந்தாட்டாடகைய
வீச்சரத்தான்பாதமேயேத்து. (உக)

தஞ்சாசமூவுலகுமாண்டுதலையளித்திட்
டெஞ்சாமைபெற்றிடினும்யான்வேண்டேன்—நஞ்சார்
கரந்தகண்டர்தம்மொற்றியூர்பற்றி
யிரந்துண்டிருக்கப்பெறின். (உஉ)

ஆற்றனைத்தோர்பல்லூழிதான்வயிரவெண்குடைக்கீழ்
வீற்றிருந்தசெல்வம்விழையாதே—கூற்றுதைத்தா
னாடரவக்கச்சாவரைக்கசைத்தவம்மான்றன்
பாடரவங்கேட்டபகல். (உங)

உய்யுமருந்திதனையுண்ணெனவுற்றார்
கையைப்பிடித்தெதிரேகாட்டியக்கால்—மெய்ய
வெழுந்திருமியான்வேண்டேனென்னுமுனெஞ்சே
செழுந்திருமயானமேசேர். (உச)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

சேரமான்பெருமாணாயனார்

அருளிச்செய்த

# பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ணமெவ்வண்ண மவ்வண்ணமேனி பொலிந்திலங்கு, மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந், தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட, வென்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகிய வீசனுக்கே. (க)

ஈசனைக்காணப்பலிகொடுசெல்லவெற்றேயிவளோர்
பேயனைக்காமுறப்பிச்சிகொலாமென்றுபேதையர்முன்
றாயெனையீர்ப்பத்தியேன்றனைவந்தாழ்சடையான்
வரிவெளைப்புல்லவெண்ணுவிமலிண்டனவாட்கண்களே. (உ)

கண்களங்கஞ்செய்யக்கைவளைசோரக்கலையுஞ்செல்ல [வப்
வொண்களங்கண்ணுதல்வேர்ப்ப வொண்கொன்றையந்தாருக்கு
பெண்களங்கம்மிவள்பேதுறுமென்பதோர்பேதைநெஞ்சம்
பண்களங்கம்மிசைபாடநின்றாடும்பரமனையே. (௩)

பரமனையேபலிதேர்ந்துழன்கண்டுபயன்மலர்சேர்
பிரமனையேசிரங்கொண்டுகொடுப்பதுபேரருளாஞ்
சரமனையே[illegible]ம்பட்டுமுடம்பொடியொழிடமாம்
வரமனையேயிவளாருமுக்கண்ணுடைமாதவனே. (௪)

தவனேயுலகுக்குத்தானேமுதறான்படைத்தவெல்லாஞ்
சிவனேமுழுதுமென்பார்சிவலோகம்பெறுவர்செய்ய
வவனேயடல்விடையூர்திகடல்விடமுண்ட
பவனேயெனச்சொல்லுவாரும்பெறுவரிப்பாரிடமே. (ரு)

இடமால்வலந்தானிடப்பாற்றுழாய்வலப்பாலொண்கொன்றை
வடமாலிடந்துகில்தோல்வலமாழியிடம்வலமா
னிடமால்கரிதால்வலஞ்சேதிவ்வணங்கெழிளஞ்சேர்
குடமாலிடம்வலங்கொக்கரையாமெங்கள்கூத்தனுக்கே. (௬)

கூத்துக்கொலாமிவராடித்திரிவதுகோல்வளைகள்
பாத்துக்கொலாம்பலிதேர்வதுமேனிபவளங்கொலா
மேத்துக்கொலாமிவராதரிக்கின்றதிமையவர்க
ளோத்துக்கொலாமிவர்கண்டதுஞ்செஞ்சடையுத்தமரே. (௭)

உத்தமராயடியாருலகாளத்தமக்குரிய
மத்தமராமதிமாடம்பதிநலஞ்சீர்மைகுன்றா
வெத்தமராயும்பணிகொள்ளவல்லவிறைவர்வந்தென்
சித்தமராயகலாதுடனாடித்திரிதவரே. (௮)

திரிதவர்கண்ணுளர்முன்னாளத்திலுள்ளுந்திரிதரினு
மரிதவர்தன்மையறிவிப்பதாயினுமாழநெஞ்சே
கரிதவர்கண்டம்வெளிதவர்சாந்தங்கண்மூன்றொடொன்றும்
பரிதவர்தாமேயருள்செய்துகொள்வர்தம்பல்பணியே. (௯)

பணிபதம்பாடிசையாடிசையாகப்பலிமலரா
லணிபதங்கன்பற்கொளப்பனையத்தவற்கேயடிமை
துணிபதங்காமுறுதோலொடுநீறுடலார்த்ததல்ல
தவிபதங்காட்டிடுஞ்சஞ்சலநீயென்றனிநெஞ்சமே. (௧௦)

நெஞ்சந்தனிர்விடக்கண்ணீர்ததும்பமுகமலர
வஞ்செங்கரதலங்கூம்பவட்டாங்கமடிபணிந்து
தஞ்சொன்மலராலணியவல்லோர்கட்குத்தாழ்சடையான்
வஞ்சங்கடிந்துதிருத்திவைத்தான்பெருவானகமே. (௧௧)

வானகமாண்டுமந்தாகினியாடிநந்நாவணங்கும்
தேனகமாமலர்சூடிச்செல்வோருஞ்சிதவல்சுற்றிக்
கானகந்தேயத்திரிந்திரப்போருங்கனகவண்ணப்
பானிறநீற்றற்கடியருமல்லாப்படிறருமே. (௧௨)



படிறாயினசொல்லிப்பாழுடலோம்பிப்பலகடைச்சென்
றிடறாதொழிதுமெழுநெஞ்சமேயெரியாடியெம்மான்
கடறாயினஞ்சமுண்டபிரான்கழல்சேர்தல்கண்டா
யுடறானுளபயனாவதொன்னேயிவ்வுலகினுள்ளே. (௧௩)

உலகாளுறுவீர்தொழுமின்விண்ணாள்வீர்பணிமினித்தம்
பலகாமுறுவீர்நினைமின்பரமனொடொன்றலுற்றீர்
நலகாம்மலராலருச்சிமினுணர்கத்தாலிற்று
மலகாமுறுவீரரனடியாரையடைமின்களே. (௧௪)

அலையார்புனலனன்ஞாயிறவனிமதியம்வியன்கா
லொலியாவுயிருடம்பாகியசோதியைத்தொக்குமிறே
நிலையாற்சுமந்துதடித்துங்கொடித்தேரரக்கனென்னே
கலையாவொருவிரற்றுங்கலிக்கூர்விட்டகாரணமே. (௧௫)

காரணன்காமரம்பாடவோர்காமரம்பூநிறத்தன்
பூரணங்காகத்தளர்வின்றலைதயலைத்தாங்குவர்யார்
போரணிவேற்கண்புனற்படம்போர்த்தனபூஞ்சுணங்கா
ரோரணிகொங்கையும்பொற்படமூழ்கிருந்தனவே. (௧௬)

இருந்தனமெய்தியுநின்றுந்திரிந்துங்கிடந்தலைந்தும்
வருந்தியவாழ்க்கைதவிர்ந்திடுபோகநெஞ்சேமடவாள்
பொருந்தியபாகத்துப்புண்ணியன்புண்ணியல்சூலத்தெம்மான்
றிருந்தியபோதவன்றன்னேயணையுநந்தீவினையே. (௧௭)

தீவினையேனைநின்றையரிராப்பகற்செத்தித்தின்ன
மேவினவாழ்க்கைவெறுத்தேன்வெறுத்துவிட்டேன்வினையு
மோவினதுள்ளந்தெளிந்ததுகள்ளங்கடிந்தடைந்தேன்
பாவினசெஞ்சடைமுக்கணனான்பாதங்களே. (௧௮)

பாதம்புவனிசுடர்நயனம்பவனமுயிர்ப்போங்
கோதமுடிக்கையுயர்வானமுடிவிசும்பேயுடம்பு
வேதமுகந்திசைதோண்மிகுபன்மொழிகீதமென்ன
போதமிவற்கோர்மணிநிறந்தோற்பதுபூங்கொடியே. (௧௯)

கொடிமேலிடபமுங்கோவணச்சீருமோர்கொக்கிறகு
மடிமேற்கழலுமகலத்தினீறுமைவாயரவு
முடிமேன்மதியுமுருகலர்கொன்றையுமூவிலைய
வடிவேல்வடிவுமென்கண்ணுளெப்போதும்வருகின்றவே (௨௦)

வருகின்றமூப்பொடுநீப்பிணிக்கூற்றம்வைகற்குவைகல் [ன்
பொருகின்றபோர்க்கொன்றுமாற்றகில்லேன்பொடிப்பூசிவந்து
ணருகொன்றிருந்தவருளுகண்டாயழல்வாயரவம்
வெருக்கொண்டுவெண்மதிசெஞ்சடைமேல்வைத்தவேதியனே.

வேதியன்பாதம்பணிந்தேன்பணிந்துமெய்ஞ்ஞானமென்னுஞ்
சோதியென்பாற்கொள்ளவுற்றுநின்றேற்கின்றுதொட்டிதுதா
னீதியென்றுன்செல்வமாவதென்றேன்மேனியைப்புவண்டே
ரோதிநின்போல்வகைத்தேயிருபாலுமொழிந்தனவே. (௨௨)

ஒழிந்தேன்பிறவியையூர்ந்தேனுவகையையோங்கிநுள்ள
மிழிந்தேனுடம்பினையேலேன்பிறரிடையிம்மையையும்
பழித்தேன்பழியைவினைக்கும்பகுஞ்செறியக்குஞ்சரமுந்
தெழித்தேன்சிவனடிசேர்ந்தேனவியிகத்தெள்ளியனே. (௨௩)

தெள்ளியமாந்தனைச்சேர்ந்திலன்றீங்கவிபாடலுற்றே
னுள்ளியசொல்லும்பொருளும்பெறேனுரைத்தாருரைத்த
கள்ளியபுக்காற்கவிகளொட்டார்கடனஞ்சயின்றாய்
கொள்ளியவல்லகண்டாய்புன்சொலாயினுங்கொண்டருளே.

அருளால்வருநஞ்சமுண்டுகின்றுய்யமரர்குழாம்
பொருளார்கவிசொல்லயானும்புன்சொற்கள்புணர்க்கலுற்றே
னிருளாசறவெழின்மாமதிதோன்றவுமென்றதென்ன
வெருளாதெதிர்சென்றுமின்மினிதானும்விரிகின்றதே. (௨௫)

விரிகின்றஞாயிறுபோன்றதுமேனியஞ்ஞாயிறுசூழ்ந்
தெரிகின்றவெங்கதிரொத்ததுசெஞ்சடையச்சடைக்கீழ்ச்
சரிகின்றகாரிருள்போன்றதுகண்டமக்காரிருட்கீழ்ப்
புரிகின்றவெண்முகில்போன்றுளதாலெந்தையொண்பொடியே



பொடிக்கின்றிலமுலைபோக்கிலைபறசொற்பொருட்டியா, மு
டிக்கின்றிலகுழலாயினுங்கேண்மின்கண்முரிவெள்ளம், குடிக்
கொண்டசெஞ்சடைக் கொண்டலங்கண்டன் மெய்க்கொண்ட
ணிந்த, கடிக்கொன்றைத்தாருகின்றாளதியென்பிறர்கட்டுரையே.

உரைவளர்நான்மறையோதியுலகமெலாந்திரியும்
விரைவளர்கொன்றைமருவியமார்பன்விரிசடைமேற்
றிரைவளர்கங்கைநுரைவளர்தீர்த்தஞ்செறியச்செய்த
கரைவளர்வொத்தனதாற்கிரமாலையெங்கண்டனுக்கே. (௨௮)

கண்டாப்கரியன்கரியீருரியன்விரிகுஞ்சி
ரண்டங்கடந்தபெருமான்சிறுமான்றரித்தபிரான்
பண்டன்பரமசிவனொர்பிரமன்சிரமரிந்த
புண்டங்கையிலன்பயிலாவண்மைபுண்ணியனே. (௨௯)

புண்ணியன்புண்ணியல்வேலையன்வேலையநஞ்சனங்கக்
கண்ணியன்கண்ணியனொற்றியன்காரணன்காரியன்றும்
விண்ணியன்விண்ணியல்பாணியன்பாணிகொளவுமையாள்
பண்ணியன்பண்ணியல்பாடலுடைப்பசுபதியே. (௩௦)

பதியார்பலிக்கென்றுவந்தாரொருவர்க்குப்பாவைநல்லீர்
கதியார்விடைபுக்கதென்றூன்றுளகறைக்கண்டமுண்டு
கொதியார்மழுவுண்டுகொக்கரையுண்டிறைகூத்துமுண்டு
மதியார்சடையுளமாதுளநீவிருமங்கையர்க்கே. (௩௧)

மங்கைகொங்கைத்தடத்திங்குமக்குங்குமப்பங்கநங்கி
யங்கமெங்குங்கெகச்சங்கமங்கைத்தலத்துங்கவாலான் [ய
கங்கைகங்கைத்திரைப்பொங்குசெங்கண்ணரவங்கள் பொங்கி
பங்கிதங்கும்மலர்த்திங்கட்பொங்கும்முடிப்பண்டங்கனே. (௩௨)

பண்டங்கன்வந்துபலிதாவென்றான்பகலோர்கிடென்றே
னண்டங்கடந்தவனன்னமென்றானயனாதியென்றேன் [றே
கொண்டிங்குண்ணயம்பெய்யென்றான் கொடிந்தோகதவென்
வண்டிங்கஃமரநதென்றுநகைசொல்லவுணர்வுற்றதே. (௩௩)

உற்றடியாருலகாளவோருளுமுறக்குமின்றிப்
பெற்றமதாவதென்றேறும்பிரான்பெருவேனெடுங்கட்
சிற்றடியாய்வெண்பற்செய்யவாயவள்சிரமாலைக்கென்று
மிற்றிடையாம்படியாலவென்றுக்குமெலிகின்றதே. (௧௪)

மெலிகின்றவெண்டிவெயில்வாயிழுதழல்வாய்மெழுகு
கலிகின்றகாமங்காதலமெல்லிதுறக்கம்வெங்கூற்
றொலிகின்றதிருநுதியொளியார்முக்கணத்தர்பிக்ஷ
பலிக்கென்றுவந்தார்கடிக்கொன்றைசூடியபல்லுயிரோ. (௧௫)

பல்லுயிர்பாகமுடற்றலைதோல்பகலோன்மறல்வெங்
வில்லியோர்வேதியர்வேழமுழுவையேபதித்துதைத்துப்
புல்லியுங்கட்டுமறுத்துமுரித்துங்கொண்டான்புகழே
சொல்லியும்பாடியுமேத்தகெடுமெங்கள்சூழ்துயரே. (௧௬)

துயருந்தொழுமழுஞ்சோருந்துகிறுங்கலையுஞ்செல்லப்
பெயரும்பிதற்றுநகும்வெய்துயிர்க்கும்பெரும்பணிகூர்
தயருமயர்விக்குழறிவியர்க்குமந்தோவிங்ஙனே
மயருமறைக்காட்டுறைக்காட்டகப்பட்டவாணுதலே. (௧௭)

வாணுதற்கெண்ணனன்றன்றவஞ்சர்சடையெந்தைவந்தா
ளுணுதற்கென்றுள்பலிகொடுசென்றநகருநயந்தா
யேணுதற்கெண்ணும்பிரமன்றிருமாலவர்க்கரிய
தாணுவுக்கென்றேவிராப்பகனேர்நிலவாழ்கின்றதே. (௧௮)

தாழுஞ்சடைசடைமேலதுகங்கையக்கங்கைநங்கை
வாழுஞ்சடைசடைமேலதுதிங்களத்திங்கட்பிள்ளை
போழுஞ்சடைசடைமேலதுபொங்கரவவ்வரவம்
வாழுஞ்சடைசடைமேலதுகொன்றையெம்மாமுனிக்கே. (௧௯)

முனியேமுருகலர்கொன்றையினாயென்னைமூப்பொழித்த
கனியேகழலடியல்லாற்களைகண்மற்றொன்றுமிலே
னினியேயிருந்தவஞ்செய்யேன்றிருந்தவஞ்சேர்கினேந்து
தனியேன்படுகின்றசங்கடமார்க்கினிச்சாற்றுவனே. (௨௰)



சாற்றுவன்கோயிற்றலையுமணமுந்தவமிவற்று
லாற்றுவனன்பெறுநெய்சொரிந்தாற்றியஞ்சொன்மலரா
லேற்றுவனீசனவர்தென்மனத்தானென்றெழுந்தலரோ
தூற்றுவன்ருத்திரமாயினவேயினிச்சொல்லுவனே. (௨௧)

சொல்லாதனகொழுநாவல்லசோறியுட்சோதிதன்பேர்
செல்லாச்செவிமரந்தேறித்தொழாதகைமண்டிணிந்த
கல்லாகினையாமனம்வணங்காத்தலையும்பொறையா
மல்லாவவயவந்தானுமணிதர்க்கசேதனமே. (௨௨)

தனக்குன்றமாவையஞ்சங்கரன்றன்னருளன்றிப்பெற்றான்
மனக்கென்றுநஞ்சிற்கடையாகினவன்மருவிரியும்
புனக்கொன்றையானருளாற்புழுவாகிப்பிறந்திடினு [னே,
மெனக்கென்றம்வானவர்பொன்னுலகோடெக்க வென்னுவ

என்னைப்பிறையேபிழைக்குங்கொலாமிமையோரிறைஞ்சுந்
தன்னம்பிறைச்சடைச்சங்கரன்சங்கக்குழையன்வந்தெ
ன்னனைன்றுறைவதின்றுமொளிமாறிறங்கவர்வான்
கன்னுமுறங்காதிராப்பகலெய்கின்றகாமனுக்கே. (௨௪)

காமனைமுன்செற்றதென்றுளவுளிவள்காலனென்னுந்
தாமநன்மார்பனைமுன்செற்றதென்றுதன்கையெரிந்தா
ளுமுனஞ்செற்றதன்றுளையென்றேற்பிருவர்க்குமஞ்சி
யாமெனக்கிற்றிலான்றெனக்கிற்றிலநந்தனரோ. (௨௫)

அந்தணராமிவரார்கொலுறைவதென்றேனதுவே
சந்தனைத்தோளியென்றார்தமையாயசலவரொன்றேன்
மந்தனைகையாயதுமுன்னென்றார்மையறியக்
கொந்தணைதாரிருளாயிலென்றேன்றுடிகொட்டினரே. (௨௬)

கொட்டுஞ்சிலைபலசூழநின்றார்க்குங்குப்புற்றெழுந்து
கட்டமதியுங்கிரீடிக்கும்பாடுநகும்வெருட்டும்
வட்டம்வருமருஞ்சாரணைசெல்லுமலர்தயங்கும்
புட்டங்கிளரும்பொழில்சூழ்மறைக்காட்டரன்பூதங்களே. (௨௭)

பூதப்படையுடைப்புண்ணியரேபுறஞ்சொற்களும்மே
லேதப்படவெழுகின்றனவாலினியானொடும்மைக்
காதற்படுப்பான்கலைதொட்டகாமனைக்கண்மலரால்
சேதப்படுத்திட்டகாரணந்திறைசெப்புமினே. (சஅ)

செப்பனவொக்கைக்குத்தேமலர்க்கொன்றைநிறம்பணித்தான்
மைப்புரைகண்ணுக்குவார்புனற்கங்கைவைத்தான்மனத்துக்
கொப்பனவில்லாவொளிகிளருன்மத்தமுடைமைத்தா
னப்பனையம்மனைநீயென்பெறுதியின்றார்க்கின்றதே. (சகூ)

ஆர்க்கின்றதீருமனலுமதியுமைவாயரவு
மோர்க்கின்றவோருழுண்மையுமுருவுமருவும்வென்றி
பார்க்கின்றவெங்கையுமானும்பகலுமிரவுமெல்லாம்
யார்க்கொன்றைமாலையினார்க்குட்டூதிக்கலந்தனவே. (ருo)

கலந்தனக்கென்பவர்கட்டழிந்தார்வெள்ளறையட்டரவார்
சலந்தரற்கன்னியனாகமாடியோர்வானாரும்
நிலந்தனக்கில்லாவகநியறுஙியநிலமுண்டத்
தலந்தலைக்கென்னேயலந்தலையாகியழிகின்றதே. (ருக)

அழிகின்றதாருயிராகின்றதாகுலமேதிமோ
விழிகின்றசங்கமிருந்தமுலைமேற்கிடந்தன்மீர்
பொழிகின்றகண்ணீர்புலர்ந்துளாய்சலைபோனவந்தார்
மொழிகின்றதென்னினிஎன்மைறமுக்கண்முறைவனுக்கே.

முறைவனைமுப்புரத்தான்மறைக்கும்முதலேழ்கடலந்
துறைவனைச்சூழ்கயிலாயச்சிலம்பனைத்தொன்மைகுன்று
விறைவனைவெண்குணத்தீசனையேத்திளார்சித்தந்தம்பா
லுறைவனைப்பாம்பணையாம்பின்னையென்சொல்லியோதுவதே.

ஓதவருமறையவன்பக்குணமுள்ளனவிட்டேன்
போதவன்பின்னேபொருந்தவன்வாழ்க்கைதிருந்தச்சென்று
மாதவமாகிமாதவமாவளர்புன்சடையான்
யாதவன்சொன்னதுகொண்டொழிவியாரணங்கே. (ருச)



ஆரணங்கின்முகமைங்கணையானகமவ்வகத்திற்
பேரணங்காவன்பேரகலத்துநெண்மைகண்வத்து
பூரணகும்பமுலையிவைகாணப்புரிசடையெம்
காரணன்கொடைபூண்டபோபகைபோர்கருதியதே. (ருரு)

கருதியதொன்றில்லையாயினுங்கேண்மின்கள்காரிகையா
ளொருதினமும்முளளாகவொட்டாதொடுங்காதொடுங்கப்
பொருதான்மால்விடைப்புண்ணியன்பொங்கிளங்கொன்றையி
னருகிர்க்கண்மயிலந்தாராவிடிற்கொல்லுந்தாழிருளே. [ன்னே

இருளார்மிடற்றுவிராய்பகறன்றுல்வளாமளையாற்
பொருளார்கமழ்கொன்றையான்றூலியுற்றரவாடுதலாற்
றெருளார்மதிவிசும்பாற்பெளவத்தெண்புனற்றுத்தலா
லருளாற்பலபலவன்னைறூமாசிரறூயினவே. (ருஎ)

ஆயினவந்தணர்வாய்மையளைக்கலைவைவினைகள்
போயினவானிகர்கண்ணுடைமாநீர்முலையிடையே
பாயினவெள்ளைக்கரபத்திரத்துக்குச்சூத்திரம்போ
லாயினபல்சடையார்க்கன்புபட்டவெம்மாயிழைக்கே. (ருஅ)

இழையார்வனமுலைவிக்கியிடையிறுகின்றதிற்றுப்
பிழையாணைமச்சிவைகட்டின்கவெண்பதுபேச்சுக்கொலாங்
கழையார்கருப்புச்சுன்றவானைக்கண்டனைக்காதலித்தாள்
குழையார்செவியொடுகோலக்கயற்கண்கள்கூடியதே. (ருகூ)

கூடியதன்னிடத்தாலுமையாளிடத்தானையையா
றீடியபல்சடைமேற்றெரிவன்னமெனப்பணியின்
பாடியதான்மறைபாய்ந்தகூற்றைப்பட்டார்புரஞ்சுட்
டாடியநீறுசெஞ்சாந்திவையாமெம்மனாவே. (சுo)

அயமேபலியின்றாமாடுதானுவோர்றுக்கிக்கிடப்
பயமேமொழியும்பசப்பிதுயேறெம்மைப்பாய்த்திடுமாற்
புயமேத்துழலியர்புண்ணியர்போயினிரத்தல்பொல்லா
நயமேமொழியினுக்காமமாவும்மைமாறுதமே. (சுக)

காறாடக்கலத்தார்க்கிடையில்லையமுக
வேளூரிருந்தமிழான்மறவேனுந்தனையினென்றும்
நூறூர்முலைப்புரீர்பிருந்தன்புரிசடையெந்தைவந்தாற்
காறுமிடேனகன்றிடவாதொழியேன்கடிமலரே. (௬௨)

கடிமலர்க்கொன்றைதரினும்புல்லேன்கலைசாரவொட்டேன்
முடிமலர்தீண்டின்முனிவன்முலைதொடமேற்கெடுவ
னடிமலர்வானவரேத்தநின்றுய்க்கழலல்லவென்பன்
றொடிமலர்த்தோடுமேற்றிருவாணைதொடங்குவனே (௬௩)

தொடங்கியவாழ்க்கையைவாளாதுறப்பர்துறந்தவரே
யடங்கியவேட்கையரன்பாலிலராதகாற்பறவை
முடங்கியசெஞ்சடைமுக்கணனார்க்கன்றியிற்குமன்றிக்
கிடங்கிற்பட்டகராவனையார்பலதேவலரே. (௬௪)

வலந்தான்கழலிடம்பாடகம்பாம்புவலமிடமே
கலந்தான்வலநீறிடஞ்சாந்தெரிவலம்பந்திடமென்
பலந்தார்வலமிடமாடகம்வேல்வலம்யாழிடஞ்
சலந்தாழ்சடைவலந்தண்ணறுங்குழலிடஞ்சங்கரற்கே. (௬௫)

சங்கரன்சங்கக்குழையன்சரோருகந்தன்னை
யங்கரங்கூப்பித்தொழாட்டுமின்றெருள்வர்மனார்
இங்கரர்தாஞ்செய்யுங்கோயினையிறைகேட்டவமே
யிங்கரமாயிரமீர்வெண்ணெஞ்சமெரிகின்றதே. (௬௬)

எரிகின்றதீயொத்துளசடையீசற்கத்திக்கிமையோர்
சொரிகின்றயாற்கடல்போன்றதாழ்ம்புனலப்புனலிற்
சரிகின்றதிங்களோர்தோணியொக்கின்றதத்தோணியுய்ப்பான்
றெரிகின்றதிண்கழைபோன்றுளதாலத்திறலரவே. (௬௭)

அரவமுயிர்ப்பவழன்றுமங்கங்கைவளாய்க்குளிருங்
குரவங்குழலுமையூடற்குழைந்துருக்கும்மடந்தோர்
பரவும்புகழன்னதீண்டறும்பார்வானவைவிளக்கும்
விரவுமிடரின்பமெய்யிற்றுடியவெண்பிறையே. (௬௮)



பிறைத்துண்டஞ்சூடலுற்றேபிச்சைகொண்டன்லாடலுற்றே
மறைக்கண்டம்பாடலுற்றேவெண்புரிநூன்மருவலுற்றே
கறைக்கண்டம்புல்லலுற்றேகடுவாயரவாடலுற்றே
குறைக்கொண்டிவளரன்பின்செல்வதென்னுக்குக்கூறுமினே.

கூறுமினீசனைச்செய்ம்மின்குற்றேவல்குளிர்மின்கண்க
டேறுமின்சித்தந்தெளிமின்சிவனைச்செறுமின்செற்ற
மாறுமின்வேட்கையறுமினவலமிவைநெறியா
வேறுமின்வானத்திருமின்விருந்தாயிமையவர்க்கே. (௭௦)

இமையோர் கொணர்ந்திங் கிழித்திடநீர்மைகெட் டோழல்வின்
யமையாநெறிச்சென்றேராழ்ந்தசலமகளையணைந்தே [போ
யெமையாருடையான்றலைமகளுவந்திருப்பவென்னே
யுமையாளவன்றிருமேனியிடம்பெற்றேயுறைகின்றதே. (௭௧)

உறைகின்றனனுரகொன்பதுமையிலோர்முன்றுளதான்
மறைகின்றவெண்புராம்போடிறைச்செய்திரமச்சை
பறைகின்றதோல்போர்த்தும்பைபயனில்லைபோயடைமி [கே.
னறைகின்றதெண்புனல் செஞ்சடைக்கொண்டோன் மலரடிக்

அடிக்கண்ணிலைகழுநார்க்கருணாலங்கொடுத்ததாய
வடிக்கண்ணிநின்னைத்தொழுவனைகொண்டனைவண்டுணதோன
கடிக்கண்ணியாயெமக்கோருதிரண்டகப்காட்டிவையாற் [ளைக்
கொடிக்கண்ணிமேனல்லகொல்லேறுயர்த்தகுன்றமே.

குன்றெடுத்தான்செவிகண்வாய்சிரங்கனெரிந்தலற
வன்றடர்த்தற்றுகச்செற்றவனற்றவர்க்கற்றசிவன்
மன்றிடைத்தோன்றியநெல்விக்கவினிற்பமானுடர்போய்
யொன்றெடுத்தோதிப்புகுவர்நரகத்தருமுழியே. (௭௪)

முழிகட்கொடுந்தடைக்கூன்பற்கீட்டடிகொட்டிடைக்கு
னழுவைத்தழைசெவித்தோன்முலைக்குழைமயிர்ப்பகுவாய்த்
தெழிகட்டிரைகுரற்றேம்பல்வயிற்றுத்திரக்குவிரற்
கழுதக்குறையிடம்போல்கண்டறுநின்கடியரங்கே. (௭௫)

அரங்காமணிபன்றிறன்றலோர்கூற்றமையமாக்கி
உரங்காமனையுருவச்சுட்டபகையாகிவிடலார்க்கா
விரங்காமனத்தவரில்லைவிரங்காணியையவர்க்கு
இரங்காமுறுவாவெனதும்புகொள்வாளென்றன்றெமொழிக்கே.

மொழியக்கண்டான்பழிநாணக்கண்டான்பிணிமூன்றனைக்கச்சவல
மழியக்கண்டான்றீர்க்கக்கண்டான்றென்றலொன்றுயிர்மேற்
கழியக்கண்டான்றுயர்கூரக்கண்டான்றுகிற்குழற்கேயரய்
கழியக்கண்டான்றில்லைக்கண்ணுதலான்கண்டனள்கண்ணே.

கள்ளவனாகக்கண்டித்தடிநம்பப்பட்டக்கற்றவர்க்கு
புண்ணவனாகத்தறாக்கின்றவுத்தமனின்முடிமேல்
வெண்ணவனாமத்தவெண்ணூனாகுடியவன்பிறையைக்
பொன்னளவாய்நின்றபாம்பொன்ஞானக்குழிக்கொண்டபின்னே.

குழிக்கொண்டவன்பெய்த்தொல்லையெவர்க்குங்கொளிகழுத்
திர், வெறிக்கொண்டவெள்ளிலம் போதேறவெழும்போர் விரிச
டைமே, மறைக்கொண்டுறையோவுடைத்தேர்லாபொடியேயசி
டையதே, கறைக்கண்டோநயக்கென்றேறிநாமிகடையதே.

கடவியொன்றில்லையாயிருந்தேன்பின்றுங்காரிகையாள்
படவியவாறுகண்டாம்பிறைவார்சடையெந்தை
விடவியநெஞ்சயிட்டுக்கொடுத்தாட்கவலக்கொடுத்தான்
கடவியகொம்பதன்றுன்மேதிருத்ததிக்குழமே. (௮௦)

தறித்தாயயன்றலைகாய்ந்தாய்சலந்தரனைத்தழலாய்
பொறித்தாயனங்கனைச்சுட்டாய்ப்புரம்புனலுஞ்சடைமேற்
செறித்தாய்க்கிளைப்படுமாமின்றகண்டியன்சில்வளையும்
பறித்தாய்க்கிதுபழியாகுங்கொலாமென்றுபாவிப்பனே. (௮௧)

பாவிக்கும்பண்டையளல்லள்பரிசறியாளிந்நம்
பாவிக்குங்குற்றத்திருமாதெங்கும்கமெங்கும்
காவிக்கண்சோரும்பொச்சாப்புங்கறையிடற்றுளக்கண்ணி
குவிக்கும்வெண்ணகையாளெம்பெல்லோரிக்குச்சந்தித்தவே.



சந்தித்தகூற்றுக்குக்கூற்றாம்பிணிக்குந்தனிமருந்தாஞ்
சிந்திக்கிற்சிந்தாமணியாந்திசைக்குத்திசைமுகமாம்
வந்திக்கில்வந்தென்னைமால்செய்யும்வானோர்வணங்கநின்ற
அந்திக்கண்ணாடியினானடியார்களுக்காவனவே. (௮௩)

ஆவனவாரேயழிக்கவல்லாரமையாவுலகிற்
போவனவாரேபொதியகிற்பார்புரமூன்றெரித்த
தேவனைத்தில்லைச்சிவனைத்திருந்தடிகைதொழுது
தீவினையேனிழந்தேன்கலையோடுசெறிவளையே. (௮௪)

செறிவளையாய்நீவினையலுலநலங்கல்விமெய்யா
பிறையவன்றுமைச்சேவடிப்போற்றென்றெல்லோருமேத்து
நிறையுடைநெஞ்சிதுவேண்டிற்றுவேண்டியசீர்தம்பாற்
கறையவளாகண்டனைக்காணப்பெறாதுகலங்கியதே. (௮௫)

கலங்கினவாவற்றுலவீழ்தகாகார்வரையாழ்கடமண
மலங்கினநாகமருண்டனபல்கணமவ்வானவர்கோ
யிலங்கினயின்னெருப்பின்சடையிலமையோர்வியந்தா
ரலங்கனன்மாகடமார்க்கினியாடுமெந்தம்மிறையே. (௮௬)

எம்மிறைவன்னிமையோர்தலைவனுமையாள்கணவன்
மும்முறையாலுமணங்கப்படுகின்றமுக்கணக்கச்
செம்முறையாளிவனென்பிழைத்தாட்கிறையெண்பிழைத்தா
னெம்முறையாலேகவர்க்கருதிற்றெழிற்கலையே. (௮௭)

கலைதலைசூலமழுக்கனல்கண்டைகட்டங்கங்கொடி
இலைமலிவேல்கைப்படுவெண்போட்சிவற்குமனஞ்சொற்செய்கை
நிலைபிழையாதுகுற்றேவல்செய்தார்தின்றிமருவெண்ணு
மலைபிழையாரென்பராலதிற்றோர்களிம்மாநிலத்தே. (௮௮)

மாநிலத்தோர்கட்குத்தேவரனையவத்தேவர்செல்வா
மானலத்தார்பெருமஞ்சடையீசனவன்பெருமை
தேனலர்த்தாமனையோன்திருமாலவர்தேர்ந்துணரார்
பானலத்தார்க்கவியாமெம்மனேயினிப்புகழ்வதே. (௮௯)

பாடியவண்டுறைகொன்றையினான்படப்பாம்புயிர்ப்ப
வோடியதீயாலுருகியதிங்களினூறலொத்த
தாடியநீறதுகங்கையுந்தெண்ணீர்யமுனையுமே
கூடியகோப்பொத்ததாலுமைபாகமெங்கொற்றவற்கே. (௯0)

கொற்றவனேயென்றுங்கோவணத்தாயென்றுமாவணத்தா
னற்றவனேயென்றுநஞ்சுண்டியேயென்றுமஞ்சமைக்கப்
பெற்றவனேயென்றும்பிஞ்ஞகனேயென்றுமன்மதனைச்
செற்றவனேயென்றுநாளும்பரவுமென்சிந்தனையே. (௯௧)

சிந்தனைசெய்யமனமமைத்தேன்செப்பநாவமைத்தேன்
வந்தனைசெய்யத்தலையமைத்தேன்கைதொழவமைத்தேன்
பந்தனைசெய்வதற்கன்பமைத்தேன்மெய்யரும்பவைத்தேன்
வெந்தவெண்ணீறணியீசற்கிவையான்விதித்தனவே. (௯௨)

விதித்தனவாழ்நாள்பெரும்பிணிவிச்சைகளொன்றுபட்டே
கொதிப்பினிலொன்றுங்குறைவில்லைகுங்குமக்குன்றனைய
பதித்தனக்கண்டனக்குன்றம்வெண்சந்தனம்பட்டனைய
மதித்தனக்கண்டனைநெஞ்சினியென்செய்யும்வஞ்சனையே. (௯௩)

வஞ்சனையாலேவரிவளைகொண்டின்னாமால்பணிப்பத்
தஞ்சம்பொழுதுமுழுதுந்தொழுதேன்சொரிமாலருவி
மஞ்சனமால்வரைவெண்பிறைக்கண்ணியனாத்தனைய
வெஞ்சினவாளைவிசிறுமுடியவீரனையே. (௯௪)

வீரையனரிவெற்பலர்சீரொரிபொன்னெழிலார்
காரொண்கடுக்கைகமழ்ந்துமாய்விடைத்தாளைபறவை.
பேரொண்பதிதிருந்தாள்வைகுர்தியெவ்வேறென்பரால்
யாருமறியாவகையெங்களீசர்பரிசுகளே. (௯௫)

பரியாதனவந்தபாவமும்பற்றுமற்றும்பவழித்தார்க்
குரியானெனச்சொல்லியுன்னுடனவனையடியார்க்
கரியானிவனென்றுகாட்டுமொன்றென்றிவையிவையே
பிரியாதுறையுஞ்சடையானடிக்கென்றும்பேசநுமே. (௯௬)



பேசுவதெல்லாமரன்திருநாமமப்பேதைநல்லாள்
காய்சினவேட்கையரன்பாலதுவுணர்ப்பறவை
சூடினகொன்றைமுடிமேலதுமுலைமேன்முயங்கப்
பூசினசாந்தந்தொழுமாலிவையொன்றும்பொய்யலவே. (௯௭)

பொய்யாநரகம்புகினுந்துறக்கம்புகினும்புக்கிக்
குய்யாவுடம்பினுனுயிர்வாடப்பறப்பவென்று
மையாரிவிழிநாளிலமாளினுந்தான்மறைசேர்
மையார்மிடற்றனடிமறவாவரம்வேண்டுவனே. (௯அ)

வேண்டியநாள்களிற்பாதியுங்கங்குன்மிகவற்று
மீண்டியவெந்நோய்முதலதுபின்னிளமைமேலதுமுப்
பாண்டினவச்சம்வெகுளியவாவழுக்காறிங்ஙனே
மாண்டனசேர்தும்வளர்புன்சடைமுக்கண்மாயனையே. (௯௯)

மாயனன்மாமணிகண்டன்வளர்சடையாற்கடிமை
யாயினதொண்டர்துறக்கம்பெறுவதுசொல்லுடைத்தே
சாய்சினவானைவளருங்கனகமலையருகே
போயினகாக்கையுமன்றேபடைத்ததுபொன்வண்ணமே. (௧00)

## ஆக்கியோன்பெயர்.

அன்றுவெள்ளானையின்மீதிமையோர்சுற்றமுறச்செல்
வன்றொண்டர்பின்பரிமேற்கொண்டுவெள்ளிமலையரன்முன்
சென்றெழிலாதியுலாவரங்கேற்றியசேரர்பிரான்
மன்றிடையோதுபொன்வண்ணத்தந்தாதிவழங்கிதுவே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

## சேரமான்பெருமாணாயனார்

அருளிச்செய்த

# திருவாரூர்மும்மணிக்கோவை.

———:o:———

### அகவல்.

விரிகடல்பருகி யளறுபட்டன்ன
கருநிறமேகங் கன்முகடேறி
அன்றினர்ப்பொழிய நோக்கியொண்டொடி
பொலங்குழைமின்னப் புருவவில்லிட்
டிலங்கெழிற்செவ்வாய் கோபமூர்தரக்
கைத்தலமென்னுங் காந்தண்மலர
முத்திலங்கெயிறெனு முல்லையரும்பக்
குழலென்னுங் கொன்றைகாட்ட
வெழிலுடைச்சாய விளமயிலடைப்ப
வுண்ணிறையுயிர்ப்பெனு மூதையூர்தரக்
கண்ணீர்ப்பெருமழை பொழிதலின்றெண்ணிறத்
தஞ்சனக்கொழுஞ்சே றலம்பியெஞ்சா
மணியும்பொன்னு மாசறுவயிரமு
மணிகிளர்திகழ மார்முழுதிருந்திக்
கொங்கையென்னுங் குவட்டிடைவழிதரப்
பொங்குபுயல்காட்டி யோளேகங்கை
வருவினைதவிர்த்த வார்சடைக்கடவு
ளரிவைபாகத் தண்ணலாரு
ரெல்லையிலிரும்பலி சொரியுங்
கலிவாசென்ற காதலர்மனமே. (க)

### வெண்பா.

மனமாளுருகேமற்றென் செய்யும்வாய்க்கு
சனமால்விடையுடையோன் கண்டத் - தினமாகித்
தோன்றினகார்தோன்றிலதேர் சோர்ந்தனசங்கூர்ந்தனபீர்
கான்றனகீதேந்திழையாள் கண். (உ)



### கட்டளைக்கலித்துறை.

கண்ணார்நுதலெந்தை காமருகண்டமெனவிருண்ட
விண்ணாலருமொடு மேலதுமேழுகொண்டல்விண்ட
மண்ணார்மலைமே விளமயிலாலமடமானனைய
பெண்ணார்மலிவனி யென்னாக்கழியும்பிரிந்தவரே. (௩)

### அகவல்.

உரைசேரழியொள்வாண் மின்னியுருமென
மரைதெருமரசமுரச மார்ப்பக்கைபோய்
வெஞ்சிலைகோலி விசிறுணியென்னு
மின்சரந்துரந்து வானேவிலனே
கடியவாவியு ளாவளன்மலரொடு
கொடியவாசைய துளவுமுமந்தண்
குலைமேம்பட்ட கோடலுங்கோபமோ
டலைமேம்பட்ட காந்தளும்வலனேந்திக்
காயாவெந்துயர் கருமேவலரே
பொங்கிரும்புரிசை போக்கறவளைஇக்
கங்குலும்பகலுங் காவன்மேவி
மாசறுவேந்தன் பாசறையோரே
யானேயின்னே
யலகிலாற்ற லருச்சுனற்கன்று
மலவாநல்வர மருளியவுத்தம
னந்தணாரூர் சிந்திக்குமதிமா
மையரிமாக்களைப் போலத்
அயருமக்குழியக் கண்டுயிலாளே. (௪)

### வெண்பா.

அயிலாரொயார்க்கோன்றத் தோன்றித்தீத்தோன்ற
மயிலாலவந்ததான் மாதோ - வயலாய
லண்டத்தமைக்கப்பாலா னந்தியங்கண்ணியான்
கண்டத்துக்கொப்பாய கார். (௫)

## சேரமான்பெருமாணாயனார்

### கட்டளைக்கலித்துறை.

காருறுபூழைக்கொடியின்றெருவின்கனூ சார்தலர்தக்
தேருந்தெருவுஞ்சிலம்பப்புகுந்து சிலவினைகள்
சோருந்திலபலவங்கேசெரிந்தன அன்னருகஞ்
சாருமிடற்றண்ணலாரூரிசை யணங்கினுக்கே.

### அகவல்.

அணங்குறைதெங்கெனா யருளைபெறுத்
மணங்கமழ்தெரியல் சூடினையுதும்
விசிகடர்நெடுவேன் முன்காடிவிளக்காக்
கடிவிசைசூழ்கான்யாற்று நெடுநீர்நீந்தி
பொருதனிபெயரும் பொழுதிற்புரிகுழல்
யானைமகளிர்சின் மல்லுழங்கலத்
தானக்காத லாகுவரென்று
புலவியுள்ளமொடு பொருந்தாக்கண்ணை
கலவிகனிரியக் கையறவெய்தி
மெல்விரனெரித்து விம்மிவெய்துயிர்த்
தல்லியங்கோதை யதுவுற்றாங்
கெல்லையிலிருந்தாய செய்தினள்புல்லார்
திரிபுரமெரிய வொருகணைதெரிந்த
வரிவைபாகத் தண்ணலாரூர்
வளமலிகமல வான்முகத்
திளமயிற்சாய லேந்திழைதானே. (௭)

### வெண்பா.

இழையார்வனமுலையீ ரீர்ந்தண்புனத்தி
நுழையாபகப்போந்ததொன் றுண்டே - பிழையாச்சி
ரம்மானவலாடி யாரூர்க்கோனன் றுரிக்க
கைம்மானேரன்ன களிறு. (௮)

### கட்டளைக்கலித்துறை.

களிறுவழங்கவழங்காவதர்கதிர் வேலுன்னியா
வெளிறுவிரவவருதிகண்டாய் விண்ணினின்றிழிந்த



மிளிருறுநக்கங்கைதாங்கியபிஞ்ஞகன் பூங்கழன்மாட்
டொளிறுமணிக்கொடும் பூணிமையோர்செல்லுமோங்கிருளே.

### அகவல்.

இருள்புரிகூந்தலு மெழினலஞ்சிதைந்து
மருள்புரிவண்டறை மாலையும்பரிந்து
வொண்ணுதற்றிலகமு மழிந்து நுகண்ணு
மைக்கிறமொழிந்து செந்திறமெய்தி
புள்ளுறுகொடுமை புனைப்பபோன்றனை
சேதகம்பரந்து செய்வாய்மேதரு
குழைகெழுதிருமுகம் வியப்புள்ளுறுத்தி
யிழைகெழுகொங்கையு மின்சார்ந்துஇச்
சிலைபுருவமிது திசைப்பிறைவங்கி
பென்னிதுவினைந்த ...
தன்னையமறுநில மியாமேசெதிபொழி
லுருகுடையாரு ரமர்ந்துறையுமுதன்
முருகுவிரிதெரியன் முக்கண்மூர்த்தி
மாமரச்சோலைச் சிராமலைச்சாரற்
கரும்பியர்றும்போது கொய்யப்
பெருஞ்செறுவனத்தில்யான் பிரிந்தவிப்பொழுதே. (௧௦)

### வெண்பா.

பொழுதுகழிந்தாலும் பூம்புனங்காத்தென்னி
யெழுதுகொடியிடையா யேகான் - தொழுதமரர்
முன்னஞ்சேர்மொய்கழலான் முக்கணுனுன்மலையான
மன்னுஞ்செய்போலொருவன் வந்து. (௧௧)

### கட்டளைக்கலித்துறை.

வந்தாரெதிர்சென்றுநின்றேன் கிடந்தவன் டார்த்தழுக
டந்தாரவையொன்றுமாற்றகில்லேன்றக்கன் வேள்விசெற்ற
செந்தாமரைவண்ணன்றீர்த்தச்சடையன் சிராமலைவாய்க்
கொந்தார்பொழிலணிதாவனஞ்சூழ் குளிர்புனத்தே. (௧௨)

அகவல்.

வளைமயிற்சாயற் சூழ்குழன்மடந்தை
மனைமலிசெல்வ மதிநாளறி
பேதுறலொருவன் காதலனாக,
விடையடர்க்குடியின் றடைகுவிழுது
மடியகத்தெடுத்தே மராழுங்காணத்து
வெவ்வினைவேடர் குடிக்குரம்பெயர்ந்து
மெய்வழிநெறியுஞ் செல்வழிதாவி
முன்னிலையுந் முன்னிலைமுழம்
வெள்ளிலும்பரந்த வெள்ளிடைமருங்கிற்
கடுந்தீக்குழைய நெடுந்தொடர்பிணித்தப
பாசத்தின்ற மெய்காலம்பர்
மனையகன்மேய்ந்த ஆமிழம் றைப்பை
விரிகொக்குந்தல் வெள்வாய்மறந்தியா
விருந்தாயினன்கொ லேனைகிருந்தாக்
கூர்நுனைப்பெரிய கோன்றொழிலொருவ
னூர்நல்செற்ற வண்ணலாரூர்ச்
செய்வளர்கமலச் சீறடிக்
கொவ்வைச்செவ்வாய்க் குயின்மொழிக்கொடியே. (௧௬)

வெண்பா.

கொடிபோலிடைமிடையாள் கொய்தாரான்பின்னே
யடியானடந்தடைந்தா ளாக - பொடியாக
நன்றுருமுன்னெரித்த நாகஞ்சேர்சென்னியான்
றன்னூருர்ழுந்த நடம். (௧௭)

கட்டளைக்கலித்துறை.

நடப்பாற்புனற்ற சடைச்சங்கரன்றன்மதி போன்முகத்து
மடப்பான்மடந்தைமல ரணைச்சேக்கையிற் பாசம்பிரிந்து
விடப்பாற்றிரிபில்வெருவிருந்தாருஞ் சென்றனாரம்
பட்டபாலையல்லயாற்றயியென் ஞாயம் பட்டனவே. (௧௮)

அகவல்.

பட்டோர்பெயரு மாற்றலுமெழுதி
நட்டகல்லு மூரார்நத்தமும்
பான்முரம்பதரு மல்லறுபடுமறைய
வான்முறையறியா வல்வெயிற்கானத்துத்
தேனிவர்கோதை செல்லுமாயினு
மந்திலோதி லோக்கிற்கழிந்து
நெருஞ்செரிவுடைமையின் விலக்காதலின்
கொங்கைக்கழிந்து குன்றிடையடைந்த
கொங்கிவர்கோங்கமுஞ் செலவுடன்படுக
வென்றேருட்டுடைந்து வெயிலிடைநின்ற
குன்றகேயுங் களுங் கூற்றடைந்த ... ழிக
மாயிருங்கடற்றிடை வை... ம
பாவைவளர்பம்பாய் நீங்கிபாவைய
விலக்காதயிழுந்தனை மாதோங்கெத்தகு
மலைபுனலாரு ரமர்ந்துறையுமுதல்
கலைமார்க்கையன் கண்ணுதலெந்தை
தொங்கலஞ்சடைமுடிக் கணிந்த
கொங்கலர்கண்ணி யாயிழைகுழலே. (௧௯)

வெண்பா.

குரவங்கமழ்கோதை கோதைவேலோன்பின்
விரவுங்கடுங்கானம் வெவ்வா - யரவஞ்
சடைக்கணிந்தசங்கரன் றூர்மதனன்றன்னைக்
கடைக்கணித்ததீயிற் கடிது. (௨௰)

கட்டளைக்கலித்துறை.

கடிமலர்க்கொன்றையுந் திங்களுஞ்செங்கணரவுமங்கே
முடிமலராக்கியமுக்கணக்கண்மிக்க செந்தொக்கும்
படிமலர்மேற்பிரமனடியா வாதவர்போ
லடிமலர்கோவடர்ந்தாகடந்தெ மம்மனையே. (௨௧)

## அகவல்.

மனையுறை குருவி வளைவாய்ச் சேவல்
மின்னுறு திர்பெடைச் செவ்வி நோக்கி
பீலிவிரைக்க வேண்டியாறு
வள்புபொறைகடா வென்பேன் மூயங்கிக்
கன்றுறைபடக்கரும்பு துண்டோடுகவரும்
பெருவளந்தழீஇய பீடுசால்கிடக்கை
வருபுனலாரூரன் பார்மையர்க்கு
மடக்கொடிமாதர்க்கு வலையாய்த்தோன்றிப்
படிற்றுவாய்மொழி பலபாராட்டி
யுள்ளத்துள்ளது தெள்ளிதிற்கரந்து
வள்ளோர்க்கு [illegible] தொழுதிறைஞ்சி
வெற்பிலோடு
வமருமதிய [illegible]
குமரன்றலைந் குனிசடையிறைய
வறைக்குழலெல்லை யாரூராவனைத்
துறையிற்றாக்கு மெழின்மென்காட்டிக்
கன்னடி மனையர்மைப்
பண்ணுடைச்சொல்லியர் பயப்பாலோனே. (௧௯)

## வெண்பா.

பாலாயசொல்லியர்க்கே சொல்லுபொய்ப்பாணமகனே
பேலாகிவெந்துறக் கிடின்றாய் - மேலாய
தேர்தண் கமழ்கொன்றைச் செஞ்சடையான்றன் குடிப்
பூந்தண்புனலூரன் பொய். (௨௰)

## கட்டளைக்கலித்துறை.

பொய்யாற்றொழிலுமருளுமிலைறகண்டப் போலிருண்ட
மையார்நெடுங்கண்மடந்தையர் கேட்கிற் பொல்லாதவர் தன்
கையாலடிதொடல்செல்லலில் புல்லல்சிலைபோய
மலையாவிவைகன்று தற்றுப்பெரிது மருகியரே. (௨௧)



## அகவல்.

அழகுடைக்கிங்கிணி யடிமிசையரற்றத்
தொழிலுடைச்சிறுபறை பூண்டுநேர்த்
தொருகளிறுருட்டி யொண்பொடியாடிப்
பொருகளிறனைய போக்கமொடுமிற்றூழ்ந்து
பூங்குழற்சிறுதொடு தாங்குநடையிற்றி
யக்கரையுடுத்து வைம்படைகட்டி
யொக்கரையிருக்கு மொளிர்புன்குஞ்சிக்
குதலையங்கிளவிப் புதல்வன்றன்னை
யுள்ளச்சொரிந்த வெள்ளத்திம்பா
லுடையவாகிய தடமென்கொங்கை
வேண்டாதுபிரிந்த விரிபுனலூரன்
பூண்டாங்ககலம் புல்குவனெனப்போய்ப்
பெருமட்டுடைய வார்சடைக்
கொடுவெண்டிங்கட் கொழுநிலவேய்க்குஞ்
சுடுபொடியணிந்த தாளங்கொளியகலத்
தண்ணலாரூர் திண்ணிதிற்செய்த
சிறைகெழுசெம்புனல் போல
நிறைவொடுநீங்காய் நெஞ்சமே. (௨௨)

## வெண்பா.

நீயிருந்திங்கென்போது நெஞ்சமே நீயிருட்க
துயிரங்கைவட்டித் தனலாடிந் - தியரங்கத்
தைவாயரவசைத்தானன்பினைத்தோட்கன்பமைத்து
செய்யானையூரன் திறம். (௨௩)

## கட்டளைக்கலித்துறை.

திறமலிசின்மொழிச் செந்துவர்வாயினை யெங்கையர்க்கே
மறமலிவேலோ னருளுதவார்சடையான்கடலூர்
அறமலியாம்பல்பல் லாயிரத்தநதமியேயெழிலு
நறுமலர்தாழுமா தன்னதன்றுசொல்லுறாயமே. (௨௪)

### அகவல்.

பைங்கொழுந் தருஞ்சடைக் குருண்டிருண் டுடைய
வியன்றிசைப் பிறையின் வெறியொளி நீயவர்
செய்ம்மீன் கவரல் வேண்டிக் கைபெயர்த்
தாவட்ட மெய்ப்பனிமிசை
முடிகொழுந் தருவிய வெண்முத்தீர்ச்
சுடரொளி வாங்கிக் கொள்ளைகொண்ட
அணிமுகச் செம்முத் தடர்வீசுபவளமு
மெனிசதிர் வித்திலத் தொருவியங்கூடி
விரிசுடர் இலவுஞ் செக்கருந்தாரகை
புருவ மங்காட்டி முகவாய் காட்டித்
தன்னொத் தருகுவன் தடைவாய் பகலச்
சென்றுறக் கண்டனர் முதலைவொன் னிழக்
காணமாதனை எதிர்மறித் துருவினைப்
பொலிவுறத் திருவருள் தொள்ளைபோல
மணிதிகழ் மிடற்று வானவன் மருவு
மணிதிகழ் வைந் தண்ணாரூ
ரார்கவின் பொழி லண்ணல் தோர்
பேரலர் பிறந்த திருந்தழகே. (௨௫)

### வெண்பா.

ஊரெலாந் தூற்றி யுலகெலா மென்னொன்று
பாரெலாம் பாடவித்த பாவிருட்டச் — சீருலா
மாரூருறைவா யீசன் மணிக்கீர்மலைக்கட்டிப்
பூத்துறைவாய் பெய்ந் துறங்காப் புள். (௨௬)

### கட்டளைக்கலித்துறை.

புள்ளுந் துயின்று பொழுதிறு மாந்து கழுதுறங்கி
யுள்ளொன்றிரங்கு மிருள்வாய்ப் பெருகிய வார்பனிநாட்
டின்றுறுங் கழிக்கைச் சுடர்வண்ண னாரூரொழுவார் மனம்போன்
றன்றுமுருக வொருவர் நின்றோர் வழுவாழ்ந்துமே. (௨௭)



### அகவல்.

உலகிற்கைக்குடை யொருசடைக்கரந்து
புனல்நீரொழுகப் பொருகளிறுரித்த
புதனாத ஞானமூர்த்தி
திருமடமங்கை யொருகூறுகொடுத்தருத்
தன்வினை மைத்துயருகுத் தன்பகல்
வலம்புரியெப்பா மாமுத்தாமி
சலஞ்சலம் நிறைய வேற்றிதழ்த் திகழ்
பவளச்செந்தீ முட்டிப்பொலம்பட
விப்பியர் துப்பா லொப்பத்தாமி
மாடஅதட்ட வழுதம்வாய் மடுத்
திடாநுவாய மேசென்றும் பொழுதில்
திருத்திழைப் பெட்டை தோட்டேலைபுமாரி
திருத்தினை டியேற் றருகுமியாவென
முனிவுமுகநோக்கி முறுவலித் திறைஞ்சலி
னைதை மெழுஞ் வொப்பத் திருமணியின்றி
பொங்குபுனலூர் தாதா போலவே (௨௮)
யாங்கமெல்லாந் தாறுமினனே.

### வெண்பா.

ஆயினவன்பாரெயழிப்பரனடி
பேயினவன்பாநேரம்புப்பேருளான் — தீயினவன்
கண்ணுள் ளருர்க் கடாார்மட்பபனை (௨௯)
தண்ணுருஞ்சொங்கைக் கோழ்ந்த.

### கட்டளைக்கலித்துறை.

தாழ்ந்திடுந்து சடைமுடிச்சங்கரன் சூலப்படையா
ரூழ்ந்திடுந்தன வார்க்கினைப் பாலயர் வேற்றிரங்கித்
தாழ்ந்திடுத்தகைமேற்றியாவென் துங்கையெறிந்து (௩௦)
வீழ்ந்திடுந் தலரித் துயிலா திவ்விரிக்கடலே.

திருச்சிற்றம்பலம்.

சேரமான்பெருமாணாயனார்

அருளிச்செய்த

# திருக்கைலாயஞானவுலா.

---

திருமாலுநான்முகனுந் தேர்ந்துணராதன்றங்
கருமாலுறவழலாய் நின்ற - பெருமான்
பிறவாதேதோன்றினான் காணாதேகாண்பான்
இறவாதேயாக்கை யிறந்தான் - முறைமையா
லாழாதேயாழ்ந்தா னகலாதகலியா
னூழாலுயராதே யோங்கினான் - சூழொளிநூ
லோதாதுணர்ந்தா னுலகாதி தன்னியான்
யாதுமறியா நலமியா - னாதி
யரியாகிக்காப்பா னயனாய்ப்படைப்பா
னரனாயழிப்பவனுந் தானே - பரனாய
தேவரறியாத தேற்றத்தான்றேவரைத்தான்
மேவியவாறே விதித்தமைத்தா - னேவாதே
யெவ்வுருவில்யாரொருவ ருள்குவாருள்ளத்து
மவ்வுருவாய்த்தோன்றி யருள்கொடுப்பா - னெவ்வுருவுந்
தானேயாய்நின்றளிப்பான் றன்னிற்பிறிதுருவ
மேனோர்க்குங்காண்பரிய வெம்பெருமா - னானாத
சீரார்சிவலோகந் தன்னுட்சிவபுரத்து
ளேரார்திருக்கோயி லுள்ளிருப்ப - வாராய்ந்து
செங்கணமரர் புறங்கடைக்கட்சென்றீண்டி
யெங்கட்குக்காட்சியரு ளென்றிரப்ப - வங்கொருநாட்
பூமங்கைபொய்தீர் தராமங்கைசீர்மங்கை
நாமங்கையென்றிவர்க ணன்கமைத்த - சேமங்கொள்
ஞானக்கொழுந்து நகராசன்றன்மடந்தை
தேன்மொய்த்தகுஞ்சியின்மேற் சித்திரிப்ப - வூனமில்சீர்
நந்தாவனமலரு மந்தாகினித்தடஞ்சேர்
செந்தாமரைமலரு மாயிரத்தா - னெந்தா



னயந்தனெடுத்தமைத்த வாசிகைசூட்டி
நயந்திகழுங்கல்லுறுப்புக் கூட்டிப் - பயன்கொள்
குலமகளிர்செய்த கொழுஞ்சாந்தங்கொண்டு
நலமலியவாகந் தழீஇக் - கலைமலிந்த
கற்பகமீன்ற கமழ்பட்டிகையுடுத்துப்
பொற்கழல்கள்காண்மேற் பொலிவித்து - விற்பகருஞ்
சூளாமணிசேர் முடிகவித்துச்சூட்டிசேர்
வாளார்நுதற்பட்ட மன்னுவித்துத் - தோளா
மணிமகரகுண்டலங்கள் காதுக்கணிந்தாங்
கணிவயிரக்கண்டிகை பொன்னூண் - பணிபெரிய
வாரமவைபூண் டணிதிகழுஞ்சன்ன
வீரந்திருமார்பில் விளங்க - வேருடைய
வெண்டோட்குக்கேயூரம் பெய்துசரபந்தனமுங்
கண்டோர்மனமகிழக் கட்டிஇக் - கொண்டு
கடிசூத்திரம்புனைந்து கங்கணங்கைப்பெய்து
வடிவுடையகோலம் புனைந்தாங் - கடிநிலமே
னந்திமாகாளர் கடைதிறந்தபோழ்தத்து
வந்துவசுக்க ளிருக்குரைப்ப - வந்தமில்சீ
ரெண்ணருங்கீர்த்தி யெழுவர்முடிசேர்
மன்னன்மேலாகிக் காமுனைந்த - வொண்ணிறத்த
பன்னிருவாதித்தர் பல்லாண்டெடுத்திசைப்ப
மன்னுமகத்தியன்யாழ் வாசிப்பப் - பொன்னியலு
மங்கிகமழ்தூப மேந்தயமன்வந்து
மங்கலவாசகத்தால் வாழ்த்துரைப்பச் - செங்கை
நிருதிமுதலோர் நிழற்கலன்களேந்த
வருணன்மணிக்கலசந் தாங்கத் - தெருவெல்லாம்
வாயுநனிவிளக்க மாமழைநீர்தெளிப்பத்
தூயசீர்ச்சோமன் குடையெடுப்ப - மேவியசீ
ரீசானன்வந்தடைப்பை கைக்கொள்ளவச்சுவிகள்
வாயார்ந்தமந்திரத்தால் வாழ்த்தொலிப்பத் - தூய
வுருத்திரர்கோடித்திரங்கள் சொல்லக்குபேரன்

திருத்தகுமா மதியஞ் சேர்த்தக் - கருத்தமைந்த
கங்காநதியுடனே யுன்னுமத் தீர்த்தார்கள்
பொங்குகவரி புடையிரட்டத் - தங்கிய
பைந்நாகமெட்டுந் தடரெருப்பப் பைந்தறுகட்
கைந்நாகமெட்டுங் கழல்வணங்க - மெய்ந்நாக
மேகம்விதானமாய் மின்னெலாஞ் சூழ்கொடியாய்
மேகத்தருமு முரசறையப் - போகஞ்சேர்
தும்புருநாரதர்கள் பாடத்தொடர்ந்தெங்குங்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட - வெம்பெருமான்
விண்ணோர்பணிய வுயர்தவிசின்கொலிசேர்
வெண்ணூர்மழவிடையை மேல்கொண்டாங் - கெண்ணார்
கருத்துடையபாரிடங்கள் காப்பொத்துச்செய்யத்
திருக்கடைக்காளுக்கழிந்த போதிற் - செருக்குடைய
சேனாபதியின்மேனா முன்செல்லவரினமே
வானுப்போர்க்கிரன் பின்பட - வானூர
வன்னத்தேபெறி யயன்வலப்பால்கைபோதக்
கன்னவிலுந்திண்டோட் கருடன்மேல் - மன்னிய
மாலிடப்பாற்செல்ல மலரார்கணையைந்து
மேவிடப்பான்மென்கருப்பு வில்லிடப்பா - லெல்வுடைய
சங்கிணையுமுன்னைத் தடமுலையார்மேலெய்வான்
கொங்கணையும்பூவாளி கோத்தமைந்த - வெங்கணையான்
காமன்கொடிப்படைமுன் போதக்கதக்கரி
வாமன்புரவிமேல் வந்தணைய - நாமஞ்சேர்
வேழமுகத்து விநாயகனையுள்ளுவந்துக் [கந்தன்
குழ்வினைக்கைத்தொண்டைவாய்க் கெண்டையொண்கட்டாழ்
மங்கையெழுவருஞ் சூழமடகிலி
சிங்கவடலேற்றின் மேற்செல்லத் - தங்கிய
வித்தாதரியக்கர் கின்னரர்கிம்புருட
ரச்சாரணரரக்க ரோடசுர - ரச்சாருஞ்
சவ்வரிதானர் தருணர்த்தத்தனகய
கல்லலருகல்லடை மொக்கை - கல்லியைத்



குட்டழிசங்கஞ் சலஞ்சலர்தண்ணுமை
கட்டழியாப்பேரி கரதாளங் - கொட்டுங்
குடமுழவங்கொக்கரை வீணைகுழல்யா
ழிடமாந்தடாரி படக - மிடையிடை
மத்தளந்துந்துபி வாய்ந்தமுருடிவற்று
லெத்திசைதோறு மெழுந்தியம்ப - வொத்துடனே
மங்கலம்பாடுவார் வந்திறைஞ்சமல்லருங்
கிங்கரருமெங்குங் கிளர்ந்திசைப்பத் - தங்கிய
வாருயிருளாவும் யோகுமருந்தவமு
மாருதமுந்திசைய மந்திரமு - மீரந்த
காலங்கண்மூன்றுங் கணமுங்குணங்களும்
வாலகிலியரும் வந்தீண்டி - மேலை
யிமையோர்பெருமானே போற்றியெழிலே
யுமையாள்மணவாளா போற்றி - யிமையாளுந்
தியாடிபோற்றி சிவனேயடிபோற்றி
யீசனேயெந்தா யிறைபோற்றி - தாயசீர்ச்
சங்கரனேபோற்றி சடாமகுடத்தாய்போற்றி
பொங்கரவாபொன்னங் கழல்போற்றி - யங்கொருநா
ளாயவிருப்போ ருச்சலனந்தாற்றற்குப்
பாகபதமீந்த பதம்போற்றி - தூய
மலைமேலாய்போற்றி மயானத்தாய்வானோர்
தலைமேலாய்போற்றிதாள் போற்றி - நிலைபோற்றி
போற்றியெனப்பூமாரி பெய்துபுலன்கலங்க
நாற்றிசையுமெங்கு நலம்பெருக - வேற்றுக்
கொடியும்பதாகையுங் கொற்றக்குடையும்
வடிவுடையதொங்கலுஞ் சூழக் - கடிகமழும்
பூமான்கருங்குழலா ருள்ளம்புகுவன்பான்
வானவீசன் வரும்போழ்திற் - சேமேலை

குமாரங்கள்.

வாமாலைகீசன் மருவின்சேர்வானவர்தங்
கோமான்பணிமுழக்கங் கேட்டலுமே - தாமாங்கில்

வானநீர்தாங்கி மறையோம்பிவான்பிறையோ
னேமில்சூல முடையவா - யீனமிலா
வெள்ளையணிதலால் வேழத்துரிபோர்த்த
வள்ளலேபோலும் வடிவுடைய - வொள்ளிய
மாடநடுவின் மலராரமளியே
கூடியபோர்க்கள மாக்குறித்துக் - கேழில்
சிலம்புபறையாகச் சேயரிக்கணம்பா
விலங்குகொடும்புருவம் வில்லா - கலந்தெழுங்
கூழையின்முழ வளையார்ப்பக்கைபோந்து
கேழ்கிளருமல்குலார் தேருந்திச் - சூழொளிய
கொங்கைமாப்பொங்கக் கொழுநர்மனங்கவர
வங்கம்பொருதசைத்த வாயிழையார் - செங்கேழற்
பொற்கலசத்துள்ளான் மஞ்சனீர்முகந்தேர்த்தி
நற்பெருங்கோல மிகப்புனைந்து - பொற்புடைய
பேதைமுதலாகப் பேரிளம்பெண்ணீறுக
மாதரவர்சேர மகிழ்ந்தீண்டிச் - சோதிசேர்
குளிகையுஞ்சூட்டுஞ் சுளிகையுஞ்சுட்டிகையும்
வாளிகையும்பொற்றொடு மின்விலக - மாளிகையின்
மேலேறிநின்று தொழுவார்துயர்கொண்டு
மாலேறிநின்று மயங்குவார் - நூலேறு
தாமமேதந்து கடாதாரேல்காணேல்
யாமமேலெம்மை யடுமென்பார் - காமவே
ளாமென்பாரன்றென்பா ரையுறுவார்கையெறிவார்
தாமுன்னைநாணோடு சங்கிழப்பார் - பூமன்னும்
பொன்னரிமாலையைப் பூண்பாரப்பூண்கொண்டு
நன்னரிமாலையாச் சூட்டுவார் - முன்னை
மொருகணெழுதிவிட் டொன்றெழுதாதோடித்
தெருவம்புகுவார் திகைப்பா - ருகிருந்த
கண்ணாடிமேற்பஞ்ச பெய்வார்கிளியென்று
பண்ணாடிச்சொற்பந்துக் குற்றுரைப்பா - ரண்ணன்மேற்
கண்ணொன்றுமாசாலங் கோலிக்கருங்குழலார்
தின்னநிறைத்தா டிறந்திட்டா - ரொண்ணிறத்த



## பேதை.

பேதைப்பருவம் பிழையாதாள்வெண்மணலாற்
சூதைச்சிறுசோ றடுதொழிலா - ளீதி
விடையானுமெய்க்கருத்த மாட்டாளலந்தே
ருடையானுமுள்ளுருக்க கில்லா - ளடையாளுங்
கௌவைநோய்காளையரைச் செய்யாள்கதிர்முலை
யௌவநோய்செய்யுந் தொழில்பூணாள் - செவ்வனே
நோக்கினுநோய்நோக்க நோக்காள்செவ்வாயின்
வாக்கும்பிறர்மனத்தை வஞ்சியாள் - பூக்குழலும்
பாடவந்தோன்ற முடியாளின்வேய்த்தோ
ளாடவர்தம்மை யயர்வுசெய்யா - ளூடோறு
மொன்றுரைத்தொன்றன்றி யொன்றுசெய்தானந்தகட்
சென்றமனத்தனளாஞ் சேயிழையா - ளன்றுதக்
தாலிகழுத்தணிந்து சந்தனத்தால்மெய்பூசி
நீலவறுவை விரித்துடுத்துக் - கோலஞ்சேர்
பந்தலிற்பாவைகொண் டாடிப்பாவைக்குத்
தந்தையாரென்றொருத்தி தான்வினவ - வந்தமிக்கீ
ரீசனரியாடி யென்னவவளையோ
காய்சினமால்விடையேற் கண்ணுற்றுத் - தாய்சொன்ன
விக்கனைக்குநோக்கா ளிவள்போல்வாள்காமனு
னற்கணைக்கின்மேற்சிறிதே நாட்செய்தாள் - பொற்புடைய

## பெதும்பை.

பேரொளிசேர்காட்சிப் பெதும்பைப்பிராயத்தாள்
காரொளிசேர்மஞ்ஞைக் கவினியலாள் - சீரொளிய
தாமமொன்றி லிரண்டுகுழையிரண்டு
காமருவுகெண்டையோர் செந்தொண்டை - தாமருவு
முத்தமுரிவெஞ் சிலைசுட்டிசெம்பவளம்
வைத்ததுபோலு மதிமுகத்தா - ளொத்தமைந்த
சங்கணஞ்சேர்ந்திலங்கு கையாள்கதிர்மணியின்
கிங்கிணிசேர்ந்த திருந்தடியா - ளொண்கேழ

வந்நநிலஞ்சூழ்ந்தசைந்த வல்குலாளாய்ப்பொறியிற்
சந்தனந்தோய்ந்த தடந்தோளாள் - வந்து
இடரிட்டதிண்ணவாக்கண் செய்கழலையாள்
கடம்பட்டவின்னமுத மன்னனை - மடம்பட்ட
மாலைவளாய குழலாண்மனைநாறு
சோலையிளங்கிளிபோற் றூமொழியாள் - சாலவும்
வஞ்சனைசெய்து மனங்கவரும்வாட்கண்ணைக்
கஞ்சனத்தையிட்டுக் கழகாக்கி - யெஞ்சா
மணியாரம்பூண்டாழி மெல்விரலிற்சேர்த்தி
யணியார்வளைதோண்மேன் மின்ன - மணியார்த்த
தூவெண்மணற்கொண்டு தோழியருந்தானுமாய்க்
காமனுருவம் வரவெழுதிக் - காமன்
கருப்புச்சிலையு மலரம்புந்தேரு
மொருப்பட்டெழுதும் பொழுதில் - விருப்புறுந்
தேனமருங்கொன்றையந்தாரத் தீர்த்தன்சிவலோகன்
வானமாலேற்றின்மேல் வந்தணையத் - தானமர
நன்றறிவார்சொன்ன நலந்தோற்றுநாண்டோற்று
நின்றறிவுதோற்று நிறைதோற்று - நன்குகக்
கைவண்டுங்கண்வண்டு மோடக்கலையோட
நெய்விண்டபூங்குழலா ணின்றொழிந்தாண் - மொய்கொண்ட

மங்கை.

மங்கையிடங்கடவா மான்பிறழ்வாணிழிந்த
கங்கைக்கழியனைய வுந்தியா - டங்கிய
வங்கைகமல மடிகமலமாருக்கி
கொங்கைகமல முகங்கமலம் - பொங்கெழிலா
ரிட்டிடையும்வஞ்சி யிரும்பணைத்தோள்வேயெழிலார்
பட்டிடையவல்குலுந்தேர்த் தட்டு - மட்டவிழ்
கூந்தலறலபயனுஞ் செய்யவாயவ்வாயி
லேய்ந்தமணிமுறுவ லின்முத்தம் - வாய்ந்தசீர்
வண்டுவளாய வளர்வாசிகைசூட்டிக்
கண்டிகழுத்திற் கவின்சேர்த்திக் - குண்டலங்கள்



காதுக்கணிந்து கனமேகலையிருத்தித்
தீதில்செழுங்கோலஞ் சித்திரித்து - மாதரான்
பொற்கூட்டிற்பூவையை வாங்கியதனோடுஞ்
சொற்கோட்டிக்கொண்டிருந்த வெல்லைக்க - ணற்கோட்டு
வெள்ளிவிலங்கன்மேல் வீற்றிருக்குநாயகனாம்போ
லொள்ளியமால்விடையை மேல்கொண்டு - தெள்ளியசீர்
தாழுஞ்சடையான் சடாமகுடத்தானுதரும்
வாழுமேமம்மர் மனத்தனாய்ச் - சூழொளியான்
ருர்நோக்குந்தன்னுரு நோக்குமவனுடைய
பேர்நோக்குந்தன்ன தெழினோக்கும் - பேரருளான்
றேருநோக்குந்தன்றே ரு நோக்குமவன்மார்பி
னிணோக்கம்வைத்து நெடிதுயிர்த்து - நாணோக்கா
துள்ளமுருக வொழியாதவேட்கையாம்
வெள்ளத்திடையழுந்தி வெய்துயிர்த்தா - ளொள்ளிய

மடந்தை.

தீந்தமிழின்றெய்வ வடிவாடிருந்தியசீர்
வாய்ந்தமடந்தைப் பிராயத்தா - ளேய்ந்தசீ
ரீசன்சிலைபு மெழில்வான்பவளமுஞ்
சேயவலம்கைவேலுந் திரண்முத்தும் - பாசிலைய
வஞ்சியும்வேயும் வளர்தாமரைமொட்டு
மஞ்சில்வருமாமதியோன் மண்டலமு - மெஞ்சாப்
புருவமுஞ்செவ்வாயுங் கண்ணுமெயிறு
முருவநுசுப்பு மென்றோளு - மருவினிய
கொங்கையும்வாண்முகமு மாக்கொண்டாள்கோலஞ்சேர்
பங்கயப்போதனைய சேவடியா - ளொண்கேழல்
வாளைத்தண்டன்ன குறங்கினள்வாய்ந்தசீ
ராழித்தேர்த்தட்டனைய வல்குலா - ளூழித்
திருமதியமற்றொன்று மென்றுமுகத்தை
யுருவுடையநாண்மீன்சூழ்ந்தாற்போற் - பெருகொளிய
முத்தாரங்கண்டத் தணிந்தாளணிகலங்கள்
மொய்த்தாரவார மிகப்பெருகி - வித்தகத்தாற்

கன்றுங்கடாமுங் கலைவயுங்கைபோந்திட்
டொன்றும்புறமுஞ் செறிவமைத்துத் - தெள்ளொளிய
காளிங்கஞ்சோதி கிடப்பத்தொடுத்தமைத்த
தாளிம்பத்தாம நுதல்சேர்த்தித் - தோளெங்குந்
தண்ணறுஞ்சந்தனங்கொண் டப்பிச்சதிர்சாந்தை
வண்ணம்பெறமிசையே மட்டித்தான் - கொண்ணுதலா
டன்னமர்தோழியர்கள் சூழ்ந்தவிசேதிப்
பின்னுமோர்சாமரம் யாழமைத்து - மன்னு
விடவண்ணக்கண்டத்து வேதியன்மேலிட்ட
மடல்வண்ணம்பாடும் பொழுதின் - டடல்வல்ல
வேல்வல்லரன்வில்வல்லான் மெல்லியலார்க்கெஞ்ஞான்று
மால்வல்லானார்கின்ற மால்விடையின் - கோல
மணியேறுசேட்டாங்கு நோக்குவாள்கால
வணியேறுதோளானைக் கண்டாள் - கனியார்ந்த
கோட்டியொழிய வெழுந்தகுழைமுகத்தைக்
கோட்டிநுதல்சிவப்ப வாய்நலக்கி - நாட்டார்க
ளெல்லாருங்கண்டா ரெனக்கடவுளிங்காய்
நல்லாய்படுமேற் படுமென்று - மெல்லவே
செல்லலுறுஞ்சரணங் கம்பிக்குந்தன்னுறுநோய்
சொல்லலுறுஞ்சொல்லி முனைசெறிக்கு - நல்லாகங்
காணலுறுங்கண் கணீர்மல்குங்காண்பார்முன்
னாணலுறுநெஞ்ச மொட்டாது - பூணாகம்
புல்லலுறுமன்னல்கை வாராதென்றிவ்வகையே
யல்லலுறுமழுந்தி மாழ்கியரான் - மெல்லியலா
டன்னுருவம்பூங்கொன்றைத் தார்கொள்ளத்தான்கொன்றைப்
பொன்னுருவங்கொண்டு புலம்புற்றாள் - பின்னொருத்தி

அரிவை.

செங்கேழற்றுமணைபோல் சிறடியாடிலா
வங்கேழரிவைப் பிராயத்தா - ளொண்கேழற்
றிங்களுந்தாரகையும் வில்லுகுசெழும்பவளக்



தங்கொளிசேர்செவ்வாயு முண்மையாற் - பொங்கொளிசேர்
மின்னார்வான்காட்டு முகவொளியாள்மெய்ம்மையே
தன்னுவாரில்லாத் தகைமையாள் - ளெந்நாளு
மில்லாரையெல்லாரு மெள்குவார்செல்வரை
யெல்லாருஞ்செய்வர் சிறப்பென்னுஞ் - சொல்லாலே
யல்குலருமேகலையைச் சூழ்ந்தாளணிமுலைமேன்
மல்கியசாந்தொடு பூண்புனைந்து - நல்ல
ரிடையிடையேயுள்ளுருகக் கண்டாளொழிலார்
நடைபெடையன்னத்தை வென்று - னடியிணைமேற்
பாடகங்கொண்டு பரிசமைத்தாள்பன்மணிசேர்
சூடகமுன்கை தொடர்வித்தாள் - கேடில்சீர்ப்
பொன்னரிமாலை தலைக்கணிந்துபூண்கொண்டு
மன்னுங்கழுத்தை மகிழ்வித்தாள் - பொன்னனு
வின்னிசைவீணைய வாங்கியிமையவர்த
மன்னன்மேற்றுவிட்ட வாசையான் - முன்னமே
பாடெருடங்கும் பொழுதிற்பரஞ்சோதி
கேடிலாமால்விடைமேற் றோன்றுதலுங் - கூடிய
வின்னிசையுமிப்பிறப்பும் பேணுமிருந்தமிழு
மன்னியவீணையையுங் கைவிட்டுப் - பொன்னனைய
ரின்றன்றேகாண்ப தெழினலங்கொள்ளேனே
னென்றன்றேபெண்மை நயக்கென்று - சென்றவன்ற
னெண்களபமாடு மொளிவாண்முகத்திரண்டு
கண்களபமாடுபோற் கட்டுணாத்து - மொண்கேழ
லாந்தலவிழ்க்கு முடிக்குங்கலைதிருத்துஞ்
சாந்தந்திமிரு முலையார்க்கும் - பூந்துகிலைச்
சூழமவிழ்க்குந் தொழுமழுஞ்சோர்வயருஞ்
சூழுமழுந்து மயர்வுயிர்க்குஞ் - சூழொளிய
வங்கைவளைதொழுது காத்தாள்கலைகாவ
லங்கையிலருந் கலந்தோற்று - ளெங்கொருத்தி

தெரிவை.

யாராவமுத மவயவம்பெற்றனைய
சீரார்தெரிவைப் பிராயத்தா - ளோரார

மருணோக்கையின்மழலை வாய்ச்சொல்லெலென்று
மிருடர்புலரியே யொப்பா - ளருளாலே
வெப்பமினையவர்கட் காக்குதலாலுச்சியோ
டொப்பமையக்கொள்ளு முருவத்தாள் - வெப்பந்தீர
நந்தனிர்போறசேவடியு மங்கையுஞ்செம்மையா
லந்திவான்காட்டு மழகினு - ளந்தமில்
சீரார்முகமதிய மாதலாற்சேயிழையா
ளோராதிரவி னெழில்கொண்டாள் - சீராருங்
கண்ணார்பயோதரமு நுண்ணிடையுமுண்மையாற்
றண்ணினாக்காரின் சவிகொண்டாள் - வண்ணஞ்சேர்
மாந்தளிர்மேனி முருக்கிதழ்வாயாதலால்
வாய்ந்தவிளவேனில் வண்மையாள் - மாந்த
ரறிவுடையீர்பின்பின்க வல்லார்போமென்று
பறையறைவபோலுஞ் சிலம்பு - முறைமையாற்
சீரூர்திருந்தடிமேற் சேர்த்தினுடோல்கு
லோராதகல லுருமென்று - சீராலே
யந்தமிலுமேகலையுஞ் சூழ்ந்தாளணிமுலைகள்
மைந்தர்மனங்கவரு மென்பதனுன் - முந்துறவே
பூங்கச்சினுலடையப் பூட்டினாளிப்பொற்கொடியாற்
காம்பொத்ததோளிணையைக் காப்பேவி - வாய்ந்தசீர்
நற்கழுத்தைநல்லாரத் தான்மறைத்தங்காதுக்கு
விற்பகருங்குண்டலங்கள் மேவுவித்து - மைப்பகருங்
காவியங்கண்ணைக் கதந்தணிப்பாள்போலத்தன்
ருவியவஞ்சனத்தை முன்னூட்டி - யாவரையு
மாலுலமாக்கு மழகினுளன்னமுங்
கோகிலமும்போலும் குணத்தினு - ளாகைப்
பசைகுழிக்கட்டிக் கரியவரிக்கோடி
யலர்சுமந்தகூழைய ளாகிக் - கலைகரந்
தள்ளாதுயின்றிப் புறங்கமழ்ந்தகிழ்தாழ்ந்து
கள்ளாவிநாறுங் கருங்குழலை - டெள்ளொளிய
செங்கழுநீர்ப்பட்டுடுத்துச் செங்குங்குமமெழுதி
யங்கழுநீர்த்தாம முதல்சேர்த்திப் - பொங்கெழிலார்



பொற்கலத்தின்வெள்ளிப் பலகைமணிச்சூதா
னற்கமையநாட்டிப் பொருமபொழுதில் - விற்பகருந்
தோளாணிலைபேறு தோற்றுக்கேடாய்நின்ற
நாளான்சடாமகுடந் தோன்றுதலும் - கேளாய
நாணுர்மடக்க நலத்தார்க்கிடையிலகி
யேதுறொழிக வெழிலொழிக - பேறுஞ்
குலத்தாரகன்றிடுக குற்றத்தார்வம்மி
னலத்திரிகினையினி ரென்று - சொலற்கரிய
தேவாதிதேவன் சிவனுயிற்றேன்கொன்றைப்
பூவாரலங்கலருளாது - போவானேற்
கண்டாலறிவனெனச்சொல்லிக்கைசோர்ந்து
வண்டார்பூங்கோதை வளர்ந்தோற்று - மொண்டாய

பேரிளம்பெண்.

பெண்ணீரசாய்த்தோன்றிய பேரிளம்பெண்மையாள்
பண்ணமருமின்சொற் பணிமொழியாள் மணவாளமேற்
கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புல
மொண்டொடிகண்ணே யுளவென்று - பண்டையோர்
கட்டுரையைமெய்ப்படுத்தாள் கண்ணாடிமண்டலம்போல்
விட்டிலங்குநல்லுகிர்சேர் மெல்விரலாள் - கட்டரவ
மஞ்சப்பரந்தகன்ற வல்குலாளாய்நலத்த
வஞ்சிக்கொடிநுடங்கு நுண்ணிடையா - ளெஞ்சாத
பொற்செப்பிரண்டு முகடுமணியழுத்தி
வைத்தனபோல வளர்ந்தேந்தி - யொத்துச்
சுணங்குந்திதலையுஞ் சூழ்போந்துகண்டார்க்
கணங்குமருதுமுமாய்த் தோன்றி - யிணங்கொத்த
கொங்கையாள்கோலங்கட் கெல்லாமோர்கோலமா
நங்கையானுனிவெய்த் தோளினு - ளங்கையாற்
காந்தட்குலம்பழித்தாள் காமவேள்காதலான்
சாந்தமிலங்கு மகலத்தாள் - வாய்ந்துடனே
யேய்ந்தருவிந்து திரண்டுமறிந்திருபா
றேய்ந்தடித்த செழும்பவளங் - காய்ந்திலங்கி

முத்தமுந்தேனும் பொதிந்துமுனிவரையுஞ்
சித்தந்திறைகொள்ளுஞ் செவ்வாயா - ளொத்து
வரிசேர்ந்தஞ்சன மாடிமணிக
ளுருவகடுவுடைய வாங்கிப் - பெருகிய
தன்னங்கயலுஞ் சலஞ்சலமுந்தோன்றுதலால்
வண்ணங்கடலனைய வாட்கண்ணா - ளொண்ணிறத்த
குண்டலஞ்சேர்காதினாள் கோலக்குளிர்மதிய
மண்டலமேபோலு மதிமுகத்தாள் - வண்டலம்ப
யோசனைநாறு குழலாளொளிருதன்மேல்
வாசிகைகொண்டு வடிவமைத்தாள் - மாசில்சீர்ப்
பாதாதிகேசம் பழிப்பிலாள்பாங்கமைந்த
சிதாரிகொண்டுதன் மெய்புனைந்தாள் - மாதார்ந்த
பண்கவருஞ்சொல்லார்பல் லாண்டேத்தப்பாயொளிசேர்
வெண்கவரிவெள்ளத் திடையிருந்து - வொண்கேழற்
கண்ணவனையல்லது காணாசெவியவனை
தெண்ணருஞ்சீரல்ல திசைகொள்ளா - வண்ணல்
கழலடியல்லது கைதொழாவஃதான்
றழலங்கைக்கொண்டான்மாட் டன்பென் - றெழிலுடைய
வெண்பாவிரித்துரைக்கும் போழ்தில்விளங்கொளிசேர்
கண்பாவுநெற்றிக் கறைக்கண்டன் - விண்பா
லரியரணஞ்செற்றான் கலைபுனலும்பாம்பும்
புரிசடைமேல்வைத்த புராண - னெரியிரவி
லாடுமிறைவ னமரர்குழாந்தற்சூழ
மாடமறுகில் வரக்கண்டு - கேடில்சீர்
வண்ணச்சிலம்படி மாதரார்தாமுண்ட
கண்ணெச்சிலெம்மைமீ யூட்டுவா - னண்ணலே
வந்தாய்வளைகவர்ந்தாய் மாலுமருந்துயருந்
தந்தாயிதுவோ தகவென்று - நொந்தாள்போற்
கட்டுரைத்துக்கைசோர்ந் தகமுருகிமெய்வெதுத்து
மட்டிவரும்பூங்கோதை மால்கொண்டாள் - கொட்டிமைசேர்



பண்ணாருமின்சொற் பணைப்பெருந்தோட்செந்துவர்வாய்ப்
பெண்ணாரவாரம் பெரிதன்றே - விண்ணோங்கி
மஞ்சடைபுகின்றுமி வானிலாவீற்றிருந்த
செஞ்சடையான்போந்த தெரு.

---

பெண்ணீர்மைகாமின் பெருந்தோளிணைகாமி
னுண்ணீர்மைமேகலையு முன்படுமின் - றெண்ணீரக்
காரேறுகொன்றையந்தார்க் காவலிகட்டங்க
வாரேறுபோந்த துலா.

திருச்சிற்றம்பலம்.

---

☞ இத்திருவுலா ஆதியுலாவெனவும் பெயர் பெறும்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# கைலைபாதிகாளத்திபாதியந்தாதி.

சொல்லும்பொருளுமே தூத்திரியுநெய்யுமா
நல்லிடிஞ்சிலென்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பாவிளக்கா வியன்கயிலைமேலிருந்த
பெண்பாகர்க்கேற்றினேன் பெற்று. (௧)

பெற்றபயனிதுவே யன்றேபிறந்தியான்
கற்றவர்களேத்துஞ்சீர்க் காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத்தாடரவஞ் சூழ்ந்தணிந்தவம்மானுக்
காளாகப்பெற்றே னடைந்து. (௨)

அடைந்துய்ம்மினம்மானை யும்மாவிதன்னைக்
குடைந்துண்ணவெண்ணியவெங் கூற்றங் - கடைந்தநுங்
கண்ணுளேபார்க்கும் பொழுதுகயிலாயத்
தண்ணலேகண்டீ ரரண். (௩)

அரணமொருமூன்று மாரழலாய்வீழ
முரணம்புகோத்த முதல்வன் - சரணமே
காணுமாறுற்றவன்றன் காளத்திகைதொழுது
பேணுமா றுள்ளம் பெரிது. (௪)

பெரியவர்காணீரென் னுள்ளத்தின்பெற்றி
தெரிவரியதேவாதி தேவன் - பெரிதுந்
திருத்தக்கோரேத்துந் திருக்கயிலைக்கோனை
யிருத்தத்தான்போந்த திடம். (௫)

இடப்பாகத்தின்கோட் டிமவான்பயந்த
மடப்பாவைதன்வடிவே யானால் - விடப்பாற்
கருவடிசேர்கண்டத்தெங் காளத்தியாள்வார்க்
கொருவடிவேயன்று வுரு. (௬)



உருவுபலகொண் டுணர்வரிதாய்நிற்கு
மொருவனொருபா லிருக்கை - மருவினிய
பூக்கையிற்கொண்டெப்பொழுதும் புத்தேளிர்வந்திறைஞ்சு
மாக்கயிலையென்னு மலை. (௭)

மலைவரும்போல்வானவருந் தானவருமெல்லா
மலைகடல்வாய்நஞ்செழல்கண் டஞ்சி - நிலைதளரக்
கண்டமையாற்றன்சாரற் காளத்தியாள்வார்நஞ்
சுண்டமையாலுண்டிவ் வுலகு. (௮)

உலகமனைத்தினுக்கு மொன்றுநன்மேவிட்ட
திலகமெனப்பெறினுஞ் சீசீ - யிலகியசீ
ரீசாதிருக்கயிலை யெம்பெருமானென்றென்றே
பேசாதிருப்பார் பிறப்பு. (௯)

பிறப்புடையர்கற்றோர் பெருஞ்செல்வர்மற்றுஞ்
சிறப்புடையாராலுஞ் சீசீ - யிறப்பில்
கடியார்நறுஞ்சோலைக் காளத்தியாள்வா
ரடியாரைப்பேணா தவர். (௧௦)

அவரும்பிறந்தாராய்ப் போவார்கொலாவி
யெவருந்தொழுதேத்து மெந்தை - சிவமன்று
தேக்குவார்சோலைத் திருக்கயிலையேத்தாதே
போக்குவார்வாளா பொழுது. (௧௧)

வாளாபொழுது கழிக்கின்றார்மானுடவர்
கேளார்கொலந்தோ கிழிபட்டார் - கீளாடை
யண்ணற்கணுக்கராய்க் காளத்தியுண்ணின்ற
கண்ணப்பராவார் கதை. (௧௨)

கதையிலேகேளீர் கயிலாயநோக்கிப்
புதையிருட்கண்மாலோடும் போகிச் - சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற்பாசுபதம் பெற்றுச்செருக்களத்திற்
பார்த்தன்போர்வென்றிலனோ பண்டு. (௧௩)

பண்டுதொடங்கியும் பாவித்துநின்கழற்கே
தொண்டுபடுவான் றொடர்வேனைக் - கண்டுகொண்
டாளத்தயாவுண்டோ வில்லையோசொல்லாயே
காளத்தியாயுன் கருத்து. (௧௪)

கருத்துக்குச்சேயையாய்க் காண்டக்கோர்காணை
விருத்திநிருக்கயிலை யென்று - லொருத்த
றிவானுறுவார்க் கறியுமாறுண்டோ
நெறிவார்சடையாய் நிலை. (௧௫)

நிலையில்பிறவி நெடுஞ்சுழியிற்பட்டுத்
தலைவதடுமாறு கின்றேன் - றலைவின்றிப்
போந்தேறக்கைதாராய் காளத்திப்புத்தேளிர்
வேந்தேயிப்பாசத்தை விட்டு. (௧௬)

பாசத்தைவிட்டுநின் பாதத்தின்மேயென்
னேசத்தைவைக்க நினைகண்டாய் - பாசத்தை
நீக்குமாவல்ல கயிலாயாநியென்னைக்
காக்குமாறித்தனையே காண். (௧௭)

காணாதலக்கின்றார் வானோர்கள்காளத்திப்
பூணாரமார்பன்றன் பொற்பாதங் - நாணாதே
கண்டிடுவான்யானிருந்தேன் காணீர்கடனஞ்சை
யுண்டிடுவான்றன்னை யொருங்கு. (௧௮)

ஒருங்காதுடனேநின் றோரைவரெம்மை
நெருங்காமனித்த மொருகா - னெருங்கிக்
கருங்கலோக்கும்பற் கயிலாயமேயான்
வருங்கொலோநம்பான் மகிழ்ந்து. (௧௯)

நம்பான்மகிழ்ந்துறையுங் காளத்திநண்ணாதே
வம்பார்மலர்தூய் வணங்காதே - நம்பாநின்
சீலங்களோதாதே தீவினையேன்யானிருந்தேன்
காலங்கள்போன கழிந்து. (௨0)



கழிந்தகழிகிடாய் நெஞ்சேகழியா
தொழிந்தநாண்மேற்பட் டுயர்ந்தோர் - மொழிந்தசீர்க்
கண்ணுதலானெந்தை கயிலாயமால்வரையே
நண்ணுதலாநன்மை நமக்கு. (௨௧)

நமக்கிசைந்தவாநாமு மெத்திறனம்பர்
தமக்கமருந்தாமே யறிவ - ரமைப்பொதும்பிற்
கல்லவாநீடருவிக் காளத்தியாள்வாரை
வல்லவாநெஞ்சமே வாழ்த்து. (௨௨)

வாழ்த்துவாய்வாழ்த்தா தொழிவாய்மறுசுழியிட்
டாழ்த்துவாயாதறிவாய் நீயன்றே - யாழ்த்தகைய
வண்டார்பொழிற்கயிலை வாழ்கென்றிருப்பதே
கண்டாயடியேன் கடன். (௨௩)

கடனாகநாடாடுங் காளத்திக்கோனைக்
கடனாகக்கைதொழுவார்க் கில்லை - யிடனாடி
யிங்காட்டிற்கேவந்திங் கிண்டிற்றுக்கொண்டுபோ
யங்காட்டிலுண்டிழவு மாறு. (௨௪)

மாறிப்பிறந்து வழியிடையாற்றிடை
யேறியிழிபு மிறுவல்லாற் - றேறித்
திருக்கயிலையேத்தீரேற் சேமத்தால்யார்க்கு
மிருக்கையிலைக்கண்ட நினிது. (௨௫)

இனித்தேபிறவி யினமரங்களேறிக்
கனிதேர்கடுவன்க டம்பின் - முனிவாய்ப்
பிணங்கிவருந்தண்சாரற் காளத்திதேவனி
வணங்கவல்லராயின் மகிழ்ந்து. (௨௬)

மகிழ்ந்தலரும்வண்கொன்றை மேலேமனமாய்
நெகிழ்ந்துநெகிழ்ந்துள்ளே நெக்குத் - திகழ்ந்திலங்கும்
விண்ணிறங்காவோங்கும் வியன்கயிலைமேயாயென்
பெண்ணுறங்காளென்செய்கேன் பேசு. (௨௭)

பேசும்பரிசறியாள் பேதைபிறர்க்கெல்லா
மேசும்பரிசானா ளேபாவ - மாசுணைநீர்க்
காம்பையலைத்தாலிக்குங் காளத்தியென்றென்று
பூம்பசலைமெய்ம்முழுதும் போர்த்து. (உஅ)

போர்த்தகளிற்றுரியும் பூண்டபொறியரவுந்
தீர்த்தமகளிருந்த செஞ்சடையு - மூர்த்தி
குயிலாயமென்மொழியாள் கூறுயவாறுங்
கயிலாயயான்காணக் காட்டு. (உகூ)

காட்டினடமாடிக் கங்காளராகிப்போய்
நாட்டிற்பலிதிரிந்த நாடோறு - மோட்டின்பா
ராளுமென்கொலோ காளத்தியாள்வாரை
வானோர்வணங்குமா வந்து. (௩0)

வந்தமரரேத்து மடைகூழும்வார்சடைமேற்
கொந்தவிழுமாலை கொடுத்தார்கொல் - வந்தித்து
வானுகுத்தவண்கயிலைக் கோனார்தம்மாமுடிமேற்
பானுகுத்தமாணிக்குப் பண்டு. (௩௧)

பண்டிருவேயன்றுகிற் கேளீர்கொல்பல்சருகு
கொண்டிலிங்கத்தம்பினாற் கூட்டிழைப்பக் - கண்டு
நலந்திக்கெலாமேத்துங் காளத்திநாதர்
சிலந்திக்குச்செய்த சிறப்பு. (௩௨)

செய்தசிறப்பெண்ணி லெங்குலக்குஞ்சென்றடைந்து
கைதொழுவார்க்கெங்கள் கயிலாயர் - கொய்தளவிற்
காலற்காய்ந்தாரன்றே சாணீர்கழுமுழுத
பாலற்காயன்று பரிந்து. (௩௩)

பரிந்தனைப்பார்சொற்கேளா தெம்பெருமான்பாதம்
பிரிந்திருக்ககில்லாமை பேசும் - புரிந்தமரர்
நாதாவாகாளத்தி நம்பாவாவென்றென்று
மாதாவாவுற்ற மயல். (௩௪)



மயலைத்தவிர்க்கிற் வாராயொருநாள்
றெயிலைப்பொடியாக வெய்தாய் - கயிலைப்
பருப்பதவாநின்னுடைய பாதத்தின்கீழே
யிருப்பதவாவுற்றா ளிவள். (௩௫)

இவளுக்குநல்லவா றெண்ணுதிரேலின்றே
தவளப்பொடியிவண்மேற் சாத்தி - யிவளுக்குக்
காட்டுமின்கன்காளத்தி காட்டிக்கமழ்கொன்றை
சூட்டுமின்கடூருந் துயர். (௩௬)

துயர்க்கெலாங்கூடாய தோற்குரம்பைபுக்கு
மயக்கிவழிதாளை மாட்டேன் - வியற்கொம்போ
ரேற்றானேவண்கயிலை யெம்மானேயென்கொலோ
மேற்றானிதற்கு விளைவு. (௩௭)

விளையும்வினையரவின் வெய்யவிடத்தைக்
களையுமேகாளத்தி யாள்வார் - வளைவில்
திருந்தியசீசன் திருநாமமென்னு
மருந்தினைநீர்வாயிலே வைத்து. (௩௮)

வாயிலேவைக்கு மளவின்மருந்தாகித்
தீயபிறவிநோய் தீர்க்குமே - தூயவே
கம்பெருமாதேவியொடு மன்னுகயிலாயத்
தெம்பெருமானோரஞ் செழுத்து. (௩௯)

அஞ்செழுத்துங்கண்டீ ரருமறைகளாவனவு
மஞ்செழுத்துங்கற்க வணித்தாகு - நஞ்சுவித்த
காளத்தியார்யார்க்குங் காண்டற்கரியராய்ப்போய்
நீளத்தேநின்ற நெறி. (௪0)

நெறிவார்சடையாய் நிலையின்மைநீயோ
னறியாய்கொலந்தோ வடார்ந்தா - னெறியிற்
கனைத்தருவிதூங்குங் கயிலாயாநின்னை
நினைத்தருவிகண்சோர நின்று. (௪௧)

நின்றுமிருந்துங் கிடந்துநடந்துமியா
மென்றுநினைந்தாலு மென்கொலோ - சென்றுதன்
றாள்வானவரிறைஞ்சுந் தண்சாரற்காளத்தி
யாள்வானருளாத வாறு. (௪௨)

அருளாதவாறுண்டே யார்க்கேனுமாக
விருளார்கறைமிடற்றெம் மீசன் - பொருளாய்த்து
மெய்ம்மையேயுன்னில் வியன்கயிலைமேயானவ்
விம்மையேதீர்க்கு மிடர். (௪௩)

இடரீருமக்கோ ரிடராடிக்கொண்டு
கடவீரோகாளத்தா னுங்கள் - கடல்வாய்க்
கருப்பட்டோங்கொண்முகில்சேர் காளத்திகாண
வொருப்பட்டோங்கண்ட ருணர்ந்து. (௪௪)

உணருங்காலொன்றை யுருத்தெரியக்காட்டாய்
புணருங்காலாரமுதே போன்று - மிணரிற்
கனியவாஞ்சோலைக் கயிலாயமேயா
யினியவாகாணின் னியல்பு. (௪௫)

நின்னியல்பையாரே யறிவார்நினையுங்கான்
மன்னியசீர்க்காளத்தி மன்னவனே - நின்னில்
வெளிப்படுவதேழுலகு மீண்டேயொருகா
லொளிப்பதுவுமாறு னுள். (௪௬)

உளையும்பொருளொ முடலுமுயிரும்
விளையுமலரும்போல் விம்மிப் - புகையின்றிச்
சென்றவாறெங்குந் திருக்கயிலையெம்பெருமா
னின்றவாறெங்கு நிறைந்து. (௪௭)

நிறைந்தெங்குநீயேயாய் நின்றாலுமொன்றின்
மறைந்ததம்புலன்காண வாராய் - சிறந்த
கனியாருந்தண்சாரற் காளத்தியாள்வாய்
பணியாயாலென்முன் பரிசு. (௪௮)



பரிசறியேன்பற்றிலேன் கற்றிலேன்முற்றுங்
கரியுரியான்பாதமே கண்டாய் - திரியும்
புரமாளச்செற்றவனே பொற்கயிலைமன்னும்
பரமாவடியேற்குப் பற்று. (௪௯)

பற்றுவானெவ்வுயிர்க்கு மெந்தைபசுபதியே
முற்றுவெண்டிங்கண் முனைசூடி - வற்றாக்
கங்கைசேர்செஞ்சடையான் காளத்தியுண்ணின்ற
மங்கைசேர்பாகத்து மன். (௫௰)

மன்னுகயிலாயா மாமுத்தமாணிக்கம்
பொன்னாரமாக்கொண்டு பூணாதே - யென்னாரு
மின்செய்வார்செஞ்சடையாய் வெள்ளெலும்புபூண்கின்ற
தென்செய்வானெந்தா யியம்பு. (௫௧)

இயம்பாய்மடநெஞ்சே யேனோர்பாலென்ன
பயம்பார்த்துப்பற்றுவா னுற்றாய் - புயம்பாம்பா
லார்த்தானைகாளத்தி யம்மானையென்றென்றே
யேத்தாதேவாளா விருந்து. (௫௨)

இருந்தவாகாணீ ரிதுவொன்றுமாய
மருந்தன்கயிலாயத் தலைவன் - வருந்திப்போய்த்
தாறுறும்பிச்சை புகும்போதுந்தன்னடியார்
வாறளைமன்னுள் வைத்து. (௫௩)

வைத்தவிருநிதியே யென்னுடையவாழ்முதலே
சித்திரமேகாளத்தி நீள்சுடரே - மொய்த்தொளிசே
ரக்காலத்தாளை யடிநாயேன்காணுங்கா
லெக்காலத்தெப்பிறவி யான். (௫௪)

யானென்றுந்தானென் றிரண்டில்லையென்பதனை
யானென்றுங்கொண்டிருப்ப னென்றுந் - தேனுண்
டளிகடாம்பாடு மகன்கயிலைமேயான்
வெளிகொடான்மாயங்கள் செய்து. (௫௫)

மாயங்கள்செய்தைவர் சொன்னவழிநின்று
காயங்கொண்டாடல் கணக்கன்று - காயமே
யிப்பதன்றாதலாற் காளத்தியின்மலர்சேர்
கற்பகத்தைக் கண்டோர் கணக்கு. (ருசு)

கணக்கிட்டுக்கொண்டிருந்து காலனார்நம்மை
வணக்கிவலைப்படா முன்னம் - பிணக்கின்றிக்
காலத்தானெஞ்சே கயிலாயமேவியநற்
கோலத்தான்பாதந் தொழு. (ருஎ)

தொழுவாள்பெறுவனேதன் றோள்வளையுந்தோற்றன்
மழுவாளன்காளத்தி வாழ்த்தி - யெழுவா
னறுமாமலர்க்கொன்றை நம்முன்னோனாமப்
பெருமானுக்காணியோர் பெண். (ருஅ)

பெண்ணன்ன நயலார்முன் பேதைபிறைசூடி
கண்ணின்றநெற்றிக் கயிலைக்கோ - னுண்ணின்ற
காமந்தானீனா வைவாட்டுங்கார்க்கொன்றைத்
தாமந்தாமற்றிவளைச் சார்ந்து. (ருகூ)

சார்ந்தாரைவெவ்விடத்துங் காப்பனவுஞ்சார்ந்தகப
கூர்ந்தார்க்குமுத்தி கொடுப்பனவுங் - கூர்ந்துள்ளொ
ளாத்தியானிப்பார் முன்வந்துநிற்பனவுங்
காளத்தியார்தங் கழல். (சுO)

தங்கழல்களார்ப்ப விளக்குச்சலன்சலனென்
றங்கழல்களார்ப்ப வனலேந்திப் - பொங்ககலத்
தார்த்தாடரவ மகன்கயிலைமேயாயிக்
கூத்தாட்டென்மேவியவா கூறு. (சுக)

கூறுய்யின்பொன்வாயாற் கோலச்சிறுகிளியே
வேறாகவந்திருந்து மெல்லெனவே - நீறுவு
மஞ்சடையுநீள்குடுமி வாளருவிக்காளத்திச்
செஞ்சடையெம்மீசன் றிறம். (சுஉ)





ஈசன்றிறமேநினைந்துருகு மெம்மைப்போன்
மாசினிறத்த மடக்குருகே - கூசி
யிருத்தியாய்நீயு மிருங்கயிலைமேயாற்
கருத்தியாய்க்காமுற்று யாம். (சுங)

காமுற்றுயாமன்றே காளத்தியான்கழற்கே
யாமுற்றதுற்று யிருங்கடலே - யாமத்து
ஞாலத்துயிரெல்லாங் கண்டுஞ்சுநள்ளிருள்கூர்
காலத்துந்துஞ்சாதுன் கண். (சுச)

கண்ணுங்கருத்துங் கயிலாயரேயெமக்கென்
றெண்ணியிருப்பன்யா னெப்பொழுது - நண்ணும்
பொறியாடரவசைத்த பூதப்படையா
ரறியார்கொனெஞ்சே யவர். (சுரு)

நெஞ்சேயவர்கண்டாய் நேரேநினைவாரை
யஞ்சேலென்றாட்கொண் டருள்செய்வார் - நஞ்சேயுங்
கண்டத்தார்காளத்தி யாள்வார்கழல்கண்டா
ரண்டத்தார்சூடு மலர். (சுசு)

அலரோனெடுமா லமரர்கோனுற்றாங்
பலராய்ப்படைத்துக்காத் தாண்டு - புலர்காலத்
தொன்றாகிமீண்டு பலவாகிநிற்கின்றான்
குன்றாதசீர்க்கயிலைக் கோ. (சுஎ)

கோத்தமலர்வாளி கொண்டநங்கன்காளத்திக்
கூத்தன்மேலன்று குறித்தெய்யப் - பார்த்ததுமே
பண்பொழியாக்கோபத்தீச் சுற்றுதலும்பற்றற்று
வெண்பொடியாய்வீழ்ந்திலனோ வெந்து. (சுஅ)

வெந்திறல்வேற்பார்த்தற் கருள்செய்வான்வேண்டியோர்
செந்தறுகட்கேழற் றிறம்புரிந்து - வந்தருளுங்
கானவனாங்கோலமியான் காணக்கயிலாய
வானவர்தங்கோமானே வா. (சுகூ)

வாமான்றேர்வல்ல வயப்போர்விசயனைப்போற்
றாமாறுலகிற் றவமுடையார் - தாமியார்க்குங்
காண்டற்கரியராய்க் காளத்தியாள்வாரைத்
தீண்டத்தாம்பெற்றமையாற் சென்று. (௭0)

சென்றிறைஞ்சும்வானோர்தஞ் சிந்தைக்குஞ்சேயரா
யென்றுமடியார்க்கு முன்னிற்பர் - நன்று
கனியவாஞ்சோலைக் கயிலாயமேயா
ரினியவாயத்தீர்க் கிவர். (௭௧)

இவரேமுதற்றேவ ரெல்லார்க்குமிக்கா
ரிவரல்லதொன்றிருக்க வேண்டா - மயராதே
காதலித்தின்றேத்துதிரேற் காளத்தியாள்வார்நீ
ராதரித்ததெய்வமே யாம். (௭௨)

ஆமென்றுநாளை யுளவென்றுவாழ்விலே
தாமின்றழுந்துகை தவமன்று - யாமென்று
மிம்மாயவாழ்வினையே பேணாதிருங்கயிலை
யம்மானைச்சேர்வ தறிவு. (௭௩)

அறியாமலேனு மறிந்தேனுஞ்செய்த
செறிகின்றதீவினைக ளெல்லா - நெறிநின்று
நன்முகில்சேர்காளத்தி நாதனடிபணிந்து
பொன்முகரியாடுதலும் போம். (௭௪)

போகின்றமாமுகிலே பொற்கயிலைவெற்பாவு
மேகின்றெமக்காக வெம்பெருமா - னேகின்
றன்னைபடாநஞ்ச முண்டாற்கென்னுள்ளநோய்
விண்ணப்பஞ்செய்கண்டாய் வேறு. (௭௫)

வேறேயுங்காக்கத் தருவேனைமெல்லியலா
ளூறேயுங்காளத்திக் கொற்றவனே - யேறேறு
மன்பாவடியேற் கருளாதொழிகின்ற
தென்பாவமேயன்றோ வின்று. (௭௬)



இன்றுதொடங்கிப் பணிசெய்வேன்யானுனக்
கென்றுமிளமதியே யெம்பெருமா - னென்றுமென்
னுட்காதலுண்மை யுயர்கயிலைமேயாற்குத்
திட்காதேவிண்ணப்பஞ் செய். (௭௭)

செய்யசடைமுடியென் செல்வனையான்கண்டெனது
கையறவுமுண்மெலிவும் யான்காட்டப் - பையவே
காரேறுபூஞ்சோலைக் காளத்தியாள்வார்தம்
போரேறேயித்தெருவே போது. (௭௮)

போதுநெறியனவே பேசிநின்பொன்வாயா
லோதத்தருவ ளொளிவண்டே - காதலாற்
கண்டார்வணங்குங் கயிலாயத்தெம்பெருமான்
வண்டார்மோந்தென்குழற்கே வா. (௭௯)

வாவாமணிவாயான் மாவின்றளிர்கோதிக்
கூவாதிருந்த குயிற்பிள்ளாய் - யோவாதே
பூமாம்பொழிலுடுத்த பொன்மதில்சூழ்காளத்திக்
கோமான்வரவொருகாற் கூவு. (௮0)

கூவுதலும்பாற்கடலே சென்றவனுக்கீந்தவன்
றேவிருண்பொற்கயிலை யெம்பெருமான் - மேவியசீ
ரன்பாற்புலிக்காலன் பாலன்பாலாசையினாற்
றன்பாற்பால்வேண்டுதலுந் தான். (௮௧)

தானேயுலகாள்வான் றன்கண்டவாவழக்க
மானுண்மற்றுரிதனை யன்றென்பார் - வானோர்
வணங்கண்டாருய்கின்ற காளத்தியாள்வார்
வலைகொண்டார்மாறந்தார் வந்து. (௮௨)

வந்தோராக்கனார் வன்கயிலைமால்வரையைத்
தந்தோள்வலியினையே தாங்கருதி - யந்தோ
விடந்தாரிடந்திட்டிடார்க்கிமெலிபோற்
கிடந்தார்வலியெலாங் கெட்டு. (௮௩)

கெட்டவரக்கரோ வேதியரேகேளீர்கொல்
பட்டதுவுமோராது பண்டொருநாள் - லொட்டக்
கலந்தரனூர்காளத்தி யாள்வார்மேற்சென்று
கலந்தரனூர்பட்டதுவுந் தாம். (அச)

தாம்பட்டதொன்று மறியார்கொல்சார்வரோ
காம்புற்றசெந்நெற் கயிலைக்கோன் - பாம்புற்ற
வரைந்தார்பத்தர்க் கருகணையார்காலனூர்
தூரத்தேபோவார் தொழுது. (அரு)

தொழுதுநமனுந்தன் றூதுவர்க்குச்சொல்லும்
வழுவில்சீர்க்காளத்தி மன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக்கண்டாற் பணிந்தகலப்போமின்க
ளெத்தனையுஞ்செய்த்தாக வென்று. (அசா)

வெண்ணறைந்துங்காமாதி வேரறுத்துமெய்த்தே
யொன்றதனைநிரோ வொன்றலாந் - தென்றாங்கை
மானுடையானென்னை யுடையான்வடகயிலை
தானுடையான்றன்னுடைய தாள். (அஎ)

தாளொன்றாற்பாதாள மூடுருவத்தன்விசும்பிற்
றோளொன்றாலண்டங் கடந்துருவித் - தோளொன்றாற்
றிக்கனைத்தும்போர்க்குந் திறற்காளத்தி
நக்கனைத்தான்கண்ட நடம். (அஅ)

நடமாடுஞ்சங்கரன்றூ ணான்முகனுங்காணான்
படமாடுபாம்பணையான் காணான் - விடமேயுங்
காரோதக்கண்டன் கயிலாயுன்றன்னுருவை
யாரோயறிவா ரிசைந்து. (அகூ)

இசையுந்தன்கோலத்தை யான்காணவேண்டி
வசையில்சீர்க்காளத்தி மன்னா - நசையின்றிக்
காட்டிமேற்காட்டிக் கலந்தென்னைத்தன்றொண்டு
கூட்டிமேற்கூடலே கூடு. (கூ0)



கூடியிருந்து பிறர்செய்யுங்குற்றங்க
ளாடித்தங்குற்றங்க ளோடாதே - வாடி
வடகயிலையேத்தாதே வாழ்த்திவான்வேண்டி
லடகயிலவாறுள்ளதை விட்டு. (கூக)

விட்டாவிபோக வுடல்கிடந்துவெந்தீயிற்
பட்டாங்குவேமாறு பார்த்திருந்து - மொட்டாவாங்
கள்ளவிழும்பூஞ்சோலைக் காளத்தியுண்ணின்ற
வள்ளலைச்சென்றேத்து மனம். (கூஉ)

மனமுற்றுமையலாய் மாதரார்தங்கள்
கனமுற்றுங்காமத்தே வீழ்வர் - புனமுற்
றினக்குறவரோத்து மிருங்கயிலைமேயா
னனக்குறவுசெய்கலார் தாழ்ந்து. (கூங)

தாழ்ந்தசடையுந் தவளத்திருநீறுஞ்
சூழ்ந்தபுலியதளுஞ் சூழரவுஞ் - சேர்ந்து
நெருக்கிவானோரிறைஞ்சுங் காளத்தியாள்வார்க்
கிருக்குமாகோலங்க ளேற்று. (கூச)

ஏற்றின்மணியே யமையாதோவிருஞ்சடைமேல்
வீற்றிருந்தவெண்மதியும் வேண்டுமோ - வாற்றருவி
கன்மேற்பட்டார்க்குங் கயிலாயத்தெம்பெருமா
னென்மேற்படைவிடுப்பா ரிங்கு. (கூரு)

இங்கேவாவென்றருளி யென்மனத்தேயெப்பொழுது
தங்காமணிவந்து நின்றானுந் - தீங்கா
படுகின்றகாளத்தி யாள்வாய்காவல்
பணிகின்றவண்ணம் பணி. (கூசா)

பணியாதுமுன்னிவனைப் பாவியேன்வாளா
வணியாதுகாலங் கழித்தே - னணியுங்
கருமாமிடற்றெங் கயிலாயத்தெங்கள்
பெருமானையில்லை பிழை. (கூஎ)

பிழைப்புவாய்ப்பொன் றறியேன் பித்தேறி னேற்போ
லழைப்பதே கண்டா யடியே - னிழைத்தாவ
மென்றுதானே கொண் டுன்பொழில்சூழ் காளத்தி
யன்றுதருவாய் வரம். (௯௮)

வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்
பரமாவுன் பாதார விந்தஞ் - சிரமார
வேற்றிம் போதாகவுன் றென்மனத்தி லெப்பொழுதும்
வைத்திடவே வேண்டேன்யான் மற்று. (௯௯)

மற்றும் பலபிதற்ற வேண்டா மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி - கொற்றக்க
ணாரவமு தின் றிருநாம மஞ்செழுத்துஞ்
சோரா மலெப்பொழுதுஞ் சொல். (௱)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# திருவீங்கோய்மலையெழுபது.

---

அடியு முடியு மரியு மயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேடி - கொடியுங்கா
லின்னதென வறியா வீங்கோயே யெங்கள்
மன்னதென நின்றான் மலை. (௧)

அந்தவிள மாக்குழவி யாயம்பிரிந் ததற்குக்
கொந்தவிழ்தேன் றோய்த்துக் குறமகளிர் - சந்தி
னிலைவளைக்கை யாற்கொடுக்கு மீங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை. (௨)



அம்பவளவாய்மகளி ரம்மனைக்குத் தம்மனையைச்
செம்பவளந்தாவென்னச் சிற்குறத்தி - கொம்பி
னிறுதலையிற் றூக்கினைக்கு மீங்கோயே யெம்மோன்
மறுதலைநோய் தீர்ப்பான் மலை. (௩)

அரிகரியைக் கண்டவிடத் தச்சலிப்பாயோடப்
பிரிவரிய தன்பிடியைப் பேணிக் - கரிபெரிதுங்
கையெடுத்துக் கீட்டிச் சதஞ்சிறக்கு மீங்கோயே
மெய்யடுத்த கண்டன் மலை. (௪)

அரியுழுவையு மாளியுமே யீண்டிப்
பரியிட்டுப் பன்மலர்கொண் டேற்றிச் - சொரிய
வெரியாடி கண்டுகக்கு மீங்கோயே கூற்றைத்
திரியாமற் செற்றான் சிலம்பு. (௫)

ஆளிதொடர வரிதொடர வாங்குடனே
வாளிகொடு தொடரு மாக்குறவர் - கோளி
னிடுகிலையிற் றூப்புடைக்கு மீங்கோயே யெம்மேற்
கொடுவினைகள் வீட்டுவிப்பான் குன்று. (௬)

இருதினையின் வேற்றுக் கடியக்குறவர்
வெடிபடுவ வங்கவிங்க ளென்ற - நெடுநெடென
நீண்டகழை முத்ததிர்க்கு மீங்கோயே யெங்குமனைத்
தூண்டகழை யேறி பொருப்பு. (௭)

ஈன்றகுறமகளிர்க் கேழைமுகக் குறத்தி
தான்றந்தீக் கேறச்சோற் றீறங் - கூன்றலைவத்
தென்னாவென் றேயுண்ணென் றெடுத்துரைக்கு மீங்கோயே
மின்னன்ன செஞ்சடையான் வெற்பு. (௮)

ஈன்றகுழவிக்கு மந்தி யிருவரைமே
லூன்றமரவத்தைத் தானதுறித் - தோன்ற
விரலாற்றேன் றோய்த்தூட்டு மீங்கோயே யெம்மேல்
வரலாநோய் தீர்ப்பான் மலை. (௯)

உண்டிருந்த தேனை யறுபதங்க ளூடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்க் - கண்டிருந்த
மாமயில்க ளாடி மருங்குவரு மீங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு. (௧0)

ஊடிப் பிடியுறங்க வொண்கதலி வண்கனிய
கோடிக் களிறு நயந்தெடுத்துக் - கூடிக்
குணமருட்டிக் கொண்டாடு மீங்கோயே வானோர்
குணமருட்டுங் கோளரவன் குன்று. (௧௧)

எய்யத் தொடுத்தோன் குறத்தி நோக்கேற்ற தெனக்
கைவிற் கணைகளைந்து கன்னிமான் - பெய்ப்போ
வென்னின்ற பாவனைசெ யீங்கோயே யுங்கையில்லா
னென்றன்றுவென்றான் சிலம்பு. (௧௨)

ஏழையின்மாதே யென்னொடு நீபோதென்று
கூழைமுதுவேடன் கொண்டுபோய் - வேழ
விளக்குவால் வீட்டுவிக்கு மீங்கோயே நம்மை
விளக்குவால் வீட்டுவிப்பான் வெற்பு. (௧௩)

ஏனமுழுத புழுதியினமணியைக்
கானவர்தம் மக்கள் கனலென்னக் - கூன
லிருக்கங் கதிர்வெதுப்பு மீங்கோயே யெம்மேன்
மறுக்கங் கடிர்ப்பான் மலை. (௧௪)

ஏனங் கிளைத்த வினபவளமாமணிகள்
கானலெரி பரப்பக் கண்டஞ்சி - யானை
யினமிரிய முல்லைநகு மீங்கோயே யெம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு. (௧௫)

ஒருகணையுங் கேழ லுயிர்செகுத்துக் கையி
லொருகணையு மானைமே லெய்ய - வருகணையு
மானரி தானோட வரிவெருவு மீங்கோயே
கோனரிக்குங் காண்பரியான் குன்று. (௧௬)



ஓங்கிப் பரந்தெழுந்த வெள்ளிலவத் தன்போதைத்
தாங்குவதோர் கொள்ளி யெனக்கடுவன் - மூங்கிற்
றழையிறுத்துக் கொண்டோச்சு மீங்கோயே சங்கக்
குழையிறுத்த காதுடையான் குன்று. (௧௭)

ஓடுமுகிலை யுகிரா லிறவூன்றி
மாடுபுகவான் கை மிகமடுத்து - நீடருவி
மாச்சியமுண்டு மணங்களிக்கு மீங்கோயே
கோச்சியங் காண்பரியான் குன்று. (௧௮)

கண்டகளி துகர்ந்த மந்திகருஞ் சுனைநீ
ருண்டு குளிர்ந்திலவென் றூடிப்போய்க் - கொண்ட
வெறைக்கீதிவாய்மடுக்கு மீங்கோயே நான்கு
மறைக்கீது கண்டான் மலை. (௧௯)

கருங்களிற்றின் வெண்கொம்பாற் கல்லுரல்வாய்க் கல்லார்
பெருந்தினை வெண் பிண்டியிடிப்ப - வருங்குறவன்
கைக்கொணருஞ் செந்தேன் கலந்துண்ணு மீங்கோயே
மைக்கொணருங் கண்டன் மலை. (௨0)

கனையபலாங்கனிகள் கல்லிடையர் தொக்க
நனையகலத் துரத்தி லேற்றி - மனைகள்
வரவிரும்பியாய்ப்பார்க்கு மீங்கோயே யாக்கார்
குரவரும்பு செஞ்சடையான் குன்று. (௨௧)

கட்டக்களிறுகண் வளரக் கார்திறவண்டார்ப்பச்
சுட்டார்க்குழையார் பாட்டெழவு கேட்டு - மடக்கிளிகள்
கீதந்தெரிந் துரைக்கு மீங்கோயே யாற்கீழ்நால்
வேதந் தெரிந்துரைப்பான் வெற்பு. (௨௨)

கறுத்த முகிலைக் குறிப்பிடிக் குநீ காரியானைச் சீ
றிறுத்துக்கை நீட்டு மீங் கோயே - செறுத்த
கடகடத்த தோலுரிவைக் காப்பமையப் போர்த்த
விடப்பிடற்றி னமருவும் வெற்பு. (௨௩)

கருவிளைதேருங் காகோதரங்கேழற்
கொம்பினிடைக்கிடந்த கூர்மணியைப் - பொங்கி
யுருமென் றுபுற்றடையு மீங்கோயேகாமன்
வெருவொன் றக்கண்சிவந்தான் வெற்பு. (௨௪)

கலவிக்களிறசைந்த காற்றொங்குங்காரு
திலைகைக்கொண்டேந்திக்கான் வீச - வலவிச்சென்
றெண்பிடிகாற்றேற்றுவக்கு மீங்கோயேபாங்காய
வெண்பொடிநீற்றன்மருவும் வெற்பு. (௨௫)

கன்னிப்பிடி முதுகிற் கப்பருவமுட்பருகி
யன்னைக்குடிவரலா றஞ்சிப் - பின்னரோ
வேன்றருக்கிமாதவஞ்செ யீங்கோயேநீங்காத
மான்றரித்தகையான் மலை. (௨௬)

கன்னமுழைமறவர் காட்டகத்துமாவேட்டை
கொள்ளென்றழைத்த குரல்கேட்டுத் - துன்னி
யினக்கலைபாய்ந்தோடு மீங்கோயேநந்த
மனக்கவலைதீர்ப்பான் மலை. (௨௭)

கல்லைப்புனமேய்ந்து கார்க்கொன்றைத்தார்போர்த்துக்
கொல்லையெருந்த கொழும்புறவின் - முல்லைக்கண்
பல்லரும்புமொய்த்தினை மீங்கோயேஞெமெயிதுயர்
கொல்லரும்பக்கோல்கொடுத்தான் குன்று. (௨௮)

கல்லாக்குரங்கு பளிங்கிற்கனிகாட்ட
வெல்லாக்குரங்கு முடனீண்டி - வல்லே
யிருந்தவிராற்கறுத்தேக்கு மீங்கோயேமேனிப்
பொருந்தவராய்க்கண்டான் பொருப்பு. (௨௯)

கண்கொண்டவிர்மணியி றுப்பட்டகுப்பைமுல்
வெண்கோடியீழந்த வியன்சார - நண்கோ
டிளம்பிறைசேர்வான்கவிக்கு மீங்கோயேவேழம்
விளம்பிறைசேர்வான்கவிக்கும் வெற்பு. (௩0)



கருந்தளங்கைத்தலங்கள் காட்டக்கனிமந்தி
கூந்தல்விரித்துடனே கூத்தாடச் - சாய்ந்திரங்கி
யேர்க்கொன்றைபொன்கொடுக்கு மீங்கோயேசெஞ்சடைமேற்
றார்க்கொன்றையென்றான் கடறு. (௩௧)

குறமகளிர் கூடிக் கொழுந்தினைகள் குற்றி
நறவமாக்குஞ்சகங்க ளூடிச் - சிறுகுறவர்
கைநீட்டியுண்ணக் களித்துவக்குமீங்கோயே
மைநீட்டுங்கண்டன் மலை. (௩௨)

கூழைமுதுமந்தி கோல்கொண்டுதேன்பாய
வேழையிளமந்தி சென்றிருந்து - வாழை
யிலையாற்றேனுண்டுவக்கு மீங்கோயேயின்றி
தலையாற்றன்செற்றான் சிலம்பு. (௩௩)

கொல்லையினவேங்கைக் கொத்துழுத்துக்கொண்டுகிளை
மல்லிகைமஞ்சனமா நாட்டிக்கொண் - டொல்லை
யிருங்கைக்களிறேறு மீங்கோயேமேரு
வருங்கைக்கவியான் மலை. (௩௪)

கொவ்வைக்கனிவாய்க் குறமகளிர் கூந்தல்சேர்
வவ்வைக்காற்பிடிக்கும் காதன்மையாற் - செவ்வை
யெறிந்தயலார்கொண்டுவிடு மீங்கோயேயன்பர்
குறித்தவரந்தான்கொடுப்பான் குன்று. (௩௫)

தொடுவிற்சிலைவேடர் கொல்லைபுனமற்
பிடிகுழிகள் கல்லுதல்பார்த் தஞ்சி - நெடுநாகம்
தன்றின்றிச்செல்லுஞ்சீ ரீங்கோயேதாழ்சடைமேல்
வன்றின்றுந்தரான் மலை. (௩௬)

கோங்கரும்புர்த்த கொய்யுனைக்குறமகளிர்
வேங்கைமணிநிறுத்தி விளையாடி - வேங்கை
வரவுதனைக்கண்டஞ்சு மீங்கோயேவீங்கு
வரவுதனைக்காப்பான் மலை. (௩௭)

சந்தனப்பூம்பொழிலைச் செந்தேனிற்றோய்த்தியானை
மந்தணமாப்பிடியின் வாய்க்கொடுப்ப - வந்ததன்
கண்களிக்கத்தான்களிக்கு மீங்கோயேதேங்காதே
விண்களிக்கநஞ்சுண்டான் வெற்பு. (௩௮)

சந்தினிலையதனுட் டண்பிண்டிதேன்கலந்து
கொந்தியினிதன்னைக் குறமகளிர் - மந்தி
யிளமகளிர்வாய்க்கொடுத்தூண் ணீங்கோயேவெற்பின்
வளமகளிர்பாகன் மலை. (௩௯)

சாரற்குறத்தியர்க டண்மருப்பால்வெண்பிண்டி
சேரத்திருக்கி மதுக்கலந்து - வீரத்
தமரினிதாவுண்ணுஞ்சீ ரீங்கோயேயின்பக்
குமரன்முதுதாதையார் குன்று. (௪௦)

தீயோங்கத்தாமடருந் தண்சாரலொண்கானம்
வேயோங்கிமுத்த மெதிர்பிதுங்கித் - தீயோங்கிக்
கண்கன்றித்தீவிழிக்கு மீங்கோயேசெஞ்சடைமேல்
வண்கொன்றைத்தாரான் வரை. (௪௧)

செடிமுட்டச்சிங்கத்தின் சீற்றத்திற்கஞ்சிப்
பிடியட்டமாக்களிறு போந்து - கடமுட்டி
யெஞ்சோதியென்னுஞ்சீ ரீங்கோயேயேந்தழலிற்
பொன்னேரனையான் பொருப்பு. (௪௨)

சுனைநீடுதாமரையின் றுகளாற்றுகளாடிப்
புனைநீடுபொன்னிறத்த வண்டு - மனைநீடி
மன்னிமணம்புணரு மீங்கோயேமாமதியஞ்
சென்னியணிந்தான் சிலம்பு. (௪௩)

செந்தினையின்வெண்பிண்டி பச்சைத்தேன்றோய்த்து
அந்தியிருந்தூட்டு மணிக்குறத்தி - பந்தியாத்
தெக்கிலைகளிட்டுச் செப்புவாக்குமீங்கோயே
மாக்கலைகள்வைத்தான் மலை. (௪௪)



தடங்குடைந்தகொங்கைக் குறமகளிர்தங்க
ளிடம்புகுந்தின்னறவ மாந்தி - யுடன்கலந்து
மாக்குரவையாடி மகிழ்ந்துவருமீங்கோயே
கோக்குரவையாடிகொழுங் குன்று. (௪௫)

தாமரையின்றுடைத்த தாமரைகட்டாமரையாற்
தாமரையிற்பாய்ந்துகளுந் தண்புறவிற் - றாமரையி
னீட்டம்புலிசிதறு மீங்கோயேயெவ்வுயிர்க்கும்
வாட்டங்கெடுப்பான் மலை. (௪௬)

தெள்ளட்டபூஞ்சுனைய தாமரையின்றேமலர்வாய்
வள்ளவட்டப்பாழ் மடற்றி - வெள்ளையட்
டாரமைசைப்பரிக்கு மீங்கோயேவெங்கூற்றைச்
சேரமிதற்செற்றான் சிலம்பு. (௪௭)

தேன்மருவும்பூஞ்சுனைக்கட் புக்குச்செழு. (௪௮)

(௪௯) (௫௦) (௫௧) (௫௨) (௫௩) (௫௪) (௫௫) (௫௬) (௫௭) (௫௮) (௫௯) (௬௦) (௬௧)

கலைகள்வருவனகள் கண்டு - சிலையை
யிருந்தெடுத்துக்கோறெறியு மீங்கோயேமானைப்
புரிந்திடத்துக்கொண்டான் பொருப்பு. (௬௨)

மரகதக்கிழாத்தை வானரிகள்பீறவொளிர்
முத்தம்பனிகிகர்க்கு மொய்ம்பிற்று - லத்துகைய
வேனற்புனத்து மீங்கோயேதேங்குபுனல்
கனற்பிறையணிந்தான் குன்று. (௬௩)

மந்தியினங்கள் மணிவுராயினுச்சிறோன்
முந்தியிருந்து முறைமுறையே - நந்தி
யினைந்தாடியாலிக்கு மீங்கோயேகூற்றம்
வனைந்தோடச்செற்றான் மலை. (௬௪)

மந்திமகவினங்கள் வண்பலவின்றெண்சுளைக்கண்
முந்திப்பறித்த முறியந்துட் - சிந்திப்போய்த்

தேனாறுபாயுஞ்சீ ரீங்கோயேசெஞ்சடைமேல்
வானாறுவைத்தான் மலை. (௬௫)

முள்ளார்ந்தவெள்ளிலவ மேறிவெறியாது
கள்ளார்ந்தபூப்பொடியுங் கார்மயிலை - வெள்ளா
ரெரிநடுவுட்பெண்கொடியா ரேய்க்குமீங்கோயே
புரிநெடுநூன்மார்பன் பொருப்பு. (௬௬)

வளர்ந்தவிளங்கன்னி மாங்கொம்பின்கொங்கை
யளைந்துவடுப்படுப்பான வேண்டி - யிளந்தென்ற
லெல்லிப்புகநுழையு மீங்கோயேயிங்கருப்பு
வில்லிக்குக்கூற்றானான் வெற்பு. (௬௭)

வானமதிதடவ வூற்றவிளமந்தி
கானமுகவேயின் கண்ணேறித் - தானங்
கிருந்துயரக்கைநீட்டு மீங்கோயேநம்மேல்
வருந்துயர்தீர்ப்பான் மலை. (௬௮)

வேய்வனத்துள்யானை நினைகவரவேறிருந்து
கார்வனத்தேவேடன் கணைவிசைப்ப - வேயனைத்து
மாப்பிடிமுன்னோட்டுமீங் கோயேமறைபரவு
பூப்பிடிபொற்றாளான் பொருப்பு. (௬௯)

வழுவிதழ்க்காந்தண்மேல் வண்டிருப்பவொண்மை
முழுகியதென்றன்றீமுழுமந்தி - பழகி
யெழுந்தெழுந்துகைநெரிக்கு மீங்கோயேயிங்கட்
கொழுந்தெழுந்தசெஞ்சடையான் குன்று. (௭௦)

திருச்சிற்றம்பலம்.

---

☞ இப்பிரபந்தத்திலே சில செய்யுள்களும் அடிகளும் இறந்துபோயின.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்
அருளிச்செய்த

# திருவலஞ்சுழிமும்மணிக்கோவை.

---

அகவல்.

விளங்குதாம்வாழி நெஞ்சேபுனற்கொடன்
பொருகடன்முகந்து கருமுகிற்கணநற்
படரரவொடுங்க மின்னிக்குடவரைப்
பொழிந்துகொழித்திழி யருவித்துணைகடன்
மகிழ்ந்துங்காவிரி மடந்தைவார்புன
லொழித்தமணிநீர் வலஞ்சுழி
யணிநீர்க்கொன்றை யண்ணலதடியே. (௧)

வெண்பா.

அடிப்போதுதந்தலைவைத் தவ்வடிகளுன்னிக்
கடிப்போதுகைக்கொண்டார் கண்டார் - முடிப்போதா
வாறுகந்துசூடும் வலஞ்சுழியான்வானோருங்
காணாதசெம்பொற் கழல். (௨)

கட்டளைக்கலித்துறை.

கழல்வண்ணமுஞ்சடைக்கற்றையுமற்றவர்காணகில்லார்
அழல்வண்ணன்கண்டேதளர்ந்தாரிருவர்தாமவராய்
நிழல்வண்ணம்பொன்வண்ணநீர்நிறவண்ணநெடியவண்ண
மழல்வண்ணமூர்சீர்வலஞ்சுழியான்றன்வண்ணமிலையே. (௩)

அகவல்.

அண்ணலதுபெருமை கண்டனங்கண்ணுதற்
கடவுண்மன்னிய தடமல்குவலஞ்சுழிப்
பணிப்பொருட்பயந்து பல்லவம்பழிக்குந்
தகைமொழிமுறுவற் றேமொழிச்செவ்வாய்த்
திருந்திருங்குழலியைக் கண்டு
வருந்தியென்னுள்ளம் வஞ்சைப்போதே. (௪)

## வெண்பா.

போதெலாம்பூங்கொன்றை கொண்டிருக்கும்பூங்கொன்றைத்
தாதெலாந்தன்மேனித் தைவருமாற் - றீதின்
மறைக்கண்டன்வானோன் வலஞ்சுழியான்சென்னிப்
பிறைக்கண்டங்கண்டிளைத்த பெண். (௫)

## கட்டளைக்கலித்துறை.

பெண்கொண்டிருந்தவருந்தாங்கொலாம்பெருமான்றிருமால்
வண்கொண்டசோலைவலஞ்சுழியான்மதிசூடிநெற்றிக்
கண்கொண்டகோபங்கலந்தனபோன்மின்னிக்காய்புனத்துப்
பண்கொண்டுவண்டினம்பாடநின்றார்த்தனபன்முகிலே. (௬)

## அகவல்.

முகிற்கணமுழங்க முளைத்தவேழ
மயிற்றிரளடக்கிய வெகுளியாற்ற
வணிகடைமடப்பிடி பருகுவந்தனைதருஞ்
சாரற்றண்பொழி லினக்குச்சேரும்
தேனுகுதண்டலைச் செறிதருவனத்திற்
சுருவரிவாரலெம் பெருமநீர்மல்கு
சடைமுடியொருவன் மருவியவலஞ்சுழி
யணிதிகழ்தோற்றத் தழீஇயத்தெழுந்த
மணிநீர்க்குவளை யன்ன
மணிநீர்க்கருங்க ணாயிழைபொருட்டே. (௭)

## வெண்பா.

பொருட்டக்கோர்செல்வலிக்கென் றில்புகுந்தோடு
மருட்டக்கிரியா அமூ பெற்றேன் - மருட்டக
மாயப்போயமென்றார் வலஞ்சுழிக்கம்வாழ்வென்றார்
நாமறைந்தார்காணேன்னைச் சுஞ்ஞு. (௮)

## கட்டளைக்கலித்துறை.

சுங்கம்புனைந்திரைக்கத்தெறுங்குழியருகே
வங்கமலியுந்துறையிடைக்காண்டிர்வலஞ்சுழியா



றுங்கம்புலனைந்துமாகியெரான்மறைமுக்கணக்கன்
பங்கன்றிருவார்க்கொருவடிவாகியபாவையையே. (௯)

## அகவல்.

பாவையாடிய துறைப்பாவை
மருவெர்நிலாக்க வண்ணமைமருவித்
திருவடியடியேன் றீண்டியதிறனுங்
கொடியேயுன்ன் கொண்டகுழுவியங்கன்னக்
கருங்கண்போன்ற காவியுநெருங்கி
பவளம்போன்ற அன்றேதவளச்
சாம்பலம்பொடி சார்தெனத்தைவந்து
தேம்பல்வெண்பிறை சென்னிமிசைவைத்த
வெள்ளேற்றுழவன் வீங்குபுனல்வலஞ்சுழி
வண்டினம்பாடுஞ் சோலைக்
ஈண்டவம்மவைக் கடிபொழிலுளே. (௧௦)

## வெண்பா.

தானேயுமானேறு கைதொழேன்றன்சடைமேற்
றேனேறுகொன்றைத் திறம்பேசேன் - வானேறு
மையாருஞ்சோலை வலஞ்சுழியானென்கொலென்
னையார்வளைகவர்ந்த வாறு. (௧௧)

## கட்டளைக்கலித்துறை.

ஆமகற்றைச்சடைக் கொண்டொரொற்றைப்பிறைசூடிமற்றை
நீறுபெண்ணுயவன்கண்ணூர்வலஞ்சுழிக்கொங்குதங்கு [க்
நாறுதண்கொம்பரன்னீர்களின்னேடந்தேசூடித்தார்
சீறுவென்றிச்சிலைக்கானவர்வாழ்கின்றசேணறியே. (௧௨)

## அகவல்.

நெறிதருகுழலி விறலியொடுபுணர்ந்து
செறிதருதீம்தொடைச் சீறியாழ்ப்பாண
பொய்கையூரன் புதுமணம்புணரக்
மூவோருமூன்று பயன்பெற்றனமேதியவன்
புனைதார்மாலை பொருந்தப்பாடி

யில்லதுமுன்னாளுந் தொல்லிசைக்கல்லை
யாசையம்வற்றாத பேசுவன்மையிற்
வானரமக்களிற் வான்பொருள்பெற்றனைவரோ
லெங்கையர்கொங்கைக் குங்குமந்தழீஇ
விழைபவர்விண்ணம் பயனரியர்கோ
ரெனவர்ந்துறையு மணிநீர்வலஞ்சுழிச்
சுரும்பிவர்நறவயிற் குழற்கெழுகரும்பிற்
றிரள்தேன் வாய்நீர்சோருந்
திவ்வியுத்தமிழ் திருபறை புகுவ
வமைபுருநிறினைக் களிறுபெற்றனனே. (௨௮)

வெண்பா.

தனமேறிப்பீர்பொங்கித் தன்னங்கம்வேறும்
மனம்வேறுபட்டொழிந்தாண் மாதோ - வின்மேற்பட்
டிடலம்வண்டலம்பும் பாய்நீர்வலஞ்சுழியாக்
கோடாலங்கண்டவனைத் தொழுது. (௨௯)

கட்டளைக்கலித்துறை.

தெய்வத்தீர்குளிர்மறைக்காடனை வானவர்கூடிநின்று
நம்பாவென்னவணங்கப்பெற்றவானைத்தெரிய
வம்பாய்ந்தவனைவலஞ்சுழியுள்ளேயன்றுமகிழ்மேல்
வம்பார்நறுங்கொன்றைத்தீருடையானை வணங்குதுமே. (௩௰)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# திருவெழுகூற்றிருக்கை.

ஓருடம்பிருரு வாயினையொன்றுபுரிந்
தொன்றிநிறிதழ்க் கொன்றைசூடினை
மூவிலைச்சூல மேந்தினை
சூடருஞ்சென்னி மீமிசை
யிருகோட்டொருமதி யெழில்பெறவைத்தனை
யொருகணையிருதோள் செவியுறவாங்கி
மூவெயிலுற்றிசை முரணரண்செகுத்தனை
யாற்றமுன்னெறி பயந்தனை
செறிய விரண்டிருக்கி
யொன்றனைவோர்க் குறுதியாயினை
யந்நெறியொன்று
மனம்வைத்திரண்டு நினைவிலோர்க்கு
முன்னெறியுலகங் காட்டினையந்நெறி
நான்கெனவூழி தோற்றினை
சொல்லுமைந்தலை யரவசைத்தசைத்தனை
நான்முகன்மேன்முகங் கபாலமேந்தினை
நான்முகமுப்புரி மார்பி
னிருவரங்க மொருங்குடனேந்திய
வொருவநின்றுதி காணாதிருவர்
மூவுலகுமுன்று நாற்றிசையுழிதர
வைம்பெருங்குன்றத் தழலாய்த்தோன்றினை
யாறுநின்சடையது வைந்தாகிவினையட
நான்குநின்வாய்மொழி மூன்றுநின்கண்ணே
யிரண்டுநின்குழையே யொன்றுநின்னேறே
யென்றியகாட்சி யுமையவளுடங்க
விருங்களிற்றுரிவை போர்த்தனைநெருங்கி
முத்தீநான்மறை யைம்புலனடக்கிய
வறுதொழிலாளர்க் குறுதியாயினை

நக்கிரதேவநாயனார்

ஏழிலெழு நரம்பிசைத்தனை
யாறின்முகம் பயந்தனையைந்தில்
விறல்புரங்கொட்டு மழுத்தவேந்தினை
யாலநிழலின்றிருந்தறநெறி
நால்வர்கேட்க நன்கினி துரைத்தனை
நன்றியில்லா முக்கோர்ச்சூர்மாக்
கொன்றாங்கிருவரா யெறிந்தவொருவன்
குறையொருமிடற் றிருவடிவாயினை
தருமமூவகை யுலகமுணரக்
கூறுவநூல்வகை
புலிக்கணைவிலக்கிப் பதைத்தகமொழிந்தனை
மையீங்கணையவெருவி காலனையடர்த்தனை
பழுவஞ்சச்சுழபழு நெறிமையில்வருத்தினை
யெழுநீருலகச் சிராவணன்பாடத்
தாழ்வாய்க்கேட்டவன் றலையணிபொருத்தினை
யாறியசிந்தை யாகியையங்கதித்
தேரொடிமலைசெல விடுத்தோ
ஞான்றேறணைமனை நற்பயிர்க்கிருடியென்
றேற்றுரத நூன்றடன்பாட
விருகண்மொருக்கு யொருகணைக்கொட்ட
மட்டுவிரிபலங்கள் மலைமகள்காண
நட்டமாடிய வம்பலவ தனைற்
சிறியேன்சொன்ன வறிவில்வாசகம்
வறிதெனக்கொள்ளாயாகவேண்டும்
வெறிகமழ்கொன்றையொடு வெண்டலையணிசடை
சிதம்பாடிய வண்ணல்
பாதஞ்சென்னியிற் பரவுவன்பணிந்தே.

வெண்பா.

பணிந்தேனின்பாதம் பரமேட்டிபாணி
நனிந்தாலவாயி லமர்ந்தாய் — தணிந்தென்மேல்
வெய்யவினைதீரப் பணிந்தருள்வேதியனே
வையுறவொன்றின்றி யமர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கிரதேவநாயனார்
அருளிச்செய்த

# பெருந்தேவபாணி.

---

ஆலடாவனியை சடாதருவடிவனை
நீலகண்டனை நெற்றியோர்கண்ணனை
பால்வெண்ணீற்றனை பரமயோகியை
காலனைக்காய்ந்த கறைமிடற்றண்ணலை
நூலணிமார்பனை நுண்ணியகேள்வியை
கோலமேனியை யொக்கரைப்பாடலை
வேலுடைக்கையனை விண்டோய்முடியனை
ஞாலத்தியினை நாதனைக்காய்ந்தனை
தேவதேவனை திருமறுமார்பனை
காலமாகிய கடிகமழ்தாரனை
வேதிகனை வெண்டலையேந்தியை
பாவநாசனை பரமேச்சுவரனை
சிதம்பாடியை தினர்பொறியவனை
போதணிகொன்றைபெம் புண்ணியவொருவனை
யாதிமூர்த்தியை யமரர்கட்டலைவனை
சாதிவானவர் தம்பெருமான்றனை
வேதவிச்சையை விடையுடையண்ணலை
போதவண்ணனை யுலகத்தொருவனை
நாதனாகிய நன்னெறிப்பொருளினை
மாதொருவெரி முயானைத்தடியை
வேலைக்குன்றினை மிகவுமுதாக்கியை
வேதவேள்வியை விண்ணவர்தலைவனை
யாதிமூர்த்தியை யருந்தவமுதல்வனை
யாயிரநாமக் கதிவரியானை பேயே
புருவுந்த பிறையணிசடையனை
மாசறுசோதியை மலைமகள்கொழுநனை
கூரியமழுவனை கொலைக்கருங்காலனைச்
சீரியவடியாற் செற்றருளியவனை

பூதிப்படையனை புன்றனியமார்த் திங்கள்
பிறைடையாற்றைப் பீராணிதலையனை
இடம்படலனை இடமுறைப்பொருளினை
ஈசனையிறைவனை விழுப்பெருமையை
ஏசனைநினைப்பவர் செந்தழலன்னனை
தாதவிழ்மலர்த்தனை தருமனைவிரமனை
கட்கனிருமையனை கரிற்றிருரியனை
குழுசடைப்புனலனை குஞ்சரவிடங்கனை
தார்மலர்க்கொன்றை தயங்குமார்பினை
வித்தக விதியனை
திரமர்செய்கைத் திரிபுரமெரித்தனை
பிரமன்பெருந்தலை கிறையநாகக்
கருமன்செந்நீர் கபாலங்கைமுறைத்தனை
விறைத்தகபாலச் செந்நீர்கொண்டு
முறைத்தவருவா மாயனைச்சாதித்தனை
மேவருந்தேவருக் கிறமபடக்கிறைத்து
மாரவுருவைக மருதுடாக்கினை
வீரமிலெனத்துத் திராவலகற்றனை
விடமுறித்து விதல்வாய் கொடுத்தனை
அக்கமர்தேவருந் திருந்தாச்செய்வித்து
தக்கன்வேள்வியைத் தளரச்சாடினை
வேதமு நீயே வேள்வியு நீயே
நித்தியு நீயே நிமலனு நீயே
புண்ணியனு நீயே புனிதனு நீயே
மண்ணவனு நீயே பரம்பொருளு நீயே
ஊழியு நீயே உலகமு நீயே
வாழியு நீயே வரனு நீயே
தேவரு நீயே தீர்த்தமு நீயே
மூவரு நீயே முதல்வனு நீயே
நால்வனை நீயே மதிக்கடலு நீயே
இன்பமு நீயே துன்பமு நீயே
தாயு நீயே தந்தையு நீயே.



விண்முதற்பூத மைந்தவை நீயே
புத்தியு நீயே முத்தியு நீயே
சொல்லற்கருந்தன்மைத் தொல்லோய் நீயே யதனாற்
கூடலாலவாய்க் குழகனை
அறியாதருந்தமிழ் பழித்தனனடியே
னீண்டியசிறப்பி னிணையடிக்கீழ்நின்று
வேண்டுமதினி வேண்டுவனினைந்தே.

வெண்பா.

ஈங்கேதென் மற்றெம்பெருமான் வேண்டியதுவேண்டா
ந்தேன்பிழைநீத னடியேன் - விண்ணதெதென்மேற்
பித்தைத்தீர்த்தருளு தேவாதிதேவனே
பறவுநீசெய்யு மருள்.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# கோபப்பிரசாதம்.

---

நீவறுபெரிதுடைத்தே தவறுபெரிதுடைத்தே
வெண்டிரைக்கருங்கடன் மேற்றுயில்கொண்ட
மண்டவாணனுங் காழியன்றருளிய
முல்லுமூன்று மொருங்குடன்படைத்த
மலரோன்றன்னை வான்பிரமனிற்றாய
வானவேடுவன் கண்பறித்தப்ப
னானறாமு மற்றவற்கருளியுங்
கடிபடுபூங்கணைக் காமனுடலம்
பொடிபடவிழித்தும் பூதலத்திசைந்த
மாணுடனுயிர சண்டியை
வானவ னாக்கியு

மறிகடலுலகின் மன்னுயிர்கவருங்
கூற்றுவன்றனக்கோர் கூற்றுவனாகியுங்
கடல்படுநஞ்சங் கண்டத்தடக்கியும்
பருவரைசிலையாப் பாந்தணாணாத்
திரிபுரமெரிய வொருகணைதுரந்துங்
கற்கொண்டெறிந்த சாக்கியனன்பு
தற்கொண்டின்னரு டான்மிகவளித்துங்
கூற்றெனத்தோன்றியுங் கோளரிபோன்றுந்
தோற்றியவாரணத் திருரிபோர்த்து
நெற்றிக்கண்ணுறு நீள்புயானன்கு
நற்றுநந்திச் சுவரற்கருளியு
மறிவிலோரா வரக்கனுருட
னெறநெறவிறுதர வொருவிரலூன்றியுந்
திருவுருவத்தொடு செங்கணேறு
மரியனையின்டிற லசுரனுக்கருளியும்
பல்கதிரவோன் பற்கெடப்பாய்ந்து
மல்குபிருங்கிருடிக்கு மாவரமீந்துந்
தக்கன்வேள்வி தகைகெடச்சிதைத்து
மிக்கவரநந்திமா காளர்க்கருளியுஞ்
செந்தீக்கடவுள் கரதலஞ்செற்றும்
பைந்தார்நெடும்படை பார்த்தற்கருளியுங்
கதிர்மதிதனையோர் காற்பயன்கெடுத்து
நிதிபயில்குபேரற்கு நிதிகளீந்துஞ்
சலந்தரனுடலந் தான்மிகத்தடிந்து
மறைபயின்மார்க்கண் டேயனுக்கருளியுந்
தாரகற்கொல்லமுன் காளியைப்படைத்துஞ்
சீர்மலிசிலந்திக் கின்னரசளித்துங்
கார்மலியுருவக் கருடனைக்காய்ந்து
மாலின்கீழிருந் தறநெறியருளியு
மின்னவைபிறவு மெங்களீசன்
கோபப்பிரசாதங் கூறுங்காலைக்



கடிமலரிருந்தோன் கார்க்கடற்கிடந்தோன்
புடைமுறுசோலைப் பொன்னகர்காப்போ
னவைப்போராகிலு மொண்கடன்மாநீ
ராங்கைகொண்டிறைக்கு மாதவன்போன்றன்
றொடுங்காப்பெருமை யும்பர்கோனை
யடங்காவைம்புலத் தறிவில்சிந்தைக்
கிருமிநாவாற் கிளத்தம்பரமே யதாஅன்
றொருவகைத்தேவரு மிருவகைத்திறமு
மூவகைக்குணமு நால்வகைவேதமு
மைவகைப்பூதமு மறுவகையிரதமு
மெழுவகையோசையு மெண்வகைஞானமு
மொன்பதின்வகையு மொண்மலர்ச்சிறப்பும்
பத்தின்வகையு மாகியபரமனை
யின்பனைநினைவோர்க் கென்னிடையமுதினைச்
செம்பொனைமணியினைத் தேனினைப்பாலினைத்
தஞ்சமென்றெழுகுந் தன்னடியார்த
நெஞ்சம்பிரியா நிமலனைநீயோ
செந்தழற்பவளச் சேணுறுவரையனை
முக்கட்செல்வனை முதல்வனைமூர்த்தியைக்
கள்ளங்கைவிட் டுள்ளமதுருகிக்
கசிந்துகசிந்துநன் கழலிணையவையே
நினைந்திடவாங்கே தோன்றுநிமலனைத்
தேவதேவனைத் திகழ்சிவலோகனைப்
பாவநாசனைப் படரொளியுருவனை
வேயார்தோளி மெல்லியல்கூறனைத்
தாயாய்மன்னுயிர் காக்குந்தந்தையைச்
சொல்லும்பொருளு மாகியசோதியைக்
கல்லுங்கடலு மாகியகண்டனைத்
தோற்றநிலையீ றாகியதொன்மையை
நீற்றிடைத்திகழு நித்தனைமுத்தனை
வாக்குமனமு மிறந்தமறையனைப்

பூக்கமழ்சடையனைப் புண்ணியநாதனை
யினையதன்மைய னென்றறிவரியவன்
றனைமுன்விட்டுத் தாமற்றுவினைப்போர்
மாமுயல் விட்டுக்
காக்கைபின்போங் கலவர்போலவும்
விளக்கங்கிருப்ப மின்மினிகவரு
மளப்பருஞ்சிறப்பி லாதர்போலவுங்
கச்சங்கொண்டு கடுந்தொழின்முடியாக்
கொச்சைத்தேவரைத் தேவரென்றெண்ணிப்
பிச்சரைப் போலவோ
ராழியப்புத்தகப் பேய்கொண்டுபுலம்
வட்டணைபேசுவர் மாறுடம்போன்று
பெட்டினையுரைப்போர் பேதையர்சிலர்
துன்றலைமீன்றலை யென்பலமென்று தனை
யறுத்துதிருப்போ ரொருத்தரின்மையின்
மந்திரமாகுவர் மாறெதிர்ப்படப்போர்
சித்திரம்பேசுவர் தேவராகி
யின்றோர்க்காய்ந்தன ரின்றோர்க்கருளின ரென்றறிய
வுலகின்முன்னே யுரைப்பதில்லை யாகி
மாடுபோலக் கூடிநின்றழைத்து
மாக்கள்போல வேட்கையீண்டு
மிப்படிநோனா மப்படியமைத்து
மின்னதன்மைய னென்றிருநிலத்து
முன்னேயறியா மூர்க்கமாக்களை
யின்னேகொண்டேகாக் கூற்றந்
தவறுபெரிதுடைத்தே தவறுபெரிதுடைத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# கார் எட்டு.

அரவமணைக்கசைத்த வண்ணல்சடைபோல்
விரவியெழுந்தெங்கு மின்னி - யரவினங்க
ளச்சங்கொண்டோடி யணையவடைவுற்றே
கைச்சங்கம்போன்முழங்குங் கார். (௧)

மையார்மிடற்றான் போற்கருகிமற்றவன்றன்
கையார்சிலைவிலக்கிக் காட்டிற்றே - யையவா
யழலரவம்பூண்டா னவிர்சடைபோன்மின்னிக்
கழலரவங்காண்புற்ற கார். (௨)

ஆலமர்கண்டத் தரன்றன்மணிமிடறுங்
கோலக்குழற்சடையுங் கொக்கிறகும் - போல
விருண்டொன்று மின்றோன்றி யம்பொனவ்வானத்
கருண்டொன்றுகூறுதலிற் கார். (௩)

இருள்கொண்டகண்டத் திறைவன்றன்சென்னிச்
சுருள்கொண்டசெஞ்சடையோன் மின்னிச் - சுருள்கொண்டு
பாம்பினங்களஞ்சப் படமொடுங்கவார்த்ததே
காம்பினங்கடோளியக் கார். (௪)

கோடரவங்கோட லரும்பக்குருமணிகான்
றாடரவமெல்லா மணையுடைய - நீடுவப்
பொற்பகலம்பூண்டான் புரிசடைபோன்மின்னிற்றே
கற்பகலங்காண்புற்ற கார். (௫)

பாரும்பனிவிசும்பும் பாகுதன்பல்சடையு
மாருமிருள்கீண்டு மின்னிலகு - முரு
மரவஞ்செலவஞ்ச மஞ்சொலார்காண்பார்
வரவிந்தமெண்பாரக் கார். (௬)

செழுந்தழல்வண்ணன் செழுஞ்சடைபோன்மின்னி
யழுந்தியவர்போ லாரா - வெழுந்தெங்கு
மாவிசேர்வெந்தீனைமா யன்பாக்கக்குற்றதே
காவிசேர்கண்டனைக் கார். (௭)

காந்தண்மலராக் கமழ்கொன்றைபொன்சொரியப்
பூந்தள்வமாரப் புகுந்தின்றே - யேந்தொளிசே
ரண்டம்போன்மீதிருண்ட வாதியார்ப்மணிசேர்
கண்டம்போன்மீதிருண்ட கார். (௮)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# போற்றித்திருக்கலிவெண்பா.

---

திருத்தங்குமார்பிற் றிருமால்வரைபோ
லெருத்தத்திலங்கியவெண் கோட்டுப் - பருத்த
குறுத்தாளநெடுமூக்கிற் குன்றிக்கணீல
கிறந்தாழ்பொலிந்த நிலமே - முறத்தாழ்ந்த
பன்றித்திருவுருவாய்க் காணுதபாதங்க
ளின்றவாநின்ற நிலைபோற்றி - யன்றியும்
புண்டரிகத்துள்ளிருந்த புத்தேள்கழுகுருவா
யண்டாண்டமூடுருவ வாங்கோடிப் - பண்டொருநாள்
காணுனிழியக் கனகமுடிவவித்துக்
கோணுதுநின்ற குறிபோற்றி - நாளும்
பேணிக்காலங்கள் பிரியாமைப்பூசித்த
மாணிக்காவன்று மதிற்கடவூர்க் - காண
வாத்திற்பெரிய வலிதொலைத்தகால
வாற்றிலுதைத்தவதை போற்றி - காத்தாமே
யெற்பன்மடப்பாவை கொங்கைமேற்குங்குமத்தின்



கற்பழியும்வண்ணங் கசிவிப்பான் - பொற்புடைய
வாமன்மகனைய் மலர்க்கணையென்றெட்டியவக்
காமனழகழித்த கண்போற்றி - அம்மப்
படமெடுத்தவாளரவம் பார்த்தாடப்பற்றி
விடமெடுத்தவேகத்தாய் மிக்குச் - சடல
முடங்கவலிக்கு முயலகன்றன்மொய்ம்பை
யடங்கமிதித்தவடி போற்றி - நடுங்கத்
திருமான்முதலாய தேவாசுரர்கள்
கருமால்கடனகம் பற்றிக் - குருமாற
நீலமுண்டநீண்முகில்போ னெஞ்சழலவந்தெழுந்த
வாலமுண்டகண்ட மதுபோற்றி - சாலமண்டிப்
போருகந்தவானவர்கள் புக்கொளிக்கப்பிக்கலர்க்குத்
தாரகன்றன்மார்பிற் றனிச்சூலம் - வீரங்
கொடுத்தெறியுமாகாளி கோபந்தவிர
வெடுத்தநடத்தியல்பு போற்றி - தடுத்து
வரையெடுத்தவாளரக்கன் வாயாறுதிர
நிரையெடுத்துநெக்குடல மிற்றுப் - புரையெடுத்த
பத்தனையபொன்முடியுந் தோளிருபதுந்நெரிய
மெத்தெனவேவைத்த விரல்போற்றி - யத்தகைத்த
வானவர்கடாங்கூடி மந்திரித்தமந்திரத்தை
மேனவிலவோடி விதிர்விதிர்த்துத் - தானவருக்
கொட்டிக்குறளை யுலாத்தவயன்சிரத்தை
வெட்டிச்சிரித்த விறல்போற்றி - மட்டித்து
வாலுகந்தானல்லிலிங்க மாவகுத்துமற்றதன்மேற்
பாலுகுப்பக்கண்டு பதைத்தோடி - மேலுதைத்தங்
கோட்டியவன்றாதை யிருதாளெறிந்துயிரை
வீட்டியசண்டிக்கு வேறாக - நாட்டின்கட்
பொற்கோயிலுள்ளிருத்திப் பூமாலைபோனகமு
நற்கோலமீந்த நலம்போற்றி - விற்க
லைந்தருமாலுன்முகனும் வானவருங்கூடி
யலந்தருமால்கொள்ள வடர்க்குஞ் - சலந்தரனைச்
சக்கரத்தாலீர்ந்தரிதன் முகமேலாக்கலன்சாத்தித

மிக்கவுயிர்நீந்த விறல்போற்றி - யக்கணமே
நக்கிருந்தாமகனைப் புகழ்ந்துநான்மேதந்
தொகவிருந்தவன்னைத் துதிசெய்ய - மிக்கிருந்த
வன்கைத்தலத்தே யணிமாலையாங்கணிந்த
செங்கைத்திறத்த திறல்போற்றி - திங்களைத்
தேய்த்தருவேசெம்பொற் செழுஞ்சடைமேற்சேர்வித்து
வாய்த்திமையோர்தம்மையெல்லாம் வான்சிறையிற்-பாய்ந்திப்
பிரமன்குறையிரப்பப் பின்றுமவர்க்கு
வரமன்றளித்தவலி போற்றி - புரமெரித்த
வன்றயந்தழுவர்க் கமர்த்துவரமளித்து
நின்றுயந்தவண்ண நிகழ்வித்து - நன்று
நடைகாவன்மிக்க வருள்கொடுத்துக்கோயிற்
கடைகாவல்கொண்டவா போற்றி - விடைசாய
ரணவர்கட்காற்றது தன்னடைந்தநன்மைவிறல்
வானவர்கள்வேண்ட மயிலூரும் - கோனவனைச்
சேனைபதியாகச் செம்பொன்முடிகவித்து
வானுளவைத்த வரம்போற்றி - மேரு
வெதிர்த்தெழுந்தவந்தவனை யண்டரண்டமுய்யக்
கொதித்தெழுந்தகுலத்தாற் றோத்துத் - அதித்தங்
கவனிருக்கும்வண்ண மருள்கொடுத்தங்கேழேழ்
பவமறுத்தபாவனைகள் போற்றி - கவைமுகத்த
பொற்பாகரைப்பிளந்து கூறிரண்டாப்போகட்டு
மெற்பாசரைப்போக மேல்கிலகி - நிற்பாலை
மும்மதத்துவெண்கோட்டுக் கார்நிறத்துப்பொருப்புகள்
வெம்மதத்தவேகத்தான் மிக்கோடி - விம்மி
யடர்த்திளைத்தப்பாயு மடுகளிற்றைப்போக
வெடுத்தரித்துப்போர்த்தவிறை போற்றி - தொடுத்தமைத்த
நான்மறைகொண்டணிந்த நால்வர்க்கன்றாலிழற்கீழ்
வான்மறையாகும் வகையருளித் - தேன்மாலை
விட்டிலங்கத்தக்கிணமே நோக்கியடிக்குணை
மெட்டிலங்கவைத்த விறைபோற்றி - பொட்டி
விடையன்விசையாப்பான் வேடுவமாகி



யசையகுடந்திரிய நின்று - வசையிருப்
பேசுபதப்பான் பிழைபொறுத்துமற்றவற்குப்
பாசுபதமீந்த பதம்போற்றி - நேசத்தால்
வாயினீர்கொண்டு மகுடத்துமிழ்ந்திறைச்சி
யாயுதிர்ப்பேரனகமா வங்கமைத்துத் - ஆயசீர்க்
கண்ணிடந்தகண்ணப்பர் தம்மைமிகக்காதலித்து
விண்ணுலகமீந்த விறல்போற்றி - மண்ணின்மேற்
கானத்திபோற்றி கயிலைமலைபோற்றியென
நினைத்திருக்கினைந்து நிற்பார்க - டானத்தோ
டெட்டுத்திசையும்பன்முரச மார்த்திமையோர்போற்றிசைப்ப
வத்தனடிசேர்வார்க ளாங்கு.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

# திருமுருகாற்றுப்படை.

---

இணைக்குறளாசிரியப்பா.

## முதலாவது

## திருப்பரங்குன்றம்.

உலகமுவப்ப வலனேர்புதிரிதரு
பலர்புகழ்ஞாயிறு கடற்கண்டாஅங்
கோவறவிமைக்குஞ் சேண்விளங்கவிரொளி
யுறுநர்த்தாங்கிய மதனுடைநோன்றாட்
செறுநர்த்தேய்த்த செல்லுறழ்தடக்கை
மறுவில்கற்பின் வாணுதல்கணவன்
கார்கோண்முகந்த கமஞ்சூன்மாமழை
வாள்போழ்விசும்பின் வள்ளுறைசிதறித்
தலைப்பெயறலைஇய தண்ணறுங்கானத்

இருள்படப்பொதுளிய பராரைமராஅத்
துருள்பூந்தண்டார் புரளுமார்பினன்
மால்வரைநிவந்த சேணுயர்வெற்பிற்
கிண்கிணிகவைஇய வொண்செஞ்சீறடிக்
கணைக்கால்வாங்கிய நுசுப்பிற்பணைத்தோட்
கோபத்தன்ன தோயாப்பூந்துகிற்
பல்காசுநிரைத்த சில்காழல்குற்
கைபுனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பி
னாவலொடுபெயரிய பொலம்புனையவிரிழைச்
சேணிகந்துவிளங்குஞ் செயிர்தீர்மேனித்
துணையோராய்ந்த விணையீரோதிச்
செங்கால்வெட்சிச் சீறிதழிடையிடுபு
பைந்தாட்குவளைத் தூவிதழ்கிள்ளித்
தெய்வவுத்தியொடு வலம்புரிவயின்வைத்துத்
திலகந்தைஇய தேங்கமழ்திருநுதன்
மகரப்பகுவாய் தாழமண்ணுறுத்துத்
துவரமுடித்த துகளறுமுச்சிப்
பெருந்தண்சண்பகஞ் செரீஇக்கருந்தகட்
டுளைப்பூமருதி னொள்ளிணரட்டிக்
கிளைக்கவின்றெழுதரு கீழ்நீர்ச்செவ்வரும்
பிணைப்புறுபிணையல் வளைஇத்துணைத்தக
வண்காதுநிறைந்த பிண்டியொண்டளிர்
நுண்பூணாகந் திளைப்பத்திண்காழ்
நறுங்குறடுரிஞ்சிய பூங்கேழ்த்தேய்வை
தேங்கமழ்மருதிணர் கடுப்பக்கோங்கின்
குவிமுகிழிளமுலைக் கொட்டிவிரிமலர்
வேங்கைநுண்டா தப்பிக்காண்வர
வெள்ளிற்குறுமுறி கிள்ளுபுதெறியாக்
கோழியோங்கிய வென்றடுவிறற்கொடி
வாழியபெரிதென் றேத்திப்பலருடன்
சீர்திகழ்சிலம்பகஞ் சிலம்பப்பாடிச்
சூரரமகளி ராடுஞ்சோலை



மந்தியுமறியா மரன்பயிலடுக்கத்துச்
சுரும்புமூசாச் சுடர்ப்பூங்காந்தட்
பெருந்தண்கண்ணி மிலைந்தசென்னியன்
பார்முதிர்பனிக்கடல் கலங்கவுள்புக்குச்
சூர்முதறடிந்த சுடரிலைநெடுவேல்
உலறியகதுப்பிற் பிறழ்பற்பேழ்வாய்ச்
சுழல்விழிப்பசுங்கட் சூர்த்தநோக்கிற்
கழல்கட்கூகையொடு கடும்பாம்புதூங்கப்
பெருமுலையலைக்குங் காதிற்பிணர்மோட்
டுருகெழுசெலவி னஞ்சுவருபேய்மகள்
குருதியாடிய கூருகிர்க்கொடுவிரற்
கண்டொட்டுண்ட கழிமுடைக்கருந்தலை
யொண்டொடித்தடக்கையி னேந்திவெருவர
வென்றடுவிறற்களம் பாடித்தோள்பெயரா
நிணந்தின்வாயள் துணங்கைதூங்க
விருபேருருவி னொருபேரியாக்கை
யறுவேறுவகையி னஞ்சுவரமண்டி
யவுணர்நல்வல மடங்கக்கவிழிணர்
மாமுதறடிந்த மறுவில்கொற்றத்
தெய்யாநல்லிசைச் செவ்வேற்சேஎய்
சேவடிபடருஞ் செம்மலுள்ளமொடு
நலம்புரிகொள்கைப் புலம்பிரிந்துறையுஞ்
செலவுநீநயந்தனை யாயிற்பலவுடன்
நன்னர்நெஞ்சத் தின்னசைவாய்ப்ப
வின்னேபெறுதிநீ முன்னியவினையே
செருப்புகன்றெடுத்த சேணுயர்நெடுங்கொடி
வரிப்புனைபந்தொடு பாவைதூங்கப்
பொருநர்த்தேய்த்த போரருவாயிற்
றிருவீற்றிருந்த தீதுதீர்நியமத்து
மாடமலிமறுகிற் கூடற்குடவயி
னிருஞ்சேற்றகல்வய லிரிந்துவாயவிழ்ந்த

முட்டாட்டாமரைத் துஞ்சிவைகறைக்
கட்கமழ்நெய்த லூதியெற்படக்
கண்போன்மலர்ந்த காமர்சுனைமலர
வஞ்சிறைவண்டி னரிக்கணமொலிக்குங்
குன்றமர்ந்துறைதலு முரியனதன்று.

---

## இரண்டாவது

## திருச்சீரலைவாய்.

வைந்நுதிபொருத வடுவாழ்வரிநுதல்
வாடாமாலை யோடையொடுதுயல்வரப்
படுமணியிரட்டு மருங்கிற்கடுநடைக்
கூற்றத்தன்ன மாற்றருமொய்ம்பிற்
கால்கிளர்ந்தன்ன வேழமேல்கொண்
டைவேறுருவிற் செய்வினைமுற்றிய
முடியொடுவிளங்கிய முரண்மிகுதிருமணி
மின்னுறழிமைப்பிற் சென்னிப்பொற்ப
நகைதாழ்புதுயல்வரூஉம் வகையமைபொலங்குழை
சேண்விளங்கியற்கை வாண்மதிகவைஇ
யகலாமீனி னவிர்வனவிமைப்பத்
தாவில்கொள்கைத் தந்தொழின்முடிமார்
மனனேர்பெழுதரு வாணிறமுகனே
மாயிருண்ஞால மறுவின்றிவிளங்கப்
பல்கதிர்விரிந்தன் றொருமுகமொருமுக
மார்வலரேத்த வமர்ந்தினிதொழுகிக்
காதலினுவந்து வரங்கொடுத்தன்றேயொருமுக
மந்திரவிதியின் மரபுளிவழாஅ
வந்தணர்வேள்வியோர்க் கும்மேயொருமுக
மெஞ்சியபொருள்களை யேமுறநாடித்
திங்கள்போலத் திசைவிளக்கும்மேயொருமுகஞ்
செறுநர்த்தேய்த்துச் செல்சமமுருக்கிக்
கறுவுகொணெஞ்சமொடு களம்வேட்டன்றேயொருமுக



குறவர்மடமகள் கொடிபோனுசுப்பின்
மடவரல்வள்ளியொடு நகையமர்ந்தன்றே யாங்கம்
மூவிருமுகனு முறைநவின்றொழுகலி
னாரந்தாழ்ந்த வம்பகட்டுமார்பிற்
செம்பொறிவாங்கிய மொய்ம்பிற்சுடர்விடுபு
வண்புகழ்நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன்மரபி னையர்க்கேந்திய தொருகை
யுக்கஞ்சேர்த்திய தொருகை
நலம்பெறுகலிங்கத்துக் குறங்கின்மிசை
யசைஇய தொருகை
யங்குசங்கடாவ வொருகையிருகை
யையிருவட்டமொ டெஃகுவலந்திரிப்ப வொருகை
மார்பொடுவிளங்க வொருகை
தாரொடுபொலிய வொருகை
கீழ்வீழ்தொடியொடு மீமிசைக்கொட்ப வொருகை
பாடின்படுமணி யிரட்டவொருகை
நீனிறவிசும்பின் மலிதுளிபொழிய வொருகை
வானரமகளிர்க்கு வதுவைசூட்ட வாங்கப்
பன்னிருகையும் பாற்படவியற்றி
யந்தரப்பல்லியங் கறங்கத்திண்காழ்
வயிரெழுந்திசைப்ப வால்வளைஞரல
வுரந்தலைக்கொண்ட வுருமிடிமுரசமொடு
பல்பொறிமஞ்ஞை வெல்கொடியகவ
விசும்பாறாக விரைசெலன்முன்னி
யுலகம்புகழ்ந்த வோங்குயர்விழுச்சீ
ரலைவாய்ச்சேறலு நிலைஇயபண்பே யதான்று.

---

## மூன்றாவது

## திருவாவினன்குடி.

சீரைதைஇய வுடுக்கையர்சீரொடு
வலம்புரிபுரையும் வானரைமுடியினர்

மாசறவிமைக்கு முருவினர் மானி
னுரிவைதைஇய வூன்கெடுமார்பி
னென்பெழுந்தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன்கழிந்த வுண்டியரிகலொடு
செற்றநீக்கிய மனத்தினரியாவதுங்
கற்றோரறியா வறிவினர்கற்றோர்க்குத்
தாம்வரம்பாகிய தலைமையர்காமமொடு
கடுஞ்சினங்கடிந்த காட்சியரிடும்பை
யாவதுமறியா வியல்பினர்மேவரத்
துனியில்காட்சி முனிவர்முற்புகப்
புகைமுகந்தன்ன மாசில்தூவுடை
முகைவாயவிழ்ந்த தகைசூழாகத்துச்
செவிநேர்புவைத்த செய்வுறுதிவவி
னல்லியாழ்நவின்ற நயனுடைநெஞ்சின்
மென்மொழிமேவல ரின்னரம்புளர
நோயின்றியன்ற யாக்கையர்மாவி
னவிர்தளிர்புரையு மேனியரவிர்தொறும்
பொன்னுரைகடுக்குந் திதலையரின்னகைப்
பருமந்தாங்கிய பணிந்தேந்தல்குன்
மாசின்மகளிரொடு மறுவின்றிவிளங்கக்
கடுவொடொடுங்கிய தூம்புடைவாலெயிற்
றழலெனவுயிர்க்கு மஞ்சுவருகடுந்திறற்
பாம்புபடப்புடைக்கும் பல்வரிக்கொடுஞ்சிறைப்
புள்ளணிநீள்கொடிச் செல்வனும்வெள்ளேறு
வலவயினுயரிய பலர்புகழ்திணிதோ
ளுமையமர்ந்துவிளங்கு மிமையாமுக்கண்
மூவெயின்முருக்கிய முரண்மிகுசெல்வனு
நூற்றுப்பத்தடுக்கிய நாட்டத்துநூறுபல்
வேள்விமுற்றிய வென்றடுகொற்றத்
தீரிரண்டேந்திய மருப்பினெழினடைத்
தாழ்பெருந்தடக்கை யுயர்த்தயானை
யெருத்தமேறிய திருக்கிளர்செல்வனு



நாற்பெருந்தெய்வத்து நன்னகர்நிலைஇய
வுலகங்காக்கு மொன்றுபுரிகொள்கைப்
பலர்புகழ்மூவருந் தலைவராக
வேமுறுஞாலந் தன்னிற்றோன்றித்
தாமரைபயந்த தாவிலூழி
நான்முகவொருவற் சுட்டிக்காண்வரப்
பகலிற்றோன்று மிகலில்காட்சி
நால்வேறியற்கைப் பதினொருமூவரோ
டொன்பதிற்றிரட்டி யுயர்நிலைபெறீஇயர்
மீன்பூத்தன்ன தோன்றலர்மீன்சேர்பு
வளிகிளர்ந்தன்ன செலவினர்வளியிடைத்
தீயெழுந்தன்ன திறலினர்தீப்பட
வுருமிடித்தன்ன குரலினர்விழுமிய
வுறுகுறைமருங்கிற்றம் பெறுமுறைகொண்மா
ரந்தரக்கொட்பினர் வந்துடன்காணத்
தாவில்கொள்கை மடந்தையொடுசின்னா
ளாவினன்குடி யசைதலுமுரிய னதாஅன்று.

---

நாலங்காவது

## திருவேரகம்.

இருமூன்றெய்திய வியல்பினின்வழாஅ
திருவர்ச்சுட்டிய பல்வேறுதொல்குடி
யறுநான்கிரட்டி யிளமைநல்லியாண்
டாறினிற்கழிப்பிய வறனவில்கொள்கை
மூன்றுவகைக்குறித்த முத்தீச்செல்வத்
திருபிறப்பாளர் பொழுதறிந்துநுவல
வொன்பதுகொண்ட மூன்றுபுரிநுண்ஞாண்
புலராக்காழகம் புலரவுடீஇ
யுச்சிக்கூப்பிய கையினர்தற்புகழ்ந்
தாறெழுத்தடக்கிய வருமறைக்கேள்வி
நாவியன்மருங்கி னவிலப்பாடி

விரையுறுநறுமலரேந்திப்பெரிதுவந்து
நேரகத்துறைதலு முரியனதாஅன்று.

---

## ஐந்தாவது
## குன்றுதோறாடல்.

பைங்கொடிநறைக்கா யிடையிடுபுவேல
னம்பொதிப்புட்டில் விரைஇக்குளவியொடு
வெண்கூதாளந் தொடுத்தகண்ணிய
னறுஞ்சாந்தணிந்த கேழ்கிளர்மார்பிற்
கொடுந்தொழில்வல்விற் கொலைஇயகானவர்
நீடமைவிளைந்த தேக்கட்டேறற்
குன்றகச்சிறுகுடிக் கிளையுடன்மகிழ்ந்து
தொண்டகச்சிறுபறைக் குரவையயர
விரலுளர்ப்பவிழ்ந்த வேறுபடுநறுங்காற்
குண்டுசுனைபூத்த வண்டுபடுகண்ணி
யிணைத்தகோதை யணைத்தகூந்தன்
முடித்தகுல்லை யிலையுடைநறும்பூச்
செங்கான்மராஅத்த வாலிணரிடையிடுபு
சுரும்புணத்தொடுத்த பெருந்தண்மாத்தழை
திருந்துகாழல்குற் றிளைப்பவுடீஇ
மயில்கண்டன்ன மடநடைமகளிரொடு
செய்யன்சிவந்த வாடையன்செவ்வரைச்
செயலைத்தண்டளிர் துயல்வருங்காதினன்
கச்சினன்கழலினன் செச்சைக்கண்ணியன்
குழலன்கோட்டன் குறும்பல்லியத்தன்
தகரன்மஞ்ஞையன் புகரில்சேவலங்
கொடியனெடியன் றொடியணிதோள
னரம்பார்த்தன்ன வின்குரற்றொகுதியொடு
குறும்பொறிக்கொண்ட நறுந்தண்சாயன்
மருங்கிற்கட்டிய நிலனேர்புதுகிலினன்
முழவுறழ்தடக்கையி னியலவேந்தி



மென்றோட்பல்பிணை தழீஇத்தலைத்தந்து
குன்றுதோறாடலு நின்றதன்பண்பே யதாஅன்று.

---

## ஆறாவது
## பழமுதிர்சோலை.

சிறுதினைமலரொடு விரைஇமறியறுத்து
வாரணக்கொடியொடு வயிற்படநிறீஇ
யூரூர்கொண்ட சீர்கெழுவிழவினு
மார்வலரேத்த மேவருநிலையினும்
வேலன்றைஇய வெறியயர்களனுங்
காடுங்காவுங் கவின்பெறுதுருத்தியும்
யாறுங்குளனும் வேறுபல்வைப்புஞ்
சதுக்கமுஞ்சந்தியும் புதுப்பூங்கடம்பு
மன்றமும்பொதியிலுங் கந்துடைநிலையினு
மாண்டலைக்கொடியொடு மண்ணியமைவர
நெய்யோடையவி யப்பியைதுரைத்துக்
குடந்தம்பட்டுக் கொழுமலர்சிதறி
முரண்கொளுருவி னிரண்டுடனுடீஇச்
செந்நூல்யாத்து வெண்பொரிசிதறி
மதவலிநிலைஇய மாத்தாட்கொழுவிடைக்
குருதியொடுவிரைஇய தூவெள்ளரிசி
சில்பலிச்செய்து பல்பிரப்பிரீஇச்
சிறுபசுமஞ்சளொடு நறுவிரைதெளித்துப்
பெருந்தண்கணவீர நறுந்தண்மாலை
துணையறவறுத்துத் தூங்கநாற்றி
நளிமலைச்சிலம்பி னன்னகர்வாழ்த்தி
நறும்புகையெடுத்துக் குறிஞ்சிபாடி
யிமிழிசையருவியொ டின்னியங்கறங்க
வுருவப்பல்பூத் தூஉய்வெருவரக்
குருதிச்செந்தினை பரப்பிக்குறமகண்
முருகியநிறுத்து முரணினருட்க
முருகாற்றுப்படுத்த வுருகெழுவியனக

ராடுகளஞ்சிலம்பப் பாடிப்பலவுடன்
கோடுவாய்வைத்துக் கொடுமணியியக்கி
யோடாப்பூட்கைப் பிணிமுகம்வாழ்த்தி
வேண்டுநர்வேண்டியாங் கெய்தினர்வழிபட
வாண்டாண்டுறைதலு மறிந்தவாறே
யாண்டாண்டாயினு மாகக்காண்டக
முந்துநீகண்டுழி முகனமர்ந்தேத்திக்
கைதொழூஉப்பரவிக் காலுறவணங்கி
நெடும்பெருஞ்சிமயத்து நீலப்பைஞ்சுனை
யைவருளொருவ னங்கையேற்ப
வறுவர்பயந்த வாறமர்செல்வ
வால்கெழுகடவுட் புதல்வமால்வரை
மலைமகண்மகனே மாற்றோர்கூற்றே
வெற்றிவெல்போர்க் கொற்றவைசிறுவ
விழையணிசிறப்பிற் பழையோள்குழவி
வானோர்வணங்குவிற் றானைத்தலைவ
மாலைமார்ப நூலறிபுலவ
செருவிலொருவ பொருவிறன்மள்ள
வந்தணர்வெறுக்கை யறிந்தோர்சொன்மலை
மங்கையர்கணவ மைந்தரேறே
வேல்கெழுதடக்கைச் சால்பெருஞ்செல்வ
குன்றங்கொன்ற குன்றாக்கொற்றத்து
விண்பொருநெடுவரைக் குறிஞ்சிக்கிழவ
பலர்புகழ்நன்மொழிப் புலவரேறே
யரும்பெறன்மரபிற் பெரும்பெயர்முருக
நசையினர்க்கார்த்து மிசைபேராள
வலந்தோர்க்களிக்கும் பொலம்பூட்சேஎய்
மண்டமர்கடந்தநின் வென்றாடகலத்துப்
பரிசிலர்த்தாங்கு முருகெழுநெடுவேள்
பெரியோரேத்தும் பெரும்பெயரியவுள்
சூர்மருங்கறுத்த மொய்ம்பின்மதவலி
போர்மிகுபொருந குரிசிலெனப்பல



யானறியளவையி னேத்தியானாது
நின்னளந்தறிதன் மன்னுயிர்க்கருமையி
னின்னடியுள்ளி வந்தனனின்னொடு
புரையுநரில்லாப் புலமையோயெனக்
குறித்ததுமொழியா வளவையிற்குறித்துடன்
வேறுபல்லுருவிற் குறும்பல்கூளியர்
சாறயர்களத்து வீறுபெறத்தோன்றி
யளியன்றானே முதுவாயிரவலன்
வந்தோன்பெருமநின் வண்புகழ்நயந்தென
வினியவுநல்லவு நனிபலவேத்தித்
தெய்வஞ்சான்ற திறல்விளங்குருவின்
வான்றோய்நிவப்பிற் றான்வந்தெய்தி
யணங்குசாலுயர்நிலை தழீஇப்பண்டைத்தன்
மணங்கமழ்தெய்வத் திளநலங்காட்டி
யஞ்சலோம்புமதி யறிவனின்வரவென
வன்புடைநன்மொழி யளைஇவிளிவின்
றிருணிறமுந்நீர் வளைஇயவுலகத்
தொருநீயாகத் தோன்றவிழுமிய
பெறலரும்பரிசி னல்குமதிபலவுடன்
வேறுபஃறுகிலி னுடங்கியகில்சுமந்
தாரமுழுமுத லுருட்டிவேரற்
பூவுடையலங்குசினை புலம்பவேர்கீண்டு
விண்பொருநெடுவரைப் பரிதியிற்றொடுத்த
தண்கமழ்மலரிறால் சிதையநன்பல
வாசினிமுதுசுளை கலாவமீமிசை
நாகநறுமல ருதிரயூகமொடு
மாமுகமுசுக்கலை பனிப்பப்பூநுத
லிரும்பிடிகுளிர்ப்ப வீசிப்பெருங்களிற்று
முத்துடைவான்கோடு தழீஇத்தத்துற்று
நன்பொன்மணிநிறங் கிளரப்பொன்கொழியா
வாழைமுழுமுத றுமியத்தாழை
யிளநீர்விழுக்குலை யுதிரத்தாக்கிக்

கறிக்கொடிக்கருந்துணர் சாயப்பொறிப்புற
மடநடைமஞ்ஞை பலவுடன்வெரீஇக்
கோழிவயப்பெடை யிரியக்கேழலொ
டிரும்பனைவெளிற்றின் புன்சாயன்ன
குரூஉமயிர்யாக்கைக் குடாவடியுளியம்
பெருங்கல்விடரளைச் செறியக்கருங்கோட்
டாமாநல்லேறு சிலைப்பச்சேணின்
றிழுமெனவிழிதரு மருவிப்
பழமுதிர்சோலை மலைகிழவோனே.

---

நேரிசைவெண்பா.

குன்றமெறிந்தாய் குரைகடலிற்சூர்தடிந்தாய்
புன்றலையபூதப் பொருபடையாய் - யென்று
மிளையாயழகியா யேறூர்ந்தானேறே
யுளையாயென்னுள்ளத் துறை. (க)

குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர்செய்ததுவு
மன்றங்கமரரிடர் தீர்த்ததுவு - மின்றென்னைக்
கைவிடாநின்றதுவுங் கற்பொதும்பிற்காத்ததுவு
மெய்விடாவீரன்கை வேல். (உ)

வீரவேல்தாரைவேல் விண்ணோர்சிறைமீட்ட
தீரவேல்செவ்வே டிருக்கைவேல் - வாரி
குளித்தவேல்கொற்றவேல் சூர்மார்புங்குன்றுந்
துளைத்தவேலுண்டே துணை. (ங)

இன்னமொருகா லெனதிடும்பைக்குன்றுக்குக்
கொன்னவில்வேற்சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய்நெடுங்குன்றம் பட்டுருவத்தொட்ட
தனிவேலைவாங்கத் தகும். (ச)

அன்னையொழிய வொருவரையுநம்புகிலேன்
பின்னையொருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்



கோலப்பாவாணோர் கொடியவினைதீர்த்தருளும்
வேலப்பாசெந்திவாழ் வே. (ரு)

அஞ்சுமுகந்தோன்றி லாறுமுகந்தோன்றும்
வெஞ்சமரந்தோன்றில் வேறோன்று - நெஞ்சி
லொருகாலினைக்கி லிருகாலுந்தோன்று
முருகாவென்றோதுவார் முன். (சு)

முருகனேசெந்தி முதல்வனேமாயோன்
மருகனேயீசன் மகனே - யொருகைமுகன்
றம்பியேநின்னுடைய தண்டைக்காலெப்பொழுது
நம்பியேகைதொழுவே னான். (எ)

வேலுமயிலுந்துணை.

---

திருச்சிற்றம்பலம்.

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

## திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

---

திருக்கண்ணப்பன் செய்தவத்திறத்து
விருப்புடைத்தம்ம விரிகடலுலகே பிறந்தது
தேனழித்துண்ணுங் கானவர்குலத்தே இருப்பது
பொருபுலிகுமுறும் பொருப்பிடைக்காடே வளர்ப்பது
செங்கணுறவொடு தீவசம்பலவே பயில்வது
வெந்திறற்சிலையொடு வேல்வாண்முதலிய
வந்தயில்படைக்கல மவையேயுறைவது
குறைதசைபயின்று குடம்பலகிடந்தக்
கறைமலிபடைக்கலங் கலந்தபுல்லொடு
பீலிமேய்ந்தவை பிரிந்தவெள்ளிடை
வாலியபுலித்தோன் மறைப்பவெள்வா
ரிரவும்பகலு மிகழாதேயற்றியொடு
மடைத்ததேனும் வன்றுப்பிட்டுஞ்

சிலைவிடுகணையினுந் திண்சுரிகையினும்
பல்கிளையவையொடும் பதைப்பப்படுத்துத்
தொல்லுயிர்கொல்லுந் தொழிலே வடிவே
மறப்புலிகடித்த வன்றிரண்முன்கை
திறற்படைகிழித்த திண்வரையகலம்
மெயிற்றெண்குகவர்ந்த விருந்தனெற்றி
யயிற்கோட்டென்ன வெடுத்தெழுகுறங்கு
செடித்தெழுகுஞ்சி செந்நிறத்தருக்கன்
கடுத்தெழும்வெவ்வுரை யவ்வாய்க்கருநிறத்
தடுபடைபிரியாக் கொடுவிறலதுவே மனமே
மிகக்கொலைபுரியும் வேட்டையிலுயிர்க
ளகப்படுதயருக் கனமாந்ததுவே யிறைவக்
கானத்தலைவன் றன்மைகண்ணுதல்
வானத்தலைவன் மலைமகள்பங்க
னெண்ணரும்பெருமை யிமையவரிறைஞ்சும்
புண்ணியபாதப் பொற்றாமரையிணை
[illegible]ய்க்கட்கன்றெனச் சென்றுகண்டல்லது
[illegible]ய்க்கிடுமுண்டி யுழக்கதியானே யதாஅன்று
[illegible]றல்விரித்த கன்றகதிருச்சியிற்
[illegible]டியிடந்தொறுஞ் சிறுக்கொளுஞ்சுரத்து
முதுமரமிரந்த முட்புயில்வளாகத்
தெதிரினங்கடவிய வேட்டையில்திரும்பி
யெழுப்பியவிருகத் தினங்களைமறுக்குறத்
தன்றுய்கடித்திரித் திடவடிக்கணைதொடுத்
தெய்துதுணித்திடத் துணித்தவிடக்கினை
விறலினிற்கலைந்த வெங்கனற்காய்ச்சி
நறுவிய[illegible]றச்சி நல்லதுச்சுவைகண்
டண்ணற்கமிர்தென றதுவேறமைத்துத்
தண்ணறுஞ்சுனைநீர் தன்வாய்க்குடத்தான்
மஞ்சனமாக முகந்துமலரெனக்
குஞ்சியிற்றுவர்க்குலை செருகிக்
குனிசிலைகடுங்கணை யதனொடுமேந்திக்



கனல்விழிக்கருங்குர ளையின்றொடர யாவரும்
வெருக்கோளுற்ற வெங்கடும்பகலிற்
றிருக்காளத்தி யெய்தியசிவற்கு
வழிபடக்கடவ மறையோன்முன்னந்
துகிலிடைச்சுற்றியிற் றூநீராட்டி
நல்லனவிரைமலர் நறும்புகைவிளக்கவி
சொல்லினபரிசிற் சுருங்கலன்பூவும்
பட்டமாலையுந் தூக்கமுமலங்கரித்
தர்ச்சனைசெய்தாங் கவனடியிறைஞ்சித்
திருந்தமுத்திரை சிறப்பொடுகாட்டி
மந்திரமெண்ணி வலமிடம்வந்து
விடைகொண்டேகின பிற்றொழிற்
பூசனைதன்னைப் புக்கொருகாலிற்
றொடுசெருப்படியா னீக்கிவாயி
லிடுபுனன்மேனியி லாட்டித்
தன்றலைத்தங்கிய சுவர்ப்பூவேற்றி யிறைச்சியிற்
பெரிதும்போனகம் படைத்தப்பிரானைக்
கண்டுகண்ணுள்ளங் களித்துகாதலிற்
கொண்டதோர்கூத்துமுன் னாடிக்குனைகழ
லன்பொடுமிறுக விறைஞ்சியாரு
மன்பொடுகானக மடையுமடைந்த
வற்றையயலினிற் கழித்தாங்கிரவு
முனித்தபோழ்தத் தண்ணீர்மூழ்கி
யாதரிக்குமந்த ணன்வந்து
ஈரார்வெற்றுத் தான்முன்செய்வதோர் பொற்புடைப்
பூசனைகாணுள் முடிமிசையேற்றிய
சுவர்கண்டொழியான் மதித்துமிவ்வா
றர்ச்சனைசெய்பவ ரியாவர்கொலென்று
கரந்திருந்தவனக் கானவன்வரவினைப்
பரந்தகாட்டிடைப் பார்த்துநடுக்குற்று
வந்தவன்செய்து போயினவண்ணஞ்
சிந்தையிற்பொறாது சென்றிடம்புக்கு

மற்றைநா ளுமவ் வழிப்பட் டிறைவ
னுற்றது கேட்டரு ளுன்றனக் கழகா
நாடொறு நான்செய் பூசனை தன்னை
யீங்கொரு வேடு
வோய்பும்பு குந்து மிதித்துழக் கித்
தொடுசெருப் படியா லீக்கின் வாயில்
விடுபுனன் மேனியி லாட்டித்
தன்றலைத் தங்கிய சருகிலை யுதிர்த்தோ ரிறைச்சியை
யின்றிருக் கோயிலி லிட்டுப் போமது
வென்று முன்றனக் கினிதே யென்னையுங்
காணிற் கொன்றிடும் யாவரா லும்
விலக்குறுங் குணத்த னல்லனென் றுந்
திருக்குறும் பென்றவன் சென்றவவ் விரவே
கனவிலா தரிக்கு மறையவன் றனக்குச்
சீரார் திருக்கா ளத்தி யப்பன்
பிறையணி யிலங்கு மின்னுப் புன்சடை முடிக்
கறையணி மிடற்றுக் கண்ணுதற் கடவுள்
நெற்றிக் கண்ணொடு நிறைநீ றணிந்த
வொற்றை மால்விடை யுமையொரு பங்கிற்
றிருவுருக் காட்டி யருளிப்
பரிவொடு பூசனை செய்யுங்
குளிச்சில வேடன் குணமவை யானெ
னரிவையிற் றேர்ந்தனை மாதவனென் றுனை
ரவனுக்கு முயங்கிய விடுவனம தவ்வேயவன்
செருப்படி யாவது விருப்புறு தவமே
வெறிநலன் வாயது தூய பொற்குடமே
யதனிற் றங்கிய கங்கையின் புனலே
புன்றலை மாமயி ரவ்விடைப் பல்லே
யதற்கிடு மாமலை ரவனர நாவே
யப்புனல் விடும்பொழு தரிந்துமிய மீசைப்
புன்மயிர் குசையிணு மடிக்கினிதே யவன் றலை
தங்கிய சருகிலை தருப்பையிற் பொலித்த



வன்குலிகற்பகத் தல்லேயவனுக்
கிட்டவிறைச்சி யெனக்குநன் மாதவ
ரிட்டநெய்பா லவியே
யிதுவெனக் குனக்கவன்
கலந்ததோ ரன்பு காட்டுவ னாளை
நலந்திகழ் அர்ச்சனை செய்தாங் கிருவென்
றிறையவ னெழுந் தருளினனருளா
மறையவனறிவுற் றெழுந்து
மனமிகக் கூசி வைகறைக் குளித்துத்
தான்முன் செய்வதோர்
பொற்புடைப் பூசனை புகழ்தரச் செய்து
சென்றொருவன் மிருந்தனனாக விரவியும்
வான்பெறு மிருள்கட்டில் வந்தழலெழுந்த
கொம்பதல் வேட்டையிற் றாளவிழ்த்தடித்த
விலங்கெல்லாத் திருகையினை யுடைகுத்தினாற் கொடுசுப்புத்
தொடங்கன கையொடு தோன்றினன் திருவருள்
செல்வன் றிருக்காளத்தி யுடையான் றிருமேனியின்
மூன்றுகண்ணு ளொருகண்ணினி
முதிர்மொழியர் தொழுகவிருந்தவ னிருகண
பார்த்தனக்குறும் பயனற்றுமன்னு சுழன்று
வாய்ப்புனல் சிந்தக் கண்ணீர் சொரிந்து
கையிலூனொடு கணைசிலை சிந்த
நிலப்படப் பரண்டு நெடிதினின் றுயிர்த்து
நிலைக்கொம் படைக்கொண்டு தேடுவதுயக் கிடந்த
ராத்தலைக் கழல்வனத் திரிந்தனன்
இன்னமுதனையின் கண்மேயிற்
றக்கன் மருந்துகள் பிழியவும் பிழிதொறு
நெக்கு நிறைந்தவைக் கண்டிலதனாகி
னத்தருக் கிருந்தனை னத்தனைக் குத்த தென்னை
தன்பெரும் நன்றி
[illegible]
[illegible]

புண்ணிலப்பியுங் காண்பனென்றொரு கண்ணிடைக்
கணையதுமடுத்துக் கையில்வாங்கி
யணைதரவப்பின னப்பலுங்குருதி
நிற்பதொத்துருப்பெறக் கண்டுநெஞ்சுகந்து
மற்றைக்கண்ணிலும் வடிக்கணைமடுத்தனன் மடுத்தலு
நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்பவென்
னன்புடைத்தோன்ற னில்லுகண்ணப்பவென்
றின்னுரையதனொடு மெழிற்சிவலிங்கந்
தன்னிடைப்பிறந்த தடமலர்க்கையா
லன்னவன்றன்கையம் பொடுமகப்படப்பிடித்
தருளின னருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழைபொழிந்தனர் வளையொலிபடகந்
துந்துபிகறங்கின தொல்சீர்முனிவரு
மேத்தினரின்னிசை வல்லோ
சிவகதிபெற்றனன் றிருக்கண்ணப்பனே.

வெண்பா.

தத்தையார்தாய்தந்தை நாகனூர்தன்பிறப்புப்
பொத்தப்பிநாட்டுடுப்பூர் வேடுவனூர் - இத்திக்குந்
திண்ணப்பனென்றபேர் செய்தவத்தாற்காளத்திக்
கண்ணப்பனாய்நின்றான் காண்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கல்லாடதேவநாயனார்

அருளிச்செய்த

# திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

பரிவின்றன்மை யுருவுகொண்டனையவன்
போழ்வார்போர்த்த தாழகச்செருப்பினன்
குருதிபுலராச் சுரிகையெஃக
மரையிற்கட்டிய வுடைதோற்கச்சையன்
றேனெடும்பையிற் குரம்பயிர்பிணித்து
வாரில்வீக்கிய வரிக்கைகட்டிய
வழுவைக்கூனுகிர் கேழல்வெண்மருப்பு
மார்புடைத்தொடுத்த மாலையுத்தரிய
னீலப்பீலி நெய்திருழ்ந்த
காளக்குஞ்சிக் கவடிபுல்லினன்
முடுகுநாறு குடிலையாக்கையன்
வேங்கைவென்று வாங்குடிய
சங்கரன்றன்னினுந் தலைவனாகிய
வில்லுமம்பு நல்லனதாங்கி
யெற்றுக்கல்வனங் காற்றினியங்கிக்
கணையில்வீழ்த்துக் கருமாவுரித்துக்
கோலினேற்றிக் கொழுந்திக்காய்ச்சி
நாவில்வைத்த நாட்போனகமுந்
தன்றலைச்சொருகிய தண்பளித்தாமமும்
வாய்க்கலசத்து மஞ்சனநீருங்
கொண்டுகானப் பேருறைகண்ணுதன்
முடியிற்பூசை யடியானீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக்கன்றவ னேசங்காட்ட
முக்கணப்பனுக் கொருகணிலுமிழ

தக்கிணத்திடை யிழிதரவக்கண
முழுதுவிழுந்து தொழுதெழுந்தாற்றிப்
புன்மருந்தாற்றப் போகாதென்று
தன்னைமருந்தென்று மலர்க்கணப்ப
வொழிந்ததுமற்றை யொண்டிருநயனம்
பொழிந்தகண்ணீர்க் கலுழிபொங்க
வற்றதென்று மற்றக்கண்ணையும்
பகழித்தலையா லகழ்வாண்டகை
யொருகையாலு மிருகைபிடித்து
வொல்லைநம்புண் ணொழிந்ததுபாராய்
நல்லைநல்லை யெனப்பெறுந்
திருவேட்டுவர்தந் திருவடிகைதொழக்
கருவேட்டுழல்வினைக் காரியங்கெடுமே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

# மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.

திருவாக்குஞ்செய்கருமங் கைகூட்டுஞ்செஞ்சொற்
பெருவாக்கும்பீடும் பெருக்கும் - முருவாக்கு
மாதலால்வானோரு மானைமுகத்தானைக் (௧)
காதலாற்கூப்புவர்தங் கை.

கைக்கும்பிணியொடுகாலன்றலைப்படுமேன்மையினி
லெய்க்குங்கலைக்கிடைத்தடைக்கேன்வெம்மைமாவனைக்கும்
மைக்குமரவணையான்றந்தபாய்மதயானைபத்தத் (௨)
திக்கும்பணிநுதற்கட்டீருவான்றிருவடியே.

அடியமர்ந்துகொள்வாயே நெஞ்சமேயப்ப
மிடியவலோடெள்ளுண்டை கன்னல் - வடிசுவையிற்
றாழ்வானையாழ்வானைத் தன்னடியாருள்ளத்தே (௩)
வாழ்வானைவாழ்த்தியே வாழ்.

வாழைக்கனிபலவின்கனிமாங்கனிதாஞ்சிறந்த
கூழைச்சுருள்குழையப்பமெள்ளுண்டையெல்லாந்தருந்தும்
பேழைப்பெருவயிற்றேம்புகுந்தென்னுளம்பிரியான (௪)
வேழத்திருமுகத்துச்செக்கர்மேனிவிநாயகனே.

விநாயகனேவெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனேவேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்குமண்ணிற்கு நாதனுமாந்தன்மையினாற் (௫)
கண்ணிற்பணிமின் கனிந்து.

கனியநினைவொடுநாடொறுங்காதற்படுமடியார்க்
கினியனிவியொருவின்றுங்கிலமெவரும்வணங்கும்
பனிவெண்பிறைநறுங்கொன்றைச்சடைப்பவித்திரியற்கை (௬)
முனிவன்சிறுவன்பெருவயிற்கொல்யானைமுகத்தவனே.

யானைமுகத்தான் பொருவிடையான்சேயழகார்
மானமணிவண்ணன் மாமருகன் - மேனிகமழும்
வெள்ளக்குமிழி மதத்துவிநாயகனென்
னுள்ளக்கருத்தி லுளன். (எ)

உளதளவில்லதோர்காதலென்னெஞ்சில்வன்னஞ்சமுண்ட
வளரிளமாமணிகண்டன்வண்டாடுவண்கோதைபங்கத்
திளவளர்மாமதிக்கண்ணியெம்மான்மகன்கைம்முகத்துக்
களகளமாமதஞ்சேர்களியானைக்கணபதியே. (அ)

கணங்கொண்டவல்வினைகள் கண்கொண்டநெற்றிப்
பணங்கொண்டபாந்தட் சடைமேன் - மணங்கொண்ட
தாதகத்ததேன்முரலுங் கொன்றையான்றந்தளித்த
போதகத்தின்றாள்பணியப் போம். (கூ)

போகபந்தத்தந்தமிக் திகழ்சீர்புனைதாருமுடிமே
னாகபந்தத்தந்தராளம்பிறைபிறையான்புயந்த
மாகபந்தத்தந்தமாமழைபோன்மதத்துக்கதப்போ
ரேகதந்தத்தெந்தைசெந்தாளிணைபணிந்தேத்துமினே. (ய)

ஏத்தியேயென்னுள்ள நிற்குமாலெப்பொழுது
மாத்தனிவெண்கோட்டு மதமுகத்துத் - தூத்தழல்போற்
செக்கர்த்திருமேனிச் செம்பொற்கழலங்கை
முக்கட்கடாயானை முன். (கக)

முன்னிளங்காலத்திலேபற்றினேன்வெற்றிமீனுயர்த்த
மன்னிளங்காமன்றன்மைத்துனனேமணிநீலகண்டத்
தென்னிளங்காய்களிறேயிமையோர்சிங்கமேயுமையா
டன்னிளங்காதலனேசரணாவுன்சரணங்களே. (கஉ)

சரணுடையேனென்று தலைதொட்டிருக்க
முரணுடையேனல்லேனுன் முன்னர் - திரணெடுங்கோட்
டண்டத்தானைப்புறத்தா ளானைமுகத்தானமரர்
பண்டத்தான்றாள்பணியாப் பண்டு. (கங)



பண்டந்தமாதனைத்தாமென்றினியனவேபலவுங்
கொண்டந்தநாள்குறுகாமைக்குறுகுவர்கூருணர்விற்
கண்டந்தநீண்முடிக்கார்மதவார்சடைக்கற்றையொற்றை
வெண்டந்தவேழமுகத்தெம்பிரானடிவேட்கையரே. (கச)

வேட்கைவினைமுடித்து மெய்யடியார்க்கின்பஞ்செய்
தாட்கொண்டருளு மான்சேயை - வாட்கதிர்கொள்
காந்தாரமார்பிற் கமழ்தார்க்கணபதியை
வேந்தாவுடைத்தமரர் விண். (கரு)

விண்ணுதலுங்கியவிண்ணுமண்ணுஞ்செய்வினைப்பயனும்
பண்ணுதலுங்கடனென்பர்மெய்யன்பர்கள்பாய்மதத்தீ
கண்ணுதலுங்கியநஞ்சமுண்டார்கருமாமிடற்றுப்
பெண்ணுதலும்பிரியாவொருபாகன்பெருமகனே. (கசு)

பெருங்காதலென்னோடு பொன்னோடைநெற்றி
மருங்காரவார்செவிகள் வீசி - யொருங்கே
திருவார்ந்தசெம்முகத்துக் கார்மதங்கள்சோர
வருவான்றனுருவம் வரும். (கஎ)

வருகோட்டருபெருந்தீமையுங்காலன்றமரவர்க
ளருகோட்டருமவராண்மையுங்காய்பவன்கூர்ந்தவன்பு
தருகோட்டருமரபிற்பத்தர்சித்தத்தறியனையு
மொருகோட்டிருசெவிமுக்கட்செம்மேனியவொண்களிறே. ()

களியானைக்கன்றைக் கணபதியைச்செம்பொ
னொளியானைப்பாரோர்க் குதவு - மளியானைக்
கண்ணுவதுங்கைத்தலங்கள் கூப்புவதுமற்றவன்ற
ணண்ணுவதுநல்லார் கடன். (ககூ)

நல்லார்பழிப்பிலெழிற்செம்பவளத்தைநாணநின்ற
பொல்லாமுகத்தெங்கள்போதகமேபுரமூன்றெரித்த
வில்லானளித்தவிநாயகனேயென்றுமெய்ம்மகிழ
வல்லார்மனத்தன்றிமாட்டாளிருக்கமலத்திருவே. (உய)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

## கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

# சிவபெருமான்றிருவிரட்டைமணிமாலை.

அந்திமதிமுகிழா னந்தியஞ்செக்கிறத்தா
னந்தியேபோலு மவிர்சடையா - னந்தியிற்
றூங்கிருள்சேர்யாமமே போலுஞ்சுடுநீற்றான்
னீங்கிருள்சேர்நீல மிடறு. (௧)

மிடற்றாழ்க்கடனஞ்சம் வைகின்றஞான்றுமெல் லோதிநல்லா
மடற்றாமரைக்கைகள்காத்திலவேமழுவாளதனை [ண்
விடற்றாதையையன்றுதாளெறிந்தார்க்கருள்செய்தகொள்கைக்
கடற்றாழ்வயற்செந்நெலேறும்வெண்காட்டெங்கரும்பினையே.

கருப்புச்சிலையநங்கன் கட்டழகுசுட்ட
நெருப்புத்திருநெற்றி நாட்டந் - திருச்சடைமேற்
றிங்கட்புனலுந் திரள்பொற்றிருமேனி
யெங்களுமையோ ரிறைக்கு. (௩)

இறைக்கோகுறைவில்லையுண்டிறையேயெழிலாரெருக்கு
நறைக்கோமளக்கொன்றைதன்னுஞ்சடைமுடி நக்கர்சென்னி
பிறைக்கோர்பிளவும்பெறுவிளிக்கொண்டெம்பிரானுடுக்குங்[ப்
குறைக்கோவணமொழிந் தாற்பின்னையேதுங்குறைவில்லையே.

இல்லைபிறவிக் கடலேறவின்புறவின்
முல்லைகமழு முதுகுன்றிற் - கொல்லை
விடையானைவேதியனை வெண்மதிசேர்செம்பொற்
சடையானைச்சாராதார் தாம். (௫)

தாமரைக்கோவுநன்மாலும்வணங்கத்தலைப்பிடத்தாத்
தாமரைக்கோவணத்தோடிரந்துண்ணினுஞ்சார்ந்தவர்க்குத்
தாமரைக்கோமளத்தோடலகாளத்தருவர்கண்டீர்
தாமரைக்கோமளக்கைத்தவளப்பொடிச்சங்கரரே. (௬)



சங்குகோளென்னுவரே பாவையனார்தம்மங்கம்
பங்குபோய்நின்றாலும் பாய்கலுழிக் - கங்கை
வரியராப்போலும் வளர்சடையாய்நின்போற்
பெரியராவாரோ பிறர். (௭)

பிறப்பாழ்க்குழியிடைவீழ்ந்துலைவேற்குநின்பேரருளின்
சிறப்பார்திருக்கைதரக்கிற்றியேதிரியும்புரமூன்
றறப்பாயெரியுறவான்வரைவில்வளைத்தாயிரவாய்
மறப்பாவரியராவிடைக்கோத்தவைவானவனே. (௮)

வானமணிமுகடா மால்வரையேதூணாக
வானபெரும்பா ரரங்காகக் - கானகத்தி
லம்மாமுழவதிர வாடும்பொழுதாரு
ரெம்மானுக்கெய்தா திடம். (௯)

இடப்பாகமுமுடையான்வரையீன்றஇளவஞ்சியன்ன
மடப்பான்மொழியென்பர்நின்வலப்பாகத்துமான்மழுவும்
விடப்பாசனக்கச்சுமிச்சைப்படநீறணிந்துமிக்க
கடப்பார்களிற்றுரிகொண்டெங்குமூடுமெய்கண்ணுதலே. (௧௦)

கண்ணிவிளம்பிறையுங் காய்சினத்தமாகணமு
நண்ணியிருந்தா னலமில்லை - தண்ணலங்கற்
பூங்கொன்றையின்றேன் பொதியுஞ்சடைப்புனிதா
வாங்கொன்றையின்றே மதித்து. (௧௧)

மதிமயங்கப்பொங்குகோழிருட்கண்டவளிண்டவர்தம்
பதியைமங்கச்செற்றகொற்றவில்வானவநற்றவர்க்கு
முதியைமங்கைத்திருவீரட்டவாரிட்டதேனுமுண்டு
கதியைமங்கச்செல்வதேசெல்வமாகக்கருதுவதே. (௧௨)

கருதுங்கருத்துடையேன் கையுடையேன்கூப்பப்
பெரிதும்பிறதிறத்துப் பேசே - னரிதன்றே
யாகப்பிறையா னினியென்னகம்புகுந்து
போகப்பெறுமோ புறம். (௧௩)

புறமறையப்புரிபுன்சடைவிட்டெரிபொன்றிகழுந்
திறமறையத்திருநீறுதுதைந்ததுநீள்கடனுஞ்
சுறமறையக்கொண்டகண்டமுஞ்சாலவுரப்புடைத்தா
லறமறையச்சொல்லிவைத்தையம்வேண்டுமடிகளுக்கே. (௧௪)

அடியோமைத்தாங்கியோ வாடையுடுத்தோ
குடியோம்பமாநிதியங் கொண்டோ - பொடியாடு
நெற்றியூர்வாளரவ நீள்சடையாய்நின்னாமம்
மொற்றியூராக்கிற் றுரை. (௧௫)

உரைவந்துறும்பதத்தேயுள்ளமின்களென்றுயினிப்பா
னரைவந்துறும்பின்னைவந்துறுங்காலனன்முத்திடறித்
திரைவந்துலவுங்கரைக்கேகலம்வந்துறத்திண்கைவன்றூர்
வரைவந்துறுங்கடன்மாமறைக்காட்டெம்மணியினையே. (௧௬)

மணியமருமாமிடற் றம்மான்றன்னை
யணியமரரோடயனு மாலுந் - துணிசினத்த
செஞ்சூட்டசேவற் கொடியானுமாய்நின்று
நஞ்சூட்டவெண்ணியவா நன்று. (௧௭)

நன்றைக்குறுமிருமற்பெருமூச்சுநண்ணுதன்முன்னங்
குன்றைக்குறுவதுகொண்டழியாதறிவீர்செறிமின்
கொன்றைக்குறுநறுங்கண்ணியினான்றன்கொய்பூங்கயிலைக்
குன்றைக்குறுகரிதேனுமுள்ளத்திடைக்கொண்மின்களே. (௧௮)

கொண்டபலிநுமக்குங் கொய்தார்க்குமரர்க்கும்
புண்டரிகமாநிலுக்கும் போதுமே - மண்டி
யுயிரிழந்தார்சேர்புறங்காட் டோரிவாயீர்ப்ப
மயிரிழந்தவெண்டலைவாய் வந்து. (௧௯)

வந்தாறலைக்கும்வலஞ்சுழிவானவவானவர்த
மந்தார்மகுடத்தடுத்தபைம்போதிலந்தேனுழக்கிச்
செந்தாமரைச்செல்விகாட்டுந்திருவடிக்குஞ்செல்லுமே
யெந்தாயடித்தொண்டரோடிப்பிடித்திட்டவின்மலரே. (௨௦)



மலர்ந்தமலர்தூவி மாமனத்தைக்கூப்பிப்
புலர்ந்தும்புலராத போதுங் - கலந்திருந்து
கண்ணீரரும்பக் கசிவார்க்குக்காண்பெளியன்
றெண்ணீர்சடைக்கரந்த தேவு. (௨௧)

தேவனைப்பூதப்படையனைக்கோதைத்திருவிதழிப்
பூவனைக்காய்சினப்போர்விடைதன்னொடும்போற்றநின்ற
மூவனையீருருவாயமுக்கண்ணனைமுன்னுமறை
நாவனைநான்மறவேனிவைநான்வல்லஞானங்களே. (௨௨)

நாணுமென்னல்குரவு நல்கார்தார்பல்கடையிற்
கானிமிர்த்துநின்றிரப்பக் கண்டிருக்கும் - வானவர்த
டம்பெருமானூரெயிலும் வேவச்சரந்துரந்த
வெம்பெருமானென்று வியல்பு. (௨௩)

இயலிசைநாடகமாயெழுவேலைகளாய்வழுவாப்
புயலியல்விண்ணொடுமண்முழுதாய்ப்பொழுதாகிநின்ற
மயிலியன்மாமறைக்காடர்வெண்காடர்வண்டில்லைமல்கு
கயலியல்கண்ணியங்காரன்பர்சித்தத்தடங்குவரே. (௨௪)

அடங்காதாராரொருவ ரங்கொன்றைதுன்று
மடங்காதலென்வளைகொள் வார்த்தை - நுடங்கிடையீ
ரூரூரன்சென்றக்கா லுண்பலிக்கென்றங்ஙனே
யாரூரன்செல்லுமா றங்கு. (௨௫)

அங்கைமறித்தவராலவியுண்ணுமவ்வானவர்த
டங்கைமறித்தறியார்தொழுதேற்பர்தாழ்சடையின்
கங்கைமறித்தணவப்பணமாசுணக்கங்கணத்தின்
செங்கைமறித்திரவிற்சிவனுடைத்திருநட்டமே. (௨௬)

நட்டநீயாடும் பொழுதத்துநல்லிலயங்
கொட்டக்குழித்தொழிந்த வாகொல்லோ - வட்டக்
கடுங்குன்றமால்யானைக் காருரிவைபோர்த்த
கொடுங்குன்றபேயின் கொட்டு. (௨௭)

கொடிறுமுரித்தனன் கூருளனல்லன் குருகினஞ்சென்
றிடறுங்கழனிப்பழனத்தரசையெழில்விமையோர்
படிறுமொழிந்துபருகக்கொடுத்துப்பரவைநஞ்ச
மிடறுதடுத்ததுவும்மடியேங்கள்வினைவசமே. (௨௮)

விதிகாந்தசெய்வினையேன் மென்குழற்கேவாளா
மதுகாமேயெத்தனைக்கு வந்தாய் — கதிகாந்த
கொட்டுக்காட்டான்சடைமேற் கொன்றைக்குறுந்தெரிய
லொட்டுக்காட்டாய்சுழல்வாய் தொக்கு. (௨௯)

தொக்குவருங்கணம்பாடத்தொன்னீறணிந்தேகிலவு
நக்குவருங்கண்ணிசூடிவந்தார்கரும்புன்னைமுன்ன
மக்குவருங்கழிக்கானலையாறரைக்காணவன்பு
மிக்குவருமற்றும்போதரைக்காண்டலும்வெள்குவனே. (௩௦)

வெள்காதேயுண்பலிக்கு வெண்டலைகொண்டூர்திரிந்த
லெள்காரோவானவர்களெம்பெருமான் — வள்கூர்
வடதிருவீரட்டானத் தென்னதிகைமங்கைக்
குடதிருவீரட்டானங் கூறு. (௩௧)

கூறுபெறுங்கன்னிசேர்கருங்கூந்தல்கன்னொறுத்துக்
கீறுபெறுந்திருமேனிநெருப்புப்புரைபொருப்பொத்
தாறுபெறுஞ்சடையங்கொன்றையந்தேனுவலைசிந்த
வீறுபெறுஞ்சென்றுசென்றெம்பிரானுக்குவெண்ணிறமே. (௩௨)

நிறம்பிறிதாயுண்மெலிந்து நெஞ்சுருகிவாளா
புறம்புறமேநாள்போக்கு வாளோ — நறுந்தேன்
படுமுடியாப்பாய்நீர் பரந்தொழுகுபாண்டிக்
கொடுமுடியாயென்றென் கொடி. (௩௩)

கொடிக்குலவும்மதிற்கோவலூர்வீரட்டகோளரவம்
பிடிக்கிலவம்முடிப்பூணலையத்தொடுமால்விடையி
வடிக்குரல்கேட்டிடுமென்றிறுகக்கடிவாளெயிற்றுக்
கடிக்கலுறுமஞ்சிநஞ்சமிருந்தநின்கண்டத்தையே. (௩௪)



கண்டநிறங்கறுப்பக் கவ்வைக்கருங்கடனஞ்
சுண்டல்புரிந்ததுவு முற்றமற்றுத் — தொண்டைக்கா
கூசவோசுற்றறைக் குறுகுவதோதிக்கொடுமை
பேசவோமற்றொருவர் பேச்சு. (௩௫)

பேய்ச்சுற்றம்வந்திசைபாடப்பிணையிக்காட்டகலே
தீச்சுற்றவந்தாடின்றுடைகொன்றையுமெய்ப்புரப்பொழுதும்
கோச்சுற்றமாக்குடைவானவர்கோனயன்மாண்முதலா
மூச்சுற்றம்வந்திறைஞ்சத்திருப்பொற்சடைமன்னவனே. (௩௬)

மன்னும்பிறப்பறுக்கு மாமருந்தாவாரக்கன்
மன்னைந்துசுடர்முடிக டோளெரியத் — தன்னைத்
திருச்சத்திமுற்றத்தான் சிந்தத்துள்வைத்தான்
திருச்சத்திமுற்றத்தான் தேசு. (௩௭)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

# சிவபெருமான்றிருவந்தாதி.

---

ஒன்றுமுதலாக நூற்றளவுமாண்டுகள்வாழ்ந்
தொன்றுமதித் துயிலாயுள் — பொன்று
மதியாதகூற்றுதைத்த சேவடியானையஞ்சு
மதியாற்பணியக்க மால். (௧)

மாலையொருபாண் மகிழ்ந்தானைவண்கொன்றை
மாலையொருபான் முடியானை — மாலை
யொளியானைத்தமனை யன்றறுத்தகன்று
சொளியானையேத்தி யாமா. (௨)

உளமால்கொண் டோடி யொழியா தியாமு
முளமா கிலேத்தாவா றுண்டே - யுளமாசற்
றங்கமலமில்லா வுடல்வெள்ளே றூர்ந்துழலு
மங்கமலவண்ண னடி. (௩)

அடியார்தமாருயிரை யட்டழிக்குங் கூற்றை
யடியாலுருவாகச் செற்று - மடியார்த
மந்திரத்தாலேத்தி யகங்குழைந்துமெய்யரும்பி
யந்தரத்தார் சூடு மலர். (௪)

அலராருங்கொன்றை யணியலாரூரர்
கலராகியானு மணிவ - னலராதி
யோதந்தானெட்டிசைசே றோதவன்யாதேனுங்கொலிசீ
ரோதத்தானஞ்சடையா னூர். (௫)

ஊருமெதருவியூ ருங்கண்டஞ்சொண்டலையே
யூரும்விடையெம்ப னுடைத்தாலே - யூரும்
படநாகமட்டார் பணமாலையீதோ
படநாகமட்டார் பரிசு. (௬)

பரியானையூராது பைங்கணேறூரும்
பரியானைப்பாவிக்க லாகா - பரியானைக்
கட்டங்கமேந்தியாக் கண்டுவாழ்நன்னெஞ்சே
கட்டங்கமேந்தியாக் கண்டு. (௭)

கண்டங்கரிய னுமைபாலுந்தன்பாலுங்
கண்டங்கரியன் கரிகாடன் - கண்டங்கள்
பாடியாட்டாமே பரஞ்சோதிக்கென்னுள்ளம்
பாடியாக்கொண்ட பதி. (௮)

பதியார்பழியிராப் பைங்கொன்றைதாவென்
பதியான்பலரா லிரக்கப் - பதியாய
வம்மானார்கையார் வளைகவர்ந்தாரஃதேபோ
லம்மானார் கையா ரறம். (௯)



அறமானநோக்கா தநங்கனையுஞ்செற்றங்
கறமாநஞ்சுண்ட வரத - னறமான
வோதியான்பாக மமர்ந்தானுயர்புகழே
யோதியான்றேற்றே னொளி. (௧௰)

ஒளியார்சுடர்மூன்றுங் கண்மூன்றாக்கொண்டு
கொளியானுலகெல்லா மேத்தும் - கொளியாய
கன்றேற்றுங்கொன்றையான் காப்பிகந்தானன்னெஞ்சே
கன்றேற்றுங்கொன்றை கடிது. (௧௧)

கடியரவர் * குதிதாடுகோயில்
கடியாரவரிசைய தமோர் குலம் - கடியரவ
ராலேற்றூர்க்காட்டா - நெஞ்சமேயஞ்சலி
யானேற்றூர்க்காட்டட்டேம் யாம். (௧௨)

யாமானநோக்கா தலர்கொன்றைத்தார்வேண்ட
யாமானங்கொண்டங் கலர்ந்தார் - யாமாவா
வாரூராரூரு மழகாவனவாடி
யாரூரார்க்கென்னுரைக்கோம் யாம். (௧௩)

யானென்றங்கண்ணுற மலையாளைக்கம்புகுந்து
யானென்றங்கையறிவுங் குன்றுவித்து - யானென்றங்
கார்த்தானேயாயிடுற மம்பரன்மேலங்கொன்றை
யார்த்தானேயுய்வ தரிது. (௧௪)

அரியாரும்பூம்பொழில்சூழ் மாமாத்தரம்மா
னரியாரும்பாகத் தமுத - னரியாரும்
வேங்கடத்தமேயானை மேவாதவியெல்லாம்
வேங்கடத்துக்கோரால் வியந்து. (௧௫)

வியந்தாழிநன்னெஞ்சே மெல்லியலார்க்காளாய்
வியந்தாளையுஞ்செய்ய வேண்டா - வியந்தாய
கண்ணுதலாவொன்றைக பாலிகழுமிடிப்பூக்
கண்ணுதலானம்பாற் சீடன். (௧௬)

கடனாகமேரந்த நாரணன்றாங்கலக
கடலாகக்கேவர்ந்த வாறும் - கடனாகப்
பாரிடந்தான்மேவிப் பயின்றும்பாருந்தேடி
பாரிடந்தான்மேயாய் பணி. (௧௭)

பணியாயமடநெஞ்சே பஞ்சவடியான்பாதம்
பணியாதபத்தர்க்குச் சேயன் - பணியாய
வாகத்தான்செய்ததே யெம்மையமரர்கோ
னாகத்தான்செய்யு மரன். (௧௮)

அரன்காயனைவேற் கரங்கவேளம்பு
மரன்காயுயர்வியுமற் றந்தோ - வரங்காய
வெள்ளில்சேர்காட்டாடி வேண்டான்களிறன்ட
வெள்ளில்போன்றன்றாம் வெறிது. (௧௯)

வெறியானையூர்வேந்தர் பின்செல்லும்வேட்கை
வெறியார்பூந்தாரான் விமலன் - வெறியார்ந்த
மல்லனேறுய்நீர்க்கு மருமருந்தாமாரூர்க்கோ
வல்லனேறெனஞ்சே யயன். (௨0)

அயமாறுன்றடர்வ நாணதனாதனா-
யயமாவதானேறா ராரு - நயமாய
வென்னாக்கன்றுஞ்சடைய விற்றனெரியாடி
யென்னாக்கன்றுமு மிவள். (௨௧)

இழுமிவளையுங் கையல்வாற்றேனென்
றழுமிவளை யயராதே - யாழுந்
சலமுடியாய்காசனே சூங்கக்குறையாய்
சலமுடியாதின்றருளேற் தார். (௨௨)

தாராயதண்கொன்றை யானிரப்பத்தானிதனைத்
தாராதேசங்கஞ் சரிவித்தான் - ஆராவல்
லானைமேல்லவ்வு மணிவயலாரூர்க்கோனல்
லானையும்வாளேறூர்க் கரசு. (௨௩)



ஆர்சுமையாளிக்கு மாட்பட்டார்க்கமர
ரார்சுமைமேல்வொன்று மாறுங் - கரசுமா
ஞார்கிவெயிர்த்தா னெருஞ்செவிக்கின்ப
ஞார்கிவெயித்தா னுரு. (௨௪)

உருவேயென்சொற்க ளொளிகளினின்றாலாந்
திருவேதியுற்றனக ளெல்லா - முருவேபோய்க்
காவாலிதார்கினந்து கைசேர்ந்துமெய்ம்மறந்தாள்
காவாலிதாவின் கலி. (௨௫)

கலிகாயிலேனர்காயின் கைவிளகன்காயின்
கலிசேர்நதவீர்நான் காயின் - கலியாய
பான்மதியன்பண்டரங்கன் பாரோம்புநான்மறையன்
பான்மதியன்போர்த்தான் பலிக்கு. (௨௬)

பலிக்குத்தலையேந்திப் பாரிடங்கள்சூழப்
பலிக்குமனைப்புகுந்த பாவாய் - பலிக்குநீ
மையம்பெய்யென்றாலுங் கையம்பெய்யின்றேனம்
மையம்பெய்தானங்கே யுய்ந்து. (௨௭)

ஆயமழிய வலர்கொன்றைத்தார்வேண்டி
யாயமழிய வயர்வேன்மே - லாயன்வாய்த்
தீங்குழலுந்தென்றலுந் தேய்கோட்டிளம்பிறையுந்
தீங்குழலுமென்னையே தேர்ந்து. (௨௮)

தேரோன்கதிரொன்றுஞ் செந்தழலால்வெந்தெழுபேய்த்
தேரோன்கதிரொன்றுஞ் செய்பொருணீ - தேராதே
கூடற்காவாலி குரைகழற்காகன்னெஞ்சே
கூடற்காவாலிதரக் கூர். (௨௯)

கூராலமேயாக் குருகோடுகைவேற்குக்
கூரார்வெய்யகையார்க்காப் கொல்லாமே - கூரார்
பனிச்சங்காட்டார்சடைமேற் பான்மதியைப்பாம்பே
பனிச்சங்காட்டாய்கடிக்கப் பாய்ந்து. (௩0)

பாயும்விடையூர்தி பாசுபதன்வந்தெனது
பாயிற்புகுதப் பணைமுலைமேற் - பாயலனாக்
கொன்றாய்குளிர்சடையாற் கென்னிலைமைகூறாதே
கொன்றாயிதுவோ குணம். (௩௧)

குணக்கோடிகோடாக் குளிர்சடையான் வில்லின்
குணக்கோடிக் குனாற்குழும் போகக் - குணக்கோடித்
தேரிவில்வாரான் செறுகாளாஞ்சிந்தனையே
தேரிவில்வாழுந் திறம். (௩௨)

திறங்காட்டுஞ்சேயான் திருவிளையாத்தான்றன்
திறங்காட்டுந்தீயன்னான் சென்றுந் - திறங்காட்டி
ஊராவமார்த்தாடு மென்னையுடன்கட்டி
ஊராவஞ்சால வுடைத்து. (௩௩)

உடையோடுகோடாடி யூராயரூன்னி
யுடையாடைதோல்பொடிசந் தென்னே - யுடையானை
யுன்மத்தகமுடிமே லாய்த்தானைநன்னெஞ்சே
யுன்மத்தகமுடிமே லாய். (௩௪)

உய்யாதென்றலி யொளிவளையுமேகலையு
மெய்யாதுடம்பதிக்கு மொன்றிடுதலை யுய்யா
யிறையானேயீசனே யெம்மானேநின்னை
யிறையாறுங்காண்கிடா யின்று. (௩௫)

இன்றியாமுற்ற விடருமிருந்துயரு
மின்றியாந்தீர்து மெழிநெஞ்சே - யின்றியாங்
காட்டானஞ்சேற்றான் காமருவெண்காட்டான்
காட்டானஞ்சேற்றான் கவந்து. (௩௬)

கலம்பெரியார்க்காஞ்சிரங்காய் வின்மேருவென்றுங்
கலம்பெரியவாற்கி திருக்கை - கலம்பிரியா
மாக்கடனஞ்சுண்டார் கழலொழுவார்க்குண்டாமோ
மாக்கடனஞ்சேரும் வகை. (௩௭)



கையாறவாய்பிதற்றி யச்சங்குறிகாமக்
கையாறுசெஞ்சடையான் காப்பென்றுங் - கையாறு
மற்றிரண்டதோளானைச் சேர்நெஞ்சேசேரப்போய்
மற்றிரண்டதோளான் மனை. (௩௮)

மனையாய்ப்பலிக்கென்று வந்தான்வன்காமன்
முனையாசறச்செற்ற வாகேறன் - மனையாய
வென்பாவாவென்றேநுங் கியானல்லேனிருவே
யென்பாவாயென்று விறை. (௩௯)

இறையாயவெண்சங் கிவைதருவேனென்று
மிறையாகமின்றுருகா வென்று - மிறையாய்
மறைக்காட்டாய்மாதவனே நின்றுருவமிங்கே
மறைக்காட்டாயென்றுமிம் மாது. (௪0)

மாதரங்கந்தன்னாரங்கஞ் சேர்த்திவளார்சடைமேல்
மாதரங்கச்சங்கைநீர் மன்றுவித்து - மாதரங்கத்
தேராநேயூரான் செற்காளாஞ்சிந்தனையே
தேராநேயூரானைத் தேர். (௪௧)

தேருமிலாரென்றுவார் காவிரிவந்
தேருமருவிற் சிராமலையான் - றேரமர்க்கட்
செற்றுமதின்மூன்றெரித்தான் சேவடியேயாம்பரவிச்
செல்லுமெழிநெஞ்சே தெளி. (௪௨)

தெளியாய்மடநெஞ்சே செஞ்சடையான்பாதந்
தெளியாதார்நெறிக்கட் செல்வர் - தெளியாய
பூவார்சடைமுடியான் பொன்னடிக்கேயேத்தினவாற்
பூவாயவாசம் புனைந்து. (௪௩)

புனைகடற்குப்பொன்னொடுக்கும் பூம்புகார்மேயான்
புனைகழிக்கைமாலைப் புரானவன் - புனைகடத்து
நட்டங்கமாட்டியருநம்பன் திருநாம
நட்டங்கமாட்டினே னாக்கு. (௪௪)

கண்ணுதலாரு நகைகொண்டாரூர்
கொன்றைவக்கணியா ரமென்ன - கன்றுவையாம்
வண்டார்பூங்கொன்றையரா மாலையணிந்தானமக்கன்றாய்
வண்டாழுங்கொண்டான் மதி. (௪௫)

மதியாலமின்று தெள்ளுமால்கூடு
மதியாநேதைதாரப மென்று - மதியாதே
மாதெய்வமேற்று மறைக்காடாவிதமெனா
மாதெய்வங்கொண்ட வனப்பு. (௪௬)

வனப்பார்த்திறம் வரிவண்டூராரும்
வனப்பார்வளர்சடையானா கொன்ன - வனப்பூழ
கடற்றிரையார்குமிக் கன்றுவாய்
கடற்றிரையார்குருங் கன்று. (௪௭)

கன்றுமிகன்னெஞ்சே கன்றுதலார்க்காளாய
கன்றார்களிற்றுரிபோல் காட்டக் - கன்றேறு
டம்பட்டகாட்டத்த வென்னையுந்தன் றொரா
வுடம்பட்டகாட்ட வுரு. (௪௮)

உருவியலுஞ்செம்பவள மொன்றுருடம்பு
உருவியலுஞ் சூல முடைய - வுருவிய
மால்வேற்றுன்முகனு மன்றேறுவின்றும்பொய்
மால்வெற்றுர்தீர்த்த வடிவு. (௪௯)

வடிவார்தப்பொங்கு வெண்ணெக்கற்சுத்தி
வடிவார்வடம்புனைந்தும் பொல்லா - வடிவார்வேன்
முக்கடவுள முருகருக்கொன்றையந்தார்
முக்கடமாட்டா முடி. (௫0)

முடிகலந்தேர்காளைப்பேர் முக்கணனென்று
முடிகலந்தோர்மொய்சடையா னென்று - முடிகலந்தேர்
மாதேவாவென்று வளர்கொன்றைவாய்சோர
மாதேவா சோரல் வினை. (௫௧)



வினையாடியோடகல மறந்தானென்னும்
வினையாமிகன்னெஞ்சே காணில் - வினையாழி
வன்னெஞ்சைக்கண்டமரர் வாய்சோரவக்கெழிந்த
வன்னெஞ்சகண்டன் வழி. (௫௨)

வரிசிலைவண்டம்பு மாமறைக்காட்டுமீழ்
வரிசிர்வலம்புரிசூழ்ந்து - வரிசி
ரிடமனன்மேன்மலர்கொண் டின்றுசெய்தா
ளிடமனன்மேனி யெமக்கு. (௫௩)

ஆக்கரம்மாடல காளையுவைதோள்பொற்சார்
சக்கரச்சீர்க்கை யடியேற்கு - வக்கரம்
பண்டரங்கனென்னைப் பயிலுஞ்சேர்வெங்காட்டுப்
பண்டரங்கனென்கன பலன். (௫௪)

பலகடியார்வின்னேர் பகலோனப்பதிப
பலருஞ்சேராமுதம் பெண்ணை - பலருஞ்சேர்
காலக்கரத்தி பவனேசரிகாட்டி
சாதலக்கேயாத்திரன் காண். (௫௫)

காணலாம்வினைப கருதிக்கவலாதே
காணக்கையாற்றொழுதுன்னெஞ்சே - காலனிலை
பாவனையாய்நின்றான் பயிலும்பரஞ்சோதி
பாவனையாய்நின்ற பதம். (௫௬)

பதங்கவளையயர்ந்தான் பான்மகிழ்ந்தான்பண்டு
பதங்கனெயிறு பறித்தான் - பதங்கயர்
லஞ்சலிகள்பாலு மாக்குதிமெனெஞ்சேகூர
நஞ்சலிகொள்யாலி மாக்கு. (௫௭)

ஆக்கூர்ப்பனிவாடா வாயிசோர்ந்தாழ்விண்ணே
அக்கூரலர்தானுமிதா - வாக்கூர்
மறையோம்புமாடத்து மாமறையோர்நான்கு
மறையோம்புமாதவர்க்காய் வந்து. (௫௮)

வந்தியாய் நின்று மாழ்கிமட நெஞ்சே
வந்தியா யுள்ளத்து வைத்திராய் - வந்தியாய்
நம்பானை யாறு கவிர்புன் சடையானை
நம்பானைக் காட்டோறு நட்டு. (௯)

நட்டமா நின்றன வோசங்கக் கானல் வம்பால்
கட்டமா மன்னீர்மை வாடினேன் - நட்டமா
வயானெரியாடு மெம்மா னிருங்கொன்றை
வீயானே யுய்வ திலம்.  (௧0)

இலமலருஞ் செவ்வடியா ரேகப்பெறுசே
இலமலரே யாயினுமாக - விலமலரு
மாம்பல்சேர் செவ்வாயார்க் காடாதேயாடினே
னம்பல்சேர் வெண்டலையர்க் காள். (௧௧)

ஆளானுஞ் சேர்வினைச் சேருமடன்மாவு

காடகங்களாட்டயரு நம்பன் திருநாம
நாடகங்களாடி நயந்து. (௧௨)

நயந்தநாள் வாளிடப்ப நற்சடையான் கொன்றை
நயந்தநா மன்னீர்மை வாட - நயந்தநர
னம்பகனுஞ் செற்று னருளானதங்கவே
னம்பகைப்பாய மலர்ந்து. (௧௩)

அலங்கார மாடாவை மெய்படுதோலாடை
யலங்கார மெய்யைத் தழுக - வலங்கார
மெய்காட்டுங் கீர்த்துள்ளார் மெய்யுள்ளா ரென்னேற்றுன்
மெய்காட்டு மிட்டாம் விரைந்து. (௧௪)

விளையார் புனற்கங்கை சேர்சடையான் பொன்னூர்
விளையார் பொழிற்றில்லை மேயான் - விளையானீ
தென்பணிந்தாளை விளையாடெரியாடி
யென்பணிந்தாளை னெனக்கு. (௧௫)



எனக்குவமை யில்லா வெழில்வீழ் தேனென்று
மெனக்குவமை யில்லாகோட் செய்தா - னெனக்குவமைக்
கண்டத்தானல்லைதன் காரொளித்தெம்மானைக்
கண்டத்தா னெஞ்சேதாக் கை. (௧௬)

காக்கைவினையென்பார்ப்பார்க் கன்பாய்பாகையாதே
காக்கைவினை யென்பாரப்பா னூர்நாக்கும் - காக்கைவினை
யாடாதே யிருநிய ஞான்பெருவீர்சடைய
னாடாதேயான தமைவு. (௧எ)

அமையாமென் றேன்மெளிவிக் தம்மானைக் கொண்டிகு
மமையாதோர் செய்தா னங்கே - யெமையாளுந்
தாமத் தகண்டன் சடைசேர்வயிறையவர்
காமத்தொனிக்கோய்ச் செய்தான். (௧அ)

தானக்கனக்க பிறைபான்பிறைக் கோட்டுத்
தானக்களிறுரியான் றன்புறனென் - றுனத்
துறையானவனாய் நூபிறைக்குமாற்று
மறையுறைடையா னருள். (௧௯)

அருளம்பாற் செஞ்சடைய னுமைத் தாமரைக்
கருளம்பா லர்க்கு மருத - வருளம்பா
லொளாறுதிரத்தா வெயிறட்டவத்தமனை
யொள்நாறுநெஞ்சே யுய. (௨0)

வையாக மைவர்கொன்று செத்தமனையுள்ளி
வையாமனைமிறும் வேட்கை - யுவவா
மெழுமதிபோல்வான் முகத் தீசனுக்கென்னே
யெழுமதிபோவீச னிடம். (௨௧)

இடமால்வலமாலே வன்னமே தம்ப
மிடமால்வலமானைத் சேர்த்தி - யிடமாய
நூபாமதியுமாயு முன்னிளக்குமொய்சடையான்
றூகைமதியான் முனி. (௨௨)

முனிவன்மால்செஞ்சடையான் முக்கணானென்று
முனிவன்மால்செய்தருமுன் விற்கு - முனிவன்மால்
போற்றுநர்புரமெரித்த புண்ணியன்றன்பொன்னடிகள்
போற்றுநாளின்று புலர்ந்து. (எங)

புலர்ந்தால்யானுய்வேனன் புறநானையமஃதே
புலர்ந்தானூர்புன்கூரா னென்றும் - புலர்ந்தாய
மண்டளியனம்மா னவர்தம்மடியர்தம்
மண்டளியன்பின்போ மனம். (எச)

மனமாயுகோப்செய்தான் வன்கொன்றைதாரனை
மனமாயவுள்ளார வாரான் - மனமாயப்
பொன்மாலைசேரப் புனைந்தான்புனைதருப்பைப்
பொன்மாலைசேர்சடையான் போந்து. (எரு)

போந்தார்புகலிடந்தார் பொன்னேர்ந்தார்பொன்றுகைம
போந்தாரொழியார் புரமெரித்தார் - போந்தா
ரிலங்கோலவாண்முகத் தீசனுறைகெல்லே
யிலங்கோலநோற்ப தினி. (எசு)

இனியாருமனாக வென்றுவர்கொல்லென்று
னினியானஞ்சுணருக்கைக் குள்ளா - வினியானைத்
தானங்கையாற்பாடித் தாழ்சடையான்றுணையா
தானங்கையாற்றொழுவார் தாம். (எஎ)

தாமரைசேர்நான்முகற்கு மாற்குமறிவரியார்
தாமரைசேர்பாம்பர் சடாமகுடர் - தாமரைசேர்
பாணியார்தீர்த்தவிப்பம்பாரோம்புநான்மறையார்
பாணியார்தீர்த்தளிப்பர் பார். (எஅ)

பார்கால்வானீர்தீப் பகலோனப்புலிமதியம்
பார்கோலமேனிப் பரனடிக்கே - பார்கோலக்
கோகரணத்தானதியக் கூறுதியேனென்னெஞ்சே
கோகரணத்தானுய கோ. (எகூ)



கோப்பாடியோடாதே நெஞ்சமொழிகூத்தன்
கோப்பாடிக்கோகரணங் குற்றாலம் - கோப்பாடிப்
பின்னைக்காய்நின்றார்க் கிடங்கொடுக்கும்பேரருளான்
பின்னைக்காமெம்பெருமான் பேர். (அ0)

பேராணையிருநிலவு போர்த்தானையாயிரத்தெண்
பேராணையிருவம் பெற்றானைப் - பேராநஞ்
சுண்டானையுத்தமனை யுள்காதார்க்கென்றானு
முண்டாநாளல்ல வுயிர். (அக)

உயிராயமூன்றெழுத்தி லையந்தடக்கியுள்ளத்
தயிராயவொண்மலர்த்தா ளூட்ட - யுயிரான்
பகர்மனத்தான்பாசுபதன் பாதம்பணியப்
பகர்மனமேயாசைக்கட் பட்டு. (அஉ)

பட்டாரன்பட்டரங்க னம்மான்பரஞ்சோதி
பட்டாரெலும்பணியும் பாசுபதன் - பட்டார்ந்த
கோவணத்தான்கொல்லேற்ற னென்றென்றுநெஞ்சமே
கோவணத்தநம்பனையே கூறு. (அங)

கூற்றும்பொருளும்போற் காட்டியென்கோல்வினையைக்
கூற்றின்பொருண்முயன்ற குற்றான் - கூற்றின்
செருக்கழியச்செற்ற திவற்கடிமைநெஞ்சே
செருக்கழியாமுன்னமே செய். (அச)

செய்யரன்கருமிடற்றன் செஞ்சடையான்றென்பொழில்சூழ்
செய்யாள்பழனத்தான் மூவுலகுஞ் - செய்யாமு
னாட்டுணையாய்நின்றானை நாடும்போய்நன்னெஞ்சே
நாட்டுணையாய்நின்றானை நாம். (அரு)

நாவாயகத்துளதே நாமமேகம்மீச
னாவாய்போனன்னெறிக்க ணுய்க்குமே - நாவாயாற்
றுய்க்கப்படும்பொருளைக் கூட்டுமற்றவர்க்காட்
செய்க்கப்படுவதாஞ் சூது. (அசு)

குழைதான் அணக்கரியச் செவ்வினனென்னெஞ்சே
குழைதன்சொலக்கிளிய சோரியான் - குழைதின்
கொழுந்தேன் கமழ்சோலைக் குற்றாலம் பாடிக்
கொழுந்தேயிழந்தேன் குருகு. (அஎ)

குருகினவேய்ந்தோண்மெலியக் கொங்கைமார்புற்றிக்
குருகினையாரோடு கொடாமே - குருகுளரும்
போதார்கழனிப் புகலூரமர்ந்துறையும்
போதாரின்பொன்முடிக்கட் போது. (அஅ)

போதரங்கவார்தழலா யென்றவார்தன்னெஞ்சே
போதருங்கீர்த்த புண்ணியனைப் - போதராக்
காணகஞ்சேர்சோதியே நகவினைக்காமின்றுநின்
காணகஞ்சேர்வாழ்வடிமை கல். (அக)

கற்றுணைஞ்சார்கோ வாலிகனம்தக்கோன்
கற்றுணைக்கல்லாத நாவெல்லாம் - கற்று
ணமரர்க்கமர நரக்கடிமைபுண்டா
மமரர்க்கமரர் வார். (கூ0)

ஆவாம்ஜித நதிவிலோயாதொன்று
மாவார்போற்றோட்டி யழிகின்று - நாவா
பகுடிப்பாடிப் படர்சடைக்குப் பன்னூல்
பகுடியேத்தார் பகர்ந்து. (கூக)

பன்னுட்டம்பாட்டயரும் பாட்டோடாட்டெல்லாம்
பன்னுட்டம்பாய்ப்பலிக்கு முசசி - புக்குண்ட
தாம்காணெழுதுவார் தாழ்சடையார் தம்முடைய
வலம்புரிநெடுமா லேனமாகி நிலம்புக்
காற்றவினைகழத் தோற்றாதுயர்ந்து
பத்தியடியவர் பச்சிலையிடினு
முத்திகொடுத்து முன்னின்றருளித்
திகழ்ந்துளதொருபாற் றிருவடியகஞ்சேர்ந்து
மறுவில்கற்பகத் தருதளிர்வாங்கி
நெய்யிற்றோய்த்த செவ்வித்தாகி
நூபுரங்கிடப்பினு நொந்துதேவர்
மடவரன்மகளிர் வணங்குபுவீழ்த்த
சின்னப்பன்மலர் தீண்டிடச்சிவந்து
பஞ்சியுமணிச்சமு மெஞ்சவெஞ்சாத்
திருவொடும்பொலியு மொருபாற்றிருவடி
நீலப்புள்ளி வாளுகிர்வேங்கைத்
தோலின்கலித்த மேல்விரித்தசைத்து
நச்செயிற்றரவக் கச்சையாப்புறுத்துப்
பொலிந்துளதொருபாற் றிருவிடையிலங்கொளி
யரத்தவாடை விரித்துமீதுடீஇ
யிரங்குமணிமேகலை யொருங்குடன்சாத்திய



மருங்கிற்றிகழு மொருபாற்றிருவிடை
செங்கணரவும் பைங்கணாமையுங்
கேழற்கோடும் வீழ்ந்திளக்கு
நாட்குறுநூலு மிடங்கொண்டுபுனைந்து
தவளநீறணிந்ததோர் பவளவெற்பென்ன
வொளியுடன்றிகழு மொருபாலாகம்
வாரும்வடமு மேர்பெறப்புனைந்து
செஞ்சாந்தணிந்து குங்குமமெழுதிப்
பொற்றாமரையின் முற்றாமுகிழென
வுலகேழீன்று நிலையிற்றளரா
முலையுடன்பொலியு மொருபாலாக
மயில்வாயரவம் வயின்வயினணிந்து
மூவிலைவேலும் பூவாய்மழுவுந்
தமருகப்பறையு மமர்தரத்தாங்கிச்
சிறந்துளதொருபாற் றிருக்கரஞ்செறிந்த
சூடகம்விளங்கிய வாடகக்கழங்கு
னும்மென்பந்து மம்மென்கிள்ளையுந்
தரித்தேதிகழு மொருபாற்றிருக்கர
மிரவியுமெரியும் விரவியவெம்மையி
னொருபால்விளங்குந் திருநெடுநாட்ட
நவ்விமானின் செவ்வித்தாகிப்
பாலிற்கிடந்த நீலம்போன்று
குன்றுநேர்க்குவளையிற் குளிர்ந்துநிறம்பயின்
றெம்மனோர்க்கடுத்த வெம்மைநோய்க்கிரங்கி
யுலகேழ்புரக்கு மொருபானாட்ட
நொச்சிப்பூவும் பச்சைமத்தமுங்
கொன்றைப்போது மென்றுணைத்தும்பையுங்
கங்கையாறும் பைங்கட்டலையு
மரவுமதியமும் விரவித்தொடுத்தச்
சூடாமாலை சூடிப்பீடுகெழு
செஞ்சுடர்ச்சோதியிலைய வருக்கினாசடிலமொடு

நான்முகங்கரந்த பானிறவன்னமுங்
காருவண்ணனுங் கருத்தையுங்கடந்து
சேணிகந்தன்றே யொருபாற்றிருமுடி பேணிய
கடவுட்கற்பின் மடவரன்மகளிர்
கற்பகவனத்துப் பொற்பூவாங்கிக்
கைசெய்துபுனைந்த தெய்வமாலை
நிலக்குமுன்பிசை வண்டிமிர்வந்து
வண்டுந்தேனுங் கிண்டுபுதிளைப்பத்
திருவொடுபொலியு மொருபாற்றிருமுடி
யிளையவளனைத்து நினைவருங்காட்சி
யிருவயினுருவு மொருவயிற்றாகி
வலப்பாலொட்டிய பீடப்பாற்றிருக்க
வாணுதல்பாக நாணுதல்செய்ய
வலப்பாற்றிருக்கர மிடப்பால்வளைமுலை
தைவந்துவருட மெய்ம்மயிர்பொடித்தாங்
குவகைமேழும் பன்முறைநின்று
மருதிடங்கொண்ட வொருதனிக்கடவுணின்
திருவடிபரவுதும் யாமேமெங்கோ
பிறந்தும்பிறந்து பிணித்தனமதனுந்
சிறைக்கருப்பாசயஞ் சேரா
மதித்தும்புகாஅ வாழ்வுபெறற்பொருட்டே. (க)

வெண்பா.

பொருளுங்குலமும் புகழுந்திறனு
மருளுமறிவு மனைத்தும் - மொருவர்
கருதாவென்பார்க்குங் கறைமிடற்றுத்தொல்லை
மருதாவென்பார்க்கு வரும். (உ)

கட்டளைக்கலித்துறை.

வருந்தேனிறந்தும்பிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன்புகழ்மாமருதிற்
பெருந்தேன்முகந்துகொண்டுண்டுதித்தொண்டரிலாசையினா
லிருந்தேனினிச்சென்றிடவேண்டுவதியாதொன்றுமே. (ங)



நேரிசையாசிரியப்பா.

ஒன்றிரண்டொன்று சென்றுமுகிறடவி
யாடுகொடிநுடங்கும் பீடுகெழுமாளிகை
தெய்வக்கம்மியர் கைம்முயன்றமைத்த
வோவநூற்செம்மைப் பூவியல்வீதி
குயிலெனமொழியு மயிலியலாயத்து
மான்மறவிழிக்கு மாறுச்செல்வத்
திடைமருதிடங்கொண் டிருந்தவெந்தை
சடைமழுவலங்கொண் டிருந்ததோன்ற
லாரணந்தொடராப் பூரணபூரண
காரணனறியாக் காரணக்கடவுள்
சோதிச்சுடரொளி யாதித்தனிப்பொரு
ளேகநாயக யோகநாயக
யானொன்றுணர்ந்தன னதேயான்முன்
னனந்தவுலகத் தனந்தயோனியிற்
பிறந்திறப்பிறவாது கறங்கெனச்சுழன்றுதித்
தோற்றும்பொழுதி னாற்றுத்துணைபத்
தியாயுறுதுயரமு மியானறிதுயரமு
மிறக்கும்பொழுதி னறப்பெருந்துன்பமு
நியலறிந்துளர் யாரேயதனு
லியாக்கையிற்பிறந்த விறந்தோனெனான்
றுற்பவத்துணைந்த துற்பிடித்தல்லது
பிறிதொருநெறியி லில்லையாதலிற்
வேண்டலும்வேண்டாமையு மாண்டொழிந்தபய
வுள்ளமொன்றுடைமை வேண்டுமென்றி
யைம்புலனோவ வாழ்வழிநின்று
நாளெலதொன்காற் றாலெனவிழையு
மிதுவெனத்துள்ள மாறுமெனிற்கொடு
நின்னினைப்ப தெங்ஙனமுன்னரு
முற்பிறவியாகக் கட்டிர்திசின
பெற்பிறநாளேர் விறைவதற்பய

கடத்தலையான்பெறவும் வேண்டுங்கடத்தற்கு
நினைத்தலையான்பெறவும் வேண்டுநினைத்தற்கு
நெஞ்சநெகிழ்கவும் வேண்டுநெஞ்சுபொதி
யுறையெயிற்றரவம் பூண்ட
கறைசெழுமிடற்றெங் கண்ணுதலோயே.

வெண்பா.

கண்ணெனன் றுகந்தமக்கோர் காப்பென்றுங்கற்றிருக்கு
மெண்ணென்னன் றிலமை வெறுத்தென்று - மொண்ணின
மருதவப்பாவென் றுமின வாழ்த்தரேன் மற்றுன்
கருதவப்பா வுண்டோ கதி.

கட்டளைக்கலித்துறை.

கதியாவதுபிறிதியாதொன்றுமில்லைக்களவாரத்தின்
பொதியாவுறங்கன்றான் விழப்போயிதுபோலுமின்னர்
விதியாமெனச்சிலர்சோவதல்லால் விதைவேண்டுமோர்யார்
மதியாவுமருதன்கழற்லசென்றுவாழ்ந்துவதே.

நேரிசையாசிரியப்பா.

வாழ்ந்தனமென்று தாழ்ந்தவர்க்குதவாது
தன்னுயிர்க்கிரங்கி மன்னுயிர்க்கிரங்கா
துண்டிப்பொருட்டாற் கண்டனவெஃகி
யவியுணர்க்குச் சுவைப்கர்ந்தேவி
யாராவுண்டி யயின்றனராகித்
தாராக்குழையத் தார்த்தப்பாரா
விழுப்பமுங்குலனு மொழுக்கமுங்கல்வியுந்
தன்னிற்சிறந்த நன்றூதாளரைக்
கூஉய்முன்னின் றுதன் னேவல்கேட்குஞ்
சிறுஅர்த்தொகுதிக் குருஅப்பேசியும்
பொய்யொடுபுன்மைதன் புல்லர்க்குப்புகன்று
மெய்யுமானமு மேன்மையுமொரீஇத்
தன்னைத்தேதி முன்னையோர்கொடுத்த
நன்மனைக்கிழத்தி யாகியவத்திலைச்
சாவுழிச்சாஅந் தகைமையளாயினு



மேவுழிமேவல் செல்லாதாவியொடு
கொண்டோரொருத்தி யுண்டிவேட்டிருப்ப
வெள்ளருக்கெனன்னைப் போலத்தன்னாது
பொருள்காளைக்குப் போகமீற்றன்று
மருவின்மடந்தைய ராகத்தோய்ந்து
மாற்றலசெல்லாது தேற்றோர்மனைவயிற்
கற்புடைமடந்தையர் பொற்புநலிகெடுப்
பிழைவழிபாராது நுழைவழிநோக்கியு
நச்சிவந்த நல்கூர்மாந்தர்தம்
விச்சையிற்பாட்டத வெவ்வேறாகப்பயி
னைமலர்ந்திளார் போன்முகமலர்ந்
தினிதுமொழிந்தாங் குதவுதலின்றி
கருந்தாறு கான்பலகுறித்தவர்
திருந்திற்றாலுந் தவிர்த்துக்கேளிகழ்ந்
திகழ்ம்பாரு மில்லையென்று
பயயின் நெருஞ்சிப்புட்டுள்ளையிற்றி
யின்னினையத்தன் செல்வத்தைவிரும்பித்
தன்னையுமொருவ ராகவுன்னு
மேனையோர்வாழும் வாழ்க்கையுநனைமலர்த்
திபோசனைகமழு முற்பலக்காவிற்
பாசடைப்பரப்பிற் பானிறவன்னம்
பார்ப்புடன்வெருவப் பகுவாய்வாளை
போர்த்தொழில்புரியும் பொருகாவிரிய
மருதமுஞ்சூழ்ந்த மருதயாண
கருதியுந்தொடாச் சுருதிநாயக
பத்தருக்கெய்ப்பினில் வைப்பெனவுதவு
முத்தித்தான முடையமுதல்வனின்
திருவடிபிழை[illegible]வருள்வால்விட்டு
மக்களும்[illegible]பொக்கமுந்திருவும்
பொரு[illegible]தன்னருளினைநினைக்
கிந்திரச்செல்வமு மெட்டுச்சித்தியும்

வந்துழிவந்துழி மறுத்தனரொதுங்கிச்
சின்னச்சேரா அன்னற்கோவணை
மறுகற்கொளாது பெருவருத்தினக்கு
நிகலோரொடொன்று றுதவுழியெடுத்தாங்
கிடுவோருமரொளி ஊளியின்றயின்று
பசுதரைப்பாயலிற் பள்ளிமேவி யோவாத்
தகவெனுமினைவையத் தழிஇமைவெனப்
பல்லுயிரனைத்தையு மொக்கப்பார்க்குநின்
செல்வக்கூடவுட் கொண்டார்வாழ்வும்
பற்றிப்பார்க்கி னற்றனையேற்குக்
குளப்படிநீரு மளப்பருந்தன்மைப்
பிரளயசலதியு மிருவகைப்பொருளு
மோர்பெயரினுமொவ்வாத் தப்பிற்றுதலி
னின்றிரடியார் தந்திரடியார்க்
கடிமைபூண்டு நெறிகோடாது
முட்டியாகக்கொடு புடைப்பட்டொழுகியவர்
காற்றலையேவலென் றாய்ந்தலையேற்றுக்
கண்டுகாணி னல்லதொன்
றண்டேமற்றெனக் குள்ளதுமிதே. (எ)

வெண்பா.

பிறந்தேனரகம் பிறவாதவன்னை
மதிந்தேனனக்கவே ளம்பிற் - செறிந்த
பொருதவட்டலிற்பிழைத்தப் போந்தேன்புராணன்
மருதவட்டத்தன்னுளோ வந்து. (அ)

கட்டளைக்கலித்துறை.

வந்திக்கண்டாய்படியாரைக்கண்டால்மறவாதநெஞ்சே
சிந்திக்கண்டாயரன்செம்பொற்கழறிருமாமருதைச்
சந்திக்கண்டாயில்லையாயினமன்மதர்தாங்கொடுபோ
புந்திக்கண்டாய்பிரயத்தன்னைவிழுந்தழுக்குவரே. (௯)



நேரிசையாசிரியப்பா.

உழப்பின்வாரா வுறுதிகளுளவோ
கழப்பின்வாராக் கையறவுளவோ அதனால்
நெஞ்சப்புணர்த்து வஞ்சகக்கட்டையை
வேரறவகழ்ந்து போக்கித்தூனைசெய்
தன்பென்பாத்தி கோலிமுன்புற
மெய்யெனுமெருவை விரித்தாங்கையமில்
பத்தித்தனிவித் திட்டிநித்தலு
வத்தெண்ணீர் பாய்ச்சிநேர்நின்று
அங்குரார்க்கடனா இடுக்கண்செய்யும்
பட்டியஞ்சினுக் கஞ்சிபுட்சென்று
சாந்தவேலி கோலிவாய்ந்தபின்
ஞானப்பெருமுளை கட்டாமுளைத்தக்
கருணையிளந்தளிர் காட்டவருதாகக்
காமக்குரோதக் களையறக்களைந்து
சேமப்படுத்துழிச் செம்மையிறோக்கி
மெய்ம்மயிர்ப்புளக முகிழ்த்திட்டமெனக்
கண்ணீரரும்பிக் கடிமலர்மலர்ந்து புண்ணிய
வஞ்செழுத்தருங்காய் தோன்றிக்கருபொறி
காணவுண்டாங் கனியெனுருமளவில்
தோளொருநான்குஞ் சுடர்முகமொருமு
புவனிறம்பெற்றுத் தலைக்கிறுபூரி
பரசுவையமுதின் முழுசுவையுடைத்தாய்க்
காணினுங்கேட்பினுங் கருதினுங்களிதரு
சேணுயர்மருத மாணிக்கத்தீங்கனி
பைப்பையப் பழுத்துக்கைவர
வெம்மனோர் கனிதினருசிச்
செம்மாந்திருப்பச் சிலதினர்வாரா
மனமெனும்புனத்தை வரும்பார்புரக்கின்
காய்க்காடு மூத்திசைமசெய்
ஐம்புலவேடர் கவர்ந்துகொழுக

யின்பப்பெயர்த்தே ரெட்டாதோடக்
கல்லாவுணர்வெனும் புல்லாயுனமர
விச்சைசலித்துக்குத்தழி யாளெனப்பெயரிய
நச்சுமாமர நனிமிசைமுளைத்துப்
பொய்யென்கவடுகள் போக்கிச்செய்யும்
பாவப்பஃறழை பரப்பிப்பூவெனக்
கொடுமையரும்பிக் கடுமையலர்ந்து
துன்பப்பல்காய் தூக்கிப்பின்பு
மரணம்பழுத்து நரகிடைவீழ்ந்து
தமக்கும்பிறர்க்கு முதவா
இம்மைப்பிறக்கழிய மியற்கையொருடைத்தே. (௧௦)

வெண்பா.

உடைமணியிறேசைக் கொடுஞ்சிரவம்
பட்டொடுமகுப்பையலே சென்றான் - இடைமருது
ரையமேமருவி தண்டிவழுபார்மேலதற்கன்
கையம்புகவேண்டிக் கான். (௧௧)

கட்டளைக்கலித்துறை.

காணீர்கதியொன்றுங்கல்லீரெழுந்திருநம்வல்லைவண்ணம்
பேணீர்திருப்பணிபேசீரவன்புகழ்நாளைப்பட்டுப்
பூணீருருத்திரசாதனநீறெங்கும்பூசகிலீர்
வீணீரெளிதோமருதப்பிரான்கழல்மேவுதற்கே. (௧௨)

நேரிசையாசிரியப்பா.

மேவியபுன்மயிர்த் தொகையோவம்மயிர்
பாவியதோலின் பரப்போதோலிடைப்
புகவிட்டுப்பொதிந்த புண்ணிறுபுண்ணிடை
யூறுமுதிரப் புனலோவதுசெய்
இடையிடைநிற்கு மெலும்போவெலும்பிடை
முடைகெழுமூளை விழுதோவழுமுத
லாரிடையெழுமுடை வழும்போமெள்ளநின்
றரும்புழுவின் றொகுதியோகோழிடை
வைத்தமலத்தின் குவையோவவைத்துக்



கட்டியநாமமின் கயிறுருவுடம்பிற்கும்
பிரியாதுருக்கும் பிணியோவெரியா
தின்னாவியவென்றுதியேயென்னை
யென்றுநேதுறவன் யாதிதுவுகாணேன் முன்னம்
வரைத்தனிவில்லாற் புரத்தையழலூட்டிக்
கண்படையாகக் காமனையொருகா
லுண்பொடியாக நோக்கியண்டத்து
வீயாவமரர் வியனகன்றெழுந்த
தீவாய்நஞ்சைத் திருவமுதாக்கி
யிருவர்தேடி யொருவரநிமிர்ந்து
பாலனுக்காகக் காலனைக்காய்ந்து
சந்தனசூனா சண்பகவனுள
நந்தனவனத்திடை நாயிறுவழங்காது
நந்திமணிமுகிழ்த்த புதுவெயிலெறிப்ப
வெண்ணெருங்கோடி யிருடிகளைக்கட்டுப்
புண்ணியப்புரக்கும் பொன்னிசூழ்ந்த
திருவிடைமருதப் பொருவிடையாக
மங்கைபங்க கங்கைநாயகநின்
றெய்வத்திருவருள் கைவந்திடைத்தலின்
மாயப்படலங் கிழித்துய
ஞானநாட்டம் பெற்றபின்யானு
நின்பெருந்தன்மையுங் கண்டேன் கண்டே
னென்னையுங் கண்டேன் பிறரையுங்கண்டே
னின்னிலையனைத்தையுங் கண்டேனென்னே
நின்னைக்காணு மாந்தர்
தன்னையுங்காணத் தன்மையோவிரே. (௧௩)

வெண்பா.

ஓராதேயஞ்செழுத்து முன்றுதேபச்சிலையு
சேராதேநீரு மிடாதே - யாராயோ
வெண்ணுவாருள்ளத் திடைமருதர்பொற்பாத
நண்ணுவாரென்னுமதுநாம். (௧௪)

கட்டளைக்கலித்துறை.

காமமிடைப்புளைவாறறிவாய்ப்பிலிராங்கள்சொல்ல
லாமெமருதஙமருதவனேத்தன்னமன்னவரைப்
பூமேலனிக்குமிறைக்கச்செய்தாவொருபொட்டுமிட்டார்
தாமேதளர்பவரைப்பாரமேற்றுவதுதக்கதன்றே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

ஒன்றினர்புரங்க ளுறவிடையாகிய
குன்றவனேத்தெய்வ குன்றுக்கொற்றத்து
அண்பொடியணிந்த வெள்விடைச்செல்வ
கறையிடத்தினைய வுபரிக்கேசென்றுட்
பின்றசெறிந்தன்ன திருக்கோட்டொருபெயிற்
பாணிறச்செங்கண் மால்விடைப்பாக
சிலைமயச்செங்கோட் டிமையச்செல்வன்
மணிபெறப்பெற்ற வணியியலன்னம்
வெண்ணிறத்திருக்கைக் கிள்ளைப்பிள்ளை
குயிலெனப்பேசு மயிலெனப்பேடை
கதிரொளிநிலம் பொலிந்தமலர்த்த
மதர்விழிசெங்கண் மானின்கன்று
வருமுலைதாங்குந் திருமார்புவல்லி
மையமேரும் பன்முறையின்று
வையதிருவயிற் றம்மைப்பிராட்டி
மறப்பருஞ்செய்கை யறப்பெருஞ்செல்வி
பெண்மையாளுடைய வுமையாளவளை
கட்புட்கதிர் மடவரல்கொழுந
பவளமால்வரைப் பனிக்கைபோர்த்தனைய
தனமுசெவிவெய்வ் பொட்டுவெண்ணூற்
புலாற்குடியிக் கேவலமதாக
மலைவுடைய்ப் பொலிகொல்முகடே
வமார்த்தாக்குழ் குமான்றுரை
பொருளிடங்கொண்ட பொன்னியழகு
மருதிடங்கொண்ட மருதவாண



நின்னதுருத்த முனைதோகின்னினைக்
தென்னுருங்கோடி யிடர்ப்பகைகடிந்து
கன்றுறுமிற்றத்துக் காலனைவதையா
திறப்பையும்பிறப்பையு மிகந்துசிறப்பொடு
தேவராகின் கன்றெனத்திரியாப்
பாவிகடமதே பாவம்யாதெனின்
முறியாப்பெருக்கன் முப்புரங்கலந்த
வாளசைவாய்திலெட்டிவிழிருப்ப
புரியாதொருவன் பரியால்வருமத்தை
வயிறிலிலாகுற்ற மன்றுவெயிலின்வைத்
தாற்றியதெண்ணீர் நாற்பயிட்டிருப்ப
மடாதுவொருவன் விடாதுவேட்கை
தெண்ணீர்க்குற்ற மன்றுகணவன்று
சேர்ந்தனிசெறிப் புற்றணவர்த்துறும்
வாளுகவிடித்த சோலையிட்டிட
வெள்ளிடைவெயிலிற் புண்ணிவயர்பொடிய
வடிபெயர்த் திடுவார்க்கு
னெடுநவருந்துக விழுந்தீங்கன்றே. (கசு)

வெண்பா.

அன்றொன்று மாமென்று மோருசமயங்க
ளொன்றென்றொன் றொவ்வா துரைத்தாலு - மென்று
மொருதனையே நோக்குவா ருள்ளத்திருக்கு
மருதனையே நோக்கி வரும். (கஎ)

கட்டளைக்கலித்துறை.

நோக்கிற்றுக்காமுடல்பொடியாகதுநில்லாத
ருக்கிற்றைக்கன்றமலிழப்படத்தன்சுடர்வடிவா
னோக்கிற்றுத்தக்கன்றலையுருண்டோடச்சலந்தரனைப்
போக்கிற்றுயிர்பொன்னிருமருதூருடைப்புண்ணியமே. ( )

நேரிசையாசிரியப்பா.

புண்ணியபுராதன புனப்பூங்கொன்றைக்
கண்ணிவேய்ந்த கைலைநாயக

காளகண்ட கந்தனைப்பயந்த
வாளிநெடுங்கண் மலையாள்கொழுந
பூதநாத பொருவிடைப்பாக
வேதகீத விண்ணோர்தலைவ
முத்திநாயக மூவர்முதல்வ
பத்தியாகிப் பணைத்தமெய்யன்பொடு
நொச்சியாயினுங் கரந்தையாயினும்
பச்சிலையிட்டுப் பரவுந்தொண்டர்
கருவிடைப்புகாமற் காத்தருள்புரியுந்
திருவிடைமருத திரிபுராந்தக
மூவர்தலையுலகத்துப் பலபலமாக்கண்
மக்களைமனைவியை யொக்கலையொரீஇ
மனையும்பிறவுந் துறந்துநினைவருங்
காடுமலையும் புக்குக்கோடையிற்
கைம்மேனிமிர்த்துக் காலொன்றுமுடக்கி
யைவகைநெருப்பி னழுவத்துநின்று
மாரிநாளினும் வார்பனிநாளினு
நீரிடைமூழ்கி நெடிதுகிடந்துஞ்
சடைப்புனைந்துந் தலையைப்பறித்து
முடையைத்துறந்து முன்னுறமுன்றுங்
காயுங்கிழங்குங் காற்றுதிர்சருகும்
வாயுவுநீரும் வந்தனவருந்தியுங்
களரியுங்கல்லினுங் கண்படைகொண்டுந்
தளர்வுறுமியாக்கையைத் தளர்வித்தாங்கவ
ரிம்மைமுத்தி யடைவதற்காகத்
தம்மைத்தாமே சாலவுமொறுப்ப
நீங்கலசெய்யா நீயவர்களெல்லாம்
பழுதின்றுயர்ந்த வெழுநிலைமாடத்துஞ்
செந்தாதுதிர்ந்த நந்தனவனத்துந்
தென்றலியங்கு முன்றிலகத்துந்
தண்டாச்சித்திர மண்டபமருங்கினும்
புவிரிதாங்க வாவிக்கரையினு



மயிற்பெடையாலக் குயிற்றியகுன்றினும்
வேண்டிழிவேண்டிழி யாண்டாண்டாட்ட
மருப்பினியன்ற வாளிகமந்த
விருப்புறுகட்டின் மிசைப்படுத்த
வைவகையமளி யணைமேற்பொங்கத்
தண்மலர்கமழும் வெண்மடிவிரித்துப்
பட்டினுட்பெய்த பதனுண்பஞ்சி
னெட்டணையருகாக் கொட்டைகள்பரப்பிப்
பாயன்மீது பரிபுரமிழற்றச்
சாயலன்னத்தின் றளர்நடைபயிற்றிப்
பொற்றோரணத்தைச் சுற்றியதுகிலென
வம்மென்குறங்கி னும்மென்கலிங்கங்
கண்ணுமனமுங் கவற்றப்பண்வர
விரற்றுமணிமேகலை மருங்கிற்கிடப்ப
வாடரவல்கு லரும்பெறலுசுப்பு
வாடவீங்கிய வனமுலைகதிர்ப்ப
வணியியல்கழுத்தை யலங்கரித்ததுபோன்
மணிபுரியலாரங் கதிர்விரித்தொளிர்தர
மணிவளைதாங்கிய வணிகெழுமென்றோள்
வரித்தசாந்தின்மிசை விரித்துவீசிட்ட
வுத்தரியப்பட் டொருபாலொளிர்தர
வள்ளைவாட்டிய வொள்ளிருகாதொடு
பதளத்தருகாத் தரளநிரைத்தாங்
கொழுங்கிண்டே குமிழொன்றுபதித்துக்
காலன்வேலுங் காமபாணமு
மாலகாலமு மனைத்துமிட்டமைத்த
விரண்டுகாட்டமும் புரண்டுகடையிளிர்தர
மதியெனமாசறு வதனம்விளங்கப்
புதுவிரையளைக்கல் குழன்மிசைப்பொலிய
மதுச்சொன்மடந்தைய ராகந்தோய்ந்து
சின்னம்பரப்பிய பொன்னின்கலத்தி

ஆறுசுவையடிசில் வறிதினிதருந்தா
தாடினர்க்கென்றும் பாடினர்க்கென்றும்
வாடினர்க்கென்றும் வரையாதுகொடுத்தும்
பூசுவனபூசியும் புனைவனபுனைந்துந்
தூசுநல்லன தொடையிற்சேர்த்தியு
மைந்துபுலன்களு மாரவார்ந்து
மைந்தருமொக்கலு மகிழ்மனமகிழ்ந்
திவ்வகையிருந்தோ ராயினுமவ்வகை
மந்திரவெழுத்தைந்தும் வாயிடைமறவாது
சிந்தையின்வழி செலுத்தலினந்த
முத்தியுமிழந்தில முதல்வவத்திற
நின்னதுபெருமை யன்றேயென்னெனின்
வல்லானொருவன் கைம்முயன்றெறியினு
மாட்டாவொருவன் வாளாவெறியினு
நிலத்தின்வழாஅக் கல்லேபோ
னலத்தின்வழாஅர்நின் னாமநவின்றோரே. (க௯)

வெண்பா.

நாமநவிற்றுமன்னே நாரியர்கடோடோய்ந்து
காமநவிற்றிக் கழிந்தொழிய - வேமோ
பொருதவனத்தானையுரி போர்த்தருளுமெங்கண்
மருதவனத்தானை வணங்கு. (உ0)

கட்டளைக்கலித்துறை.

வளையார்பசியின்வருந்தார்பிணியின்மதனனைம்புக்
கிளையார்தனங்கண்டிரங்கிலாரிப்பிறப்பினில்வந்
தளையார்நமனுக்கென்கடவார்பொன்னலர்ந்தகொன்றைத்
தளையாரிடைமருதன்னடியாரடிசார்ந்தவரே. (உக)

நேரிசையாசிரியப்பா.

அடிசார்ந்தவர்க்கு முடியாவின்ப
நிறையக்கொடுப்பினுங் குறையாச்செல்வ
மூலமுநடுவு முடிவுமிகந்து
காலமூன்றையுங் கடந்தகடவு



ளுளக்கணுக்கல்லா லூன்கணுக்கொளித்துத்
துளக்கறமிளிர்ந்த சோதித்தனிச்சுட
ரெரியப்புத்தலையி லிருசெவிக்கெட்டா
தரும்பினின்றெழுதரு முள்ளத்தோசை
வைத்தநாவின் வழிமறுத்தகத்தே
தித்தித்தூறுந் தெய்வத்தேற
லண்டத்தலையிற் பண்டைவழியன்றி
யறிவிலறிவுநறியகற்ற
மேலையதன்மையு மெய்தாதெவற்றையுந்
தானேயாகி நின்றதற்பர
தோற்றுவதெல்லாந் தன்னிடைத்தோற்றித்
தோற்றம்பிறிதிற் றோற்றாச்சடாமுடி
விரிசடைமீமிசை வெண்மதிப்பிளவி
னிருள்புரைகண்டத் தேகநாயக
சுருதியுமிருவருந் தொடர்ந்துநின்றலமர
மருதிடங்கொண்ட மருதமாணிக்க
வுமையாள்கொழுந வொருமூன்றாகிய
விமையாநாட்டத் தென்றனிநாயக
வடியேனுறுகுறை முனியாதுகேண்மதி
நின்னடிபணியாக் கன்மனக்கயவரொடு
நெடுநாட்பழகிய கொடுவினையீர்ப்பக்
கருப்பாசயமெனு மிருட்சிறையறையிற்
குடரெனுஞ்சங்கிலி பூண்டுதொடர்பட்டுக்
கட்டுச்சிறைப்புழுவி னிட்டமலந்தழுந்தி
யுடனேவருந்தி நெடுநாட்கிடந்து
பல்பிணிப்பெயர்பெற் றல்லற்படுத்துந்
தண்டலாளர் மீண்டுவந்தலைப்ப
வுதரநெருப்பிற் பதைபதைபதைத்தும்
வாதமத்திகையின் மோதமொத்துண்டும்
விடத்தனிற்ற னடத்தல்செல்லா
விடக்குறைவாயிலின் முடக்கியிருத்திப்

பாவப்பகுதியி விட்டுக்காவற்
கொடியோரைவரை போகிகொடிய
வாசைத்தளையி லென்னையுமுடனையும்
பாசப்படுத்திப் பையெனவிட்டபின்
யாமெம்போக்கு நிறைக்குமன்றும்
பெரியோர்ப்பிழைத்தும் பிறர்பொருள்வெளவியும்
பரியாதொழிந்தும் பல்லுயிர்செகுத்தும்
வேற்றோர்மனைவியர் தோணம்புகழ்ந்தும்
பொய்ப்பல கூறியும் புல்லினம்புல்லியு
மையருங்கருப்ப வளாவறக்கூட்ட
மீண்டினிக்கொண்டு மீண்டுவந்தாழ்
விட்டுழியாறு பட்டுத்திப்படாஅ
திந்நாள்விடுக்க வென்றிப்பண்ணுள்
வாடிபுகிடப்பேன் விடுசெறிகானே
ளின்னையடைந்த வடியாரடியார்க்
கென்னையுமடிமை யாகக்கொண்டே
யிட்டபச்சிலைகொண் டொட்டியருளித்
திச்சிறைப்பிறப்பித் தினிச்சிறைபுகாமற்
காத்தருள் செய்யவேண்டிந்
தித்திரண்டன்ன செஞ்சடையோனே.

வெண்பா.

சடைமே லொருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமே லொருத்தி பொலிய — விடையேபோய்ச்
சங்[illegible] மருதர்க்குந் தாஞ்தொடுப்ப (உ
தெ[illegible] யன்.

கட்டளைக்கலித்துறை.

திருக்குமரு[illegible]விடையோர்களுக்கான்மறையு
மொருக்கு[illegible]ரந்தாச்செஞ்சுபீடவொட்டார்
திருக்குமரு[illegible]நீர்த்தச்செல்வேமனத்தை
யொருக்கு[illegible]த்திறலால் மேலுமேனாக்கின்றவெண்டசெ



நேரிசையாசிரியப்பா.

சுடர்விடுசூலப் படையினையென்றும்
விடையுகந்தேறிய விமலவென்று
முன்னுகஞ்ச முண்டனையென்றுங்
கண்ணுற்காமனைக் காய்ந்தனையென்றுந்
திரிபுரமெரித்த சேவகவென்றுங்
கரியுரிபோர்த்த கடவுளென்று
முரகம்பூண்ட வரவோயென்றுஞ்
சிரகஞ்செந்தழ லேந்தினையென்றும்
வலந்தருகாலனை வதைத்தனையென்றுஞ்
சலந்தரனுடலந் தடிந்தனையென்று
மயன்சிரமொருநா ளரிந்தனையென்றும்
வியந்தவாளரக்கனை மிதித்தனையென்றுந்
தக்கன்வேள்வி தகர்த்தனையென்று
முக்கிரப்புலியுரி யுடுத்தனையென்று
மேனாமன்னரு மெட்டாதிறப்ப
வானங்கிழ்ப்பட வளர்ந்தனையென்றுஞ்
செழுநீர்ஞாலஞ் செகுத்தயிருண்ணு
மழல்விழிக்குறளை யமுக்கினையென்று
மினையனவினையன வெண்ணில்கோடி
நினைவருங்கீர்த்தி நின்வயிற்புகழ்ந்து
ளக்குறுசிந்தையேன் சொல்லளவாதலி
னளப்பரும்பெருமைநின் னளவலதாயினு
மென்றன்வாயிற் புன்மொழிகொண்டு
நின்னைநோக்குவ னுதலினென்னை
யிடுக்கண்களையாய் வல்லற்படுத்தா
வெழுநிலைமாடத்துச் செழுமுகிலுறங்க
வடித்தத்தட்டி யெழுப்புவபோல
நுண்டுகிற்பதாகை கொண்டுகொண்டுகைப்பத்
துயிலினீங்கிப் பயிலும்வீதித்
திருமருதமர்ந்த தெய்வச்செழுஞ்சுடர்

கக

ருள்ளரந்தனிக்கு மற்புதக்கூத்த
கல்லாலெறிந்த பொல்லாப்புத்த
னின்னிலைத் தெரிந்தலதனு
வன்னவன்றனக்கு மருள்பிழைத்தின்றே. (உ௬)

வெண்பா.

இன்றிருந்து நாளை யிறக்குந்தொழிலுடைய
புன்றலையமாக்கள் புகழ்வரோ - வென்றிமழு
வாளுடையான்றெய்வ மருதுடையானுடையேனை
யாளுடையான் செம்பொனடி. (உ௭)

கட்டளைக்கலித்துறை.

அடியாயிரந்தொழிலாயினவாயிரமாயிரம்பேர்
முடியாயிரங்கண்கண்மூவாயிரமுற்றுநீறணிந்த
தொடியாயிரங்கொண்டதோளிரண்டாயிரமென்றுநெஞ்சே
படியாயிராப்பகற்றென்மருதாளியைப்பற்றிக்கொண்டே. உஅ

நேரிசையாசிரியப்பா.

கொண்டலினிருண்ட கண்டத்தெண்டோட்
செவ்வாயுருவிற் பையரவார்த்த
சிறுபிறைகிடந்த நெறிதருபுன்சடை
மூவாமுதல்வ முக்கட்செல்வ
தேவதேவ திருவிடைமருத
மாசறுசிறப்பின் வானவராடும்
பூசத்தீர்த்தம் புரக்கும்பொன்னி
யயிராவணத்துறை யாடிமெய்ப்ப
கைலாயவான கௌரிநாயக
நின்னைவணங்கிப் பொன்னடிபுகழ்ந்து
பெரும்பதம்பிழையா வரம்பலபெற்றோ
ரிமையாநெடுங்க ணுமையாளங்கையு
மழைக்கட்டடத்துப் புழைக்கைப்பிள்ளையு
மமரர்த்தாங்குங் குமரவேளுஞ்
சரிசங்கேந்திய திருநெடுமாலும்
வரன்முறைபடைத்த நான்முகத்தொருவனுக்



தாரகற்செற்ற வீரக்கன்னியும்
பூவின்கிழத்தியு நாவின்மடந்தையும்
பீடுயர்தோற்றத்துக் கோடியுருத்திரு
மாறுப்பெருந்திறல் வானோர்தலைவனுஞ்
செயிர்தீர்நாற்கோட் டயிராவதமும்
வாம்பரியருக்கர் தாம்பன்னிருவருஞ்
சந்திரனொருவனுஞ் செந்திக்கடவுளு
நிருதியுஞ்சமனுங் குருதிகணனும்
வருணனும்வாயுவு மிருநிதிக்கிழவனு
மெட்டுநாகமு மட்டவசுக்களு
மூன்றுகோடி யான்றமுனிவரும்
வசிட்டனுங்கபிலனு மகத்தியன்றானு
மம்புநாரத னென்றிருதிறத்தரும்
வித்தகப்பாடன் முத்திறத்தடியரு
மிருந்தியவன்பிற் பெருந்துறைப்பிள்ளையு
மத்தருசெல்வத் துவமதித்தருளிய
சித்தமார்சிவ வாக்கியதேவரும்
வெள்ளைநீறு மெய்யிற்கண்டு
கள்ளன்கையிற் கட்டவிழ்ப்பித்து
மோடும்பன்னரி யூளைகேட்டரனைப்
பாடினவென்று படாம்பலவளித்துங்
குவளைப்புனலிற் றவளையரற
வீசன்றன்னை யேத்தினவென்று
காசும்பொன்னுங் கலந்துதூவியும்
வழிபடுமொருவன் மஞ்சனத்தியற்றிய
செழுவிதையெள்ளைத் தின்னக்கண்டு
பிடித்தலுமவனிப் பிறப்புக்கென்ன
விடித்துக்கொண்டவ னெச்சிலைநுகர்ந்து
மருதவட்டத் தொருதனிக்கிடந்த
தலையைக்கண்டு தலையுறவணங்கி
யும்மைப்போல வெம்மித்தலையும்

இடக்கவேண்டுமென் றடுத்தடுத்திரந்துங்
கோயின்முற்றத்து மீமிசைக்கிடப்ப
வாய்த்ததென்று நாய்க்கட்டம்மெடுத்துங்
காம்பவிழ்த்ததிர்ந்த கனியுருக்கண்டு
வேம்புகட்கெல்லாம் விதானமமைத்தும்
விரும்பினகொடுக்கை பரம்பரற்கென்று
புரிகுழற்றேவியைப் பரிவுடன்கொடுத்த
பெரியவன்பின் வரகுணதேவரு
மினையதன்மைய ரெண்ணிறந்தோரே
யனையவர்நிற்க யானுமொருவன்
பத்தியென்பதோர் பாடுமின்றிச்
சுத்தனாயினுந் தோன்றுக்கடையே னின்னை
யிறைஞ்சிலனாயினு மேத்திலனாயினும்
வருந்திலனாயினும் வாழ்த்திலனாயினுங்
கருதியிருப்பன் கண்டாய்பெரும
நின்னுலகளித்த நன்மைதீமை
யானவை நின்செயலாதலி
னேயமையு நவையில்வழிக்கே. (உஅ)

வெண்பா.

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்களெல்லாம் - பொழில்சூழ்
மருதிடத்தா னென்றொருகால் வாய்கூப்ப வேண்டா
கருதிடத்தா னில்லா கரந்து. (உகூ)

கட்டளைக்கலித்துறை.

காதலின்மாலவன்கண்கொண்டுநின்கழல்போற்றநல்ல
வாதினையியமருதவப்பாமதியொன்றுமில்லேன்
சிரத்தினுமாயென்றன்சிந்தையுளாகிவெண்காட்டனென்றுந்
தரத்தினுமாய்துநின்னடியார்தெய்வத்தாமரையே. (௩0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

## திருவேகம்பமுடையார் திருவந்தாதி.

மெய்த்தொண்டர்செல்லுநெறியறியேன்மிகநற்பணிசெய்
கைத்தொண்டர்தம்மிலுநற்றொண்டுவந்திலனுண்பதற்கே
பொய்த்தொண்டுபேசிப்புறம்புறமேயுன்னைப்போற்றுகின்ற
வித்தொண்டனேன்பணிகொள்ளுதியோகச்சியேகம்பனே. (க)

ஏகம்பனேயென்னையாள்பவனேயிமையோர்க்கிரங்கிப்
யோகம்பன்னாளுங்கொடுக்கின்றநாயகபொங்குமைவாய்
நாகம்பொன்னாரமெனப்பொலிவுற்றவனீறணியு
மாகம்பொன்மாமலையொப்பவனேயென்பனுதரித்தே. (உ)

தரித்தேன்மனத்துன்திகழ்திருநாமந்தடம்பொழில்வாய்
வரித்தேன்முரல்கச்சியேகம்பனேயென்றன்வல்வினையை
யரித்தேனுனைப்பணியாதவரேழைமைகண்டவரைச்
சிரித்தேனுனக்கடியாரடிபூணத்தெளிந்தனனே. (௩)

தெளிதருகின்றதுசென்றென்மனநின்திருவடிவந்
தளிதருகின்னருட்கையமினியில்லையந்திச்செக்க
ரொளிதருமேனியெம்மேகம்பனேயென்றுகந்தவர்தாட்
டளிதருதூளியென்றன்றலைமேல்வைத்ததன்மைபெற்றே. (௪)

பெற்றுகந்தேனென்றுமர்ச்சனைசெய்யப்பெருகுசிந்தை
கற்றுகந்தேனென்கருத்தினிதாகக்கச்சியேகம்பத்தின்
பற்றுகந்தேறுமுகந்தவனேபடநாகக்கச்சின்
சுற்றுகந்தேர்விடைமேல்வருவாய்நின்றனையடியே. (ரு)

அடிநின்றருமலர்கோசரமாலுக்கயற்கலரின்
முடிநின்றருமுடிகாண்பரிதாயிற்றுக்கார்முகிலி
னிடிநின்றருங்குரலேறுடையேகம்பயாமெங்ஙனே
வடிநின்றருளப்படையுடையானையணைகுவதே. (சு)

வணக்கந்தலைநின்றிருவடிக்கேசெய்யுமையல்கொண்டோ
ரிணக்கன்றிமற்றோரிணக்கறிவோமல்லமல்லரவின்
குணக்குன்றவில்லிகுளிர்கச்சியேகம்பன்குடிவல்லார்
கணக்கன்றமற்றொருதேவரைப்பாடுங்கவிநலமே. (எ)

நலந்தரநான்ஞென்றுசொலவன்கேண்மினல்லீர்களன்பு
கலந்தரனார்கச்சியேகம்பங்கண்டுகைநற்றிரிதி
சலந்தரனைமொழிக்கவைத்தாய்தக்கன்வேள்வியெலா
நிரந்தரமாகச்செய்தாயென்றுபூசித்துநின்மின்களே. (அ)

மின்களொன்றார்சடைகொண்டலென்றார்கண்டமேனிவண்ணம்
பொன்களொன்றார்வெள்ளிப்பாடுதம்பொன்னடிபூண்டுகொண்ட
வென்களென்றாலும்பிரிந்தறியார்கச்சியேகம்பத்தா
றன்களென்றாருலகெல்லாநிலைபெற்றதன்மைகளே. (கூ)

தன்மையிற்குன்றாத்தவத்தோரிமையவர்தாம்வணங்கும்
வன்மையிற்குன்றாமதிற்கச்சியேகம்பர்வண்கயிலைப்
பொன்மயிற்சாயலுஞ்சேயரிக்கண்ணும்புரிகுழலு
மென்மையிற்சாயுமருங்குலுங்காதல்விளைத்தனவே. (௰)

தனம்விட்டுமைதழுவத்தழும்புற்றவர்தம்மடியார்
மனம்விட்டகலாமதிற்கச்சியேகம்பர்வான்கயிலைச்
சினம்விட்டகலாக்களிறுவினவியோர்சேயனையார்
புனம்விட்டகலார்பகலாம்பொழுதும்பூங்கொடியே. (கக)

பூங்கொத்திருந்தழையார்பொழிற்கச்சியேகம்பர்பொற்பார்
கோங்கத்திருந்தகுடுமிக்கயிலையெம்பொன்னொருத்தி
பாங்கொத்திருந்தனையாரணங்கேபடர்கல்லருவி
யாங்கத்திருந்திழையாடிவந்தாற்கண்டடிவருத்தே. (கஉ)



வருத்தந்தருமெய்யுங்கையிற்றழையும்வன்மாவினவுங்
கருத்தந்தரிக்குறடக்கவின்றையகழனிணையத்
திருத்தந்தருளுந்திகழ்கச்சியேகம்பர்சீர்க்கயிலைத்
அருத்தந்திருப்பதன்றிப்புனங்காக்குந்தொழிலெமக்கே. (க௩)

எம்மையுமெம்மைப்பணிகொள்ளுங்கம்பரெழிற்கயிலை
யும்மையுமானிடமிப்புனத்தேவிற்றுவந்தமைந்தர்
தம்மையுமானையுஞ்சிந்தையுநோக்கங்கவர்வவென்றே
வம்மையுமம்மலர்க்கண்ணும்பெரியீருளுமினே. (க௪)

அருளைத்தருகம்பரம்பொற்கயிலையுளெம்மையரம்
பிருளைக்கரிமறிக்கும்மிவரையருமுத்தியெய்ய
வெருளைக்கலைகணைதன்னொடும்போயினவில்லிமைக்கு
மருளைத்தருசொல்லியெங்கோவிலையுண்டிவ்வையகத்தே. (க௫)

வையார்மழுப்படையேகம்பரீங்கோய்மலைப்புனத்து
ளய்யாவருகலையேனங்கரிதொடர்வேட்டையெல்லாம்
பொய்யானவையர்மனத்ததெம்பூங்கொடிகொங்கைபொருப்
பையாரரவிடையாயிற்றுவந்துபரிணமித்தே. (க௬)

பருமுத்துதிர்த்திடுஞ்சேர்மத்தயானைமுதல்பகுந்திட்
டொருமொத்தநின்குறச்சியர்கிரிநீயோங்குலைவராய்ப்
பொருமுத்தலைவேற்படைக்கம்பர்பூங்கயிலைப்புனத்துட்
டருமுத்தனகைத்தன்னைசியால்வெற்பசார்வரிதே. (க௭)

அரிதன்றிருக்கண்ணிடந்தம்பாயிரம்போதணிய
வரிதன்றிருவடிக்கர்ச்சித்தகண்ணுக்கருளுகம்ப
ரரிதன்றிருக்கங்குலியாலழிந்தகயிலையல்லின்
கரிதென்றிருப்பதெம்பால்வெற்பவெம்மையர்க்கன்றுநமே. ()

அஞ்சரத்தான்பொடியாய்விழத்தீவிழித்தன்புசெய்வோர்
நெஞ்சரத்தாழ்வுகந்தோர்கச்சியேகம்பர்நீள்கயிலைக்
குஞ்சரந்தாழ்வரைவீழநுங்கொம்புய்யக்கும்பமூழ்கும்
வெஞ்சரத்தாரணவோவல்லவோவிவ்வியன்முரசே. (க௯)

செய்தந்தலைமுழுமைகணவன்திருவேகம்பத்தான்
றெய்தந்தையாயுயிர்காப்போன்கயிலைத்தடங்கிருள்வாய்
வெய்தந்தகோரிரம்முசலொடும்வினைவெய்யைதன்னைப்
பாய்தந்தபூசனுண்டாங்கொண்டதோசைபகடுவந்தே. (உ0)

வந்தாம்மனம்பெறிற்பொன்னனையீர்மன்றுமேகம்பர்தம்
முந்தாமருவிக்கயிலைமலையுயர்தேனிழிச்சித்
தந்தமலர்நொய்துந்தண்டினைமேயுங்கிளிகடிந்து
சிந்தாம்புகர்மலைக்கைச்சயிச்சாரற்றிரிகுவனே. (உக)

திரியப்புரமெய்தவேகம்பனூர்திகழுங்கயிலைக்
கிரியக்குறவர்பருவத்திதொளம்வினையோம்
விரியச்சுருண்முதலானுமடைந்தோம்விரைவிரைந்து
பிரியக்கதிர்முற்றினீர்பெற்றதென்னங்குப்பேசுமினே. (உஉ)

பேசுகயாவருமைக்கணியாரென்றுபித்தரெங்கும்
பூசுகையார்திருநீற்றெழிலேகம்பர்பொற்கயிலைத்
தேசுகையார்சிலைவெற்பன்பிரியும்பரிசிலரைக்
கூசுகையாதுமில்லாக்குலைவேங்கைப்பெயர்நும்மையே. (உ௩)

பெயராநலத்தெழிலேகம்பனூர்பிறைதோய்கயிலை
பெயராதிருக்கப்பெறுகிளிகாள்புனமேயிரின்
நுயரால்வருத்திமனமுயிங்கோடித்தொழுதுசென்று
தயராதுரையும்வெற்பற்கடியேற்கும்விடைதமினே. (உ௪)

தம்மைப்பிறவிக்கட்கடப்பிப்பவர்தாம்வணங்கு
மும்மைத்திருக்கண்முகத்தெழிலேகம்பர்மொய்கயிலை
யம்மைக்கருங்கண்ணிதன்னொடின்புந்தருந்தண்புனமே
யெம்மைக்கவலைசெயச்சொல்லியோவல்லியெய்தியதே. (உ௫)

இயங்குந்திரிபுரமெய்தவேகம்பரெழிற்கயிலைத்
தயங்குமலர்ப்பொழில்காடையலாடருவித்தடங்காண்
முயங்குமணியறைகாண்மொழியீரொழியாதுநெஞ்ச
மயங்கும்பரிசுபொன்னூர்சென்றசூழல்வருத்தமக்கே. (உ௬)



வருப்பாரிவர்போன்மனத்துக்குநாண்மலைநந்தன்னொடின்ப
மிருப்பார்களாருயிரொன்றாமிருவரையின்னக்கள்வாய்
நெருப்பான்மலர்கொண்டுநின்றார்கிடைக்கரிலாவுகம்பர்
பொருப்பான்மணிசிந்துருவிக்கயிலைச்சூழ்புனத்தே. (உ௭)

புனங்குழையாதென்றுமென்றினைகொய்துநம்போகலுற்ற
கனங்குழையாடற்பிரியக்கொங்குறவலையறவான்
மனங்குழையாவருங்கண்கனிபண்பலபாடித்தொண்ட
ரினங்குழையாத்தொழுமேகம்பரிக்கயிலாயத்துள்ளே. (உ௮)

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானுடருற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையென்னும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணரணந்
தள்ளம்பெரிகொண்டமைத்தாரடியவர்சார்வதன்றே. (உ௯)

அன்றாம்பகையடர்க்கும்பரிமாவுமதவருவிக்
குன்றாம்பதாதியுந்தேருங்குலவிக்குடைநிழற்கீழ்
நின்றும்பொலியினுங்கம்பர்நன்னீறுநுதற்கிலரே
லென்றாம்மரசுமுரசும்பொலியாவிருநிலத்தே. (௩0)

நிலத்திமையோரிற்றலையாய்ப்பிறந்துமறையொடங்கம்
வலத்திமைப்போதும்பிரியாரெரிவளர்த்தாலும்வெற்பன்
குலத்துமையோர்பங்கர்கச்சியுளேகம்பங்கூடித்தொழு
நலத்தமையாதவர்வேட்டுவர்தம்மினிப்படையே. (௩க)

படையாலுயிர்கொன்றுதின்றுபசுக்களைப்போலச்செல்லு
நடையாலறிவின்றிநட்பிடைப்பொய்த்துக்குலங்களினுங்
கடையாய்ப்பிறக்கினுங்கச்சியுளேகம்பத்தெங்களையா
ளுடையான்கழற்கன்பரேலவர்யாவர்க்குமுத்தமரே. (௩உ)

உத்தங்கயானையுரியார்விரலாலரக்கன்சென்னி
பத்துங்கையானவிருபதுஞ்சோர்தரவைத்திலைய
மொத்துங்கையால்வன்பாடக்கயிலையினூடுகைவா
ளொத்துங்கையானென்றுகந்தளித்தார்கச்சியேகம்பரே. (௩௩)

அம்பரங்காலனலீர்நிலந்திங்களருக்கனுறு
வம்பரங்கொள்வதொர்வேழத்துரியவன்றன்னுருவா
மெம்பரன்கச்சியுளேகம்பத்தானிடையாதடைவா
னம்பரன்றன்னடியாரறிவார்கட்குநற்றுணையே. (௩௪)

துணைத்தாமரையடியும்பவளத்திரணன்குறங்கும்
பணைத்தோளகலமுங்கண்டத்துநீலமுமண்டத்துமின்
பிணைத்தாலனசடையுந்திருமுக்கணும்பெண்ணொர்பக்கத்
தணைத்தாரெழிற்சம்பரெங்கள்பிரானார்க்கழகியவே. (௩௫)

அழகறிவிற்பெரிதாகியவேகம்பரத்தர்கொற்றம்
மழகறிவிற்பெரியோர்தமைப்பற்றலர்பற்றுமன்பின்
குழகறிவேற்பினுமொன்றறியாரறியாமைதெய்வங்
கிழகெரியப்பட்டுலந்தாருலகிற்கிடந்தனரே. (௩௬)

கிடக்குமொருபாலிரைக்கின்றபாம்பொருபான்மதியந்
தொடக்குண்டிலங்குமலங்குதிரைக்கங்கைசூடுங்கொன்றை
வடக்குண்டுகட்டத்தலைமாலைவாளான்மலைந்தவெம்போர்
கடக்கும்விடைத்திருவேகம்பர்கற்றைச்சடைமுடியே. (௩௭)

கற்றைப்பவளச்சடைவலம்பூக்கமழ்கொன்றையந்தார்
முற்றாத்திலாமதியின்கொழுந்தேகம்பர்மொய்குழலா
மற்றைத்திசையின்மணிப்பொற்கொழுந்தத்தரங்கழுநீர்
தெற்றிப்பொலிகின்றதுட்டழகாகித்திகழ்தருமே. (௩௮)

திருமருட்டன்மைவலப்பாற்கமலக்கணெற்றியின்மேற்
றிருமலர்க்கண்பிளவின்றிகழுந்தழல்செல்வக்கம்பர்
கருமலர்க்கண்ணிடப்பாலதுநீலங்களிமதத்து
வருமதற்பொட்டணங்குக்குயர்ந்தோங்குமலர்க்குழலே. (௩௯)

மலர்ந்தபட்டுச்சியைத்துறுஞ்செஞ்சுடர்மாமணிவிட்
டலர்ந்தமணிக்குண்டலம்வலக்காதினிலாடிவரு
நிலந்திருநீள்வயிரம்வெயிற்பாயநகுமணிகள்
கலந்தசெம்பொன்மகரக்குழையேகம்பர்காதிடமே. (௪௦)



காதலைக்கும்வலத்தோள்பவளக்குன்றமங்குயர்ந்து
போதலைக்கும்பனிப்பொன்மலைநீற்றின்பொலியகலந்
தாதலைக்குங்குழல்சேர்பணைத்தோணறுஞ்சாந்தணிந்து
சூதலைக்கும்முலைமார்பிடமேகம்பர்சுந்தரமே. (௪௧)

தரம்பொற்பழியுமுலைகட்டியெய்த்துத்தரந்தளரா
வுரம்பொற்புடையதிருவயிறும்வலமும்பர்மும்மைப்
புரம்பொற்பழித்தகம்பர்க்குத்தாழ்த்திடும்பூண்முலையு
நிரம்பப்பொருதுதளிரிளவஞ்சியுநேர்வுடைத்தே. (௪௨)

உடைப்புலியாடையின்மேனாகக்கச்சுவீக்கிமுஞ்சி
வடத்தொருகோவணந்தோன்றுமரைவலமற்றையல்குற்
றொடக்குறுகாஞ்சித்தொடுத்தவரசிலைதாழ்ந்தகி
லடற்பொலியேதுடையேகம்பமேயவடிகளுக்கே. (௪௩)

அடிவலப்பாலதுசெந்தாமரையொத்ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற்கூற்றினெருத்திறவைத்ததிளந்தளிரின்
படியிடப்பாலதுபஞ்சுறவஞ்சுஞ்சிலம்பணிந்த
வடிவுடைத்தார்கச்சியேகம்பமேயவரதருக்கே. (௪௪)

தருக்கவற்றுண்மிக்கமுப்புரமெய்தயன்றன்றலையை
நெருக்கவற்றேடமழுவாள்விசைத்துநெற்கொன்றும்
பருக்கவற்றுங்கச்சியேகம்பரத்தர்தம்பாம்புகளின
திருக்கவற்றுவிட்டருளுங்கடகத்திருக்கரமே. (௪௫)

கரத்துத்தமருகத்தோசைகடுத்தண்டமீபிளப்ப
வரத்ததபாதநெரித்திட்டவனிதலநெரியத்
தரத்தத்திசைகளுக்கப்புறம்போர்ப்பச்சடைவிரித்து
வரத்தைத்தருகம்பராடுவரெல்லியுமாநடமே. (௪௬)

நடனம்பிரானுகந்துய்யக்கொண்டானென்றுநன்மறையோ
ருடன்வந்துமூவாயிரவரிறைஞ்சிநிறைந்தவுண்மைக்
கடனன்றிமற்றறியாத்தில்லையம்பலங்காளத்தியா
யிடமெம்பிரான்கச்சியேகம்பமேயாற்கினியனவே. (௪௭)

இனியவரின்றாரவரையொப்பார்பிறரென்னவொண்ணாத்
தனியவர்தையலுடனாமவர்தருமம்பணித்த
முனியவரேறுகந்தமுக்கண்ணவர்சண்டியன்புக்
கினியவர்காய்மழுவாட்படையார்கச்சியேகம்பரே. (௪அ)

பரவித்தனைநினையக்கச்சியேகம்பர்பண்ணுமையல்
வரவித்தனையுள்ளதேங்கறிந்தேன்முன்னவர்மகனார்
புரவித்தனையடிக்கக்கொடிதாய்விடியாவிரவி
லரவித்தனையுங்கொண்டார்மடவார்முன்றிலாட்டிடவே. (௪௯)

இடவஞ்சுறக்கெனப்பாயுமுஞ்சென்னிக்குதலைகண்
டிடவஞ்சுவர்மடவாரிரிகின்றனரேகம்பத்தீர்
படமஞ்சுவாயவநாகமிரைக்குமதனுக்குமுற்
படவஞ்சுவரொங்ஙனேபலிவந்திடும்பாங்குகளே. (௫௦)

பாங்குடைக்கோட்புலியின்னதள்கொண்டீர்நும்பாரிடங்க
டாங்குடைகொள்ளப்பலிகொள்ளவந்தீர்தடங்கமலம்
பூங்குடைகொள்ளப்புனற்கச்சியேகம்பங்கோயில்கொண்ம
ரீங்கிடைகொள்ளக்கலைகொள்ளவந்திலிடைக்குமின்றே. (௫௧)

இடைக்குமின்றோற்குமிணைமுலையாய்முதியார்கடஞ்சொற்
கடைக்கணன்றோங்கச்சியேகம்பரையங்கொளக்கடவும்
விடைக்குமுன்றோற்றநில்லேலென்றினியிந்தமொய்குழலார்
இடைக்குமுன்றோற்றநஞ்சங்கிறுவோதங்கிறித்தவமே. (௫௨)

கிறிபலபேசிச்சிரானடக்குவிடங்குபடக்
குறிபலபாடிக்குளிர்கச்சியேகம்பரையங்கொள்ள
நெறிபலவார்குழலார்மெல்லிவுற்றவெதிர்தெருவிற்
செறிபலவெள்வளைபோயினதாயர்கடேவரே. (௫௩)

தேறிற்றிலகள்ளநோக்கந்தெரிந்திலசொற்கண்முடி
கூடிற்றிலகுழல்கொங்கைபொடித்திலகூறுமில்வன்
மாறிற்றிலமணியின்மடவல்குலுமற்றிவட்பா
லூறிற்றிலவெழிலேகம்பனார்க்குள்ளநெக்கிடத்தே. (௫௪)



நல்லாம்புகழ்க்கடவூர்நன்மறையவனுய்யநண்ணிக்
கொல்கின்றகூற்றைக்குமைத்தவெங்கூற்றங்குளிர்திரைகண்
மல்குந்திருமறைக்காட்டமிர்தென்றுமலைமகடான்
புல்கும்பொழிற்கச்சியேகம்பமேவியபொன்மலையே. (௫௫)

மலையத்தகத்தியனர்ச்சிக்கமன்னிவடகயிலை
நிலையத்தமரர்தொழவிருந்தானெடுமேருவென்னுஞ்
சிலையத்தன்பைம்பொன்மதிற்றிருவேகம்பத்தான்றிகழ்நீ
ரலையத்தடம்பொன்னிசூழ்திருவையாற்றருமணியே. (௫௬)

மணியாருவித்தடவிமையக்குடகொல்லிகல்லின்
றிணியாருவியிருர்த்தசிராமலைவனங்க
ணணியாருவிகவர்கிளியோப்புமின்சாரல்விந்தம்
பணிவாருவினைதீர்க்குமேகம்பர்பருப்பதமே. (௫௭)

பருப்பதங்கார்தவழ்மந்தரமிந்திரகீலம்வெள்ளை,
மருப்பதங்கார்கருங்குன்றிப்பரங்குன்றம்வில்லார்
நெருப்பதங்காருமிராமகேந்திரமென்றிவற்றி
லிருப்பதங்காவுகந்தான்கச்சியேகம்பத்தெம்மிறையே. (௫அ)

மிறைத்தார்புரமெய்தவில்லிமைதல்விமலைமகட்கு, மறை
த்தார்கருங்குன்றம் வெண்குன்றஞ்செங்குன்றமன்னற்குன்ற,
நிறைத்தார்நெடுங்குன்ற நீள்கழுக்குன்றமென் றீவினைகள், கு
றைத்தார்முதுகுன்றமேகம்பர்குன்றென்றுகூறுமினே. (௫௯)

[illegible]மின்றெண்டார்குற்றாலநெய்த்தானந்துருத்தியம்பேர்
தேறுமின்வேள்விக்குடி திருத்தோணிபுரம்பழன
மாறுமின்போல்சடைவைத்தவொற்றூரிடைமருதென்
றேறுமினெம்பிரான்கச்சியேகம்பமுன்னினைந்தே. (௬௦)

நினைவார்க்கருளும்பிரான்றிருச்சோற்றுத்துறைநியமம்
புனைவார்சடையோன்புகலூர் புறம்பயம்பூவணநீர்
புனைவார்பொழிற்றிருவெண்காடுபாச்சிலதிகையென்று
நினைவார்தருநெஞ்சினீர்கச்சியேகம்பனெண்ணுமினே. (௬௧)

கன்னிப்பரவுந் திருவாவடுதுறை நல்லநல்லூர், மன்னிற்
பொலிகடம்பூர் கடம்பந்துறைமன்னுபுன்கூ, ரென்னைத்தெளிய
பராய்த்துறையோர்கோ ளெதிர்கொள்பாடி, கன்னிப்பிறைச்
சடையோன்கச்சியேகம்பங்காண்மின்சென்றே. (௬௨)

சென்றேறிவிண்ணுறமங்குமலைதிகழ்வல்லமென்று
வின்றேறல்பாய்திருமாற்பேறுபாசூரெழில்முந்தூர்
வன்றேரவன்திருவிற்பெரும்பேறுமதிலொற்றியூர்
நின்றோர்தருகச்சியேகம்பமேயார்நிலாவியவே. (௬௩)

நிலாவுபுகழ்த்திருவோத்தூர்திருவாமாத்தூர்நிலைநீர்
சுலாவுசடையோன்புலிவலம்வில்வலங்கொச்சைதொண்டர்
குலாவுதிருப்பனங்காடுநன்மாசறல்கூற்றம்வந்தா
லலாவென்றடியார்க்கருள்புரியேகம்பராலயமே. (௬௪)

இலையங்கார்கருகாவைக்கச்சூர்திருக்காரிகரை
வேலையங்கேறுதிருவான்மியூர்திருவூறன்மிக்க
சோலையங்கார்திருப்போந்தைமுக்கோணந்தொடர்கடுக்கை
மாலையன்வாழ்திருவாலங்காடேகம்பம்வாழ்த்துமினே. (௬௫)

வாழியபெரிதெமக்கின்னருள்செய்யுமலர்க்கழலோர்
தாழச்சடைத்திருவேகம்பர்தம்மைத்தொழாதவர்போய்
வாழப்பரற்சுரமாற்றுதளிரடிபூங்குழலெம்
மேழைக்கிடையிறுக்குங்குயபாரமியக்குறினே. (௬௬)

உறுகின்றவெவ்வழலக்கட்டிக்கொடிக்குன்பின்வரப்
பெறுகின்றவண்மையிலேயபேரருளேகம்பனூர் [ர்
சீறுகின்றமென்மலர்த்தென்பொழிற்கச்சியைச்சூழ்ந்திளையோ
குறுகின்றபூக்குவளைக்குறுந்தண்பணையென்றுகொளே. (௬௭)

கொள்ளுங்கடுங்கதிர்க்கள்ளிநீச்சிலைவேயுலறி
விள்ளும்வெடிபடும்பாலையென்பாவைவிடலைபின்னே
தெள்ளும்புனற்கச்சியுட்டிருவேகம்பர்சேவடியை
யுள்ளும்மதுமறந்தாரெனப்போவதுரைப்பரிதே. (௬௮)



பரிப்பருந்திண்மைப்படையதுகானெறிச்சிறகு
விரிப்பருந்துக்கிரையாக்கும்வெய்யேனஞ்சல்செஞ்சடைமேற்
றரிப்பருந்திண்கங்கையார்திருவேகம்பமன்னபொன்னே
வரிப்பருந்திண்சிலைக்கேயுமராயின்மறைகுவனே. (௬௯)

வனவரித்திண்புலியின்னதளேகம்பமன்னருளே
யெனவரிற்பொன்னனங்கென்னணங்கிற்கெனெழிற்கழங்குந்
தனவரிப்பந்துங்கொடுத்தெனைப்புல்லியுமிற்பிரிந்தே
யினவரிக்கல்லதர்செல்வதெங்கேயொல்குமேழைநெஞ்சே. ௭௦

நெஞ்சார்தரவின்பஞ்செய்கழலேகம்பர்கச்சியன்னாள்
பஞ்சாரடிவைத்தபாங்கிவையாங்கவள்பெற்றெடுத்த
வெஞ்சார்வொழியத்தன்பின்செலமுன்செல்வெம்வெடென்ற
வஞ்சாவடுதிறற்காளைதன்போக்கிவையர்தத்திலே. (௭௧)

இல்லவெங்கானனையல்லாற்செறுஞ்சரணேகம்பனூர்
நிலவுஞ்சுடரொளிவெய்யவனேதண்மலர்மிதித்தச்
செலவும்பருக்கைகுளிரத்தளிரடிசெல்சுரத்தன்
னுலவுங்கதிர்தணிவித்தருள்செய்யுன்னுறுதுணைக்கே. (௭௨)

தினையொத்தகோவையும்போலெழிற்பேதையுந்தோன்றலு
மூன், வினையொத்தகொங்கையொடேயொத்தகாதலொடேகி
னரே, யனையத்தரேசெருத்தகாளையைக்கண்டனமற்றவரேற்பி
ணையொத்தநோக்குடைப்பெண்ணிவடன்னொடும்பேசுமினே.()

மின்னலிக்கும்வணக்கத்திடையாளையுமீளியையு
நென்னலிப்பாக்கைவந்தெய்திடுவீரெம்மனையிற்கண்டீர்
பின்னரிப்போக்கருங்குன்றுகடந்தவரின்றுகம்பர்
மன்னரிதேர்ந்துதொழுங்கச்சிநாட்டிடைவைகுவரே. (௭௪)

உவரச்சொல்வேடுடைக்கூடுகெடாதியவேகம்பனூ
ரவர்க்கன்போனவிமானத்தையாயிரமுண்மைசற்றுந்
தவரச்சிகரச்சிவாலயஞ்சூலந்தலங்குவின்மேற்
கவரக்கொடிதிளைக்குங்கச்சிகாணிலுங்கார்மயிலே. (௭௫)

கார்மிக்ககண்டத்தெழிற்றிருவேகம்பர்கச்சியின்வா
யேர்மிக்கசேற்றெழினென்னவோரொலிபொன்மலைபோற்
போர்மிக்கசெங்கெல்குவிப்போரொலிகருப்பாலையொலி
நீர்மிக்கமாக்கடலின்றெலியேயொக்குநேரிழையே. (எசு)

நேர்த்தமையாமைவிறற்கொடுவேட்டர்நெடுஞ்சரத்தைப்
பார்த்தமையால்மைதிந்தகண்பொன்னேபகட்டுரிவை
போர்த்தமையாளுமைநோக்கருங்கம்பர்கச்சிப்பொழிலுட்
சேர்த்தமையால்மைப்போதணிசீதஞ்சிறந்தனவே. (எஎ)

சிறைவண்டுபாடுங்கமலக்கிடங்கினைசெம்பழுக்காய்
நிறைகொண்டபாளைக்கமுகின்பொழிலினைதிங்களின்
பொறைகொண்டவாழைப்பொதும்புவைபுன்சடையேகம்பனூ
ரறைகொண்டபூங்கச்சிநாடெங்குமிவ்வண்ணநன்னுதலே. எஅ

நன்னுதலார்கருங்கண்ணுஞ்செவ்வாயுமிவ்வாறெனப்போய்
மன்னிதழார்திருநீலமுமாம்பலும்பூப்பவள்ளை
யென்னவெலாமொப்புக்காதென்றவீறுடேமகம்பனூர்
பொன்னுதலார்விழியார்கச்சிநாட்டுளிப்பொய்கையுளே. (எகூ)

உள்வார்குளிரிநெருங்கிக்கருங்கிடங்கிட்டனவீர்
வள்வாளைகளொடுசெங்கயன்மேய்கின்றவெங்கனையாட்
கொள்வார்பிறவிகொடாதவேகம்பர்குளிர்குவளை
கள்வார்தருகச்சிநாட்டெழிலேரிகளப்பரப்பே. (அ0)

பரப்பார்விசும்பிற்படிந்தகருமுகிலன்னநன்னீர்
தரப்பாசிகண்மிகுபண்பொடுசேம்படர்தண்பணைவாய்ச்
சுரப்பாரெருமைமலர்தின்னத்துன்னுகராவொருத்தல்
பொரப்பார்பொலிநுதலாய்செல்வக்கம்பர்தம்பூங்கச்சியே. ()

கச்சார்முலைமலைமங்கைகண்ணாரவெண்ணுன்கறமும்
வைச்சார்மகிழ்திருவேகம்பர்தேவியமிழுவிண்ணோர்
விச்சாதரர்தொழுகின்றவிமானமுற்றுன்மமரு
வச்சாலையும்பரப்பார்கனிமாடங்களோங்கினவே. (அஉ)



ஓங்கினவூர்கமுள்ளகமும்பருகிடமாம்
பாங்கிலினின்றதரியுறைபாடகந்தெவ்விரிய
வாங்கினவாட்கண்ணிமற்றவர்மைத்துனிவான்கவிக
டாங்கினநாட்டிருந்தாளுந்தன்மனையாயிழையே. (அந)

இழையாரரவணியேகம்பர்நெற்றிவிழியின்வந்த
பிழையாவருணம்பிராட்டியதின்னபிறங்கலுன்னு
மழையாவருகிரிசூலத்தனோக்கரும்பொன்கடுக்கைத்
தழையார்பொழிலதுபொன்னேநமக்குத்தளர்வில்லையே. அச

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தழைத்தழுவக்
கிளையார்வளைக்கைவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாப்பொழிற்றிருவேகம்பமற்றிதுவந்திறைஞ்சி
யுளராவதுபடைத்தோமடவாயிவ்வுலகத்துள்ளே. (அரு)

உலவியமின்வடம்வீசியுருமதிர்வுண்முழங்கிச்
சலவியமாமதம்பாய்முகில்யானைகள்வாவில்வந்தாற்
சலவியவார்குழல்பின்னரென்பாரெனநின்றது
நிலவியவேகம்பர்கோயிற்கொடியன்னநீர்மையனே. (அசு)

நீரென்னினுமழுங்கண்முகில்காணெஞ்சமஞ்சலையென்
றூரென்னிலுந்தமராயுரைப்பாரமராவதிக்கு
நேரென்னிலுந்தகுங்கச்சியுளேகம்பர்திண்மதில்வாய்ச்
சேரென்னிலுந்தங்கும்வாட்கண்ணிதானன்பர்தேர்வரவே. அஎ

வரங்கொண்டிமையோர்நலங்கொள்ளுமேகம்பர்கச்சியன்னா
ய், பரங்கொங்கைதூவன்பனீர்முத்தமன்பர்தந்தேரின்முன்
னே, தரங்கொண்டுபூக்கொண்டுகொன்றை, பொன்னகத்தண்
காந்தள்கொத்தின், காங்கொண்டுபொற்கண்ணமேந்தவும்போ
ந்தனகார்முகிலே. (அஅ)

கார்முகமாரவண்கைக்கொண்டகம்பர்கழறுழுது
போர்முகமாப்பகைவெல்லச்சென்றார்நினையார்புணரி
நீர்முகமாகவிருண்டுசுரந்தநேரிழைநா
மார்முகமாகவினைக்கடனீந்துமயர்வுயிர்ப்பே. (அகூ)

உயிராயினவன்பர்தேர்வரக்கேட்டுமுன்வாட்டமுற்ற
பயிரார்புயல்பெற்றதென்னநம்பல்வளைபான்மைகளாந்
தயிரார்பானெய்யொடுமாடியவேகம்பர்தம்மருள்போற்
றையிராவளையமுந்தக்கச்சிறந்தனகார்மயிலே. (௯0)

கார்விடைவண்ணத்தனன்றேழ்தழுவினுமின்றுதனிப்
போர்விடைபெற்றெதிர் மாண்டாரெனவன்டர்போதவிட்டார்
தார்விடையேகம்பர்கச்சிப்புறவிடைதம்பொன்னன்பூண்
மார்விடைவைகல்பெறுவார்தழுவமழவிடையே. (௯௧)

விடைபாய்கொடுமையெண்ணாதுமேலாங்கனல்விவேற்கருஞ்சட்
கடைபாய்மனத்தினன்காளையர்புல்கொலிகம்பர்கச்சி
மடைபாய்வயல்விளமுல்லையின்மான்கன்றுடான்கன்றினங்
கடைபாய்தொறும்பதிமன்றிற்கடல்போற்கலந்தெழுமே. ௯௨

எழுமலர்த்தண்பொழிலேகம்பர்கச்சியிருங்கடல்வாய்க்
கொழுமணப்புன்னைக் குரவான்மணற்குன்றிற்பாதர்கொம்பே
செழுமலர்ச்சேலல்லவாளல்லவேலல்லசீலமல்ல
முழுமலர்க்கூரம்பிரண்டாலுமுகத்தனவே. (௯௩)

முகம்பாகம்பண்டமும்பாகமென்றுதியமூதுரையை
யுகம்பார்த்திரேலென்னலும்பரேகம்பர்கச்சிமுன்னீ
ரகம்பாகவார்வினைவில்லையென்னின்பவளச்செவ்வாய்
நகம்பார்ப்பொழிற்பெற்றநாமுற்றவாகொள்கான்மயலே. (௯௪)

மயக்கத்தநல்லிருட்கொல்லுஞ்சுறவொடேறிமகர
வியகத்திடுகழியோதங்கழிஇளரக்கழித்தார்
நயக்கத்தவர்க்கருளாக்கம்பர்கச்சிக்கடலர்பொன்னூன்
முயக்கத்தகல்வுபொறுள்கொண்கநீர்வருமூர்க்கஞ்சுமே. (௯௫)

மெய்யிரைவைகக்குருகுணராமதுவுண்டுபுன்னை
நீயிரவண்டோதமர்புக்கடியவிரிகடல்வாய்ப்
பாயிரைநாகக்கொண்டோன்றொழுங்கம்பர்கச்சிப்பவ்வநீர்
ஆயிரைகானன்மற்றுரதிவார்நந்துறைவர்பொய்யே. (௯௬)



பொய்வருநெஞ்சினர்வஞ்சனையாரையும்போகவிடா
மெய்வரும்பேரருளேகம்பர்கச்சிவிரையினவாய்க்
கைவரும்புள்ளொடுசங்கினமார்ப்பக்கஞ்சேர்ப்பர்திண்டே
ரவ்வருதாமங்களினம்வந்தார்ப்பயலனையின்றதே. (௯௭)

இன்றுசெய்வோமிதனிற்றிருவேகம்பர்க்கேத்தனைய
நன்றுசெய்வோம்பணிநாளையெனாதுள்ளிநெஞ்சேயுடலிற்
சென்றுசெய்யாரைவிடுந்தனைநாளும்விடாதடிமை
நின்றுசெய்வாரவர்க்கென்னினொழிகாட்டுவரே. (௯௮)

காட்டிவைத்தார்தம்மையாங்கடிப்பூப்பெய்யக்காதல்வெள்ள
மீட்டிவைத்தார்தொழுமேகம்பரேயவர்க்கெம்மைப்
பூட்டிவைத்தார்தமக்கன்புறப்பெற்றுப்பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார்பரவித்தொழுதாமவர்பாதங்களே. (௯௯)

பாதம்பரவியோர்பித்துப்பதிற்றியம்பல்பணிபு
மேதம்புகுதாவகையருளேகம்பரேத்தெனவே
போதம்பொருளாறுபொலியாதபுன்சொற்பனுவல்களும் [௱.
வேதம்பொலியும்பொருளாமெனக்கொள்வர்மெய்த்தொண்ட

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

# திருவொற்றியூரொருபாவொருபது.

---

அகவல்.

இருநிலமடந்தை யியல்பினுடுத்த
பொருகடன்மேகலை முகமெனப்பொலிந்த
வொற்றிமாநக ருடையோயுருவின்
பெற்றியொன்றுப் பெற்றேரியாரே
யின்னின்பிறக்கந் தன்றுமின்சடையே

மன்னியவண்டதின் சென்னியின்வடிவே
பாவகன்பரிதி பனிமதிதன்னொடு
மூவகைச்சுடருநின் னுதனேர்நாட்டந்
தண்ணொளியாரந் தாரகணமே
விண்ணவர்முதலா வேறுறுமிடமாக்
கொண்டுறைவிசும்பே கோலநின்றாக
மெண்டிசைதிண்டோ ளிருங்கட லுடையே
யணியுடையல்கு லவனிமண்டலமே
மணிமுடிப்பாந்தளின் குழைவழக்கே
யொழியாதோடிய மாருதமுயிர்ப்பே
வழுவாவோசை முழுதுநின்வாய்மொழி
வானவர்முதலா மன்னுயிர்பரந்த
ஆனமின்ஞானத் தொகுதிநின்னுணர்வே
நெருங்கியவுலகினி னீர்மையுநிற்றலுஞ்
சுருங்கலும்விரிதலுந் தோற்றமுநின்றொழிலே
யமைத்தலுமழித்தலு மாங்கதன்பெயர்ச்சியு
மிமைத்தலும்விழித்தலு மாகுநின்னியல்பே
யென்றிவைமுதலா வியல்புடைவடிவினோ
டொன்றியதுப்புரு விருவகையாகி
முத்திறக்குணத்து நால்வகைப்பிறவி
யைத்திறத்தைம்பொறி யறுவகைச்சமயமோ
டேழுலகாகி யெண்வகைமூர்த்தியோ
டூழியோடூழி யெண்ணிறந்தோங்கி
யெவ்வகையளவினிற் கூடிநின்
றவ்வகைப்பொருளுமாகியவிடத்தே. (௧)

இடத்துறைமாதரோ டொருடம்பென்று
நடத்தினைனின்றிரு ணவிற்றினையென்றும்
புலியதளொன்றொடு புனைந்தோயென்றும்
பலிதிரிவாழ்க்கை பயின்றோயென்று
மருவமுமுருவமு மானாயென்றுந்
திருமார்மார்பனொடு திசைமுகனென்று



முளனேயென்று மிலனேயென்றுந்
தளராவென்றுந் தளர்வோனென்று
மாதியென்று மசோகினனென்றும்
போதியிற்பொலிந்த புராணனென்று
மின்னவைமுதலாத் தாமறியளவையின்
மன்னியநூலின் பன்மையுண்மயங்கிப்
பிணங்குமாந்தர் பெற்றிமைநோக்கி
யணங்கியவவ்வவர்க் கவ்வவையாகியடையப்
பற்றிய பனிற்றியோது
மொற்றிமாநக ருடையோயுருவே.

உருவாமுலகுக் கொருவனாகிய
பெரியோய்வடிவின் பிறிதின்மையி
னெப்பொருளாயினு மிங்குளதாமெனி
னப்பொருளுனக்கே யவயவமாதலின்
முன்னியமூவெயின் முழங்கெரியூட்டித்
தொன்னீர்வையகந் துயர்கெடச்சூழ்ந்ததும்
வேள்விமூர்த்திதன் றலையினைவிடுத்தது
நீள்விசும்பாளிதன் றோளினைநெரித்தது
மோங்கியமறையோற் கொருமுகமொழித்ததும்
பூங்கணைவேளைப் பொடிபடவிழித்ததுந்
திறல்கெடவரக்கனைத் திருவிரலுறுத்ததுங்
குறைபடக்கூற்றினைக் குதிப்பினிலடர்த்தது
மென்றிவைமுதலா வாள்வினையெல்லா
நின்றுழிச்செறிந்த நின்செயலாதலி
னுலவாத்தொல்புக ழொற்றியூர்
பகர்வோர்நினக்குவே றின்மைகண்டவர்
நிகழ்ச்சியினிகழ் வல்லது
புகழ்ச்சியிற்படுப்பரோ பொருளுணர்ந்தோரே.

பொருளுணர்ந்தோங்கிய பூமகன்முதலா
விருவினையாக்கையி லியங்குமன்னுயி
ருருவினுமுணர்வினு முயர்வினும்பணியினுங்

திருவினுந் திறலினுஞ் செய்தொழில்வகையினும்
வெவ்வேறுகி வினையொடும்பிரியா
தொவ்வாப்பன்மையுண் மற்றவரொழுக்க
மன்னியவேலையுள் வான்றிரைபோல
நின்னிடையெழுந்து நின்னிடையாகியும்
பெருகியுஞ்சுருங்கியும் பெயர்ந்துந்தோன்றியும்
விரவியும்வேருய் நின்றனைவிளக்க
மோவாத்தொல்புக ழொற்றியூர
மேவாமேனி முதல்வநின்னருள்
பெற்றவரறிவி னல்லது
மற்றவரறிவரோ நின்னிடைமயக்கே. (௪)

மயக்கமில்சொன்னீ யாயினுமற்றவை
தயக்கநின்றிற மறியாச்சூழலு
முறைவிடமுள்ளா மாயினுமற்றது
கறைபடவாங்கே காந்தகன்முருந்
செய்வினையுலகினிற் செய்வோயெனினு
மவ்வினைப்பயனி யணுகாவனிமையு
மினத்திடையின்பம் வேண்டிநிற்பணிவோர்
மனத்திடைவாரி யாகியவனப்பு
மன்பினடைந்தவர்க் கணிமையுமாடொறு
மென்பிணையுருக்கு மியற்கையவாதலிற்
கண்டவர்தமக்கே யூனுடலழிந்
துண்டெனவுணர்ந்தன மொற்றியூர
மன்னியபெரும்புகழ் மாதவத்
துன்னியசெஞ்சடைத் தூமதியோயே. (௫)

தூமதிசடைமிசைச் சூடுதனெறி
யாழியானென வமைத்தவாறே
யறனுருவாகிய வானேறேறுத
லிறைவனியானென வியற்றுமாறே
பதவைவனென மின்றமையார்க்கும்
பொதுநிலையானென வுணர்த்தியபொருளே



முக்கணனென்பது முத்தீவேள்வியி
னொக்கவேன்னிடை யென்பதோர்சுருக்கே
வேதமான்மறி யேந்துதன்மற்றது
நாதனானென நவிற்றுமாறே
மூவிலையொருதாட் சூலமேந்துதன்
மூவருமியானென மொழிந்தவாறே
யெண்வகைமூர்த்தி யென்பதிவ்வுலகினி
லுண்மையானென வுணர்த்தியவாறே
நிலநீர்தீவளி யுயர்வானென்று
மலைவாத்தொல்புக ழுடையோயென்றும்
பொருளுநற்பூதப் படையோயென்றுந்
தெருணின்றுலகினிற் றெருட்டுமாறே
யீங்கிவைமுதலா வெண்ணரும்வடிவு
மோங்குநின்பெருமை யுணர்த்தவுமுணராத்
தற்கொலிமாந்தர் தம்மிடைப்பிறந்து
சொற்பொருள்வன்மையிற் சுழலுமாந்தர்க்
காதியாகிய வறுதொழிலாள
ரோதலோவா வொற்றியூர
விருவர்தஞ் செய்கையிற் படுத்து
முறுவலித்திருத்தி முக்கட்பெம்மானே.

அளவினிறந்த பெருமையையாயினு
மௌனமாகலா தொடுக்கின்றனையே
மெய்வினையிறந்த மெய்யினையாயினும்
வையமுழுதுநின் வடிவெனப்படுமே
கைவலத்திலைநீ யெனினுங்காதல்
செய்வோர்வேண்டுஞ் சிறப்பொழியாயே
சொல்லியவகையாற் றுணையிலையாயினு
நல்லுயிர்க்கூட்ட நாயகனீயே
யெங்குமுள்ளோ யெனினுமஞ்சினை
தங்கியவரைச் சாராய்நீயே யஃதான்று
பிறவாப்பிறவினை பெருகாப்பெருமையை

துறவாத்துறவினை தொடராத்தொடர்ச்சியை
அகலாதகர்ச்சியை நுணுகாநுணுக்கினை
யகலாவகற்சியை யணுகாவணிமையை
செய்யாச்செய்கையை சிறவாச்சிறப்பினை
வெய்யைதணியை விழுமியைநொய்யை
செய்யைபசியை வெளியைகரியை
யாக்குதியழித்தி யானபல்பொரு
ளாக்குதிதொகுத்தி நீக்குதியடைதி
பேணையவாகிய வெண்ணில்பல்குண
வினைதொடாமைக்கு நீர்மையவாதலி
னோங்குகடலுடுத்த வொற்றியூர்
வீங்கிளமொழிவார் யரசர்தாஅந்து
சொன்னிலைசுருங்கி னல்லது
நின்னியலறிவோ ரியாரிருங்கத்தே.

நிலத்திடைப்பொறையா யவாவினின்று
சொலத்தகுபெருமைத் தாராவாக்கை
மெய்வளியையொடு பித்தொன்றாக
வைவகைநெடுங்காற் றுங்குடைப்ப
ரைரயெனுந்துறையே நாடொறும்வெளுப்பத்
திரையுடைத்தோலே செழுந்திரையாகக்
கட்டியகுருதி நிணக்கினைந்து
மூடியவிரும் லோசையின்முழங்கிச்
சுடுபசிவெகுளிச் சுறவினமெறியக்
குடரெனுமரவக் கூட்டம்வந்தொலிப்ப
வூன்றடியெலும்பி னூட்டிடலைடைத்து
தோன்றியபல்பிணிப் பின்னகஞ்சுழலக்
கால்கையினரம்பே கண்டமாக
மேதருங்கணமே மெய்ச்சலாக
முழக்குடைத்தனையே முகங்களாக
வழுக்குடைமுக்கா றேதம்வந்தொலிப்ப
விப்பரிசியற்றிய வுடலிருங்கடலுட்



டெப்பாவென்னுஞ் சுழித்தலைப்பட்டுழி
யாவாவென்றுநின் னருளினைப்பெற்றவர்
நாவாயாகிய நாதநின்பாத
முற்றிச்சென்று முறைமையின்வணங்கிச்
சிந்தைக்கூம்பினைச் செவ்விதினிறுத்தி
யுருகியவார்வப் பாய்விரித்தார்த்துப்
பெருகியநிறையெனுங் கயிற்றினைப்பிணித்துத்
துன்னியசுற்றத் தொடர்க்கயிறறுத்து
மன்னியவொருமைப் பொறியினைமுடுக்கிக்
காமப்பாறெனுங் கடுவெளியற்ற
தாமச்சோதிச் சுடர்க்குறிநிறுத்திச்
சுருங்காவுணர்ச்சித் துடுப்பினைத்துழாவி
நெருங்காவளவி னீள்கரையேற்ற
வாள்கையாத்திரை போக்குதிபோலு (௮)
மோங்குகடலுடுத்த வொற்றியூரோயே.

ஒற்றியூர வுலவாநின்குணம்
பற்றியாரப் பரவுதல்பொருட்டா
வென்னிடைப்பிறந்த வின்னாப்புன்மொழி
நின்னிடையனுகா நீர்மையவாதலி
னுயவேத்தமுதலி னசன்றவம்மனை
கேவலஞ்செய்மையிற் கேளாளாயினும்
பிரித்தற்கரிய பெற்றியதாகிக்
குறைவிலாத்துங் குழவியதியல்பினை
யறியாதென்னனி யூழிப்பிறவியின்
மயங்கிக்கண்ணிலர் கண்பெற்றுங்கு
தாய்தலைப்படலின் றளினைவணக்கம்
வாய்தலையறியா மயக்குறும்வினையேன்
மல்கியவின்பத் தோடுடன்கூடிய
வெல்லையிலவாவினி லியற்றியவாகக்
கட்டியநீயே யவிழ்க்கினல்ல
தெட்டனையாயினு மியானவிழ்க்கறியேன்

உள்ளிடையிருளெனுங் ஊற்றிடையொதுங்கி
வெள்ளிடைகாண விருப்புறுவினையேன்
தந்தையுந்தாயுஞ் சாதியுமறிவுஞ்
சிந்தையுந்திருவுஞ் செல்கதித்திறனும்
அன்பமுந்துறவும் அய்மையுமறிவு
மின்பமும்புகழு மினைபலபிறவுஞ்
சுவையொளியூறோசை நாற்றந்தோற்ற
மென்றிவைமுதலா விளங்குவவெல்லா
மொன்றநின்னடிக்கே யொருங்குடன்வைத்து
நின்றனன்றமியே னின்னடியல்லது
சார்வுமற்றின்மையிற் றளர்ந்தோர்காட்சிச்
சேர்விடமதனைத் திறப்படநாடி
யெய்துதற்கரியோ யானினிச்
செய்வதுமறிவனோ தெரியுங்காலே. (௯)

காலற்சீறிய கழலோய்போற்றி
மூலத்தொகுதி முதல்வபோற்றி
யொற்றிமாநக ருடையோய்போற்றி
முற்றுமாகிய முதல்வபோற்றி
யனைத்தொறுஞ்சிறக்கு மமிர்தேபோற்றி
யிணைபிறிதில்லா வீசபோற்றி
யார்வஞ்செய்பவர்க் கணியோய்போற்றி
தீர்விலின்சுவைத் தேனேபோற்றி
வஞ்சனைமாந்தரை மறந்தோய்போற்றி
நஞ்சினையமிர்தா வயின்றோய்போற்றி
விரிகடல்வையக வித்தேபோற்றி
புரிவுடையனமாய்ப் புணர்ந்தோய்போற்றி
காரணமுன்பொருள் கருத்துறைசெம்மைக்
காணியாகிய வரனேபோற்றி
வெம்மைதண்மையென் றிவைகுணமுடைமையிற்
பெண்ணொடாணெனும் பெயரோய்போற்றி
மேவியவவர்தமை விட்டினிற்புகுக்குந்



தீபமாகிய சிவனேபோற்றி
மாலோய்போற்றி மறையோய்போற்றி
மேலோய்போற்றி வேதியபோற்றி
சந்திரபோற்றி தழலோய்போற்றி
யிந்திரபோற்றி யிறைவபோற்றி
யமராபோற்றி யழகாபோற்றி
குமராபோற்றி கூத்தாபோற்றி
பொருளேபோற்றி போற்றியென்றுனை
நாத்தழும்பிருக்க நவிற்றினல்லது
தேத்துதற்குரியோ ரியாரிருநிலத்தே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

திருநாரையூர்

# விநாயகர் திருவிரட்டைமணிமாலை.

என்னைநினைந்தடிமை கொண்டென்னிடர்கெடுத்துத்
தன்னைநினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ்சோலைவிய னாரையூர்முக்க
ணரசுமகிழத்திமுகத் தான். (௧)

முகத்தாற்கரியனென்றாலுந்தனையேமுயன்றவர்க்கு
மிகத்தான்வெளியனென்றேமெய்ம்மையுன்னும்விரும்படியா
ரகத்தான்றிகழ்திருநாரையூரம்மான்பயந்தவெம்மா
னுகத்தானவன்றனுடலம்பிளந்தவொருகொம்பனே. (௨)

கொம்பனையவள்ளி கொழுநன்குறுகாமே
வம்பனையமாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலஞ்செய்துகொளுந் தாழ்தடக்கையாயென்றோ
பின்னவலஞ்செய்வதென்றோ பேசு. (௩)

பேசத்தகாதெனப்பேயெருக்கம்பெருஞ்சாளியுமென்
றேசத்தகும்படியேயுவதேயிமையாதமுக்கட்
கூசத்தகுந்தொழிலுங்கையுநந்தையுநீயுமிந்தத்
தேசத்தவர்தொழுநாரைப்பதியுட்சிவக்களிறே. (௪)

களிறுமுகத்தவனைக் காயஞ்செற்றீசி
னொளிறுமுருக்கொண்ட தென்னே - யளறுதொறும்
பின்னாரையூரார லாரும்பெரும்பதிகர்
மன்னாரையூரான் மகன். (௫)



மகத்தினின்வானவர்பற்கண்சிரந்தோணெரித்தருளுஞ்
சகத்தினினின்பொழினாரைப்பதியுட்சுரன்மகற்கு
முகத்ததுகையதக்கையதமுக்கந்தமுக்கனி
யகத்ததுவாயதவாயதுபோலுமடுமருப்பே. (௬)

மருப்பையொருகைக்கொண்டு நாரையூர்மன்னும்
பொருப்பையடிபோற்றத் துணிந்தா - னெருப்பை
யருந்தவெண்ணுகின்றவெறும் பன்றேயவரை
வருந்தவெண்ணுகின்ற மலம். (௭)

மலஞ்செய்தவல்வினைநோக்கியுலகைவலம்வருமப்
புலஞ்செய்தகாட்சிக்குமாற்குமுன்னேபுரிசடைமேற்
சலஞ்செய்தநாரைப்பதியரன்றன்னைக்கனிதரவே
வலஞ்செய்துகொண்டமதக்களிறேயுன்னைவாழ்த்துவனே. (௮)

வனஞ்சாயவல்வினைநோய் நீக்கிவனசத்
தனஞ்சாயலைத்தருவா னன்றே - வினஞ்சாயத்
தேரையூர்நம்பர்மகன் திண்டோளணிக்கருள
நாரையூர்நம்பர்மக னும். (௯)

நாரணன்முன்பணிந்தேத்தநின்றெல்லைநடாவியவத்
தோரணவுந்திருநாரையூர்மன்னுசிவன்மகனே
காரணனேயெங்கணபதியேநற்கரிவதனா
வாரணனுன்பொருளேயென்பவர்க்கில்லையல்லல்களே. (௧௦)

அல்லல்களைந்தான்ற வம்பொனுலகத்தி
னெல்லைபுகுவிப்பா னீண்டுழவர் - செல்லல்களை
செங்கழுநீர்கட்குந் திருநாரையூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதாரைங்கரத்த கோ. (௧௧)

கோவிற்கொடியநமன்றமர்கூடாவகைவிடுவன்
காவிற்றிகழ்திருநாரைப்பதியிற்கரும்பனைக்கை
மேவற்கரியவிருமதத்தொற்றைமருப்பின்முக்க
ணேவிற்புருவத்திமையவள்றான்பெற்றயானையையே. (௧௨)

யானேத்திய வெண்பா வென்வினைதீர்த்தடிமை
தானேசதுர்த்தனற்கு நல்கினான் - தேனே
தெறித்தபொழினாரையூர்க் குலம்வலனேந்தி
வெறித்தமதமுகத்த வேழம். (௧௩)

ஏறியசீர்வீரனைக்குடியோர்திறைக்கும்பிருந்தே
றூறியபூந்தார்க்குமரற்குமுன்னினானண்ணலைநாரச்
சீறியவெம்பனைச்சிங்கத்திறுக்கிளையானைவிண்ணோர்
வேறியல்வாற்றெருமநாரைப்பதியுள்விநாயகனே. (௧௪)

கனமதில்சூழ்நாரையூர் மேவிக்கசிந்தார்
மனமருவிஞானப்பயந்த வாய்ந்த - சினமருவு
கூசாரம்பூண்டமுகக் குஞ்சரக்கன்றென்றார்க்கு
மாசாரமேமதிசொல்லு வான். (௧௫)

வானிற்பிறந்தமதிதவழும்பொழின்மாட்டளிசூழ்
தேனிற்பிறந்தமலர்த்திருநாரைப்பதிதிகழுங்
கோனிற்பிறங்கண்பதிதன்னைக்குலமலையின்
மானிற்பிறந்தகளிறென்றுரைப்பரிவ்வையகத்தே. (௧௬)

வையகத்தாரேத்த மதிநாரையூர்மகிழ்ந்து
பொய்யகத்தாருள்ளம் புகலொழிந்து - கையகத்தோர்
மாங்கனிதன்கொம்பண்டம் பாசமழுமல்குவித்தா
னெங்கணிரஞ்சிந்தையமர் வான். (௧௭)

அமராவமரர்தொழுஞ்சரணாரைப்பதியமர்ந்த
குமராகுமரற்குமுன்னவனேகொடித்தோவுணர்
தமராசுறத்தவன்றன்னுழைத்தோன்றினனேயெனவின்
றமராமனத்தவராழ்நரகத்தில்வீழ்ந்தவரே. (௧௮)

அவமதியாதுள்ளமே யல்லலறநல்ல
தவமதியாலேத்திச் சதுர்த்தோ - நவமதியாங்
கொம்பன்விநாயகன்கோங் கார்பொழில்சூழ்நாரையூர்
நம்பன்சிறுவன்சீர் நாம். (௧௯)



நூர்ந்தனமாமனமேத்துகண்டாயென்றுநான்மலராற்
றூர்ந்தனமாகவிருந்தனநாரைப்பதிதன்னுளே
சேர்ந்தனனேயைந்துசெங்கையனேநின்பிரண்மருப்பை
யேந்தினனேயென்னையாண்டவனேயெனக்கென்னையனே. (௨௰)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

# கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்.

---

நெஞ்சந்திருவடிக்கீழ்வைத்துநீண்மலர்க்கண்பனிப்ப
வஞ்சங்கடிந்துன்னைவந்தித்திலேனன்றுவானருய்ய
நஞ்சங்கருந்துபெருந்தகையேநல்லதில்லைநின்ற
அஞ்செம்பவளவண்ணாவருட்கியாரினியாரென்பரே. (௧)

என்புந்தழுவியவூனுநெகவெய்துயிர்த்தழுது
அன்பின்வழிவந்தவாரமிர்தேயடியேனுரைத்த
வன்புன்மொழிகள்பொறுத்திகொலாம்வளர்தில்லைதன்னுள்
மின்புன்மிளிர்சடைவீசிநின்றாடியவிண்ணவனே. (௨)

அவநெறிக்கேவிழப்புக்கவிந்நாயையமைவாங்கித்
தவநெறிக்கேயிட்டதத்துவனேயத்தவப்பயனாஞ்
சிவநெறிக்கேயென்னையுய்ப்பவனேசெனனந்தொறுஞ்செய்
பவமறுத்தாள்வதற்கோதில்லைநட்டம்பயில்கின்றதே. (௩)

பயில்கின்றிலேனின்றிறத்திருநாமம்பனிமலர்த்தார்
முயல்கின்றிலேனுன்றிருவடிக்கேயப்பமுன்னுதில்லை
யியல்கின்றநாடகச்சிற்றம்பலத்துளெந்தாயிங்ஙனே
யயர்கின்றநாயெனங்ஙனேபெறுமாறுநின்னருளே. (௪)

அருதிக்குவிம்பிஇவந்ததோவெள்ளிக்குவடதஞ்ச
பருதிக்குழவியுமிழ்கின்றதேயொக்கும்பற்றுவிட்டோர்
கருதித்தொழுகழற்பாதமுங்கைத்தலநான்குமெய்த்த
சுருதிப்பதமுழங்குந்தில்லைமேயசுடரிறுக்கே. (௫)

சுடலைப்பொடியும்படுதலைமாலையுஞ்சூழ்ந்தவென்பு
மடலைப்பொலிமலர்மாலைமென்றோண்மென்மயிர்ச்சயிறு
மடலைப்பொலியயின்றூவிலைவேலுமணிகொடில்லை
விடலைக்கென்றூனைக்கழிதுவேழவிநோதத்தையே. (௬)

வேதமுதல்வன்றலையுந்தலையாயவேள்விதன்னு
ளாதனவனெச்சனற்றலையுந்தக்கனார்தலையுங்
காதியதில்லைச்சிற்றம்பலத்தான்கழல்சூழ்ந்துநின்று
மாதவரென்றேமறைமொழியாலேவழுத்துவதே. (௭)

வழுத்தியசீர்த்திருமாலுலகுண்டவெண்பாம்புதன்னின்
கழுத்தருகேதுயின்றூறக்கப்பார்த்தனைக்கங்கணமாச்
செழுத்திரள்சீர்த்திருச்சிற்றம்பலத்தான்றிருக்கையிடை
யழுத்தியகல்லொத்தனையனாகியமாயவனே. (௮)

மாயவன்முந்நீர்த்துயின்றவனன்றுமருதிடையே
போயவன்காணாதபூங்கழனல்லபுலத்தினர்நெஞ்
சேயவன்சிற்றம்பலத்துணின்றுடுங்கழலவர்க்குந்
தாயவன்றன்பொற்கழலென்றன்மறைநன்னிழலே. (௯)

நிழல்படுபூணெடுமாலயன்காணாமைநீண்டவரே
தழல்படுபொன்னகலேந்தித்தமருகந்தாடித்தனமத்
தெழில்படவீசிக்கரமெரிதீர்த்திருவம்பலத்தே
குழல்படுசொல்வழியாடுவர்யாவர்க்குங்கூத்தினையே. (௧௦)

கூத்தனென்றுந்தில்லைவாணனென்றுங்குழுமிட்டிமையோ
ரேத்தனென்றுஞ்செவிமாட்டிசையாதேயிடுசணங்கை
மூத்தவன்பெண்மார்குணையிட்டாலுமுடிவிறந்த
சாத்தவொன்றும்வருமோவிவனுக்குத்தன்னையனே. (௧௧)



நின்றார்புனற்றில்லைச்சிற்றம்பலத்தன்னின்மன்னிநின்ற
வென்றானைக்கண்டாள்விருப்பாரென்னுடன்முழுதுங்
கன்றாங்கிலோதொழக்கையாங்கிலோதிருநாமங்கள்கற்
றென்றும்பரிசெங்ஙும்வாயாங்கிலோவெனக்கிப்பிறப்பே. ௧௨

பிறவியிற்பெற்றபயனொன்றுகண்டிலம்பேரொலிநீர்
நறவியல்பூம்பொழிற்றில்லையுடையமாடுநின்ற
அறவியல்சோதியைச்சுந்தரக்கூத்தனைத்தொண்டர்தொழுட
முறவியல்வார்கண்கள்கண்டுகண்டின்பத்தையுண்டிடவே. ௧௩

உண்டேனவனருளாரமிர்தத்தினையுண்டலுமே
கண்டேனெடுத்தகழலுங்கணலுங்கவித்தகையு
மொண்டேன்மொழியினைநோக்கியநோக்குமொளிநகையும்
வண்டேன்மலர்த்தில்லையம்பலத்தாடுமணியினையே. (௧௪)

மணியொப்பனதிருமான்மருடத்துமலர்க்கமலத்
தணியொப்பனவவன்றன்முடிமேலடியேனிடர்க்குத்
துணியச்சமைந்தநல்லீர்வாளினையனசூழ்பொழில்க
டிணியத்திகழ்தில்லையம்பலத்தான்றன்றிருந்தடியே. (௧௫)

அடியிட்டகண்ணினுக்கோவவனன்பினுக்கோவவுணர்
செடியிட்டவான்றுயர்சேர்வதற்கோதில்லையம்பலத்து
முடியிட்டகொன்றைநன்முக்கட்பிரானன்றழலுருக்கு
மடியிட்டகண்ணனுக்கீந்ததுவாய்ந்தவரும்படையே. (௧௬)

படைப்படுகண்ணிதன்பங்கதென்றில்லைப்பரம்பரவல்
விடைப்படுகேதுகவின்னைப்பங்கேனெனவிவசத்தாற்
கடைப்படுசாதிபிறக்கினுமேவைத்தருளுகண்டாய்
புடைப்படுமிங்கிணித்தாட்செய்யபாதமென்னுள்புகவே. (௧௭)

புகவுகிர்வாளெயிற்றுவிலங்கின்றுபொதிகலங்கி
மிகவுருமாற்கரும்பாதத்தனேல்வியன்றில்லைதன்னு
ணகவுகுலாமதிக்கண்ணியற்கங்கணனென்றனன்றுந்
தகவுகொலாந்தகவன்றுகொலாமென்றுசங்கிப்பனே. (௧௮)

சங்கோர்கரத்தன்மகன்றக்கன்றானவர்நான்முகத்தோன்
செங்கோலவிந்திரன்றோடலையூர்வேள்விசெருடல
மங்கோலவெவ்வழலாயிட்டழிந்தெரிந்தற்றனவா
லெங்கோனெழிற்றில்லைக்கூத்தன்கடைக்கண்சிவந்திடவே. ( )

ஏவுசெய்மேருத்தடக்கையெழிற்றில்லையம்பலத்து
மேவுசெய்மேனிப்பிரானன்றியங்கனோர்மிக்குளரோ
காவுசெய்காளத்திக்கண்ணுதல்வேண்டும்வரங்கொடுத்துத்
தேவுசெய்வான்வாய்ப்புனலாட்டியதிறல்வேடுவனே. (௨௦)

வேடனென்றாள்வில்விசயற்குவெங்கணையன்றளித்த
கோடனென்றாள்குழைக்காதனென்றாளிடக்காதிலிட்ட
தோடனென்றாள்தொகுசீர்த்தில்லையம்பலத்தாடிநின்ற
சேடனென்றாண்மங்கையங்கைச்சரிவளைசிந்தினவே. (௨௧)

சிந்திக்கவுமுரையாடவுஞ்செம்மலராற்கழல்கள்
வந்திக்கவுமனம்வாய்கரமென்னும்வழிகள்பெற்றுஞ்
சந்திக்கிலர்சிலர்தென்னவர்தம்மூர்த்தில்லையம்பலத்து
ளந்திக்கமர்திருமேனியெம்மான்றனருள்பெறவே. (௨௨)

அருடருசீர்த்தில்லையம்பலத்தான்றனருளின்றிப்
பொருடருவானத்தரசாதலிற்புழுவாதனன்றாஞ்
சுருடருசெஞ்சடையோனருளேற்றுறவிக்குநன்றா
மிருடருகீழேழ்நரகத்துவீழுமிருஞ்சிறையே. (௨௩)

சிறைப்புள்ளவாம்புனல்சூழ்வயற்றில்லைச்சிற்றம்பலத்துப்
பிறைப்பிளவார்சடையோன்றிருநாமங்களேபிதற்ற
மிறைப்புளவாகிவெண்ணீறணிதோடேந்தும்வித்தகர்தம்
முறைப்புளவோவயன்மாலொடும்பர்தராயதற்கே. (௨௪)

அகழ்சூழ்மதிற்றில்லையம்பலக்கூத்தவடியவிட்ட
முகிழ்சூழிலையுமுகைகளுமேயுங்கொல்சற்பகத்தின்
நிகழ்சூழ்மலர்மழைநாவித்திறம்பயில்சிந்தையராய்ப்
புகழ்சூழிமையவர்போற்றித்தொழுநின்பூங்கழற்கே. (௨௫)



பூந்தண்பொழில்சூழ்புலியூர்ப்பொலிசெம்பொனம்பலத்து
வேந்தன்றனைக்கண்டியாட்செய்வதென்னோவிரிதணிமே
லாந்தண்பழமயவிழ்பயன்பாகியபண்டைப்பறைச்
சேந்தன்கொடுக்கவக்கூழ்திருவமிர்தாகியதே. (௨௬)

ஆகங்கனகக்கிரியகோளரிக்கஞ்சிவிண்ணோர்
பாகங்களங்குழையாயருளாயெனத்தில்லைப்பிரான்
வேகந்தருஞ்சிம்புள்விட்டரிவெங்கதஞ்செற்றிலனேன்
மோகங்கலந்தனநலந்தன்றேவிக்கழுவுலகே. (௨௭)

மூவுலகத்தவரேத்துந்தொழுந்தில்லைமூக்கட்பிரான்
கேவுதெ[illegible]ற்செய்யப்பெற்றவர்யாரெனிலோர்விடையாய்த்
தாவுதெ[illegible]ழிற்பட்டெடுத்தனன்மாலயன்சாரதியா
மேவிரதத்தொடுபூண்டதொன்மாமிக்கவேதங்களே. (௨௮)

வேதகச்சிந்தைவிரும்பியவன்றில்லையம்பலத்து
மேதகக்கோயில்கொண்டோன்சேயவன்வீரணக்குடிவாய்ப்
போதகப்போர்வைப்பொதிவாளரவரைப்பொங்குசினச்
சாதகப்பெண்பிளைதன்னையன்றந்ததலைமகனே. (௨௯)

தலைமகன்பின்னவன்றாய்தந்தையிந்ததராதலத்து
நிலையவனிக்குதொழில்புரிந்தோனவோலாகின்ற
கொலையவன்சூலப்படையவனாலத்தெழுகொழுந்தி
னிலையவர்காண்டற்கருந்தில்லையம்பலத்துள்ளிறையே. (௩௦)

இறையுந்தெளிகிலர்கண்டுமெழிற்றில்லையம்பலத்து
ளுறையும்புனற்சென்னியோனருளானன்றடுகரிமே
னிறையும்புகழ்த்திருவாரூரனிறைதார்ப்பரிமே
னறையுங்கமழ்தொங்கல்வில்லவனும்புக்கநல்வழியே. (௩௧)

நல்வழிநின்றார்பகைதன்னவொய்யகுறவிலென்னுஞ்
சொல்வழிகண்டனம்பார்தொகுசீர்த்தில்லையம்பலத்து
வில்வழிதானவரூரெரித்தோன்வியன்சாக்கியனார்
கல்வழிநேர்நின்றளித்தனன்காண்கசிவகதியே. (௩௨)

கதியேயடியவரெய்ப்பினில்வைப்பாக்கருதிவைத்த
நிதியேநிமிர்புன்சடையமிர்தேநின்னையென்னுள்வைத்த
மதியேவளர்தில்லையம்பலத்தாய்மகிழ்மாமலையாள்
பதியேபொறுத்தருளாய்கொடியேன்செய்தபல்பிழையே. ௩௩

பிழையாயினவேபெருக்கிநின்பெய்கழற்கன்புதன்னி
னுழையாதசிந்தையினேனையுமந்தாகினித்துவலை
முழையார்தருதலைமாலைமுடித்தமுழுமுதலே
புழையார்கரியுரித்தோன்றில்லைநாதபொறுத்தருளே. (௩௪

பொறுத்திலனேனும்பன்னாகத்தினைப்பொங்கெரிவெங்கதத்தை
செறுத்திலனேனுந்தில்லைப்பிரானைத்திரிபுரங்கள்
கறுத்திலனேனுங்கமலத்தயன்கதிர்மாமுடியை
யறுத்திலனேனுமமரருக்கென்கொலடுப்பனவே. (௩௫

அடுக்கியவிலையாயகலேத்தித்தசையெலும்பி
லொடுங்கியதோனியொரேனிரப்பாரொராளிரவியனை
நடுக்கியுமாநரசிங்கனைச்சிம்புளதாய்நரலை
விடுக்கியாதன்றன்றில்லைதொழாவிட்டவேழையரே. (௩௬

ஏழையென்புன்மைகருதாதிடையறுவன்பெனக்கு
வாழிநின்பாதமலர்க்கேமருவவருளுகண்டாய்
மாழைமென்னோக்கிதன்பங்கவளர்தில்லையம்பலத்தாய்
போழிளந்திங்கள்சடைமுடிமேல்வைத்தபுண்ணியனே. (௩௭

புண்ணியனேயென்றுபோற்றிசெயாதுபுலன்வழியே
நண்ணியனேற்கினியாதுகொலாம்புகலென்னுள்வந்திட்
டண்ணியனேதில்லையம்பலவாவலர்திங்கள்வைத்த
கண்ணியனேசெய்யகாமன்வெருப்பக்கறுத்தவனே. (௩௮

கறுத்தகண்டாவண்டவாணருருபுனற்கங்கைசடை
செறுத்தசிந்தாமணியேதில்லையாயென்னைத்தீவினைக
ளொறுத்தல்கண்டாற்சிரியாரோபிறரென்னுறாதுயரை
யறுத்தல்செய்யாவிடினார்க்கோவருஞ்சேரலரும்பழியே. ௩௯



பழித்தக்கவுழிகழான்றில்லையான்பன்றிவேட்டுவனும்
பழித்திட்டிறைச்சிகலையனித்தவிருக்குழுங்கள்
மொழித்தக்கசிரத்தைப்பத்தன்படுத்திட்டமின்முழுத
மிழித்தக்கவென்றுருதயிர்துசெய்தனென்றியம்புவரே. (௪0)

வரந்தருமாறிதன்மேனுமுண்டோவயற்றில்லைதன்னுட்
புரந்தரன்மாலொருமுநின்றபிரான்புலிப்பொய்கையிலே
நிரந்தரமாய்நின்றவென்னையுமெய்கையிற்றன்னடியார்
தரந்தருவான்செல்வத்தாய்த்தினைப்பேசருந்தன்மையிதே. ௪௧

நன்றுடித்தாரிடவர்க்குமீளாவழிதருவான்
குன்றுமதிற்றில்லைமூதூர்க்கொடிமேல்விடையுடையோன்
மன்றுடையப்பின்னுமற்றவன்பாதம்வணங்கியங்கே
பொன்றிரக்கூடிக்கிலியூவாந்தோகிலுமார்களே. (௪௨)

கலைகணிலாமையுந்தன்பொற்கழலிணையாதன்மையுந்
தலைகணிலாமுகக்கைக்கரிப்போர்வைச்சரணினையான்
[illegible]
வலைகணிலாமையணங்குமங்கைவரிசிலையே. (௪௩)

வரித்தடந்திண்சிலைமன்மதனுடலுமாழிவட்டத்
தரித்தவன்றன்னைமற்றென்படதோர்பொற்புத்தவநெறிக
டெரித்தவன்றில்லைச்சிற்றம்பலவன்றிருப்புருவ
நெரித்ததுகண்டனவெண்பொடியேயன்றிருக்கநில்லே. (௪௪)

நின்றிலவேவிசயன்றொடுஞ்சிந்தைகளிப்புறநீ
டென்றில்லைமாநடமாடும்பிரான்றன்றிருமலைமேற்
றன்றலையாண்டக்கேதிச்சாக்கொண்டுநீத்ததென்பர்
கன்றினையேவிளமேலெறிந்தார்த்தகரியவனே. (௪௫)

கருப்புருவத்திருவார்த்தைகள்கேட்டலுங்கண்பனியேன்
விருப்புருவத்திறொடுதினமுருகேன்விதிர்விதிரே
னிருப்புருவச்சிந்தையென்னைவந்தாண்டதுமெவ்வணமோ
பொருப்புருவப்புரிசைத்தில்லையாடல்புரிந்தவனே. (௪௬)

புரித்தவன்பின்றிரும்பொய்யாமைவிலேசைத்திசையுறிய
விரித்தகங்கைமலர்செஞ்சடைமேற்பிறைமேவுமனுர்
பரித்தவனார்புகல்வியிற்றிருச்சிற்றம்பலம்
தெரித்தவெல்கொன்றைவிதிகாட்டிப்புகழ்ந்தவர்க்கென்னே

சென்று கல்லொமகைத்திப்பெருங்கடற்றலைச்செம்மையு
புற்றைக்கண்டமறைத்திலமாயங்கள்பு க்கத்தே
பாவத்தின் பொன்னடிதோய்வதற்றிவான்
மண்டகன்பொன் பொன்னடியிட்டேவார்க்கன்றுநிகழ்பெய் (ஞ்)

வினைவெருவாக்கித்திகழ்கண்ணுடைப்பெருமானையூர
மணிசெங்கமலைக்கண்ணாயமலர்க்கற்றெழுதோ
ரிணர்விர்த்திருவைச்சிற்றம்பலத்தைப்பணிபுரிக்க
கனவிற்சிந்தைபுக்கவனைச்சாடுக்கங்கையனே. (௩௯)

கங்கையவைகிடம்பூவணக்குன்றைக்கூத்தாடியபார்
தங்குங்கனவெல்லம்பருமூழியிடப்பார்த்தவன்
சங்கரிட்டமைத்தோவீட்டமாடமையிட
மங்கைக்கொருபங்குவன்னலங்காரனிடமணாகவே. (௪0)

நினைகாட்டக்குன்றமாதார்ப்பாடு பயனாமைர்நாட்
டுனைக்காயவன் றில்லைப்பொன்னம்பலத்துறைபெரும்பூசா
வணக்காகுத்தாமிறைவெருப்பனைத்தவமார்த்த
குணக்காணவென்னைவெனக்கொள்ளம்வைத்தருள்வதே. (௪௧)

கூடுவதம்பலக்கூத்தனடியார்குழுவொடுகூ
தேடுவதாங்கவருக்கமர்செய்யுமியல்வழியே
போடுவதன்னைத்திருத்தாவடொன்டைப்பிறவி
யிடுவதாக நீயலக்கேலார்செய்யும்வித்தகமே. (௪௨)

வித்தகச்செஞ்சடை வெண்மதிக்கார்த்திறல் கண்டத்தெண்டோ
மத்தகக்கைம்மலைப்போர்வைமதிற்றில்லைமன்னனைத்தாஞ் [ன்
சித்தகத்தேகொயிலிருக்கத்திறத்தாகவிரக்கவைத்
புத்தகப்பேய்களுக்கெங்கிநதேதூவரன்பொன்னடியே. (௪௩)



பொன்னம்பலத்துநடமாடியனென்பர்பயமாற
கன்னன்மைதிரப்புனற்றுக்கவிக்காமற்கண்டபுனல்
முன்னுமைநூபொற்றிசிறைவேய்கொண்டாக்கைநீக்
பின்னும்பிறைமுதலிற்றிதாமேல்வெள்ளிருக்கனே. (௪௪)

கேசனைக்கொலிவேயன்னினைநிர்க்குநிருவடிக்கீழ்
வாசகன்மாமலர்ட்டிறைவருந்தெனென்றன்வாயுறு
தேசனென்றுமை பொன்றேர்திருச்சிற்றம்பலவெ
ஈசனென்னென்பிறப்பென்னுக்கரியுங்கொலென்றனக்கே. ()

தனைத்திலைச்சகமானதிலைமதுபோன்றுக்கன்
வனைத்திலையேறடர்த்தோர்வாசவுயிர்பலநடையா
தினைத்தலைகாண்டகைமான்முனைவர்தில்லையின்றேறு
தினைத்தலைவன்னருளான்முனியாப்பெற்றிகத்தவரே. (௪௬)

அவமதித்தஞ்சாகத்திரிட்டப்படுமோசக்கரத்
தவமதித்தெப்பிலொப்பனமின்றுருத்தகைமைப்பு
கவித்தத்தில்லைப்புச்சிற்றம்பலத்தையாடியநா
கெலித்திச்சேக்கினையாரறிக்கநிட்டசெல்வருமே. (௪௭)

வருவாசகத்தினின்றுற்றுணர்ந்தோரைவண்டிக்கையுமனைத்
திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பல
பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றதன்பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே. (௪௮)

சிரித்திட்டசெம்பவளத்தின்றிரளுஞ்செழுஞ்சடைமேல்
விரித்திட்டபைங்கதிர்த்திங்களும்வெங்கதப்பாம்புமின்றித்
தரித்திட்டவங்கையுஞ்சங்கக்குழையுமென்னெஞ்சிலுள்ளே
தெரித்திட்டவாதில்லைச்சிற்றம்பலத்துத்திருநட்டனே. (௪௯)

நடஞ்செய்சிற்றம்பலத்தான்முனிவெஞ்செய்யுங்காமனன்று
கொடுஞ்சினத்தீவிழித்தார்க்குக்குளிர்ந்தனன்யிற்கொடும்புன
விடுஞ்சினத்தானவர்வெந்திலர்வெய்தெனவெங்கதத்தைத்
தொடுத்தியானிகளைத்தானின்றதையுணவிட்டனனே. (௫0)

விட்டங்கொளிமணிப்பூண்பணிக்கச்சினன்மேன்மெய்புரைக்கி
லிட்டங்கரியனலன்றலைமலையம்பலத்தெம்பரன்மேற்
கட்டங்கயகலைமெய்ச்சுறுகனைப்பொன்றார்முடிமேற்
புட்டங்கிருள்மங்குமென்றுயார்க்கப்பொடிக்கனவே. (௬௧)

பொடியேர்தருமேனியனுஞ்சிப்பூசல்புகவடிக்கே
கடிசேர்கணைகுளிப்பக்கண்டுகோயிற்சருவியில்லா
வடியேபடவமர்புரிந்தவனென்றவராருணங்காண்
முடியேதருகழலம்பலத்தாடிதன்மொய்கழலே. (௬௨)

கழலும்படைபாசகாமிமையோர்தங்கழல்பணிந்திட்
டழலுமிருத்தித்திருக்குடையோரிடைப்பால்வைப்பாற்
நழுவத்தமருகமும்பிடித்தாடிசிற்றம்பலத்தைச்
சுழலுமொருகாலிருகால்வரவல்லதோன்றல்களே. (௬௩)

தோன்றலைவெய்யமதிதாங்கியைத்தன்வியமாலயற்குத்
தான்றலைபாதங்கள்சார்வரியோன்றன்னைச்சார்ந்தவர்க்குத்
தேன்றலையான்பாலதலந்தாலன்னையிறனைச்சீர்
வான்றலைநாதனைக்காண்பதென்றோதில்லைமன்றிடையே. (௬௪)

மன்றங்கமர்திருச்சிற்றம்பலவடவனத்து
மின்றங்கிடைக்குந்திரடகமாட்கொல்வெண்டாங்கச்
சான்றங்கிளர்க்களைகையானைசுடுசினத்தீயரவக்
கன்றங்கடைசடைமேலடையாவிட்டதைந்தவமே. (௬௫)

தவனைத்தவத்தவர்க்கன்பனைத்தன்னடியெற்குதவுஞ்
சிவனைச்சிவக்கத்திரிபுரத்தைச்சிலைத்தானைச்செய்ய
வவனைத்தவளத்திருநீறனைப்பெருநீர்கரந்த
பவனைப்புணரியுமினும்பண்டைவல்வினைபற்றறவே. (௬௬)

பற்றாரும்புரம்வெந்தழலைப்பொழிற்றில்லைதன்னுட்
செற்றருமாமணிக்கோயிலினின்றருதேவர்களுஞ்
சுற்றருளின்புகழேத்தித்திரிவதரும்சடையோய்
புற்றரவாட்டித்திரியுமதுவொருபுல்லனவே. (௬௭)



பல்லவழிவின்மற்றைத்தேவரும்பூம்புலியூருனின்ற
வல்லெரிமாமதிக்கண்ணியனைப்போலருளுவரே
கல்லெறிந்தானுந்தன்வாய்நீர்கதிர்முடிமேலுகுத்த
நல்லெறியாளனும்போவழிசென்றநண்ணினரே. (௬௮)

நண்ணரியநீவினைநாசஞ்செலுத்திநமனுலகத்
தெண்ணரியனீக்கியிமையோருலகத்திருக்கலுற்றீர்
பெண்ணிறைந்தோர்பாகத்தன்சிற்றம்பலத்தப்பெருநடனைக்
கண்ணினையார்தரக்கண்டுகையாரத்தொழுமின்களே. (௬௯)

கைச்செல்வமெய்திட்டலாமென்றயின்செய்தகண்டுமிழ்தல்,
பொய்ச்செல்வர்செய்திடும்புன்மைகட்கேயென்றும் பொன்ற
லில்லா, வச்செல்வமெய்திட வேண்டிதியேதில்லையம்பலத்து
னீச்செல்வன்பாதங்கருதிரந்தேனுன்னையென்னெஞ்சமே. (௭௰)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

# திருத்தொண்டர் திருவந்தாதி.

பொன்னிவடகரைசேர்நாரையூரிற்புழைக்கைமுக
மன்னனருளுற்றருமூவர்பதிகத்தமர்புசெய்யப்
பன்னவத்தொண்டத்தொகைவகைபல்கிப்பந்தாதிதனைச்
சொன்னமறைக்குலநம்பிபொற்பாதத்துணைதுணையே.

## தில்லைவாழந்தணர்.

செப்பத்தகும்புகழ்த்தில்லைப்பதியிற்செழுமறையோ
ரொப்பப்புவனங்கண்மூன்றிலுமுப்பரிசாமொளித்த
வப்பர்க்கமுதத்திருநடர்க்கத்திப்பிறைபுனைந்த
வப்பர்க்குரிமைத்தொழில்புரிவோர்தமைச்சொல்லுதமே. (௧)

## திருநீலகண்டக்குயவநாயனார்.

சொல்லச்சிவன்றிருவாணைதன்றூமொழித்தோகையையை
யொல்லைத்துறந்துருமூத்ததற்பின்னுமைகோனருளால்
வில்லைப்புரைநுதலாளொடிளமைபெற்றின்பமிக்கான்
றில்லைத்திருநீலகண்டக்குயவனுஞ்செய்தவனே. (௧)

## இயற்பகைநாயனார்.

செய்தவர்வேண்டியதியாதுங்கொடுப்பச்சிவன்றவனுங்
கைதவம்பேசிநின்காதலியைத்தருகென்றலுமே
மைதிகழ்கண்ணியையீந்தவன்வாய்ந்தபெரும்புகழ்வண்
டெய்தியகாவிரிப்பூம்பட்டினத்துளியற்பகையே. (௨)

## இளையான்குடிமாறநாயனார்.

இயலாவிடைச்சென்றமாதவர்க்கின்னமுதாவிதைத்த
வயலார்முளைவித்துவாரிமனையலகால்வறுத்துச்
செயலார்பயிர்விழுத்தீங்கறியாக்குமவன்செழுநீர்க்
கயலாரிளையான்குடியுடைமாறனெங்கற்பகமே. (௩)

## மெய்ப்பொருணாயனார்.

கற்றநன்மெய்த்தவன்போலொருபொய்த்தவன்காய்சினத்தாற்
செற்றவன்றன்னையவனைச்செறப்புகத்திருவாய்
மற்றவன்றத்தாநமரேயெனச்சொல்லிவானுலகம்
பெற்றவன்சேதிபன்மெய்ப்பொருளாமென்றுபேசுவரே. (௪)

## விறன்மிண்டநாயனார்.

பேசும்பெருமையவ்வாரூரனையும்பிரானவனு
மீசன்றனையும்புறகுதப்பட்டென்றவனீசனுக்கே
* நேசனெனக்கும்பிரான்மனைக்கேபுகநீடுதென்றல்
வீசும்பொழிற்றிருச்செங்குன்றமேயவிறன்மிண்டனே. (௫)

## அமர்நீதிநாயனார்.

மிண்டும்பொழிற்பழையாறையமர்நீதிவெண்பொடியின்
முண்டத்தரித்தபிரானல்லூரின்முன்கோவணநேர்
கொண்டிங்கருளென்றுதன்பெருஞ்செல்வமுந்தன்னையுந்தன்
ஒண்டமதிநுதலாளையுமீந்ததொழிலனே. (௬)



## சுந்தரமூர்த்திநாயனார்.

தொழுதும்வணங்கியுமாலயன்றேடருஞ்சோதிசென்றாங்
கெழுதுந்தமிழ்ப்பழையாவணங்காட்டியெனக்குன்றுடி
முழுதுமடிமையெனத்தாட்செயெனப்பெற்றவன்மூரிந்ற
ரெழுதுமனன்னற்றிருநெம்பிராணம்பியாரூரனே. (௭)

## எறிபத்தநாயனார்.

ஊர்மதின்மூன்றட்டவுத்தமற்கென்றேயுருயார்தவத்தோன்
றார்மலர்கொய்யாவருமவன்றண்டின்மலர்பறித்த
வூர்மலைமேற்கொளும்பாகருடனேயானைபாகருமவ
னேர்மலிமாமதிற்சூழ்கருவூரெறிபத்தனே. (௮)

## ஏனாதிநாதநாயனார்.

பத்தனையேறுதிநாதனைப்பார்த்திடையிலேதனது
மாத்தனைத்தவ்னேடமர்மலர்தாவெனுற்றிருநீறுகண்டு
கைத்தனிவாள்விடாழிந்தவன்கண்டிப்பதின்றருளு
நித்தனையீழக்குலதிபனென்பரீக்கினிலத்தே. (௯)

## கண்ணப்பநாயனார்.

நிலத்திற்றிகழ்திருக்காளத்தியார்திருநெற்றியின்மே
லலத்திற்பொழிதருகண்ணிற்குருதிகண்டுள்ளமஞ்சி
வலத்திற்கடுங்கணையாற்றன்மலர்க்கண்ணிடந்தப்பினான்
குலத்திற்கிராதனங்கண்ணப்பனென்றுகூறுவரே. (௰)

## குங்குலியக்கலயநாயனார்.

எய்ந்தகையுமதன்கண்டத்திற்பூட்டியெழிற்பனந்தாட்
சாய்ந்தசிவனிலைத்தானென்பர்காதலித்தாலிகொடுத்
தாய்ந்தநற்குங்குலியங்கொண்டனற்புகைகாலனைமுன்
காய்ந்தவரற்கிட்டதென்கடவூரிற்கலயனையே. * (௧௧)

## * மானக்கஞ்சாறநாயனார்.

கலசமுலைக்கன்னியாதற்புதல்விகமழ்குழலை
நலைசெய்தவத்தவன்பஞ்சவடிக்கீவைகல்லெனவு
மலசுமெனக்கருதாதவள்கூந்தலரிந்தளித்தான்
மலைசெய்மதிற்கஞ்சைமானக்கஞ்சாறனெனும்வள்ளலே. (௧௨)

## அரிவாட்டாயநாயனார்.

வளர்ப்பிறைக்குமுதேத்திருவருவோனுசனுமிங்கே
வெள்ளச்சடையர்யமுதுசெய்யாவிடிலென்றலையைந்
நள்ளத்தருமென்றுவாட்பூட்டியதடங்கையினைக்கா
ளைக்கள்ளப்பழனக்கண்மங்கலத்தரிவாட்டாயனே, (௧௪)

## ஆனாயநாயனார்.

ஆயவன்பாவுக்குந்தாழ்சடைமேற்றனித்திங்கள்வைத்த
ஆயவன்பாதந்தொடர்ந்தநெல்சீர்ஆனையார்பரவும்
வேயவன்மேன்மழநாட்டுவிரிபுனன்மங்கலக்கோ
னாயவனானயனென்னையுவந்தாண்டருளினனே. (௧௫)

## சுந்தரமூர்த்திநாயனார்.

அருட்டுறையத்தர்க்கடிமைப்பட்டேனினியல்லனென்னும்
பொருட்டுறையாவதென்னேயென்னவல்லவன்பூங்குவளை
யிருட்டுறைநீர்வயனாவற்பதிக்கும்பிரானடைந்தோர்
மருட்டுறைநீக்கிநல்வான்வழிகாட்டிடவல்லவனே. (௧௬)

## மூர்த்திநாயனார்.

உவந்திரிகுன்றமனுவதின்மாள்வனென்றன்றுலவாய்ச்
சிவன்றிருமேனிக்குச்செஞ்சந்தனமாச்செழுமுழங்கை [னார்
புவந்தொளிர்பாறையிற்றேய்த்தவன்கொண்டவொள்மூர்த்திதன
சிவந்தபொன்மாடமதுராபுரியென்னுஞ்சீர்ப்பதியே. (௧௭)

## முருகநாயனார்.

பக்கத்திகழ்தருபஞ்சாக்கரம்பயின்றுவிண்சேர்
மதியஞ்சடையார்க்கலர்தொட்டளிப்பவன்யாவர்மிழ்ந்த [ன்
அதியங்கழற்சண்பைநாதற்குத்தோழன்வன்றொண்டனம்பொ
னதிகம்பெறும்புகலூர்முருகனென்றுமாந்தனனே. (௧௮)

## உருத்திரபசுபதிநாயனார்.

அந்தாழ்புனறன்னில்லும்பகலுநின்றுருத்திர
மந்தாதவன்பொடிருந்திருசொல்லிக்கருத்தமைந்த
பைந்தாருருத்திரபசுபதிதன்னற்பதியங்கே
சந்தார்திருத்தலையூரென்றுரைப்பரிக்காவலத்தே. (௧௯)



## திருநாளைப்போவார்நாயனார்.

நாவார்புகழ்த்தில்லையம்பலத்தானருள்பெற்றநாளைப்,
போவானவனும்புறத்திருத்தொண்டன்றன்புன்புலைபோய்
மூவாயிரவர்கைகூப்பமுனியாயவன்பதிதான்
மாவார்பொழில்திகழாதனூரென்பரிம்மண்டலத்தே. (௨௦)

## திருக்குறிப்புத்தொண்டநாயனார்.

மண்டும்புனற்சடையான்றமர்தூசெற்றிவாட்டும்வகை
விண்டுமழைமுகில்விடாதொழியினியான்வீவனென்று
முண்டம்பட்டபாறைமுட்டுமெய்தினார்திருக்குறிப்புத்
தொண்டன்குலங்கச்சியேகாலியர்தங்கடொல்குலமே. (௨௧)

## சண்டேசுரநாயனார்.

குலமேறியசேய்ஞலூரிற்குரிசில்குரைகடல்சூழ்
தலமேறியவிறலசண்டிசண்டீசர்தந்தைதாளிரண்டும்
வலமேறியமழுவாலெறிந்தீசன்மணிமுடிமே
னலமேறியபால்சொரிந்தவர்சூட்டியநன்னிதியே. (௨௨)

## சுந்தரமூர்த்திநாயனார்.

நதியாரருந்திதென்வேள்விக்குடியாயங்கேமறைந்த
மதியேற்கதிருநிவைத்தபுகர்பின்னைமாற்றிடென்ன
அதியாவருள்சொன்னவாறிவரிடைப்பெற்றவன்கா
னதியார்புனல்வயனாவலர்கோனென்றுநற்றவனே. (௨௩)

## திருநாவுக்கரசுநாயனார்.

நற்றவனல்லூர்ச்சிவன்றிருப்பாதந்தன்சென்னிவைக்கப்
பெற்றவன்மற்றிப்பிறப்பறவீரட்டர்பெயகழற்கு
முற்றவனுற்றவிடமடையாரிட்டவொள்ளமுதாத்
துற்றவனாமூரினாவுக்கரசெனுநாமணியே. (௨௪)

மணியினைமாமறைக்காட்டுமருந்தினைவண்மொழியா
றணியனைநீள்கதவந்திறப்பித்தனைதெண்கடலிற்
பிணியனைக்கல்மிதப்பித்தனைசைவப்பெருநெறிக்கே
யணியனைநாவுக்கரையபிரானறவுருந்தமிழே. (௨௫)

## குலச்சிறைநாயனார்.

அருந்தமிழாகரன்வாதிலமணரைக்கழுநுதிமே
லிருந்தமிழ்நாட்டிடையேற்றுவித்தோனெழிற்சங்கம்வைத்த
பெருந்தமிழ்மீனவன்றன்னதிகாரிபிரசமல்கு
குருந்தவிழ்சாரன்மணமேற்குடிமன்குலச்சிறையே. (உ௬)

## பெருமிழலைக்குறும்பநாயனார்.

சிறைநன்புனற்றிருநாவலூராளிசெழுங்கயிலைக்
கிறைநன்கழலெய்துமவனருள்போற்றலின்றே
பிறைநன்முடியன்னடியடைவேனென்றுடல்பிரிந்தா
னறைநன்மலர்த்தார்மிழலைக்குறும்பனெனுநம்பியே. (உ௭)

## காரைக்காலம்மையார்.

நம்பன்றிருமலைநான்மிதியேனென்றுதாளிரண்டு
மும்பர்மிசைத்தலையானடந்தேறவுமைநகவந் [தெம்
செம்பொன்னுருவனென்னம்மையெனப்பெற்றவள்செழுந்தே
கொம்பினுக்காரைக்காலினின்மேயகுலதனமே. (உ௮)

## அப்பூதியடிகணாயனார்.

தனமாவதுதிருநாவுக்கரசின்சரணமென்று
மனமாப்புனற்பந்தர் வாழ்த்திவைத்தாங்கவன்வண்டமிழ்க்கே
யினமாத்தனதுபெயரிடப்பெற்றவனெங்கள்பிரா
னனமார்வயற்றிங்களூரினில்வேதியனப்பூதியே. (உ௯)

## திருநீலநக்கநாயனார்.

பூதிப்பயத்தர்புயத்திற்சிலந்திபுகவுமஞ்சி
யூதித்துமிழ்ந்தமனைவியைநீப்பவுப்பாலெல்லாம்
பேதித்தெழுந்தகொப்புளன்றிருநக்கன்சாட்டியமவ
வீதித்திகழ்சாத்தைநீலநக்கனெனும்வேதியனே. (௩௰)

## நமிநந்தியடிகணாயனார்.

வேதமறிக்கர்த்தாரூரனற்குவிளக்கெரிப்பத்
தீதுசெறியமண்கையராட்டாவிடத்தெண்புனலா
லேதமுறுகவருகென்றுநல்விளக்கெரித்தா
னாதனெழிலேமப்பேறூரதிபனமிநந்தியே. (௩௧)



## சுந்தரமூர்த்திநாயனார்.

நந்திக்குநம்பெருமாற்குநல்லாரூரிறையவர்க்குப்
பந்திப்பரியனசெந்தமிழ்பாடிப்படர்புனலிற்
சிந்திப்பரியனசேவடிபெற்றவன்சேவடியே
வந்திப்பவர்பெயர்வன்றொண்டனென்பர்வையகத்தே. (௩௨)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

வையமகிழயாம்வாழவமணர்வலிதொலைய
வையன்பிரமபுரத்தாற்கம்மென்குதலைச்செவ்வாய்
பையமிழற்றும்பருவத்துப்பாடப்பருப்பதத்தின்
றையலருள்பெற்றவனென்பர்ஞானசம்பந்தனையே. (௩௩)

பந்தார்விரலியர்வேள்செங்கட்சோழன்முருகனல்ல
சந்தாரகலத்துநீலநக்கன்பெயர்தான்மொழிந்த
கொந்தார்சடையர்பதிகத்திலிட்டடியேன்கொடுத்த
வந்தாதிகொண்டபிரானைக்காழியர்கொற்றவனே. (௩௪)

## ஏயர்கோன்கலிக்காமநாயனார்.

கொற்றத்திறலெந்தை தந்தைதன்றந்தையெங்கூட்டமெல்லாந்
தெற்றச்சடையாயநின்றடியேத்திசைவன்றொண்டனை
மற்றிப்பிணிதவிர்ப்பானென்றுவாளாலுருவியகோ
செற்றத்தவிர்கலிக்காமன்குடியேயர்க்குடியே. (௩௫)

## திருமூலநாயனார்.

குடிமன்னுசாத்தனூர்க் கோக்குலமேய்ப்போன்குரம்பைபுக்கு
முடிமன்னுகூனற்பிறையாளன்றன்னைமுழுத்தமிழின்
படிமன்னுவேதத்தின்சொற்படியேபரவிட்டென்னுச்சி
யடிமன்னவைத்தபிரான்மூலனாகின்றவங்கணனே. (௩௬)

## தண்டியடிகணாயனார்.

கண்ணார்மணியொன்றுமின்றிக்கயிறுபிடித்தரற்குத்
தண்ணார்புனற்றடந்தொட்டவன்றன்னைக்குறுமமணர்
கண்ணுக்கிழப்பவமணர்கலக்கக்கண்டம்மலர்க்கண்
விண்ணுப்பகனிடைப்பெற்றவனாரூர்த்தண்டியே. (௩௭)

மூர்க்கநாயனார்.

தண்டலைசூழ்திருவேற்காட்டூர்மன்னன்றகுசூதிற்
கொண்டவக்காசமுதன்குதனைவென்றுமுன் கொண்டடிமைக்கு
உண்டகன்னிற்றனடியவர்க்கீயவன்மூர்க்கனென்பர்
கண்டவர்தொண்டுபடைத்தவிண்மேற்றிருக்கடவே.

சோமாசிமாறநாயனார்.

குலப்பொழிலம்பரத்தனைச்சோமாசிமாறனென்பான்
வேதப்பொருளஞ்செழுத்தம்மையின்பியல்லாண்மொழியா
னிடப்பாகன்மன்னனினைத்தழியமண்டபனைவென்று
மாறுக்குக்காந்தவன்றொண்டன்றனக்குமகிழ்த்துணையே.

சுந்தரமூர்த்திநாயனார்.

துணையுமளவுமில்லாதவன்றன்னருளேதுணையாக்
கணையுங்கதிர்நெடுவேலுங்கறுத்தகயலிணையும்
பிணையுமிகர்த்தகட்சங்கிலிபரவைதன்தோளிணையு
மணையுமவன்றிருவாரூரனென்னுமவற்புகனே.

சாக்கியநாயனார்.

நட்டனையாதரவுஞ்சாக்கியன்மாக்கற்றுடைவரையின்
மட்டணைத்தாக்கக்குழைந்தில்போனாவன்செய்யாசெய்ய
நிகழ்த்தருட்மேனியிற்செங்கல்லெறிந்துசிவபதத்துப்
புகழ்த்தாப்புக்கவனூர்சங்கமங்கைப்புவனியிலே.

சிறப்புலிநாயனார்.

புவனியிற்பூதியுஞ்சாதனமும்போலியாரிதுவந்
தவகிறமர்க்குத்திறப்புச்செய்தத்துவயாமாலை
மவனியிற்கீர்த்திதென்னகர்க்கூழ்பெறாமறையோர்
திவளிடமாகதவஞ்செய்தசிறப்புலியே.

சிறுத்தொண்டநாயனார்.

புலியதளாருக்கட்டுப்புனர்விருந்திட்டமுதாந்தனையே
சொலியினச்சுத்தவனைக்குதலைப்புதல்வனுட்டரித்துக்
கலியின்வலிகெடுத்தோனும்புகழ்ச்சிறுத்தொண்டன்றன்
மலியும்பொழில்கொண்டசெங்காட்டங்குடியவர்மன்னவனே



சேரமான்பெருமாணாயனார்.

மன்னர்பிரானெதிர்வண்ணானுடலுவருதிநீறு
தன்னர்பிரான்றமர்போலவருதலுந்தான்வணங்க
வென்னர்பிரானடிவண்ணானெனவடிச்சேரனென்னுந்
தென்னர்பிரான்கழறிற்றறிவானெனுஞ்சேரலனே. (௬௪)

சேரற்குத்தென்னவலர்பெருமாற்குச்சிவனளித்த
வீரக்கடகரிமுன்புதன்பந்தியிவுளிவைத்த
வீரற்குவென்றிக்கருப்புவில்வீரனைவெற்றிகொண்ட
வூரற்கெனவுள்ளநின்றுசெய்தாயின்றுதொண்டுபட்டே. (௬௫)

கணநாதநாயனார்.

தொண்டரையாக்கியவரவர்க்கேற்றதொழில்கள்செய்வித்
தண்டர்தங்கோனக்கணத்துக்குநாயகஞ்பெற்றவன்காண்
கொண்டல்கொண்டேறியமின்னுக்குக்கோலமடல்கடொறுங்
கண்டல்வெண்சோறளிக்குங்கடற்காழிக்கணநாதனே. (௬௬)

கூற்றுவநாயனார்.

நாதன்றிருவடியேமுடியாகக்கவித்துநல்ல
போதங்கருத்திற்பொறித்தமையாலதுகைகொடுப்ப
வோதந்தழுவியஞாலமெல்லாமொருகோலின்வைத்தான்
கோதைநெடுவேற்களப்பாளனாகியகூற்றுவனே. (௬௭)

சுந்தரமூர்த்திநாயனார்.

கூற்றுக்கெவரேனுபுகறிருவாரூரன்பொன்முடிமே
லேற்றத்தொடையனும்மின்னடைக்காயுமிடுதருமக்
கோற்றொழிக்ககூடலனுங்கூடப்போய்க்குருடனுங்கண்பெற்றமை
சாற்றித்திரியும்பழமொழியாமித்தரணியிலே. (௬௮)

பொய்யடிமையில்லாதபுலவர்.

தரணியிற்பொய்ம்மையிலாத்தமிழ்ச்சங்கமதிற்கபிலர்
பரணர்நக்கீரர்முதனாற்பத்தொன்பதுமப்புலவோ
ரருண்மேம்பியதிருவாலவாயரன்சேவடிக்கே
பொருளமைத்தின்பக்கவிபலபாடியபுலவர்களே. (௬௯)

### புகழ்ச்சோழநாயனார்.

புலமன்னியமன்னைச்சிங்களநாடுபொடிபடுத்த
குலமன்னியபுகழ்ச்சோழனைநாதன்குலமுதலோ
னலமன்னியபுகழ்ச்சோழனென்பர்நகுசுடர்வாள்
வலமன்னியவெறிபத்தனுக்கீந்ததோர்வண்புகழே. (ருo)

### நரசிங்கமுனையரையநாயனார்.

புகழும்படியெம்பரமேதவர்க்குநற்பொன்னிடுவோ
னிகழும்படியோர்தவன்மடவார்புனைகோலமெய்க்கு
நிகழும்படிகண்டவனுக்கிரட்டிப்பொன்னிட்டவனி
டிக்குமுடிநரசிங்கமுனையரசன்றிறமே. (ருக)

### அதிபத்தநாயனார்.

திறமமர்மீன்படுக்கும்பொழுதாங்கொருமீன்சிவற்கென்
றுறவமர்மாகடற்கேவிடுவோனொருநாட்கனக
நிறமமர்மீன்படநின்மலற்கென்றுவிட்டோன்கமலம்
புறமமர்நாகையதிபத்தனாகியபொய்யிலியே. (ருஉ)

### கலிக்கம்பநாயனார்.

பொய்யைக்கடிந்து நம்புண்ணியர்க்காட்பட்டுத்தன்னடியாள்
சைவத்திருவுருவாய்வரத்தானவன்றாள்கழுவ
வையத்தவர்முன்புவெள்கிநீர்வாராவிடமனைவி
கைதனைத்தடிந்தவன்பெண்ணாகடத்துக்கலிக்கம்பனே. (ருங)

### கலியநாயனார்.

கம்பக்கரிக்குஞ்சிலர்திக்குலத்தியனூறுதளை
யும்பர்க்குநாதற்கொளிவிளக்கேற்றற்குடலிலன்றுய்க்
கும்பத்தடிலம்விற்றுஞ்செக்குழன்றங்கொள்கூலியினு
லம்பற்கெரித்தகலியொற்றிமாநகர்ச்சக்கிரியே. (ருச)

### சத்திநாயனார்.

கிரிவில்லவர்தம்மடியரைத்தன்முன்புபிழ்மைசொன்ன
திருவில்லவரையுநாவரிவோன்றிருந்தாரைவெல்லும்
வரிவில்லவன்வயற்செங்கழுநீரின்மருவுதென்ற
றெருவில்விரைகமழுந்தென்வரிஞ்சைச்சத்தியே. (ருரு)



### ஐயடிகள்காடவர்கோனாயனார்.

சத்தித்தடக்கைக்குமரனற்றாதைதன்றானமெல்லா
முத்திப்பதமொரோர்வெண்பாமொழிந்தமுடியரசா
மத்திற்குழும்மைமன்றுளரத்தனையயமேற்றலென்னும்
பத்திக்கடலையடிகளென்றாம்பல்லவனே. (ருசா)

### சுந்தரமூர்த்திநாயனார்.

பல்லவைசெங்கதிரோனைப்பறித்தவன்பாதம்புகழ்
சொல்லவன்றென்புகலூரரன்பாற்றுய்யசெம்பொன்கொள்ள
வில்லவனாட்டியத்தான்குடிமாணிக்கவண்ணனுக்கு
நல்லவன்றன்பதிநாவலூராகின்றநன்னகரே. (ருஎ)

### கணம்புல்லநாயனார்.

என்னகராயவிருக்குவேளூர்தனினல்குரவாய்ப்
பொன்னகராயதில்லைப்புகுந்துபுலீச்சரத்து
மன்னவராயவரற்குநற்புல்லால்விளக்கெரித்தான்
கன்னவிரொளிந்ததந்தைபிரானெங்கணம்புல்லனே. (ருஅ)

### காரிநாயனார்.

புல்லனவாகாவகையுலகத்துப்புணர்ந்தனவுஞ்
சொல்லினவுந்நயமாக்கிச்சுடர்பொற்குவடுதனி
வில்லனைவாழ்த்திவிளங்குங்கயிலைபுக்கானென்பராற்
கல்லனமாமதில்சூழ்கடவூரினிற்காரியையே. (ருகூ)

### நெடுமாறநாயனார்.

கார்த்தண்முகிற்கைக்கடற்காழியர்பெருமாற்கெதிரா
யார்த்தவமணரழிந்தனகண்டுமற்றாங்கவரைக்
கூர்த்தகழுவினுதிவைத்தபஞ்சவனென்றுரைக்கும்
வார்த்தையதுபண்டுநெல்வேலியில்வென்றமாறனுக்கே. (சாo)

### வாயிலார்நாயனார்.

மாறுவருளரன்றன்னைமனவாலயத்திருத்தி
யாறுவறிவாமொளிவிளக்கேற்றியகமலர்வாம்
வீறுமலரளித்தன்பெறுமெய்யமிர்தங்கொடுத்தான்
வீறார்மயிலையுள்வாயிலானென்றுவிளம்புவரே. (சாக

### முனையடுவார்நாயனார்.

என்றுமிளம்புவர்நீரதிபன்முனையடுவோ
னென்றுமமருளழிந்தவர்க்காக்கூலியேற்றெறிந்து
வென்றுபெருஞ்செல்வமெல்லாங்கனகன்மேருவென்று
குன்றுவளைத்தசிலையான்றமர்க்குக்கொடுத்தனனே. (௬௨)

### சுந்தரமூர்த்திநாயனார்.

கொடுத்தான்முதலைகொள்பிள்ளைக்குயிரன்றவுக்கொளியூர்த்
தொடுத்தான்மதுரகவியவிநாசியையெடர்கற்றம்
படுத்தான்றிருமுருகன்பூண்டியினிற்பரபரத்தேன்
மடுத்தானவனென்பர்வன்றொண்டனாகின்றமாதவனே. (௬௩)

### கழற்சிங்கநாயனார்.

மாதவத்தோர்தங்கள்சைவப்பிணுக்காரூர்மணிக்குவைத்த
போதினைத்தான்மோந்ததேவிதன்மூக்கையரிடப்பொற்றை
காதிவைத்தன்றேவரிவதென்றாங்கவள்கைதடிந்தா
னதமொய்த்தார்வண்டுகெண்டுபைங்கோதைக்கழற்சிங்கனே. ()

### இடங்கழிநாயனார்.

சிங்கத்தாருவனைச்செற்றவன்சிற்றம்பலமுகடு
கொங்கிற்கனகமணிந்தவாதித்தன்குலமுதலோன்
திங்கட்சடையர்தமரதென்செல்வமெனப்பறைபோக்
கெங்கட்கிறைவனிருக்குவேளூர்மன்னிடங்கழியே. (௬௫)

### செருத்துணைநாயனார்.

கழிநீள்கடனஞ்சயின்றார்க்கிருந்தகடிமலரை
மொழிநீள்புகழ்க்கழற்சிங்கன்றன்றேவிமுன்மோத்தலுமே
யெழினீள்குமிழ்மலர்மூக்கரிந்தானென்றியம்புவரார்
செழுநீர்மருகனன்னாட்டமர்தஞ்சைச்செருத்துணையே. (௬௬)

### புகழ்த்துணைநாயனார்.

செருவிலிபுத்தூர்ப்புகழ்த்துணைவையஞ்சிறுவிலைத்தா
வுருவலிகெட்டுணவின்றியுமைகோனைமஞ்சனஞ்செய்
தருவதோர்போதுகைசோர்ந்துகலசம்விழத்தரியா
தருவரைவில்லியருளுநிதியதுபெற்றனனே. (௬௭)



### கோட்புலிநாயனார்.

பெற்றமுயர்த்தோன்விரையாக்கலியிழைத்தோர்தமது
சுற்றமறுக்குந்தொழிற்றிருநாட்டியத்தான்குடிக்கோன்
குற்றமறுக்குங்கோட்புலிநாவற்குரிசிலருள்
பெற்றவருட்கடலென்றுலகேத்தும்பெருந்தகையே. (௬௮)

### சுந்தரமூர்த்திநாயனார்.

தருமகட்பேசினேன்வியவேநால்போனசங்கிலியாற்
புதுமணக்காதலினாலொற்றியூருறைபுண்ணியனற்
றிருமலர்ப்பாதம்பணிந்தருளாலிவ்வியனுலக
நரும்வழக்கேனன்மையாப்புணர்ந்தானாவலூரரசே. (௬௯)

### பத்தராய்ப்பணிவார்கள்.

அரசினையாரூரமரர்பிரானையடிபணிந்திட்
டுரைசெய்தவாய்தடுமாறியுரோமபுளகம்வந்து
காசரணாதியவயவங்கம்பித்துக்கண்ணருவி
சொரிதருமக்கத்தினோர்பத்தரென்றுதொகுத்தவரே. (௭௦)

### பரமனையேபாடுவார்.

தொகுத்தவடமொழிதென்மொழியாதொன்றுதோன்றியதே
யிருத்தவியலிசைவல்லவகையில்விண்டோயுநெற்றி
உருத்தமதிற்றில்லையம்பலத்தான்மலர்ப்பாதங்களுமே
வகுத்தமனத்தொடும்பாடவல்லோரென்பருத்தமரே. (௭௧)

### சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்.

உத்தமத்தானத்தறம்பொருளின்பமொடியெறிந்து
வித்தகத்தானத்தொருவழிக்கொண்டுவிளங்கச்சென்னி
மத்தம்வைத்தான்றிருப்பாதகமலமலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத்தாரென்பர்வீடுபெறெய்தியசெல்வர்களே. (௭௨)

### திருவாரூர்ப்பிறந்தார்கள்.

செல்வந்திகழ்திருவாரூர்மதில்வட்டத்துட்பிறந்தார்
செல்வன்றிருக்கணத்துள்ளவரேயதனாற்றிகழச்
செல்வம்பெருகுதென்னாரூர்ப்பிறந்தவர்சேவடியே
செல்வநெறியுறுவார்க்கணித்தாயசெழுநெறியே. (௭௩)

## முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்.

நெறியார்சடையாரைத்தீண்டிமுப்போதுநீடாகமத்தி
னறிவாலவணங்கியர்ச்சிப்பவர்நம்மையுமாண்டமரர்க்
கிறையாய்முக்கண்ணுமெண்டோளுந் தரித்திறில்செல்வத்தெ
முறைவார்சிவபெருமாற்குறைவாயவுலகினிலே. (௭௪)

## முழுநீறுபூசியமுனிவர்.

உலகுகலங்கினுமுழுதிரிமீறுமுன்னொருகால்
விலகுகலில்லாவிரையுபெற்றநல்வித்தகர்கா
னலகில்பெருங்குணத்தாருமார்த்தவரனடிக்கீ
ழிலகுவெண்ணீறுதம்மேனிக்கணியுமிறைவர்களே. (௭௫)

## அப்பாலுமடிச்சார்ந்தார்.

வருக்கமடைத்தரன்றொவலூர்மன்னவன்வண்டமிழாற்
பெருக்குமராத்தொகையிற்பிறைசூடிபெய்கழற்கே
யொருக்குமனத்தொடப்பாலடிச்சார்ந்தவரென்றுலகிற்
றெரிக்குமவர்சிவன்பல்கணத்தோர்களுஞ்செழுந்தவரே. (௭௬)

## சுந்தரமூர்த்திநாயனார்.

செழுநீர்வயன்முனைநாடன்றிலிற்செந்தமிழ்பாடிவெய்ய
மழுநீட்டக்கையனிந்தபொன்னுங்கொள்ளாதுவந்தப்
பொழுனிடருதிருவாரூரில்வாசியும்பொன்னுங்கொண்டோன்
கெழுநீள்புகழ்த்திருவாரூரனென்றுநாங்கேட்பதுவே. (௭௭)

## பூசலார்நாயனார்.

பதுமநற்போதன்னபாதத்தாற்கொருகோயிலையான்
கதுமெனச்செய்குவதென்றுகொலாமென்றுகண்டுயிலா
ததுமனத்தேயெல்விதோறுநினைந்தருள்பெற்றதென்பர்
புதுமணத்தென்றலுலாகின்றவூர்தனிற்பூசலையே. (௭௮)

## மங்கையர்க்கரசியார்.

பூசலிற்றென்னனார்க்கனலாகப்பொருமையினால்
வாசமலர்க்குழற்பாண்டிமாதேவியாமானிகண்டீர்
தேசம்விளங்கத்தமிழாகரர்க்கறிவித்தவரா
ளூசம்விளைத்தாளருகந்தருக்குத்தென்னாட்டகத்தே. (௭௯)



## நேசநாயனார்.

நாட்டமிட்டன்றரிவந்திப்பவெல்படைகல்கினர்தந்
தாட்டரிக்கப்பெற்றவனென்பர்சைவத்தவ்ரரையிற்
கூட்டுமெக்கப்பட்டங்கோவணநெய்துகொடுத்தன்மை
யீட்டுமெக்காம்பீலிச்சாலியநேசனையிம்மையிலே. (௮௦)

## கோச்செங்கட்சோழநாயனார்.

மைவைத்தகண்டனெறியன்றிமற்றோர்நெறிகருதாத்
தெய்வச்சூடிச்சோழன்முன்புசிலந்தியாய்ப்பந்தர்செய்து
சைவத்துருவெய்திவந்ததரணிநீடாலயங்கள்
செய்வித்தவன்றிருக்கோச்செங்கணானுஞ்செம்பியனே. (௮௧)

செம்பொனணிந்துசிற்றம்பலத்தைச்சிவலோகமெய்தி
நம்பன்கழற்கீழிருந்தோன்குலமுதலென்பர்நல்ல
வம்புமலர்த்தில்லையீசனைச்சூழமறையவர்க்கா
லிம்பநருந்தொங்கற்கோச்செங்கணானுநித்தனையே. (௮௨)

## திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்.

தனையொப்பருமெருக்கத்தம்புலியூர்த்தகும்புகழோ
னினையொப்பருந்திருநீலகண்டப்பெரும்பாணனைநீள்
சினையொப்பலர்பொழிற்சண்பையர்கோன்செந்தமிழொடிசை
புனையப்பாவருள்பெற்றவனென்பரிப்பூதலத்தே. (௮௩)

## சடையநாயனார்.

தலம்விளங்குந்திருநாவலூர்தன்னிற்சடையனென்னுங்
குலம்விளங்கும்புகழோனையுரைப்பர்குவலயத்தி
னலம்விளங்கும்படிநாம்விளங்கும்படிநற்றவத்தின்
பலம்விளங்கும்படியாரூரனைமுன்பயந்தமையே. (௮௪)

## இசைஞானியார்.

பயந்தாள்கறவுடைச்செங்கண்வெள்ளைப்பொன்னனீள்பனை
க்கைக், கயந்தானுகைத்தநற்காளையையென்றுங்கபாலங்கைக்
கொண், டயந்தான்புகுமாளூரர்ப்புனிதவரன்றிருத்தா, ளயந்
தாடனதுள்ளத்தென்றுமுரைப்பதுஞானியையே. (௮௫)

### சுந்தரமூர்த்திநாயனார்.

ஞானவாரூரரைச்சேரரையல்லதுநாமறியோ
மானவவாக்கையொடும்புக்கவரைவளரொளிப்பூண்.
வானவராலுமருவற்கரியவடகயிலைக்
கோனவன்கோயிற்பெருந்தவத்தோர்தங்கள்கூட்டத்திலே. ()

### திருத்தொண்டத்தொகையிலுள்ள
### கூட்டவடியார்கள் தனியடியார்கள்

கூட்டமொன்பானொடறுபத்துமூன்றுதனிப்பெயரா
வீட்டும்பெருந்தவத்தோரெழுபத்திரண்டாம்வினையை
வாட்டுந்தவத்திருத்தொண்டத்தொகைப்பதிகென்றின்வகைப்
பாட்டுந்திகழ்திருநாவலூராளிபணித்தனனே. (அஎ)

### திருத்தொண்டத்தொகைப்பதிகக்
### கவிகளின் முதற்குறிப்பு.

பணித்தனற்றொண்டத்தொகைமுதறில்லையிலைமலிந்த
வணித்திகழ்மும்மைதிருநின்றவம்பறாவார்கொண்டசீ
ரிணைத்தாறுபொய்யடிமைகறைக்கண்டன்கடல்சூழ்ந்தபின்
பணித்திகழ்சொற்பத்தர்மன்னியசீர்மறைநாவனென்றே. (அஅ)

### நூற்பயன்.

ஓடிடும்பஞ்சேந்திரியமொடுங்கிடுமென்னூழ்வினைகள்
வாடிடும்வண்ணநின்றேத்தவஞ்செய்தனன்வானிலுள்ளோர்
சூடிடுஞ்சீர்த்திருப்பாதத்தர்தொண்டத்தொகையிலுள்ள
சேடர்தஞ்செல்வப்பெரும்புகழந்தாதிசெப்பிடவே. (அகூ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி
அருளிச்செய்த

## ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி.

பார்மண்டலத்தினிற்பன்னிருபேரொடுமன்னிநின்ற
நீர்மண்டலப்படப்பைப்பிரமாபுரநீறணிந்த
கார்மண்டலக்கண்டத்தெண்டோளன்கருணைபெற்ற
தார்மண்டலமணிசம்பந்தன்மேவியதண்பதியே. (க)

பதிகப்பெருவழிகாட்டப்பருப்பதக்கோன்பயந்த
மதியத்திருநுதல்பங்கனருள்பெறவைத்தவெங்க
ணதியைப்பிரமாபுரநகர்மன்னனையென்னுடைய
கதியைக்கருதவல்லோரமரர்க்குங்காப்பவரே. (உ)

காப்பயில்காழிக்கவுணியர்தீபற்சென்காரணமா
மாப்பழிவாராவகையிருப்பேனென்னைமாரனென்னே
பூப்பயில்வாளிகளஞ்சுமென்னெஞ்சரங்கப்புகுந்த
வேப்பயில்வார்சிலைகால்வளையாநிற்குமீண்டிரவே. (௩)

இரவும்பகலுமின்பாதத்தலரென்வழிமுழுதும்
பரவும்பரிசேயருளுகண்டாயிந்தப்பார்த்தத்தே
விரவும்பரமதகோளரிவேகுடைவெள்வளைக
டரளஞ்சொரியுங்கடல்புடைசூழ்ந்ததராய்மன்னனே. (ச)

மன்னியமோகச்சுவையொளிஊறோசைநாற்றமென்றிப்
பன்னியவைந்தின்பதங்கடந்தோர்க்குந்தொடர்வரிய
பொன்னியல்பாடகக்கிங்கிணிப்பாதநிழல்புகுவோர்
அன்னியகாவமர்சண்பையர்காதற்குத்தொண்டர்களே. (ரு)

தொண்டினஞ்சூழச்சரிகுழலார்தம்மனந்தொடர
வண்டினஞ்சூழ்வருமியல்போலுமையிருட்த
கண்டினஞ்சூழ்ந்தவளைபிரம்போர்கழுவாவடலம்
விண்டினஞ்சூழக்கழுவினவாக்கியவித்தகனே. (௬)

வித்தகம்பேசிநம்வேணுத்தலைவனைவாளியர்ந்த
முத்தகங்காட்டுமுறுவலல்லார்நமணமனைய
வுய்த்தகம்போந்திருந்துள்ளவுமில்லாதனவுமுறு
புத்தகம்பாடுமப்புலைப்பாணனப்புணர்க்கின்றதே. (௭)

புணர்ந்தநன்மேகச்சிறாண்டுளியிற்சிறகொதுக்கி
யுணர்ந்தனர்போலவிருந்தனையாலுலகம்பரசும்
குணந்திகழ்ஞானசம்பந்தன்கொடிமதிற்கொச்சையின்வாய்
மணந்தவர்போயினரேசொல்லுவாழிமடக்குருகே. (௮)

குருந்தலர்முல்லையங்கோவலரேற்றின்கொலைமருப்பா
லருந்திறலாகத்தழுந்தசெஞ்சேற்றருகாசனிதன்
பெருந்திறமாமதிற்சண்பைநகரன்னபேரமைத்தோட்
டிருந்திழையார்வம் முரசே. (௯)

முரசங்கறையமுன்றோரணநீடமுழுநிதியின்
பரிசங்கொணர்வாணமையென்றவர்பலர்பார்த்திலர்நீ
யரிசங்கணைதலென்றுமுன்கருதருகாசனிதன்
கரிசங்கணைவயற்றந்நகரன்னதாமொழிக்கே. (௰)

மொழிவதுசைவசிகாமணிசூரித்தடவரைத்தோ
டொழுவதுமற்றவன்றாமலர்ப்பாதங்கடாமங்கமழ்ந்
தெழுவதுகூந்தலம்பூந்தாமரையினியாதுகொலோ
மொழிவதுசேரி மாதர்முறுவலித்தே. (௧௧)

வலிகெழுகுண்டர்க்குவைகைக்கரையன்றுவான்கொடுத்த
கலிகெழுதிண்டோட்கவுணியர்தீபன்கடலுடுத்த
வொலிதருநீர்வையகத்தைப்புறமிட்டதொத்ததிரு
மலிதருவார்பணியாமடமாதினைவாட்டுவதே. (௧௨)



வாட்டுவர்தந்துயரைவன்கேழலின்பின்புசென்ற
வேட்டுவர்கோலத்துவேதத்தலைவனைமெல்விரலாற்
றேட்டியக்காதலிவனென்றுதாதைக்குச்சூழ்விசும்பிற்
காட்டியகன்றின்கழற்றிறமானவைகற்றவரே. (௧௩)

அவர்சென்றணுகுவர்மீள்வதின்றன்னையருகர்தம்மைத்
தவர்கின்றதண்டமிழ்ச்சைவசிகாமணிசண்பையென்னப்
பவர்கின்றதீள்கொடிக்கோபுரம்பல்கதிரோன்பரியைக்
கவர்கின்றகுலத்தொடுநின்றுதோன்றுங்கடிநகரே. (௧௪)

நகரங்கெடப்பண்டுதிண்டேர்மிசைநின்றுநான்மறைகள்
பகரங்கழலவனைப்பதினாறாயிரம்பதிக
மகரங்கிளர்கடல்வையத்துயர்கெடவாய்மொழிந்த
நிகரங்கிலிகலிக்காழிப்பிரானென்பர்நீணிலத்தே. (௧௫)

நிலமேறியமருப்பிற்றிருமாலுநிலம்படைத்த
குலமேறியமலர்க்கோகனதத்தயனுங்கொழிக்குஞ்
சலமேறியமுடிதாள்கண்டிலர்தாதைகாணவன்று
நலமேறியபுகழ்ச்சம்பந்தன்காட்டியநாதனையே. (௧௬)

நாதனைப்பள்ளிசூழ்நகர்காணகமாக்கியஃதே
போதின்மலிவயலாக்கியகோனமர்பொற்புகலி
யோதநெடுங்கடல்காருங்கயலோவிலைக்குளாத
காதினளவுமிளிர்கயலோசொல்லுசாரிகையே. (௧௭)

கைம்மையினின்கழல்பரவாதகண்டார்க்கிவனோர்
வன்மையனேயென்றும்வண்ணநடித்துவிழுப்பொருளோ
டிம்மையில்யானெய்துமின்பங்கருதித்திரிதருமத்
தன்மையினேற்குமருளுதியோசொல்லுசம்பந்தனே. (௧௮)

பந்தாரணிவிரற்பங்கயக்கொங்கைப்பவளச்செவ்வாய்க்
கொந்தார்நறுங்குழற்கோமளவல்லியைக்கூறருஞ்சீர்
நந்தாவிளக்கினைக்கண்டதனாளெப்பொழுதுமுன்னுஞ்
சந்தாகலத்தருகாசனிதன்றடவரையே. (௧௯)

வரைகொண்டமாமதிற்சண்பைத்தலைவனைவாழ்த்தலர்போ
னிரைகொண்டுவானோர்கடைந்திளைஞ்சாகரக்கோலா
லுரைகொண்டுமெய்ப்பரத்துள்ளஞ்சுழலவொரோரியவர்
திரைகொண்டலமருமிவ்வகன்ஞாலஞ்செறிகடலே. (உ0)

கடலன்னபொய்ம்மைகள்செய்யினும்வெய்யகடுநரகத்
திடமன்னவுதற்கெவ்விடத்தாலிருஞ்செந்தமிழாற்
றிடமன்னுமாமதிற்சண்பைத்தலைவன்செந்தாமரையின்
வடமன்னுநீன்முடியானடிப்போதனைவாழ்த்தினமே. (உக)

வாழ்த்துவதெம்பரமேயாகுமந்தத்துவையமுந்நீ
ராழ்த்தியகாலத்தமாமுதாதவரன்சேவடியே
யேத்தியஞானசம்பந்தற்கிடமிசைத்தாம்பிகொம்பர்க்
காத்திகழ்கேதகைப்போதசமீறுங்கழுமலமே. (உஉ)

மலர்பயில்வாட்கண்ணிகேள்கண்ணிநீன்முடிவண்கமலப்
பலர்பயில்கீர்த்திக்கவுணியர்தீபன்பாகவரென்னத்
தலைபயில்பூம்புனற்கொய்திதிமேகணியார்புலம்ப
வலைபயிலாமுன்பறித்தனமாஇலரும்பினையே. (உங)

அரும்பினவன்பில்லையர்ச்சனையில்லையரனெறியே
விரும்பினமார்தற்குமெய்ப்பணிசெய்கிலம்பொய்க்கமைந்த
விரும்பினவுள்ளத்தினோற்கெங்ஙனேவந்துநேர்பட்டதாற்
கரும்பனநீள்வயற்குழைகாழிநாதன்கழலடியே. (உச)

அடியாலலர்மிதித்தாலரத்தயில்கயிர்தமிழ்ச்செந்திக்
கொடியானெறும்பின்வடந்தவெவ்வாறலர்கோகனகக்
கடியார்நறுங்கண்ணிஞானசம்பந்தன்கருதலர்சேர்
வெடியாவிடுவெம்பரற்கானதாவியன்சாரத்தே. (உரு)

சுரபுரத்தார்தந்துயருக்கிரங்கிச்சுரர்கடங்கள்
பரபுரத்தார்தந்தையாகணடமுடும்பரமன்மன்னு
மரபுரத்தானடிபெய்தவனெனப்படுவனடிசேர
வரபுரத்தானடியாரடியேனையாளுந்திண்ணனவே. (உசு)



திண்ணனவார்சென்றநாட்டிடையில்லைகொழிந்தமிழோர்
கண்ணனைவேலாங்குங்கவுணியர்தீபனைப்போற்பொழிந்த
விண்ணினைவாய்முல்லைமெல்லரும்பினைமற்றியாமெலிய
வெண்ணிலைநாள்வழுவாதிரைத்தோடியெழுமுகிலே. (உஎ)

எழுவாய்மதியால்வெதுப்புண்டமைந்தெழுந்தவிம்மித்
தொழுவாடனக்கின்றருணகொலாந்தொழுநீரவைகைக்
குழுவோடெதிர்ந்தமுறிகைப்பதிதலைக்குண்டர்தங்கள்
கழுவாவுடலங்கழுவினவாக்கியகற்பகமே. (உஅ)

கற்பாநறவமணிகொழித்துக்குமலைச்சிலம்பா
நற்பாமொழியெழின்ஞானசம்பந்தன்புறவமன்ன
விற்பாவுநுதலிதன்மென்முலையின்னிளஞ்செவ்விகண்டிட்
டிற்பாவிடும்வண்ணமென்னுநின்றாளம்மெல்லம்மனையே. (உகூ)

அம்மனையாமெங்கையுமெனையாளுமென்றுயர்தவிர்த்த
செம்மலர்நீன்முடிஞானசம்பந்தன்புறவமன்னீர்
வெம்முனைவேலெவ்வெண்ணிலிர்நுவெருந்தகுபொன்
அம்மனைவோவல்லவோவந்தெனுள்ளந்தெளிர்வனவே. (ங0)

தெளிவமணிப்பணிகாட்டுமுலகத்தழும்பருளும்
வெளிநுயட்டிலிற்பதாண்டேயின்டிமீனுகளு
மளாவுபற்சண்பைநாதனமுகப்படிகமென்றும் (ஙக)
களிவளிடப்புகுமேற்கொண்டார்பாவெக்கவினாதனே.

கவிக்குந்தருவனகவுணுக்கினியவனேட்டின்பஞ்
செவிக்குந்தருவனமிர்தைக்குரியவனடைந்தோர்
நவிக்கட்டிரையியர்முற்றின்முகக்தஞ்சக்கிறதிருமாவு
ருவிக்கத்திரையர்க்குந்தொச்சைநாதன்குரைகழலே. (ஙஉ)

கழல்கின்றனவங்கணையர்நியுமன்றிதுக்காலபரப்பிச்
சுழல்கின்றதென்றலும்வந்திங்கடர்ப்பவன்றுயிலைழக்காச்
சுழல்கின்றநஞ்சந்தணித்தவன்றன்னைத்தொடர்ந்துபின்போ
யழல்கின்றநெஞ்சமிங்கென்னோவினிபின்றாறுஇன்றதே. (ஙங)

உறுகின்றவன்பிறனாட்டத்தியதாளமுமுள்ளுருகிப்
பெறுகின்றவின்பம்பிறைநுதன்முண்டமுங்கண்டவரைத்
தெறுகின்றவாறென்னசெய்தவமோவந்தென்சிந்தையுள்ளே
யுறுகின்றபாதன்கழுமலம்போலுந்துடியிடைக்கே. (௫௪)

இடையுமெழுதாதொழியுமாமினவன்றிகளின்
புடையுமெழுதிலும்பூங்குழலொக்குமப்பொன்னனையா
ளடையுமகையுந்தமிழாகரன்றன்புகலிநற்றே
னடையுமொழியுமெழுதிற்சாலவதிசயமே. (௫௫)

மேனாட்டமரர்தொழவிருப்பாரும்வினைப்பயன்க
டானாட்டருகாதிற்றனராவாருந்தமிழ்த்தங்கள்
கோனாட்டருகர்குழாம்வென்றகொச்சையர்கோன்கமலப்
பூநாட்டடிப்பணிந்தாருமல்லாதபுலையருமே. (௫௬)

புலையடித்தொண்டனைப்பூசுரனாக்கிப்பொருகயற்கண்
மலைமடப்பாவைக்குமாநடமாடுமணியையென்றன்
றலையிடைப்பாதனைக்கற்றுங்குரைத்தசம்பந்தனென்று
முலையிடைப்பொன்கொண்டு சங்கிழந்தாளென்றன்மொய்குழ[லே.

குழலியலின்கவிஞானசம்பந்தன்குரைகழல்போற்
கழலியல்பாதம்பணிந்தேனனையுங்கதிரவனே
தழலியல்வெம்மைதணித்தருணிதணியாதவெம்மை
பழலியல்கானடந்தாள்வினையேன்பெற்றவாரணங்கே. (௫௮)

அணங்கமர்யாழ்முரிந்தாண்பனைபெண்பனையாக்கியமண்
கணங்கழுவேற்றிக்கவிடந்தீர்த்தக்கதவடைத்துப்
பிணங்கலைநேரிரோடஞ்செலுத்தினவெண்பிறையோ
டிணங்கியமாடச்சிரபுரத்தான்றனிருந்தமிழே. (௫௯)

இருந்தண்புகலிக்கோலக்காவெழிலாவடுதுறைசீர்
பொருந்துமரத்துறைபோனகந்தாளநல்பொன்சிவிகை
யருந்திடவொத்தமுத்திசெயவேறவரனளித்த
பெருந்தகைசீர்னையெம்பரமோசின்றுபேசுவதே. (௬௦)



பேசுந்தகையதன்றேயின்றமன்றார்தமிழ்விரகன்
றேசமுழுதுமமழைமறந்தாண்கெடச்செந்தழற்கை
யீசன்றிருவருளாலெழில்வீழிமிழலையின்வாய்க்
காசின்மழைபொழிந்தானென்றிந்ஞாலந்தவின்பெறவே. ௬௧

பெறவுதுமிச்சயமஞ்சனெஞ்சேபிரமாபுரத்து
மறுவறுபொற்கழன்ஞானசம்பந்தனைவாழ்த்துதலால்
வெறியுறுகொன்றைமறியுறுசெங்கைவிடையெடுத்த
பொறியுறுபொற்கொடியெம்பெருமானமர்பொன்னுலகே. ௬௨

பொன்னார்மதில்சூழ்புகலிக்கரசையருகர்தங்க
டென்னாட்டரணட்டசிங்கத்தினையெஞ்சிவனிவனென்
றந்நாள்குதலைத்திருவாய்மொழிகளருளிச்செய்த
வென்றனைப்பணிவார்க்கில்லைகாண்கயமாலயமே. (௬௩)

மாலையோப்பார்கும்பிறைமுன்புகின்றமணிகுழைக்கி
வேலையைப்பாடனைத்தாங்கெழின்மன்மதன்விற்குனித்த
கோலையெப்போதும்பிடிப்பன்வடுப்படுகொக்கினஞ்சூழ்
சோலையைக்காழித்தலைவன்மலரின்றருகுடிடனே. (௬௪)

குடிநற்குர்த்தமிழாகரன்றன்பொற்கட்டார்வரைத்தோள்
கூடுதற்கேசற்றகொம்பினையீயுக்கொடும்பங்கின்
முடிதற்கேயத்தனைக்குணையேயின்னையாடரவம்
வர்டிடக்காருமறுவும்படுகின்றவாண்மதியே. (௬௫)

மதிக்கத்தகுநுதன்மார்தொடுமெங்கண்மலையில்லைகித்
துதிக்கத்தகுசண்பைநாதன்கருதிகட்டழவோர
மிதிக்கக்கமலமுகிழ்த்ததண்டேறன்பேர்வீன்டிவரால்
குதிக்கக்குருகிரியுங்கொச்சைசாருகுறுகுயினே. (௬௬)

குறுமணமுள்கலவாத்தமிழாகரன்கொச்சையன்ன
நறுமலர்மென்குழலாயஞ்சலெம்மூர்நகுமதிசென்
றுறுமலையொண்சுவரோவியக்கிள்ளைக்குநம்பதியிற்
சிறுமிகள்சென்றிருந்தங்கைகையடிட்டுவர்சேயிழையே. (௬௭)

இறைவனாகத்தஞ் ஞானசம்பந்தனிருஞ்சருதிக்
கறைவளர்குன்றகடத்தறைக்காண்பிர்கடைசியர்பின்
முறைவளர்கன்றுபடத்தடஞ்சாலிமுத்தாக்கிலாக்கு
மறைவளர்நீள்குடிமிப்பொழில்சூழ்ந்தவளவயலே. (சஅ)

வயலார்மருதப்பதிதன்னில்வாளரவாற்கடியுண்
டயலார்விழுந்தவனைக்கிரங்கியரிவழிந்த
கயலார்கருங்கண்ணிதன்றுயர்தீர்த்ததுசுருதிவெள்ளப்
புயலார்தருகையிருவென்னைத்தோன்றியபுண்ணியமே. (சகூ)

புண்ணியநாடுபுகுவதற்காகப்புனைடக்கிற
வெண்ணியசெய்தொழிலிற்பரிதல்விருப்பீர்,தியானெனக்கு
நண்ணியசெய்தொழிஞானசம்பந்தனைநந்தமர்நீர்
கண்ணியன்மாடக்கழுமலத்தானைக்கருதுவதே. (ரு0)

கருதத்தவங்குளிர்த்தருஞ்ஞானசம்பந்தன்சண்பை
யிரதக்கிளிமொழிமாதேகலங்கலிவருடலம்
பொருதக்குழிவையாக்குவனார்தமர்போர்ப்படையேன்
மருதச்செரிமயிற்பொதும்பருளோதிமறைகுவனே. (ருக)

மறைமுழங்குங்குழலார்கலிகாட்டவயற்கடைஞர்
பறைமுழவக்குரும்புகலித்தமிழாகரன்பற்றலர்போற்
றுறைமுழங்குங்கரிபிடிமடங்கல்சுடர்ப்பளிங்கி
னறைமுழங்கும்வழிநீவரிற்சாலவரும்பழியே. (ருஉ)

பழிக்கேதருகின்றதின்றிப்பிறைபல்கதிர்விழுந்த
வழிக்கேதிகழ்தருசெக்கரைக்கொச்சைவயவரென்று
மொழிக்கேவிரும்பிமுளரிக்கலமருமோவியர்தங்
குழிக்கேசருமுருவத்திவள்வாட்டிடக்கிள்கின்றதே. (ருங)

கிளரிக்குன்றத்தரவமுமிழ்ந்தகிளர்மணியின்
வளரிக்கும்வைகைமாண்டனரென்பர்வயற்புகலித்
தாளரிக்கும்மரியானருள்பெற்றபரசமய
கோளரிக்குந்திகழ்தமிழ்நாட்டுள்ளகுண்டர்களே. (ருச)



குண்டகழ்சூழ்தருகொச்சைத்தலைவன்றன்குன்றகஞ்சேர்
வண்டகமென்மலர்வல்லியன்னீர்வரிவிற்புருவக்
கண்டகவாளிபடப்புடைவீழ்செங்கலங்கலெல்லாம்
புண்டகக்கேழல்புகுந்ததுண்டோவுங்கள்பூம்புனத்தே. (ருரு)

புனத்தெழுமைம்மதக்குன்றமதாயங்கொர்புண்கலையாய்
வனத்தெழுசந்தனப்பைந்தழையாய்வந்தவந்தடியேன் [ன்
மனத்தெழுபொற்கழன்ஞானசம்பந்தன்வண்கொச்சையன்ன
கனத்தெழுகொங்கைகளாயல்குலாய்த்திவர்கட்டுரையே. (ருசு)

கட்டதுவேகொண்டுகள்ளுண்டுறங்கைகளாற்கணங்கை
யிட்டதுவேயன்றியெட்டனைத்தானிவளுள்ளுறுநோய்
விட்டதுவேயன்றிவெங்குருநாதன்றன்பங்கயத்தின்
மட்டவிழ்தார்கொண்டுசூட்டுமின்பேதைமகிழ்வுறவே. (ருஎ)

உறவும்பொருளுமொண்போகமுங்கல்வியுங்கல்வியுற்ற
அறவுமறவிப்பயனுமெனக்குச்சுழிந்தபுனற்
புறவம்பொழிலும்பொழில்சூழ்பொதும்புந்தம்பவண்டி
னறவும்பொழிசெழிற்காழியர்கோன்திருநாமங்களே. (ருஅ)

நாமுகந்தேத்தியஞானசம்பந்தனைநண்ணலர்போ
லேமுகவெஞ்சரஞ்சிந்திவல்விஞ்சியிடிபடுக்கத்
தீமுகந்தோன்றிகடோன்றத்தளவமுகையரும்பக்
காமுகம்பூமுகங்காட்டிநின்றார்த்தனகாரினமே. (ருகூ)

காரங்கனைபொழிற்காழிக்கவுணியர்தீபனல்லூர்ச்
சீரங்கனைநற்பெருமணத்தன்னிறைவாரத்து
வாரங்கனைகொங்கைநாடொறும்புக்குறும்போதுவந்தா
ராரங்கொழிந்தனர்பெற்றதல்லாலவ்வரும்பதமே. (சு0)

அரும்பதமாக்குமடியரொடஞ்சலித்தார்க்கரிய
பெரும்பதமெய்தலுற்றீர்வந்திறைஞ்சுமின்பேரரவம்
வரும்பதாரண்மறைக்காழித்தலைவன்மலர்க்கமலத்
தரும்பதஞானசம்பந்தனென்னுந்தன்றுணையே. (சுக)

சீரின்சரணங்கருஞ்சண்பைநாதன்றரியலர்போற்
றீளின்மலங்கவிலங்கேபுகுந்திசிக்கெண்டைகளும்
வாளுந்தொலையமதர்த்திருகாதினளவும்வந்து
மீளுங்கருங்கண்ணியின்புரியாவைத்ததென்னையையே. (௬௨)

நகுகின்றமுல்லைநன்னாறெரிகண்டத்தவர்கவர்ந்த
மிகுகின்றநன்னிதிகாட்டினகொன்றைவிரவலரூர்
புகுகின்றதீயெனப்பூத்தனதோன்றிபுறவமங்கைத்
தகுகின்றகோடல்களன்பரின்றெய்துவர்கார்மயிலே. (௬௩)

மயிலேந்தியவள்ளறன்னையளிப்பமதிபுணர்ந்த
வெயிலேந்தியசண்பைநாதனுலகத்தெதிர்ப்பவர்யார்
குயிலேந்தியபொழிற்கொங்கேந்தியகொம்பின்புதழீஇ
யயிலேந்தியமலர்கண்பிளறுய்வந்தவண்ணனுக்கே. (௬௪)

அண்ணன்மணிவரைத்தோளருகாசனிசண்பையன்ன
பெண்ணினமிர்தநல்லாள்குழனாற்றம்பெடையொடும்பூஞ்
சுண்ணந்துதைந்தவண்டேகண்டதுண்டோகொறாங்கொலேர்த்
தண்ணம்பொழிலெழிற்காசினிபூத்தமென்றாதுகளே. (௬௫)

தாதுகற்றோய்த்தநஞ்சன்றுசியார்சடலம்படுத்துத்
தூதையிற்சிக்கங்காஞ்சேர்த்துவாளாதுக்குகின்றீர்
போதியிற்புத்தர்கள்வம்மின்பு பர்கோனன்னநாட்
காதியிட்டேற்றுங்கழுத்திறம்பர்க்களித்திடவே. (௬௬)

களியுறுதேன்றூக்கவுணியர்தீபன்கருதலர்போல்
வெளியுறுஞாலம்புகலிழந்தால்விரையார்கமலத்
தளியுறுமென்மலர்த்தாதனைந்தாழியமைப்பவருந்
துளியுறுவாடையிதாமடமானைத்துவள்விப்பதே. (௬௭)

தேறும்புனற்றில்லைச்சிற்றம்பலத்துச்சிறந்தவர்தாள்
ளூறுமமிர்தைப்பருகிட்டெழுவதொருட்களிப்புக்
கூறும்வழிமொழிதந்தெனைவாழ்வித்தவன்கொழுந்தே
நாறுமலங்கற்றமிழாகரனென்னுநன்னிதியே. (௬௮)



நிதியுறுவாரறவின்பம்வீடெய்துவரென்னவேதந்
துதியுறுநீள்வயற்காழியர்கோனைத்தொழாரிணைய
நதியுறுநீர்தெளித்தஞ்சலெனவண்ணலன்றேவெறு
மதியுறுவாணுதல்பாதம்பணிந்தனண்மன்னனையே. (௬௯)

மன்னங்கனைசெந்தமிழாகரன்வெற்பில்வந்தொருவ
ரன்னங்களஞ்சன்மினென்றடர்வேழத்திடைவிலங்கிப்
பொன்னங்கலைசாவலைகையெடுத்தாற்கிவள்பூணமுந்தி
யின்னந்தழும்புளவாம்பெருமாதுமவ்வேந்தனுக்கே. (௭௦)

ஏந்துமுலைக்குறவீர்பொழினீலந்தக்கற்குமின்பப்
பூந்தண்புகலூர்முருகற்குந்தோழனைப்போகமார்பவைக்
காந்துங்கனலிற்குளிர்படுத்துக்கடற்கூடலின்வாய்
வேந்தின்றுயர்தவிர்த்தானையெப்போதும்விரும்புமினே. (௭௧)

விரும்புபுதல்வனைமெய்யரிந்தாக்கியவின்னமிர்த
மரும்பும்புனற்சடையாயுண்டருளென்றடிபணிந்த
விரும்பின்சுடர்க்களிற்றன்சிறுத்தொண்டனையேத்துதிறோற்
சுரும்பின்மலர்த்தமிழாகரன்பாதத்தொடர்வெளிதே. (௭௨)

எளிவந்தவாவெழிற்பூவைஞான்மணித்தார்சழுகத்
துளிவந்தகண்பிசைத்தேங்கலுமெங்களரன்றனையாங்
கிளிவந்தசொல்விபொற்கிண்ணத்தின்ஞானவமிர்தளித்த
வளிவந்தபூங்குஞ்சியின்சொற்பிரக்கன்றனருளே. (௭௩)

அருளுந்தமிழாகரனினலங்கறந்தென்பெயராச்
சுருளுங்குழலியற்கித்திலையேமுன்புணங்குகராத்
தெருளுங்களிற்றினொடோட்டருவானையருளியன்றே
மருளின்மொழிமடவாள்பெயரென்கண்வருவிப்பதே. (௭௪)

வருவாருருவின்வழிவழிவைத்தவனமருந்த
திருவாரிருந்தசெழுநகர்ச்செவ்வித்திருவடிக்கா
டருவான்றமிழாகரன்கரம்போற்சலம்வீசக்கண்டு
வெருவாவணங்கொண்டலகண்மீண்டிவானத்துமின்னியவே. ()

மின்னார்குடுமிநெடுவெற்பகங்கொங்கில்வீழ்பனிநோய்
தன்னால்வழிகெட்டழிந்தமைசொல்லுவர்காணிலறவே
மன்னார்பரிசனத்தோர்மேற்புகலுமெவர்க்குமிக்க
நன்னாவலர்பெருமானருகாசனிநல்கிடவே. (எசு)

நல்கென்றடியிணைபணியார்சண்பைநம்பெருமான்
பல்கும்பெரும்புகழ்பாடகில்லார்சிலர்பாழ்க்கிறைத்திட்
டொல்குமுட்டம்பினராய்வழிதேடிட்டிடறிமுட்டிப்
பில்குமிட்டமறியார்கெடுவாருறுபேய்த்தனமே. (எஎ)

தனமேதருபுகழ்ச்சைவசிகாமணிதன்னருள்போல்
மனமேபுகுந்தமடக்கொடியேமலர்மேலிருந்த
வனமேயமிர்தக்குமுதச்செவ்வாயுங்களாயமென்று
மினமேபொலியவண்டாடெழிற்சோலையுளெய்துகவே. (எஅ)

உகட்டித்துமோட்டுவராலினமேதிமுலையுரிஞ்ச
வகட்டிற்சொரிபாற்றடநிறைகொச்சைவயத்தரசைத்
தகட்டிற்றிகழ்மணிப்பூண்டமிழாகரன்றன்னையல்லாற்
பகட்டிற்பொலியினும்வேண்டேனொருவரைப்பாடுதலே. (எகூ)

பாடியசெந்தமிழாற்பழங்காசுபரிசில்பெற்ற
நீடியசீர்த்திருஞானசம்பந்தனிறைபுகழா
னேடியபூந்திருநாவுக்கரசோடெழின்மிழலைக்
கூடியகூட்டத்தினாளுளதாய்த்திக்குவலயமே. (அ0)

வலயத்திணிதோண்மிசைமழுவேற்றிமனைப்புறத்து
நிலையெத்தனைபொழுதாகண்டதூரனைநீதிகெட்டார்
குலையக்கழுவின்குழுக்கண்டவன்றிகழ்கொச்சையன்ன
சிலையொத்தவாணுதன்முன்போன்மலர்த்திருக்கண்களே. (அக)

கண்ணார்நுதலோன்கோலக்காவிற்கரநொடியாற்
பண்ணார்தரப்பாடுசண்பையர்கோன்பாணிநொந்திடுமென்
றெண்ணாதெழுத்தஞ்சுமிட்டபொற்றாளங்களீயக்கண்டு
மண்ணார்சிலர்சண்பைநாதனையேத்தார்வருந்துவதே. (அஉ)



வருந்தாவகையெலாங்கழன் மங்கமிசையேயிடினென்றுமென்றூர்
திருந்தாம்புகழ்ச்சண்பைஞானசம்பந்தற்குச்சிரமணிகள் [த்
பொருந்தாஞ்சிவிகைகொடுத்தனன்காண்புனிதிகழ்ந்து
சருந்தம்பிரானெம்மாந்துறைமேயவரும்பொருளே. (அங)

பொருளென்னையென்னைத்தன்பொற்கழல்காட்டிப்புகுந்தெனக்கி
கருளியசீர்த்திருஞானசம்பந்தனருளிலர்போல் [ய
வெருளினமானின்மென்னோக்கியைவிட்டிவிழுதியின்
மருளிணையாதரித்தன்னனென்றுசாலவென்சிந்தனைக்கே. (அச)

சிந்தனையைத்தேனைத்திருவாவடுதுறையுட்டிகழு
மெந்தையைப்பாடலிசைத்துத்தொலைபாதியமெய்த்
தந்தையைத்தீத்தொழின்மூட்டியகோன்சரணசாரிலரே
நிந்தையைப்பெற்றொழியாதிரங்கேதரநிட்டுவரே. (அரு)

நீட்டுவரோதத்தொடேறியசங்கநெடுமுளரித்
தோட்டுவெண்முத்தஞ்சொரிசண்பைநாதற்றொழாதவரில்
வேட்டுவர்வேட்டதண்ணீரினுக்குண்ணீருணக்குழித்த
காட்டுவருறல்பருகுங்கொலாமெங்கனங்குழையே. (அசு)

குழைக்கின்றகொன்றைபொன்போன்மலராங்கூட்டமெல்லா
மழைக்கின்றகொண்டலியம்பூவனிலையகன்றூர்வரவு [த்
பிழைக்கின்றதுகொலென்றஞ்சியொண்சண்பைப்பிரான்புறவ
திழைக்கின்றகூடன்முடியவென்னாதவிளங்கொடிக்கே. (அஎ)

கொடித்தேரவுணர்குழாமனலூட்டியகுன்றவில்லி
யடித்தேர்கருத்தினருகாசனியையணியிழையார்
முடித்தேர்கமலங்கவர்வான்முரிபுருவச்சிலையால்
வடித்தேர்நயனக்கணையிணைகோத்துவளைத்தனரே. (அஅ)

வளைபடுதண்கடற்கொச்சைவயவன்மலர்க்கழற்கே
வளைபடுநீண்முடிவார்புனனூரன்றனிரிலங்கு
வளைபடுகண்ணியர்தம்பொறாத்தம்பலநாமித்த
வளைபடுகிங்கிணிக்காண்மைந்தன்வாயின்மணிமுத்தமே. (அகூ)

முத்தனவெண்ணகையார்மயன்மாற்றிமுறைவழுவா
தெத்தனைகாலநின்றேத்தும்வரினுமென்பணிந்த
பித்தனையெங்கள்பிரானையணைவதெளிதாகண்ட
ரத்தனைஞானசம்பந்தனைப்பாதமடைந்தவர்க்கே. (௯0)

அடைத்ததுமாமறைக்காடர்தங்கோயிற்கதவினையன்
றுடைத்ததுபாணன்றன்யாழின்றொலியையுரகவிடந்
துடைத்ததுதோணிபுரத்துக்கிறைவன்சுடரொளிவாய்
படைத்ததுதண்மையைநள்ளாற்றரசுபணித்திடவே. (௯௧)

பணிபடுநுண்ணிடைபாதம்பொருபலகாதமென்று
தணிபடுமின்சொற்களாற்றவிர்த்தேற்குத்தழலுமிழ்கால்
மணிபடுபொற்கழன்ஞானசம்பந்தன்மருவலர்போற்
றுணிபடுவேலன்னகண்ணியென்றோவந்துதோன்றியதே. ௯௨

தோன்றறன்றோடுடனேயிவசுந்தரப்பூண்முலையை
யின்றவரேயிந்தவேந்திழையாரவரிவ்வளவில்
வான்றவர்சூழுந்தமிழாகரன்றன்வடவரையே
போன்றபொன்மாடக்கழுமலநாடுபொருந்துவரே. (௯௩)

பொருந்திடுஞானத்தமிழாகரன்பதிபொற்புரிசை
திருந்தியதோணிபுரத்துக்கிறைவன்றிருவருளாற்
கருந்தடநீரெழுகாலையிற்காக்கழுமலமென்
றிருந்திடவாமென்றுவானவராகியயங்கியதே. (௯௪)

இயலாதனபலசிந்தையராயியலுங்கொலென்று
முயலாதனவேமுயன்றுவன்மோகச்சுழியழுந்திச்
செயலார்வரைமதிற்காழியர்கோன்றிருநாமங்களுக்
கயலாரெனப்பலகாலங்கள்போக்குவராதர்களே. (௯௫)

ஆதரவும்பயப்பும்மிவளெய்தினளென்றயலார்
மாதரவஞ்சொல்லியென்னைநகுவதுமாமறையி
னோதரவம்பொலிகாழித்தமிழாகரனொடன்றே
நீதரவம்படவன்னையென்றோபலசெப்புவதே. (௯௬)



செப்பிடவென்னதவமுயன்றேனல்லசெந்தமிழா
லொப்புடைமாலைத்தமிழாகரனையுணர்வுடையோர்
கற்புடைவாய்மொழியேத்தும்படிகதறிட்டிவர
மற்படுதொல்லைக்கடல்புடைசூழ்தருமண்ணிடையே. (௯௭)

மண்ணிற்றிகழ்சண்பைநாதனைவாதினில்வல்லமணைப்
பண்ணைக்கழுவிலுதைவைத்தெம்பந்தவினையறுக்குங்
கண்ணைக்கதியைத்தமிழாகரனையெங்கற்பகத்தைத்
திண்ணெற்றுடையற்கவுணியர்தீபனைச்சேர்ந்தனமே. (௯௮)

சேரும்புகழ்த்திருஞானசம்பந்தனையாருரைத்த
பேருந்தமிழ்ப்பாவிவைவல்லவர்பெற்றவின்புலகங்
காருந்திருமிடற்றுயருளாயென்றுகைதொழுவர்
நீருமலருங்கொளாநெடுமாலும்பிரமனுமே. (௯௯)

பிரமாபுரம்வெங்குருச்சண்பைதோணிபுகலிகொச்சை
சிரமார்புரநற்புறவந்தராய்க்காழிவேணுபுரம்
வரமார்பொழிற்றிருஞானசம்பந்தன்பதிக்குமிக்க
பரமார்கழுமலம்பன்னிருநாமமிப்பாரகத்தே. (௧00)

பாரகலத்துன்பங் கடந்தமா ராய்பணியு
மோரலம்பெற்றுவு மின்றுதாற் – காரிலின்
ஞமங்கமழ்மாடத் தோணிபுரத்தலைவ
ருமஞ்செவிக்கிசையா நாள்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

# திருச்சண்பைவிருத்தம்.

---

பலவித்தெழுந்தங்குபார்முகமுய்யப்பறிதலையோர்
மாலுற்றழுந்தவவதரித்தோன்மணிநீர்க்கமலத்
தாலித்தலர்மிசையன்னநடப்பவனங்கடென்றுச்
சாலித்தலைபணிசண்பையர்காவலன்சம்பந்தனே. (௧)

கொங்குதங்குங்குஞ்சிகூடாப்பருவத்துக்குன்றவில்லி
பங்குதங்கும்மங்கைதன்னருள்பெற்றவன்பைம்புனலிற்
பொங்குவங்கப்புனல்சேர்த்தபுதுமணப்புன்னையின்கீழ்ச்
சங்குதங்கும்வயற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௨)

குவளைக்கருங்கட்கொடியிடைதன்பந்தரிவென்று
துவளத்தொடுவிடத்தீர்த்ததமிழின்றொகைசெய்தவன்
திவளக்கொடிக்குன்றமாளிகைச்சூளிகைச்சென்னியின்வாய்த்
தவளப்பிறைதங்குசண்பையர்காவலன்சம்பந்தனே. (௩)

கள்ளம்பொழினள்ளிப்பள்ளித்தடங்கடமாக்கியஃதே
வெள்ளம்பணிசெய்தலாக்கியவித்தகன்வெண்குருகு
புள்ளொண்டவளப்புரிசங்கொடாலக்கயலுகளத்
தள்ளந்தடம்புனற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௪)

அறந்தேறுஞ்சடையானருண்மேவவவனியர்க்கு
வீறந்தேறுந்தமிழால்வழிகண்டவன்மென்கிளிமாந்
தேறல்கோதித்துறுசண்பகத்தாவிச்செழுங்கமுகின்
றுறந்தேறும்பொழிற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௫)



அந்தமுந்தம்பிறவித்துயர்தீரவரனடிக்கே
பந்தமுந்தந்தமிழ்செய்தபராபரன்பைந்தடத்தேன்
வந்தமுந்திருந்தமுத்தங்கொடுப்பவயற்கயலே
சந்தமுந்தும்பொழிற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௬)

புண்டலைக்குஞ்சரப்போர்வையர்கோயிற்புகவடைக்கு
மொண்டலைத்தண்டமிழ்க்குண்டாசனியும்பர்பம்பியின்னுங்
கொண்டலைக்கண்டுவண்டாடப்பெடையொடுங்கோக்குறக்குந்
தண்டலைக்குண்டகழ்ச்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௭)

எண்டலைக்குந்தலைவன்கழல்சூடியெனுள்ளம்வெள்ளங்
கண்டலைப்பத்தன்கழறுந்தவன்கதிர்முத்தநத்தம்
விண்டலைப்பத்தியிலோடும்விரவியிளிர்பவளந்
தண்டலைக்குங்கடற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௮)

ஆறுமண்டப்பண்டுசெஞ்சொனடாத்தியமண்முழுதும்
பாறுமண்டக்கண்டசைவசிகாமணிபைந்தடத்த
சேறுமண்டச்சங்குசெங்கயறேமாங்கனிசிதறிச்
சாறுமண்டும்வயற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௯)

விடந்திளைக்கும்மரவல்குன்மென்கூந்தல்பெருமணத்தின்
வடந்திளைக்குங்கொங்கைபுல்லியமன்மதன்வண்கதலிக்
கடந்திளைத்தூக்கமுநீர்புல்லியொல்கிக்கரும்புரிஞ்சித்
தடந்திளைக்கும்புனற்சண்பையர்காவலன்சம்பந்தனே. (௧௦)

பாலித்தகொங்குகுவளைகள்ளம்பொழில்மேய்ப்பரந்து
வாலிப்பவாறதேறுங்கழனிச்சண்பையர்தமுந்த
மேலிட்டபுண்டலைக்குஞ்சரத்தெண்டலைக்குந்தலைவன்
சோலிட்டவாறுவிடந்திளைக்கும்மரவல்குலையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

# திருமும்மணிக்கோவை.

---

ஆசிரியப்பா.

திங்கட்கொழுந்தொடு பொங்கரவுறைக்குங்
கங்கைப்பேரியாற்றுக் கடுவரைக்கலுழி
யிதழியின்செம்பொ னிருக்கரைசிதறிப்
புதலெருக்குமலர்த்தும் புரிபுன்சடையோன்
திருவருள்பெற்ற விருபிறப்பாளன்
முத்தீவேள்வி நான்மறைவளர
ஐவேள்வுயர்த்த வறுதொழிலாள
னேழிசையாசை யெண்டிசையறியத்
தண்டப்படுத்த தண்டமிழ்விரகன்
காழிநாடன் கவுணியர்தலைவன்
மாமழைநோக்கி மலைமகள்புதல்வன்
திருந்தியபாடல் விரும்பினர்க்கல்லது
சுடுந்துயருட்புகக் கைவிளக்கும்பிந்
நெடும்பிறவிக்கட னீந்துவதரிதே. (க)

வெண்பா.

அரியோடுநான்முகத்தோ னாதிசுரர்க்கெல்லாந்
தெரியாமைசெந்தழலாய் நின்ற - வொருவன்சீர்
தன்றலையின்மேற்றரித்த சம்பந்தன்றாளிணைக
ளென்றலையின்மேலிருக்க வென்று. (உ)



கட்டளைக்கலித்துறை.

என்றுமடியவருள்ளத்திருப்பனவிவ்வுலகோர்
நன்றுமலர்கொடுதூவித்துதிப்பனநல்லசங்கத்
தொன்றும்புலவர்கள்யாப்புக்குரியனவொண்கலியைப்
பொன்றுங்கவுணியன்சைவசிகாமணிபொன்னடியே. (ங)

ஆசிரியப்பா.

அடுசினக்கடகரி யதுபடவுரித்த
படர்சடைக்கடவுள் திருவருளதனாற் பிறந்தது
கழுமலமென்னுங் கடிநகரதுவே வளர்ந்தது
தேங்கமழ்வாவிச் சிலம்பரையன்பெறு
பூங்குழன்மாதிடு போனகமுண்டே பெற்றது
குழகனைப்பாடிக் கோலக்காப்புக்
கழகுடைச்செம்பொற் றாளமவையே தீர்த்தது
தாதமர்மருகற் சடையனைப்பாடிப்
பேதுறுபெண்ணின் கணவனைவிடமே யடைத்த
தரைசோடிசையா வணிமறைக்காட்டுக்
குரைசேர்குடுமிக் கொழுமணிக்கதவே யேறிற்
றத்தியுமாவுந் தவிரவாத்துறை
முத்தின்சிவிகை முன்னாட்பெற்றே பாடிற்
றருமறையோத்தூ ராண்பனையதனைப்
பெருகிறமெய்தும் பெண்பனையாவே கொண்டது
பூவிடுமதுவிற் பொறிவண்டுழது
மாவடுதுறையிற் பொன்னாயிரமே கண்ட
துதியொடுபீலி யொருகையிற்கொள்ளும்
பதிதலைச்சமணைப் பல்கழுமிசையே நீத்த
தமிழ்ச்சுவையேயறிந் தானடிபரவுந்
தமிழ்ச்சுவையறியாத் தம்பங்களையே நினைந்த
தள்ளற்பழனக் கொள்ளம்பூதூ
ரிக்கரையோடமக்கரைச்செலவே மிக்கவ
ருணசம்பந்த மறத்துயக்கொளவல
ஞானசம்பந்தனின் ஞாலத்திடையே. (ச)

வெண்பா.

நிலத்தவர்க்குமேலாய நீறுலகத்துச்சித்
தலத்தவர்க்குமேலெல்லா னென்பர் - சொலத்தக்க
சுந்தரர்கள்சேர்காழிச் சுரன்ஞானசம்பந்தன்
பந்தர்கள்போய்வாழும் பதி. (ரு)

கட்டளைக்கலித்துறை.

பதிகம்பலபாடி-நீடியபிள்ளைபரசுதரச்
சுதிகம்மனுக்களமணர்க்குக்காலனவதரித்த
மதியந்தவழ்மாடமாளிகைக்காழியென்றால்வணங்கா
ரொதியம்பணைபோல்விழுவரந்தோசிலவூமர்களே. (சு)

ஆசிரியப்பா.

கவளமாளிகைத் திவளுமியானையின்
கவுட்டலைக்கும்பத்
தம்பர்ப்பதனைத் தம்புதந்திளைக்கும்
பெருவளர்தழீஇத் திருவளர்புகலி
விளங்கப்பிறந்த வளங்கொள்சம்பந்தன்
கருதியஞ்செவ்விச் சுருதியஞ்சிலம்பிற்
றேமருதினைவளர் காமருபுனத்து
மும்மதஞ்சொரியும் வெம்முகக்கைம்மா
மூரிமருப்பிற் சிரியமுத்துச்
கொடுஞ்சிலைவளைத்தே கொடுஞ்சரந்துரந்து
முற்படவந்த முயன்றங்குதவிசெய்
வெற்பனுக் கலது
சுணங்கணிமென்முலைச் சுரிகுழன்மாதினை
மணஞ்செயநிற்பது நமக்குவன்பழியே. (எ)

வெண்பா.

பழியொன்றுமோராதே பாயிடுக்கிவாளா
கழியுஞ்சமண்கையர் தம்மை - யழியத்
தூரந்தரங்கச்செற்றான் சுரும்பரற்றும்பாத
மிரந்தரம்போய்நெஞ்சே நினை. (அ)



கட்டளைக்கலித்துறை.

நினையாதரவெய்திமேகலைநெக்குவளைசரிவா
டனையாவவென்றின்றருளுதியேதடஞ்சாலிவயற்
கனையாவருமேதிகன்றுக்கிரங்கித்தன்கால்வழிபா
லனையாவருங்காழிமேவியசீர்ஞானசம்பந்தனே. (கூ)

ஆசிரியப்பா.

தளமலிகமலத் திருவெனுஞ்செல்வி
விருப்பொடுதிளைக்கும் வியாலின்பத்
தாடகமாட நீடுதென்புகலிக்
காமருகவினார் கவுணியர்தலைவ
பொற்பமர்தோள நற்றமிழ்விரக
மலைமகள்புதல்வ கலைபயினாவ நினது
பொங்கொளிமார்பிற் றங்கியதிருநீ
றுதரித்திறைஞ்சிய பேதையர்கையில்
வெள்வளைவாங்கிச் செம்பொன்கொடுத்தலிற்
பிள்ளையாவது தெரிந்ததுபிறர்க்கே. (க0)

வெண்பா.

பிறவியெனும்பொல்லாப் பெருங்கடலைநீந்தத்
துறவியெனுந்தோற்றோணி கண்டீர் - நிறையுலகிற்
பொன்மாலைமார்பன் புனற்காழிச்சம்பந்தன்
றன்மாலைஞானத் தமிழ். (கக)

கட்டளைக்கலித்துறை.

ஞானந்திரளையிலேயுண்டனையென்றுநாடறியச்
சோனந்தருகுழலார்சொல்லிடாமுன்சுரும்புகட்குப்
பானந்தருபங்கயத்தார்கொடுபடைச்சால்வழியே
கூனந்தருள்வயல்சூழ்காழிமேவியகொற்றவனே. (கஉ)

ஆசிரியப்பா.

அவனிதலநெரிய வெதிரெதிர்மலைஇச்
சொரிமதக்களிற்று மத்தகம்போழ்ந்து
செஞ்சேறுடிச் செல்வனவரியே யெஞ்சாப்
படவரவுச்சிப் பருமணிபிதுங்கப்

பிடரிடைப்பாய்வன பேழ்வாய்ப்புலியே யிடையிடைச்
செறியிருளுருவச் சேண்விசும்பதனிற்
பொறியெனவிழுவன பொங்கொளிமின்னே
யுறுசினவரையா றுந்தியகலுழிக்
கரையாறுழல்வன கராவின்கணனே நிரையார்
பொருகட லுதைத்த சுரிமுகச்சங்கு
செங்கயல்கிழித்த பங்கயமலரின்
செம்மடனிறைய வெண்முத்துதிர்க்கும்
பழனக்கழனிக் கழுமலநாடன்
வைகையிலமணரை வாதுசெய்தறுத்த
சைவசிகாமணி சம்பந்தன்வெற்பிற்
சிறுகிடையவடன் பெருமுலைபுணர்வா
னெறியினில்வரலொழி நீமலையோனே. (௧௩)

வெண்பா.

மலைத்தலங்கண்மீதேறி மாதவங்கள்செய்து
முலைத்தலங்கணீத்தாலு மொப்பர் - கலைத்தலைவன்
சம்பந்தனாளாய்த் தடங்காழிகைகூப்பித்
தம்பந்தந்தீராத தாம். (௧௪)

கட்டளைக்கலித்துறை.

தாமரைமாதவிசேறியநான்முகன்றன்பதிபோற்
காமருசீர்வளர்காழிநன்னாடன்கவித்திறத்து
நாமருமாதவர்போலமுகிந்துகல்வில்லிபின்னே
நீர்மருவாதசுரத்தெங்ஙனேகுமென்னேரிழையே. (௧௫)

ஆசிரியப்பா.

இழைகெழுமென்முலை யிதழிமென்மலர்கொயத்
தழைவரவொசித்த தடம்பொழிலிதுவே காமர்
சுனைகுடைந்தேறித் துகிலதுபுனையநின்
றனையுங்கண்டு வெள்ளிடமிதுவே தினைதொறும்
பாய்கிளியிரியப் பையவந்தேறி
யாயவென்றிருக்கு மணிப்பரணிதுவே யீதே
யின்புறுசிறுசொல் லவைபலவியற்றி



யன்புசெய்தென்னை யாட்கொளுமிடமே பொன்புரை
தடமலர்க்கமலக் குடுமியிலிருந்து
நற்றொழில்புரியு நான்முகனுடைப்
புற்கடைகழீஇப் பொங்குசராவத்து
நெய்த்துடுப்பெடுத்த முத்தீப்புகையா
னாடொறுமறைக்குஞ் சேடுறுகாழி
யெண்டிசைநிறைந்த தண்டமிழ்விரக
னலங்கலந்தோங்கும் விலங்கலின்மாட்டுப்
பூம்புனமதனிற் காம்பனதோளி
பஞ்சிற்றிருந்தடி நோவப்போயெனை
வஞ்சித்திருந்த மணியறையிதுவே. (௧௬)

வெண்பா.

வேழங்களெய்பவர்க்கு வில்லாவதிக்கால
மாழங்கடன்முத்தம் வந்தலைக்கு - நீள்வயல்சூழ்
வாய்ந்ததிவண்மாட மதிற்காழிக்கோன்சிலம்பிற்
சாய்ந்ததுவண்டழையோ தான். (௧௭)

கட்டளைக்கலித்துறை.

தழைக்கின்றசீர்த்திருஞானசம்பந்தன்றடமலைவா
யழைக்கின்றமஞ்ஞைக்கலந்தனகோடலம்பெய்தவா
னிழைக்கின்றதந்தரத்திந்திரசாபமின்னொண்மொன்றும்
பிழைக்கின்றதில்லைநற்றேர்வந்துதோன்றிற்றுப்பெய்வளையே.

ஆசிரியப்பா.

வளைகாண்மந்தி மாமரப்பொந்தில்
விளைதேனுண்டு வேணுவின்றுணியாற்
பாறையிற்றுயில் பனைக்கைவேழத்தை
யுந்தியெழுப்பு மந்தண்சிலம்ப வஃதிங்
கென்னையரிங்கு வருவர்பலரே
யன்னைகாணி லலர்தூற்றும்மே பொன்னேர்
சிறுபரற்கரந்த விளிகுரற்கிண்கிணி
சேவடிபுல்லிச் சில்குரலியற்றி
யழுதண்செவ்வா யருவிதூங்கத்
தாளம்பிரியாத் தீட்கையசைத்துச்

சிறுகூத்தியற்றிச் சிவனருள்பெற்ற
நற்றமிழ்விரகன் பற்றலர்போல
விடுங்கியமனத்தொடு மொடுங்கியசென்று
பரிதியுங்குடகடற் பாய்ந்தனன்
கருதிற்பதுமிழை கடுநவிப்புனத்தே. (௧௯)

வெண்பா.

தேம்புனமேயுன்னைத் திரிந்துதொழுகின்றேன்
வாம்புகழ்ச்சேர்சம்பந்தன் மாற்றலர்போற் - றேம்பி
யழுதகன்றொன்று தனிமலையர்வந்தாற்
றொழுதகன்றொன்றாநீ சொல்லு. (௨௦)

கட்டளைக்கலித்துறை.

சொற்செறிநீள்கவிசெய்தன் றுரவகையிற்றொல்லமணர்
பற்செறியாவண்ணங்காத்தசம்பந்தன்பயில்சிலம்பிற்
கற்செறிவார்சுனைநீர்குடைந்தாடுங்கள்காக்குமுழை
யிற்செறியாவண்ணங்காத்திலவாகியிரும்புனமே. (௨௧)

ஆசிரியப்பா.

புனலறவறந்த புன்முளிசுரத்துச்
சினமலிவேடர் செஞ்சரமுரீஇப்
படுகலைக்குளம்பின் முடுகுநாற்றத்
தாடுமரவி னகடுதீயப்
பாடுதலையின் பஞ்சுரங்கேட்டுக்
கள்ளியங்கவட்டிடைப் பள்ளிகொள்ளும்
பொறிவரிப்புறவே யுறவலைகாணீ நறைகமழ்
தேம்புனல்வாவித் திருக்கழுமலத்துப்
பையரவசைத்த தெய்வநாயகன்
றன்னருள்பெற்ற பொன்னணிக்குன்ற
மானசம்பந்த மன்மிசைத்துறந்து
ஞானசம்பந்தனை நயவார்கிளைபோல்
வினையேனிருக்கு மனைபிரியாத
வஞ்சிமருங்கு லஞ்சொற்கிள்ளை
யேதிலன்பின்செல விலக்காதொழிந்தனை
யாதலிற்புறவே யுறவிலைநீயே. (௨௨)



வெண்பா.

அலைகடலின்மீதோடி யந்துளையார்வீசும்
வலைகடலில்வந்தேறு சங்க - மலர்கடலை
வெண்முத்தவிழ்வயல்சூழ் வீங்குபுனற்காழியே
யொண்முத்தமிழ்பயந்தா னூர். (௨௩)

கட்டளைக்கலித்துறை.

ஊரும்பசும்புரவித்தேரொளித்ததொளிவிசும்பிற்
கூருமிருளொடுகோழிகண்டிஞ்சாகொடுவினையேற்
காருணர்ந்திலர்ஞானசம்பந்தனந்தாமரையின்
றாருந்தருகிலனெவ்வண்ணம்யான்சங்குதாங்குவதே. (௨௪)

ஆசிரியப்பா.

தேமலிகமலப் பூமலிபடப்பைத்
தலைமுகடேறி யிளவெயிற்காயுங்
கவடிச்சிறுகாற் கர்க்கடகத்தைச்
சுவடிச்சியங்குஞ் சூனிமுதலைகத்
தன்னியெழுந்து செந்நெலின்மோதுங்
காழிநாட்டுக் கவுணியர்குலத்தை
வாழத்தோன்றிய வண்டமிழ்விரகன்
றெண்டிரைக் கடல்வாய்க்
காண்டகுசெல்விக் களிறுகளுகுத்த
முட்டைமுன்கவரும் பெட்டையங்குருகே
வாடையடிப்ப வைகறைப்போதிற்
றலிநீபோந்து பனிநீரொழுகக்
கூசிக்குளிர்ந்து பேசாதிருந்து
மேனிவெளுத்த காரணமுரையா
யிங்குத்தனைத்தெய்தி நாமரு
மின்னம்வந்திலரோ சொல்லினங்குருகே. (௨௫)

வெண்பா.

குருகும்பணிலமுங் கூனனந்துஞ்சேலும்
பெருகும்வயற்காழிப் பிள்ளை - யருகந்தர்
முன்கலங்கட்ட முடைகெழுமியாலின்னாப்
புன்கலங்கல்வைகைப் புனல். (௨௬)

### கட்டளைக்கலித்துறை.

புனமாமயில்சாயல்கண்டுமுன்போகாகிளிபிரியா
வினையான்விழியொக்குமென்றுவிட்டேகாவிருநிலத்துக்
கனமாமதிற்காழிஞானசம்பந்தன்கடன்மலைவாய்த்
தினைமாதிவள்காக்கவெங்கேகிளையுஞ்செழுங்கதிரே. (௨௭)

### ஆசிரியப்பா.

கதிர்மதிநுழையும் படர்சடைமகுடத்
தொருத்தியைக்கரந்த விருத்தனைப்பாடி
முத்தின்சிவிகை முன்னாட்பெற்ற
வத்தன்காழி நாட்டுறையணங்கோ மொய்த்தெழு
தாமரையல்லித் தவிசிடைவளர்ந்த
காமருசெல்வக் கனங்குழையவளோ மீமருத்
தருவளர்விசும்பிற் றவநெறிகலக்கு
முருவளர்கொங்கை யுருப்பசிதானோ
வாருணக்கொம்போ மதனன்கொடியோ
வாரணியத்து ளருந்தெய்வம்நுவோ
வண்டமர்குழலுங் கெண்டையங்கண்ணும்
வஞ்சிமருங்குங் கிஞ்சுகவாயு
மேந்திளமுலையுங் காந்தளங்கையு
மோவியர்தங்க ளொண்மதிகாட்டும்
வட்டிகைப்பலகை வான்றுகிலிகையா
லெய்க்குதற்கரியதோ ருருவுகண்டென்னை
மயக்கவந்துதித்தோர் வடிவிதுதானே. (௨௮)

### வெண்பா.

வடிக்கண்ணியாளையிவ் வான்சுரத்தினூடே
கடிக்கண்ணியானொடுங் கண்டோம் - வடிக்கண்ணி
மாம்பொழில்சேர்வகை யமண்மலைந்தான்வண்காழிப்
பூம்பொழிலேசேர்ந்திருப்பார் புக்கு. (௨௯)



### கட்டளைக்கலித்துறை.

நெருங்குந்தரளமும்போல்வண்ணவெண்ணகைக்கொய்மலரா
ள், பொருந்துந்திரள்புயத்தண்ணல்சம்பந்தன்பொற்றாமரைக்
கா;வருந்துந்திரள்கொங்கை மங்கையைவாட்டினைவானகத்தே,
திருந்துந்திரண்முகின்மூழ்கிவந்தேறுதிங்கட்கொழுந்தே. (௩௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி
அருளிச்செய்த

## ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை.

---

திருந்தியசீர்ச்செந்தாமரைத்தடத்துச்சென்றே
யிருந்தவன்றன்மேதி பாயப் - பொருந்திய
புள்ளிரியப்பொங்கு கயல்வெருவப்பூங்குவளைக்
கள்ளிரியச்செங்கழுநீர் கால்சிதையத் - துள்ளிக்
குருகிரியக்கூனிறவம் பாயக்களிறு
முருகுவிரிபொய்கையின்கண் மூழ்க - வெருவுற்ற
கோட்டகத்துப்பாய்வாளை கண்டலவன்கூசிப்போய்த்
தோட்டகத்தசெந்நெற் றுறையடையச் - சேட்டகத்த
காவிமுகமலரக் கார்நீலங்கண்படுப்ப
வாவிக்கணெய்த லலமர - மேவிய
வன்னந்துயிலிழப்ப வஞ்சிறைசேர்வண்டினங்க
ளின்னுந்துணையிழப்பச் சூழ்கிடங்கின் - மன்னிய
வள்ளைநகைகாட்ட வண்குமுதம்வாய்காட்டத்
தெள்ளுபுனற்பங்கயங்க டேன்காட்ட - மெள்ள
நிலவுமலரணையி னின்றிழிந்தசங்க
மிலகுகதிர்த்திலகங்க ளீன - வுலவிய

மல்லைப்பழனத்து வார்பிரசமீதழிய
வொல்லைவரம்பிடறி யோடிப்போய்ப் - புல்லிய
பாசடையச்செந்நெற் படரொளியாற்பல்கதிரோன்
றேசடையவோங்கு செறுவகளு - மாசினீர்
நித்திலத்தின்சாயு நிகழ்மரகதத்தோனுந்
தொத்தொளிசெம்பொற் றெழிற்பரிய - மொய்த்த
பவளத்தின்செவ்வியும் பாங்கலையவோங்கித்
திவளக்கொடிமருங்கிற் சேர்த்தித் - துவளாமைப்
பட்டாடைகொண்டுடுத்துப் பைந்தோடிலங்குகுழை
யிட்டமைந்தகன்னு ரிளங்கமுகும் - விட்டொளிசேர்
கண்களழல்சிதறிக் காய்சினத்தவாய்மதத்துத்
தண்டலையினீழற் றறியணைந்து - கொண்ட
கொலைபுரியாசீர்மையவாய்க் கொம்புவளைத்தேந்தி
மலையுமரவடிவங்கொண்டாங் - கிலைநெருங்கு
சூதத்திரளுந் தேருகனிகளானிவந்த
மேதகுசீர்த்தெங்கின் வியன்பொழிலும் - போதுற்
றினமொருங்குசெவ்வியகா யின்றேன்றதும்பு
கனிநெருங்குநின்ற கதலிக் காடு - நனிவிளங்கு
நாற்றத்தாலெண்டிசையும் வந்தநலஞ்சிறப்ப
வூற்றமைத்த வுயர்பலவு - மாற்றமரு
மஞ்சலெழில்வனமு மாதுளையின்வார்பொழிலு
மிஞ்சியினங்காவி னீட்டமு - மெஞ்சாத
சந்தக்கமுகுங் குளிர்பாடலத்தெழிலும்
வாய்ந்தசீர்ச்சண்பகத்தின் வன்காடு - மேய்ந்தெழிலார்
மாதவியும்புன்னையு மன்னுமலர்க்குரவுங்
கேதகையுமெங்குஞ் செறீஇப் - போதி
னிளந்தென்றல்வந்தசைப்ப வெண்டிசையும்வாசம்
வளர்ந்தன்றுவார்பொழிலின் மாடே - இளந்தெங்கு
மாலையொலியு மளிவார்குரலொலியுஞ்
சோலைக்கிளிமிழற்றுஞ் சொல்லொலியு - மாலு
மறுபதங்களார்ப்பொலியு மான்றவொலிவெய்தி



யுறுதிரைநீர்வேலை யொலிப்ப - வெறிகமழு
நந்தாவனத்தியல்பு நற்றவத்தோர்சார்விடமு
மந்தமில்சீரா ரழகினுள் - முந்திப்
புகழ்வாருந்தன்மையதாய்ப் பூதலத்துளோங்கி
நிகழ்விடங்குஞ்சூழ்கிடப்ப நேரே - திகழ
முளைநிரைத்துமூரிச் சிறைவகுத்துமொய்த்த
புளகத்தின்பாம்புரிசூழ் போகி - வளர
விரும்பதணஞ்சேர விருத்தியெழிலுஞ்சின்
மருங்கணையவட்டாலை யிட்டுப் - பொருந்தியசீர்த்
தோமரமுந்தொல்லைப் பொறிவீசியந்திரமுங்
காமருமெய்ப்புழையுங் கைகலந்து - பீமருவும்
வெங்கதிரோன்றேர்விலங்கு மிக்குயர்ந்தமேருப்போன்
றங்கனகத்திஞ்சி யணிபெற்றுப் - பொங்கொளிசேர்
மாளிகையுமன்னியசீர் மண்டபமுமொண்டலத்த
சூளிகையுந்துற்றெழுந்த தெற்றிகளும் - வாளொளிய
நாடகசாலையு நன்பொற்கபோதகஞ்சேர்.
பீடமைத்தமாடத்தின் பெற்றியுஞ் - சேடி
யுருவுபெறவகுத்த வம்பலமுமோங்கு
தெருவுவகுத்தசெய் குன்று - மருவினிய
சித்திரக்காவுஞ் செழும்பொழிலும்வாவிகளு
நித்திலஞ்சேர்நீடு நிலைக்களமு - மெத்திசையுந்
துன்னியெழில்சிறப்பச் சோதிமலர்மடந்தை
மன்னிமகிழ்ந்துறையும் வாய்மைத்தாய்ப் - பொன்னு
மரகதமுநித்திலமு மாமணியும்பேணி
யிரவலர்கட்கெப்போது மீந்துங் - கரவாது
கற்பகமுங்காருமெனக் கற்றவர்க்குற்றவர்க்குந்
தப்பாக்கொடைவளர்க்குஞ் சாயாத - செப்பத்தாற்
பொய்ம்மைகடிந்து புகழ்புரிந்துபூதலத்து
மெய்ம்மைதலைசிறந்து மேதக்கு - மும்மை
மறைபயில்வார்மன்னு வியாகரணக்கேள்வித்
துறைபயில்வார்தொன்னூல் பயில்வார் - முறைமையினு

லாகமங்கள்கேட்பா ரருங்கலைநூலாதரித்துப்
போகமொடுங்காப் பொருடுய்ப்பார் - சோகமின்றி
நீதிநிலையுணர்வார் நீணிலத்துளைம்புலனுங்
காதல்விடுதவங்கள் காமுறுவா - ராதி
யருங்கலைநூலோதுவா ராதரித்துவென்றிக்
கருங்கலியைநீங்கக் கனல்வகுப்பா - ரொருங்கிருந்து
காமநூல்கேட்பார் கலைஞானங்காதலிப்பா
ரோமநூலோதுவா ருத்தரிப்பார் - பூமன்னு
நான்முகனேயன்னசீர் நானூற்றுவர்மறையோர்
தாமன்னிவாழுந் தகைமைத்தாய் - நாமன்னு
மாரணங்குமற்றை யருந்ததியும்பொன்மடவா
ரேரணங்குமாடத் தினிதிருந்து - சீரணங்கு
வீணைபயிற்றுவார் யாழ்பயில்வார்மெய்யசைப்
பாணம்பயில்வார் பயனுறுவார் - பேணியசீர்ப்
பூவைக்குப்பாட்டுரைப்பார் பொற்கிளிக்குச்சொற்பயில்வார்
பாவைக்குப்பொன்புனைந்து பண்புறுவா - ரியங்கு
மங்கையர்கள்கூட்டமு மன்னுசிறார்குழுவும்
பொங்குலகமெல்லாம் பொலிவடையத் - தங்கிய
வேதவொலியும் விழாவொலியுமெல்லியலார்
கீதவொலியுங் கிளர்ந்தோங்கு - மூதரார்
பாவையொலியும் பறையொலியும்பல்சனங்கண்
மேவுமொலியும் வியனகரங் - காவலர்கள்
பம்பைத்துடியொலியும் பௌவப்படையொலியுங்
கம்பக்களிற்றொலியுங் கைகலந்து - நம்பிய
கார்முழக்குமற்றைக் கடன்முழக்கும்போற்கலந்த
சீர்முழக்கமெங்குஞ் செவிடுபடப் - பார்விளங்கு
செல்வநிறைந்தவூர் சீர்திகழ்ந்தவூர்
மல்குமலர்மடந்தை மன்னுமூர் - சொல்லினிய
ஞாலத்துமிக்கவூர் நானூற்றுவர்களூர்
வேலொத்தகண்ணார் விளங்குமூ - ராலித்து
மன்னிருகால்வேலை வளர்வெள்ளத்தும்பரொடும்
பன்னிருகானீரின் மிதந்தவூர் - மன்னும்



பிரமனூர்வேணுபுரம் பேரொலிநீர்ச்சண்பை
யான்மன்னுதண்காழி யம்பொற் - சிரபுரம்
பூந்தராய்கொச்சைவயம் வெங்குருப்பொங்குபுனல்
வாய்ந்தநற்றோணி புரமறையோ - ரேய்ந்த
புகலிகழுமலம் பூம்புறவமென்றிப்
பகர்கின்றபண்பிற்ற தாகித் - திகழ்கின்ற
மல்லைச்செழுநகர மன்னவும்வல்லமண
ரொல்லைக்கழுவி லுலக்கவு - மெல்லையிலா
மாதவத்தோர்வாழவும் வையகத்தோருய்யவு
மேதக்கவானோர் வியப்பவு - மாதியாம்
வென்றிக்கலிகெடவும் வேதத்தொலிமிகவு
மொன்றிச்சிவனடியா ரோங்கவுந் - துன்றிய
பன்னுதமிழ்ப்பதிக முயிரநற்பனுவன்
மன்னுபுவியவர்க்கு வாய்ப்பவு - முன்னிய
சிந்தனையாற்சீரார் கவுணியர்க்கோர்சேயென்ன
வந்தங்கவதரித்த வள்ளலை - யந்தமில்சீர்
ஞானச்சுடர்விளக்கை நற்றவத்தோர்கற்பகத்தை
மானமறையவற்றின் வான்பொருளை - யானசீர்த்
தத்துவனைநித்தனைச் சைவத்தவராசை
வித்தகத்தாலோங்கு விடலையை - முத்தமிழின்
செஞ்சொற்பொருள்பயந்த சிங்கத்தைத்தெவ்வருயி
ரஞ்சத்திகழ்ந்த வடலுருமை - யெஞ்சாமை
யாதிச்சிவனருளா லம்பொன்செய்வட்டிலிற்
கோதிலமிர்தநுகர் குஞ்சரத்தைத் - தீதறுசீர்க்
காலத்தொகுதிய நான்மறையின்காரணமு
மூலப்பொருளு முழுதுணர்ந்த - சீலத்
திருஞானசம்பந்த னென்றுலகஞ்சேர்ந்த
வொருநாமத்தாலுயர்ந்த கோவை - வருபெருநீர்ப்
பொன்னிவளநாடனைப் பூம்புகலிநாயகனை
மன்னர்தொழுதிறைஞ்சு மாமணியை - முன்னே
நிலவுமுருகற்கு நீலநக்கற்குந்
தொலைவில்புகழ்ச்சிறுத்தொண் டற்குங் - குலவிய

தோழமையாய்த்தொல்லைப் பிறப்பறுத்தசுந்தரனை
மாழைபொண்கண்மாதர் மதனனைச் - சூழொளிய
கோதைவேற்றென்னன்றன் கூடற்குலநகரில்
வாதிலமணர் வலிதொலையக் - காதலாற்
புண்கெழுவுசெம்புனலா றோடப்பொருதவரை
வண்கழுவிற்றைத்த மறையோனை - யொண்கெழுவு
ஞாலத்தினாதிய மன்றுவணிபள்ளியது
பாலைநனைசெய்த வாக்கியுங் - காலத்து
நீரெதிர்ந்துசென்று நெருப்பிற்குளிர்படைத்தும்
பாரெதிர்ந்தபல்விடங்க டீர்த்துமுன் - னேரெழுந்த
யாழைமுரித்து மிருக்கதவந்தாளடைத்துஞ்
சூழ்புனலிலோடத் தொழில்புரிந்துந் - தாழ்பொழில்சூழ்
கொங்கிற்பனிநோய் பரிசனத்தைத்தீர்ப்பித்துந்
தங்கப்புரிசை தொகுமிழலை - யங்கதனி
னித்தன்செழுங்காசு கொண்டுதிகழ்நெல்வாயின்
முத்தின்சிவிகை முதல்கொண்டு - மத்தகுசீர்
மாயிருஞாலத்து மன்னாவடுதுறைபுக்
காயிரஞ்செம்பொ னதுகொண்டு - மாய்வரிய
மாண்புதிகழெம்பெருமான் மன்னுதிருவோத்தூரி
லாண்பனைகள்பெண்பனைக ளாக்கியும் - பாண்பரிசிற்
கைப்பாணியொத்திக்கா ழிக்கோலக்காவிற்பொற்
சப்பாணிகொண்டு தராதலத்து - வெப்பொழுது
நீக்கரியவின்பத் திராகமிருக்குக்குற
ளேக்கரியபாசுரம்பல்பத்தோடு - மாக்கரிய
யாழ்முரிசக்கரமாற் றீரடிமுக்காலும்
பாழிமையாற்பாரகத்தோர் தாமுய்ய - வூழி
யுரைப்பமரும்பல்புகழா லோங்கவுமைகோனைத்
திருப்பதிகம்பாடவல்ல சேயை - விருப்போடு
நன்னுபுகழ்மறையோர் நாற்பத்தெண்ணாயிரவ
ரெண்ணின்முனிவர ரீட்டத்துப் - பண்ணமரு
மோலக்கத்துள்ளிருப்ப வொண்கோயில்வாயிலின்கட்
கோலக்கடைகுறுகிக் கும்பிட்டாங் - காலும்



புக்கிவளநகருட் பூசுரர்புக்காங்
கிகலில்புகழ்பரவி யேத்திப் - புகலிசேர்
வீதியெழுந்தருள வேண்டுமெனவிண்ணப்ப
மாதரத்தாற்செய்ய வவர்க்கருளி - நீதியாற்
கேதகையுஞ்சண்பகமு நேர்கொடுத்துக்கிழித்தாழ்ந்த
மாதவியின்போதை மருங்கணைத்துக் - கோதி
விருவேலிதன்னை யிடையிருத்தியீண்டு
மருவோடுமல்லிகையை வைத்தாங் - கருகே
கருமுகையைக்கைகலக்க வைத்தாக்குழுநீர்
பெருகுபிளவிடையே பெய்து - முருகியலும்
புன்னாகந்தன்னைப் புணரவிருவாட்சி
தன்னயலேமுல்லை தலையெடுப்ப - மன்னிய
வண்செருந்திவாய்நெகிழ்ப்ப மௌவலலர்பண்டைப்பத்
தண்குருந்தமாடே தலையிறக்க - வொண்கமலத்
தாதடுத்தகண்ணியாற் றண்ணறுங்குஞ்சிமேற்
போதடுத்தகோலம் புனைவித்துக் - காதிற்
கனவயிரகுண்டலங்கள் சேர்த்திக்கழுத்தி
னினமணியினூர மிலகப் - புனைகனகத்
தொத்தடுத்தபூஞ்சரிகைச் சோதிசேர்தாளிம்பம்
வைத்துமணிக்கண் டிகைபூண்டு - முத்தடுத்த
கேயூரந்தோள்மேற் கிடத்திக்கிளர்பொன்னின்
வாய்மைபெறுநூல் வலந்திகழ - வேயுந்
தமனியத்தின்சூழ்வட்டமுந் தண்டரளக்கோப்புஞ்
சிமையவரைமார்பிற் சேர்த்தி - யமைவுற்ற
வெண்ணீற்றிறெண்களப மட்டித்துமேவுதொழி
லொண்ணூற்கலிங்க முடல்புனைந்து - திண்ணோக்கிற்
காற்றுருமோகுன்றோ கடலோவடலுருமோ
கூற்றுருவோவென்னக் கொதித்தெழுந்து - சீற்றத்
தழல்விழித்துமின்றெதிர்ந்து தாலவட்டம்வீசிப்
புழைதடக்கைகொண்டெறிந்து பொங்கி - மழைமதத்தாற்
பூத்தகடதடத்துப் போகயிகப்பொலிந்த
காத்திரத்ததாகிக் கலித்தெங்கும் - கோத்த

கொடுவிளம்போக்கியுயிர் கொண்டெழுந்துபோய்த்
திடுவன்னடையிட்டுக் கவித்து - முடுகி
நெடுநிலத்தைத்தானுழக்கி நின்றுநிகர்த்த
இடிபெயரத்தானைத் திலுப்பி - யடுசினத்தாற்
கன்றமுசம்பருகிக் கையெடுத்தாராய்ந்து
வென்றிமருப்புருவ வெய்துயிர்த் - தொன்றிய
கூடமரணழித்துக் கோபுரங்களைக்குத்தி
நீடுபொழிலை நிகரழித் - தோடிப்
பணைப்பாகரைப்பரிந்து குத்திப்பறித்த
நிணைப்பாகைநீள்விசும்பின் வீசி - யணைப்பரிய
வோடைக்கருங்களிற்றை யொண்பரிக்காரர்கூடா
மாடணையக்கொண்டு வருதலுமே - கூடி
நயந்துகுரற்கொடுத்து நட்பளித்துச்சென்று
வியந்தணுகிவேட்டந் தணித்தாங் - குயர்ந்த
வுற்றாயவாசிதனைப் பற்றிமேல்கொண்டாங்
கட்கூடற்சந்தி யணுகி - யடுத்த
பயில்பலவும்பேசிப் படுபுரசைநீக்கி
யயர்வுகெடவணைத்துத் தட்டி - யுயர்தரு
தண்டுபேரோசையிற்கட் டாள்கோத்துச்சீர்ச்சிறுத்
தொண்டர்பிறகணையத் தோன்றுதலு - மெண்டிசையும்
பல்சனமுமாவும் படையும்புடைநெர
வொல்லொலியாலோங்கு கடல்கிளர - மல்லற்
பரித்தாரங்கொட்டப் படுபணிலமார்ப்பக்
கருத்தோடிசைகவிஞர் பாட - விரித்த
குடைபலவுஞ்சாமரையுந் தொங்கல்களுங்கூடிப்
புடைபரந்துபொக்கம் படைப்பக் - கடைபடு
வீதியணுகுதலும் வெள்வளையாருண்மகிழ்ந்து
காதல்பெருகிக் கலந்தெங்குஞ் - சோதிசே
ராடரங்கின்மேலு மணிமாளிகைகளிலுஞ்
சேடரங்குநீண்மறுகுந் தெற்றியிலும் - பீடுடைய
பேரிளம்பெண்ணிருகப் பேதைமுதலாக
வாரிளங்கொங்கை மடநல்லார் - சீர்விளங்கப்



பேணுஞ்சிலம்பும் பிறங்கொளிசேராரமும்
பூணும்புலம்பப் புறப்பட்டுச் - சேண்மறுகிற்
காண்டகையவென்றிக் கருவரைமேல்வெண்மதிபோ
லீண்டுகுடையி னெழிலிழற்கீழ்க் - காண்டலுமே
கைதொழுவார்நின்று கலைசரிவார்மால்கொண்டு
மெய்தளர்வார்வெள்வளைகள் போய்வீழ்வார்-வெய்துயிர்த்துப்
பூம்பயலைகொள்வார் புணர்முலைகள்பொன்பயப்பார்
காம்பனையமென்றோட் கவின்கழிவார் - தாம்பயந்து
வென்றிவேற்சேயென்ன வேளில்வேட்கோவென்ன
வன்றென்னவாமென்ன வையுற்றுச் - சென்றணுகிக்
காழிக்குலமதலை யென்றுதங்கைசோர்ந்து
வாழிவளைசரிய நின்றயர்வார் - பாழிமையா
லுள்ளங்கிலைதளர்ந்த வொண்ணுதலார்வெல்களிற்றை
மெள்ளநடவென்று வேண்டுவார் - கள்ளலங்க
லாரமையன்றியுந் தையனல்லார்முகத்தைப்
பாராமைசாலப் பயனென்பார் - நேராக
வென்னையேநோக்கினு னேரிழையீர்பொழுது
நன்மைநமக்குண் டெனநயப்பார் - கைம்மையா
லொண்கலையுநாணு முடைதுகிலுந்தோற்றவர்கள்
வண்கமலத்தார்வலிந்து கேடுமெனப் - பண்பின்
வடிக்கண்மலர்வாளி வார்புருவம்வின்மேற்
றொடுத்துநாரந்தொண்டை துடிப்பப் - பொடித்தமுலைக்
காசைக்கருங்குழலார் காதற்கவுணியன்பாற்
பூசற்கமைந்து புறப்படுவார் - வாசச்
செழுமலர்த்தாரின்றெனக்கு நல்காதேசீரார்
கழுமலத்தார்கோவே கழல்க - டொழுவார்க
ளெங்கோல்வளையிறக்கப் போவதுநின்னுடைய
செங்கோன்மையோவென்று செப்புவார் - நங்கைமீ
ரின்றிவனல்குமே யெண்பெருங்குன்றத்தி
லன்றமணர்கூட்டத்தை யாசழித்துப் - பொன்ற
வுரைகெழுவுசெந்தமிழ்ப்பா வொன்றினால்வென்றி
நிரைகழுமேலுய்த்தானை நேர்ந்து - விரைமலர்த்தார்

பெற்றிடலாமென்றிருந்த நம்பிதம்பேதையர்கள்
மற்றுளரோவென்று வருந்துவரைப்பார் - மற்றிவனே
பெண்ணிரக்கமன்றே பிறைநுதலீர்மாசணத்தி
னெண்ணுகடுவிடத்தா லுட்சென்று - விண்ணுற்ற
வாருயிரைமீட்டன் றவனேயணிமருக
லாரியவைத்த தெனவுரைப்பார் - பேரிடரா
லேசுவார்தாமுற்ற வேசறவைத்தோழியர்முன்
பேசுவார்பின்னுந்தம் பீடழிவா - ராசையரா
ஓவார்கலனழிவார் நாணொடுபூணிழப்பார்
மெய்வாடுவார்வெருள்வார் வெய்துயிர்ப்பார் - தையலார்
பூந்துகிலைப்பூமாலை யென்றணிவார்பூவினைமுன்
சாந்தமெனமெய்யிற் றைவருவார் - வாய்ந்த
கிளியென்றுபாவைக்குச் சொற்பயில்வார்பந்தை
யெள்ளிமேகலையென் றுடுப்பா - ரளிமேவு
பூங்குழலார்மையலாய்க் கைதொழமுன்போதந்தா
னோங்கொலிசேர்வீதி யுலா.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

# ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்.

---

## ஒருபோகு கொச்சகக்கலிப்பா.

அலையார்ந்தகடலுலகத் தருந்திசைதோறங்கங்கே
நிலையார்ந்தபலபதிக நெறிமனிதர்க்கினிதியற்றி
யிக்கருளியெம்போல்வார்க் கிடர்கெடுத்தல்காரணமா
வோங்குபுகழ்ச்சண்பையெனு மொண்பதியுளுதித்தனையே

செஞ்சடைவெண்மதியணிந்த சிவனெந்தைதிருவருளால்
வஞ்சியனநுண்ணிடையாண் மலையரையன்மடப்பாவை
நற்கண்ணியளவிறந்த ஞானத்தையமிர்தாக்கிப்
பொற்கிண்ணத்தருள்புரிந்த போனகமுன்னுகர்ந்தனையே

தோடணிகாதினனென்றுந் தொல்லமரர்க்கெஞ்ஞான்றுந்
தேடரியபராபரனைச் செழுமறையினகன்பொருளை
யந்திச்செம்மேனியனை யடையாளம்பலசொல்லி
யுந்தைக்குக்காணவரு ளுவனுமென்றுரைத்தனையே

[இவைமூன்றும் நான்கடித்தாழிசை.]

வளமலிதமிழிசை வடகலைமறைவல
முளரிநன்மலரணி தருதிருமுடியினை

கடல்படுவிடமடை கறைமணிமிடறுடை
யடல்கரியுரியனை யறிவுடையளவினை

[இவ்விரண்டும் அராகம்.]

கரும்பினுமிக்கினியபுகழ்க் கவுணியர்தல்விளக்கனடிமேற்
பரம்பவிரும்புவியவர்க்குப் பத்திமையைவிளைத்தனையே

பன்மறையோர்செய்தொழிலும் பரமசிவாகமவிதியு
நன்மறையின்வழிமுழுது மொழிவின்றிநிலவின்றனையே

[இவையிரண்டும் இரண்டடித்தாழிசை.]

அணிதவத்தவர்களுக் கதிகவித்தகனுநீ
தனிமனத்தருளுடைத் தவநெறிக்குயிர்தநீ
யமணரைக்கழுநுதிக் கணைவுறுத்தவனுநீ
தமிழ்கலத்தொகையினிற் றருசுவைப்பனுவனீ

[இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம்.]

மறையவர்க்கொருவனீ
மருவலர்க்குருமுநீ
நிறைகுணத்தொருவனீ
நிகரிலுத்தமனுநீ

[இவைமூன்றும் முச்சீரோரடியம்போதரங்கம்.]

அரியைநீ
யெளியைநீ
யறவனீ
துறவனீ
பெரியைநீ
யுரியைநீ
பிள்ளைநீ
வள்ளனீ

[இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம்.]

எனவாங்கு [இது தனிச்சொல்.]

அருந்தமிழ்விரகநிப் பாரதந்திருந்திய
நிரைச்செழுமாளிகை நிலைதொறுநிலைதொறு
முரைச்சுடர்மறையி னோங்கியவொலிசேர்
சீர்செழுந்தழனித் திருமுகம்பொலிவுடைத்



தார்கெழுதண்டலைத் தண்பணைதழீஇக்
கற்றொருபுரிசைக் காழியர்நாத
நற்றொருகீர்த்தி ஞானசம்பந்த
நின்பெருங்கருணையு நீதியி
னன்புடையடியவர்க் கருளுவோயெனவே.[இது சுரிதகம்.] (க)

வெண்பா.

எனவேயிடரகலு மின்பமேயெய்து
மனவேயரனருளை நாடும் - புனலேய
செங்கமலத்தண்டார்த் திருஞானசம்பந்தன்
கொங்கமலத்தண்காழிக் கோ. (உ)

கட்டளைக்கலித்துறை.

கோலப்புலமணிசுந்தரமாளிகைக்குந்தளவா
ரேலப்பொழிலணிசண்பையர்கோனையிருங்கடல்சூழ்
ஞாலத்தணிபுகழ்ஞானசம்பந்தனைநற்றமிழ்மே
போலப்பலபுன்கவிகொண்டுசேவடிபோற்றுவனே. (௩)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

போற்றுவாரிடர்பாற்றியபுனிதன்
பொழில்சுலாவியபுகலியர்பெருமா
னேற்றவார்புகழ்ஞானசம்பந்த
னெம்பிரானிருஞ்சுருதியங்கிரிவாய்ச்
சேற்றுவார்புனங்காவல்புரிந்தென்
சிந்தைகொள்வதுஞ் செய்தொழிலானுன்
மாற்றநீரெமக் கின்றுரைசெய்தால்
வாசியோகுறமாதுநல்லீரே. (௪)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நலமலிதரும்புவனிநிறைசெய்புகழின்பனவ
பணிமதியணைந்தபொழில்சூழ்
பொலமதிலிரும்புகலியத்திபதிவிதம்பெருகு
புனிதகுணனெந்தமிறைவன்

பலமலிதருந்தமிழின்வடகலைவிடங்கன்பிரு
பரசமயவென்றியரிதன்
சலமலிதருங்கமலசரணிணையவென்றனது
தகுவினைகள்பொன்றும்வகையே. (௫)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வகைதருமுத்தமிழாகரன்மறைபயிறிப்பியவாசகன்
வலகலைவித்தகன்வானவின்மதியணைபொற்குவைமாளிகை
திசைதிசைமட்டலர்வார்பொழினிகழ்புகலிக்கரசாகிய
திருவளர்விப்பிரசிகாமணிசெழுமலயத்தமிழ்க்கேசரி
மிகமதவெற்றிகொள்வாரணமிடைவருடைக்குலம்யாளிகள்
விரவிருளிற்றனிநின்னெறிவினைதுயர்மொய்த்தளவேமணி
நகையெழிலிற்குமமானனைதருமையலினைக்கிலணியிவ
ளசையின்முழுப்பழியாதன்முன்னனுகவினிக்கிரியாணவே.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாணிலவும்புனலும்பயில்செஞ்சடைவண்கருணாகரனை
மலைமாதுமையோடுமிவணுவாவெனமுன்னுரைசெய்தவன்
சேணிலவும்புகழ்மாளிகைநீடியதென்புகலிக்கரசைத்
திருவாளனையெழிலருகாசனிதனைமருவாதவர்கிளைபோ
லுணிலவும்பழியோகருதாதயலாரொருகாலையுட
னசைதீர்கிலைகொலைபுரிவேடுவர்பயிறருகானதர்வெயிலிற்
கேணிலவுங்கிளிபாவையொடாயமும் யாயெனையும்மொழியக்
கிறியாலெனதொருமகள்போயுறுதுயர்கெடுவேனறிகிலனே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறிவாகியின்பஞ்செய்தமிழ்வாதில்வென்றந்த
வமணனவன்குண்டர்கழுவேறமுன்கண்ட
செறிமாடவண்சண்பைநகராளியென்றந்தை
திருஞானசம்பந்தனணிநீடுதண்குன்றி
னெறியாலமண்டின்றிமுனைநாள்சினங்கொண்டு
நிறைவார்புனக்கின்றுமகன்மேல்வருந்துங்க
வெறியார்மதந்தங்குகடவாரணங்கொன்ற
வெகுளாதரஞ்சிந்தைவிறலாருளன்பண்டே. (௮)



பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பண்டமுதசெய்தனுமைநங்கையருண்மேவுசிவஞானம்
பைந்தரளநன்சிவிகைசெம்பொனணிநீடுகிறதாளங்
கொண்டதரனும்பரபரனெங்கள்பெருமானருள்படைத்துக்
கொடுத்ததமிழைத்தவகுலத்தவர்களுக்குலகிலின்பங்
கண்டதருகந்தர்குலமொன்றிமுழுதுங்கழுவிலேறக்
கறுத்ததுவினைப்பயன்மனத்திலிறைகாதலதுவன்றி
விண்டதுவும்வஞ்சகரைமஞ்சணவுகின்றமணிமாட
வேணுபுரநாதன்மிகுவேதியர்சிகாமணிபிரானே. (௯)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பிரானைமெய்த்திருஞானசம்பந்தனை மறையவர்பெருமா
னைக், குராமலர்ப்பொழிற்கொச்சையர் நாதனைக்குரைகழலி
னைவாழ்த்தித், தராதலத்தினிலவனருணினைவொடு தளர்வுறுத
மியேனுக், கிராவினைக்கொடுவர்தநில்வந்திமற்றினிவிடிவதியே
னே. (௧௦)

பதினொருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஏனமுகத்தவபுத்திரையிந்திரசித்துமணம்புணர்வுற்ற [ர
னிழவனார்சொரிதொட்டியிலங்கலைவெட்டியிசித்தனர்ப்பட்ட
தானயிரக்கிறசீதைமடிப்பதசாதிகுடத்தொடுகண்டீர்
சக்கிரவர்த்திகள்சிக்கரமட்டுவர்தத்துவமிப்பரிசன்றே
யானபுகழ்ப்பயில்விப்ரசிகாமணியத்தகுமைப்புரையுங்கா[ரெ
ரார்பொழினீடியசண்பையர்காவலன்வண்களியேனெனியே
சோலைகளுக்குமெனக்குமெனத்தரையம்மனைகுலதுகொண்டா
டும்புருவாலிலையென்றநிலத்திடைநின்றதனுக்குகிறரே.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீர்மலிபுகலிநாதனருளொளிவிரவில்வந்தென்
வார்முலையயலேபீரமணந்தவர்தணந்துபோன
தோதரமியநும்மைச்செய்பிழையெம்மதில்லை
கார்கிரைபுரளமோதிக்கரைபொருங்கடலினீரே. (௧௨)

கலிவிருத்தம்.

கடன்மேவுபுவியோருகவிநீர்பெருமான்
றடமாடமிகுகாழித்தருபேதையருளாமற்
றிடமாகிலவனிநீறுசெழுமேனிமுழுதாடி
மடலேறியெழில்வீதிவருகாதலொழியேனே. (௧௩)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒழியாதின்புறுபொழில்சூழ்சண்பைம
னுயர்பாரான்றியதருஞானன்புக
ழெழிலாருங்கவுணியர்தீபன்றிக
ழிணையார்செங்கானிகழ்வான்விண்குயின்
பொழியாநின்றனதுளிதார்கொன்றைகள்
புகழ்மகன்றினகலைமாறென்றின
பழிமேல்கொண்டாளமர்நேரன்பொறி
மறுகேவந்தவந்தகாண்மங்கையே. (௧௪)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மங்கையிடத்தானைக்கவிதைகொடிகோட்டுமதித்தருள்செய்
தங்குபுகழ்ச்சண்பைமறைநாவலர்சைவசிகாமணிதன்
றங்கமதிற்பிரமாபுரமேவியசூழ்பொழினின்றுளர்மென்
கொங்கையுடைக்கொடியேரிடையாள்குடிகொண்டனளெம்ம
[னமே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மனங்கொண்டிந்நிறைகொண்டுகலையுங்கொண்டு
மணிநிறமுமிவள்செங்கைவளையுங்கொண்ட
தனங்கொண்டபெருஞ்செல்வந்திகழுஞ்சீர்த்திச்
சண்பையர்கோன்றிருஞானசம்பந்தற்கு
நனங்கொண்டுமெய்கொண்டுபயலைகொண்டே
நன்னுதலாளயர்கின்றாளுவேவின்று
மினங்கொண்டுவ்வைகொண்டுமேடலிர்வாளா
வென்செயநீரலர்தூற்றியெழுகின்றீரே. (௧௬)



இதுவுமது. வேறு.

எழுகுலவெற்பினைவிடநிலடக்குவ
னெறிகடலிற்புனல்குளநிலயிற்றினின்
முழுதுமொளித்திரவியையிநிலத்திடை
முடுகுவனிப்பொழுதிவையல்விச்சைகள்
கழுமலநற்பதியதிபநயிழ்க்கடல்
கவுணியநற்குலதிலகனிணைக்கழ
ழெழுதவழுத்தியபிறரொருவர்க்குறு
துயர்வருவிப்பனிதரியதோர்விச்சையே. (௧௭)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சயமிகுத்தருகரைமுருக்கியதமிழ்ப்பயிற்றியநாவன்
வியவியற்றிருமருகலிற்கொடுவிடமழித்தருள்போதன்
கயலுடைப்புனல்வயல்வளத்தகுகழுமலப்பதிநாத
னியலுடைக்கழலிணைப்பவர்க்குவினைத்துயர்போமே. (௧௮)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மேதகுந்திகழ்பூகநாகசண்பகசூத
வேரிவண்டறைசோலையாலுயர்ந்தகாழி
நாதனந்தணர்கோனெனுனைவண்புகழாளி
ஞானசுந்தரன்மேவுதக்கநினைந்தயர்வேனை
நீதியன்றனபேசும்யாயுமிந்நுவும்வாச
நீடுதென்றலும்வீணையோசையுங்கரைசேர
மோதுதெண்டிரைசேவல்சேருமன்றிலும்வேயு
மூடுதண்பனிவாடைகூடிவன்பகையாமே. (௧௯)

இதுவுமது. வேறு.

வன்பகையாமக்குன்றுடைவென்றுய்
மாமலர்வாளிப்பொருமதவேளைத்
தன்பகையாகச்சிந்தையுணையுத்
தையலையுய்யக்கொண்டருள்செய்யாய்
நின்புகழ்பாடித்தண்பணிசோரா
நின்றெழின்ஞானவென்றகநெக்கிட்

டன்பகலாமெய்ச்சிந்தையரின்பா
வம்பொழிலார்மாட்சண்பையர்கோவே. (௨௦)

இதுவுமது. வேறு.

கோவின்றிருமுகநீதொடுவருதூதுயவர்
குளிர்பைம்பொழில்வளர்கடேழ்விதியம்பரிசம்பீ
மாவிரியரிவார்தங்கையென்மருட்கிறமமண
மறவெங்குலமறிகின்றிலன்பழியச்சதவரசன்
பாவேறியமதரர்த்தமிழ்விரகன்புகலியர்மன்
பயில்வண்புகழருகாசனிபணியன்றெனின்மர்கா
டுவேரினைமடுமின்றடியடியின்படையெழுமின்
றெருகுசேனையுமவனும்படமலையும்பரிசினியே. (௨௧)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இனியின்றெழுமினிவ்வெறியுமடியடி
தொழிலும்பிறுரவையுமெல்லா
நனிசிந்தையினிவண்மிகவன்புறவெதார்
நசையுண்டதுநானுமதுவென்டீர்
புனிதன்புகலியரதிபன்புனைதமிழ்
விரகன்புயமுறமரவிந்தம்
பனிமென்குழலிலையணிமின்றயவொரு
மயலுங்கெடுவதுசரதம்மே. (௨௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சரதமனமலிபரிசம்வருவன
தளர்வில்புகலியர்திபனதிதரு
வரதனணிதமிழ்விரகன்மிகுபுகழ்
மருவுசுருதிநன்மலயினமர்தரு
விரதமுடையதினிடையினவண்மனம்
விரைசெய்குழலியையனவதரிதென
விரதமழிதரவருதன்முனமினி
யெளியதொருவகைகருதமலையனே. (௨௩)



இதுவுமது. வேறு.

அயனெடியமாலுமவரறிவரியதானவர
னருளினொடுநீடவளியிடர்முழுதுபோயகல
வயலணிதென்வீழிமிழலையினிலவுகாசின்மலி
மழைபொழியுமானகுணமதாண்மதிதோய்கனக
செயநிலவுமாடமதில் புடைதழுவுவாசமலி
செறிபொழில்சலாவிவளர்சிரபுரசுரேசன்முனி
பயனிலவுஞானதமிழ் விரகன்மறைஞானமுனை
பரமகுருநாதன்மிகுபரசமயகோளரியே. (௨௪)

இதுவுமது. வேறு.

அரியாருங்கிரிநெறியெய்வனைநீர்வந்தீ
ரறிதினிப்பயமில்லையந்திக்கப்பாற்
றெரியாபுன்பிறநெறிகளொந்தம்வாழ்விச்
சிறுகுடியின்றிரள்கேசிரமந்தீர்ந்திச்
சரியார்மென்குழலியொடும்விடியச்சென்று
தொகுபுகழ்சேர்திருஞானசம்பந்தன்றன்
வரியாரும்பொழிலுமெழின் மதிலுந்தோற்றும்
வயற்புகலிப்பதியினிதமருவலாமே. (௨௫)

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

ஆமாண்பொன்கூட்டகத்தவஞ்சொலிளம்பைங்கிளியே
பாமாலையாழ்மூரியப்பாணழியப்பண்டருள்செய்
மாமானசுந்தரன்வண்சம்பந்தமாமுனியென்
கோமான்றன்புகழொருகாலின்புறக்கூறுயே
கொச்சையர்கோன்றன்புகழ்யாவின்புறக்கூறுயே. (௨௬)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கூறதாகமெய்யடிமைதானெனையுடையகொச்சையாதிபதி
வீறதார்தமிழ்விரகன்மேதகுபுகழ்ஞானியன்பிகுவனச்
சேறதார்தருதிரள்குளக்கணசெழுமுலைக்குரியவர்சினத்
தேறதானிதழ்விஞ்ஞொண்விடிகொண்மாமுரசதிருமே. (௨௭)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுரான்புகலியரதிபன்கூர்
 தவசுந்தரகவுணியர்தஞ்சேர்
முதல்வன்புகலியரதிபன்றுண்
 முறைவந்தடையலர்நகரம்பேரா
லெதிர்வந்தனர்விறல்கெடவெம்போ
 ரெரிவெங்கணைசொரிபுரிமின்கா
ரதிர்கின்றனவிதுபருவஞ்சே
 ரலர்தம்பதிமதிலிடியின்னே. (௨௮)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மின்னுமாகத்தெழிலியுஞ்சேர்
 திருபொன்மாடப்புகலிநாதன்
றன்ஞானத்தெம்பிரான்மெய்த்
 தொகைசெய்பாடற்பதிகமன்னுள்
பொன்னுமாநற்றாளமேந்தன்
 பொருகயற்கண்டனநிறைத்தா
ளின்னுமேகிப்பொருள்படைப்பா
 னெங்ஙனேநாமென்னுமாறே. (௨௯)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாறிலாதபொடிநீறுகோலவடிவும்
 வம்புபம்புகுழலுந்தங்கசொங்கையிணையு
மூறியேறுபதிகத்தோசைநேசுதுகர்வு
 மொத்தவித்தநடையுஞ்சித்தபத்திமிசையும்
வீறதேறும்வயல்சூழ்காழிஞானபெருமான்
 வென்றிநன்றுகழலிறைஞ்சிநின்றபணியுந்
தேறல்போலுமொழியுஞ்சேல்கள்போலும்விழியுஞ்
 சிந்தைகொண்டபரிசுநன்றிமங்கைதவமே. (௩௦)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கைதவத்தாலெனவிடைக்கு
 நீவந்ததறியேனோகலதிப்பாறு



மெய்தவத்தாருயிரனைய
 திருசைவசிகாமணியைவேணுக்கோனைச்
செய்தவத்தால்விழிவாய்த்த
 செழுமலையாரவனுடையசெம்பொற்றிண்டோ
ளெய்தவத்தால்வீவெனக்கென்
 யாதுக்குநீபலபொய்யிசைக்கின்றாயே. (௩௧)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இசையையுகந்தெழுமிடறுமிதிங்கிவ
 ளிடுகரணங்களினியல்பும்வளம்பொலி
திசைதிசைதன்றியபொழில்சுலவுந்திகழ்
 சிரபுரமன்றகுதமிழ்விரகன்பல
நசையிகுவண்புகழ்பயிலுமதங்கித
 னளிர்முலைசெங்கயல்விழிநகைகண்டயின்
வசைதருமென்குலமனைமுழுதங்கொள
 மதிவளர்சிந்தனைமயல்வருகின்றதே. (௩௨)

இதுவுமது. வேறு.

வருகின்றனனென்றனதுள்ளமுழின்
 வசமேசிறுவிக்குறைகொண்டுதணித்
தருகும்புனல்வெஞ்சுரம்பானமரும்
 மறுநீயிறைபுன்னிலையாதெனின்முன்
கருகும்புயல்சேர்மதில்வண்புகலிக்
 கவுணன்பயில்செந்தமிழாகரன்மெய்ப்
பெருகுந்திருவாரருள்பேணலர்போற்
 பிழைசெய்தனைவந்ததர்பெண்கொடியே. (௩௩,

இதுவுமது. வேறு.

கொடிநீடுவிடையுடையபெருமானையடிபரவு
 குணமேமைதகவுணியர்கள்குலதீபசுபசரித
னடியேனையிடர்முழுதுமறவீசுதமிழ்விரக
 னணியாணபுகலிநகரனையானைகடலின்
முடிநீடுபெருவலைகொட்டைநூடுபுகுவன்னுமா
 முறையேவுபணிபுரிவனணிதோணிபுனைவனவை

படியாருநிகரரியவரியாருமதர்நயனி
பணைவார்மென்முலைநுளையர்மடமாதனருள்பெறினே.

இதுவுமது. வேறு.

பெறுபயன்மிசைப்புவியுளருளுவனபிற்றைமுறை
பெருநெறியளிப்பனபல்பிறவியையொழிச்சுவன
வுறுதுயரழிப்பனமுறைமைதிருவருட்பெருக
வுடையனநெறிப்புனலிலெதிர்பசுநிறுயுத்தனவு
ணறமுறுகுணச்சமணர்நிரைகழுவிறுத்தியன
நனிகதவடைத்தனதனருவிடமகற்றியன
துறுபொழின்மதிற்புறவமுதுபதியதுப்பரிய
தொழில்பலமிகுத்ததமிழ்விரகனகவித்தொகையே.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தொகுவார்பொழில்சுற்றியவான்மதிதோயுமதிற்கனமார்
தொலையாததிருப்பொழின்மாளிகைமாடநெருங்கியசீர்
மிகுகாழிமன்முத்தமிழாகரன்மேதகுபொற்புனைதார்
விரையார்கமலக்கழலேதுணையாகநினைப்பவர்தா
மகராதரநித்திலநீர்நிலையார்புவியுத்தமராய்
வரலாறுபிழைப்பினிலூழியிலக்கிதமா
தருவாழ்வுநிலைத்தெழில்சேரமராபதியிற்றவர்மா
சறரால்வினைசெற்றதன்மேலனுகாப்பிறவிக்கடலே. (கசு)

நேரிசையாசிரியப்பா.

கருமங்கேண்மதி கருமங்கேண்மதி
அருமதிப்பாண கருமங்கேண்மதி
நிரம்பியபாட லினிகனுறுந
மரும்பசிலவ்ய வலக்கனுற்றினைத்தாக்
காந்தியவுதரக் கனறழைத்தெழுவிற்
றெய்ந்துடல்வற்றிச் சின்னரம்பெழுந்தே
யிருபுகள்ளி யியற்றியகுரம்பை
புறுசெறுத்தனைய வுருவுகொண்டுள்வனை
யின்னிசைநல்லி யாழ்கமந்தனை
மன்னியவளநகர் மனைக்கடைதோறுஞ்



சென்றுழிச்சென்றுழிச் சில்பலிபெறூஉ
நின்றுழிநிலாவு வன்றுயர்போயொழிந்
தின்புற்றிருநி யெய்தாமதுதான
துள்ளத்துள்ள தாயின்மதுமலர்
வண்டறைசோலை வளவயலகவ
வொண்டிறற்கோண்மீ னுலாவுகுண்டக
முயர்தருவரைமி சையுருபுதனைத்தூக்
கடுநுதிக்கழுக்கடை யிடைதருவேலிக்
கனகப்பருமுரட் கலையக்கபாட
விலையக்கோபுர விளக்கெழில்வாயி
லொழிச்சியில்வருத்துத் திகழ்ச்சியிலோங்கு
மருசனையிஞ்சி வன்கொடியிடைந்த
செஞ்சுடர்க்கனகத் திகழ்சிலம்பனைய
மாளிகைமேலிச் சூளிகைவளாகத்
துணிவுடைப்பலபட மணிதுடைத்தழுந்திய
நல்லொளிபரந்து நயந்திகழிந்திர
வில்லொளிப்பலபல விசும்பிடைக்காட்ட
மன்னியசெல்வத்துத் துன்னியபெருமைச்
செம்மலர்மாது சேர்ந்துறைபிரியாக்
கழுமலநகர்தன் கவுணியர்குலபதி
தண்டமிழ்விரகன் சைவசிகாமணி
பண்டிதரின்பன் பரசமயகோளரி
யென்புனைதமிழ்கொண் டிரங்கியென்னுள்ளத்
தன்பினையருளிய வாண்டகைதன்புகழ்
குறைவறத்தன்சி நிறைகடைகுறுகி
நாப்பொலிநல்லிசை பாட
மாப்பெருஞ்செல்வ மன்னுதிநீயே. (கஎ)

வஞ்சித்துறை.

நீதியின்னறபுகழ்
மேதகுபூவிமன்
மாதமிழ்விரகனை
யோதவறநதியே. (கஅ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதிமுனிதாழ்வெனையிகழ்ந்தி
யுனதமணமாரமுழுவதுமதாக
வருந்திபெருமாதர்பெயரருசுருவ
மழகிஇனிப்பாலனருள்புனைவதாவ
பெறுமியிலைவீயெனடிபணிதன்மேவு
பெருமைகெடநீடுபடியொருபொன்மாட
நறைகமழுவாசவளர்பொழில்சுலாவு
நனிபுகலிநாதர்தமிழ்விரகனே. (௩௯)

ஆசிரியத்துறை.

நீமதித்தருளிவினையேன்மடநெஞ்சமே
காமதிக்கார்பொழிற்காழி
நாமதிக்கும்புகழ்ஞானசம்பந்தனென்
பூமதிக்குங்கழல்போற்றே. (௪௦)

கட்டளைக்கலிப்பா.

போற்றிசெய்தரன்பொற்கழல்பூண்டதே
புத்தியாலுந்தம்பொற்கழல்பூண்டதே
மாற்றியிட்டதுவல்லிடவாதையே
மன்னுகுண்டரைவென்றதுவாதையே
யாற்றெதிர்ப்புனலுற்றதந்தோணியே
யானைதன்பதியாவதந்தோணியே
நாற்றிசைக்கவிஞானசம்பந்தனே
நல்லநாமமுஞானசம்பந்தனே. (௪௧)

கைக்கிளைமருட்பா.

அம்புந்துகண்ணிமைக்குமாணுதல்வியர்க்கும்
வம்புந்துகோதைமலர்வாடும் – சம்பந்தன்
காமருகழுமலமனையா
ளாமிவளணங்கலளடிநிலத்தனவே. (௪௨)



பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தனமுந்துகிலுஞ்சாலிக்குவையுங்கோலக்கனமாடச்
சண்பைத்திகழ்மாமறையோன்றவமெய்க்குலதீபன்
கனவண்கொடைநீடருள்சமிதன்கமலக்கழல்பாடிக்
கண்டார்கிறைபக்கொள்ளப்பசியைக்கருதாதெம்பாண
புனைதண்டமிழின்னிசையார்புகலிக்காசைப்புகழ்பாடிப்
புலையச்சேரிக்காவீபுகுந்தாலென்சொற்புதிதாக்கிச்
சினவெங்கதமாக்களிறுவல்திந்தச்சேரிக்கோடிவந்தார்
சேரிக்குடியுய்மந்தாரிதனைச்செய்வதரியாரே. (௪௩)

இன்னிசைவெண்பா.

யாரேயெம்போலவுருடையாரினகமலத்
தாரேயுஞ்சென்னித்தமிழ்விரகன் – சீரேயுஞ்
சொற்சைவன்றன்றுரைகழற்கேமெய்ச்சி
யடிமைசெய்யப்பெற்றேனறிந்து. (௪௪)

பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறிதருமன்பொருள்சேர்பதிகம்மருண்கழன்மே
லணிதருசுந்தரமல்தமிழ்விரகன்பிறைதோய்
செறிதருபைம்பொழின்மாளிகைகவுந்திகழ்சீர்த்
திருவளர்சண்பையின்மாடலைகடலோங்கழிசே
ரெறிதிரைவந்தெழுசீனிசைதுகள்வின்றிகழ்போ
யினமுமடைந்திலகாநிட்டோடிருந்திடையா
வுறுதுயர்சிந்தையினாடுதவினைரொந்தமர்போ
லுயிருமகன்றனரோவிதுவுரைவணகுருகே. (௪௫)

கலிவிருத்தம்.

குருகணிமணிமுன்கைக்கொடியுங்கவிநிலவனு
மருகணைகுவரப்பாலரிதினிலமுழிவீண்மின்
றருகெழுமுகில்வண்மைத்தருதமிழ்விரகன்றன்
கருகெழுபொழின்மாடக்கழுமலவளநாடே. (௪௬)

இதுவுமது. வேறு.

நாடேறும்புகழ்ஞானசம்பந்தன்வன்
சேடேறுங்கொச்சைநேர்வளஞ்செய்துனை
மாடேறுந்தையல்வாடமலர்ந்தனை
கோடேறுங்கொடியாய்கொல்லைமுல்லையே. (௯௭)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முக்கண்மைகயுமைதன்மன்றுந்திருவருளை
முந்தியுறுபெரியசெந்தண்முனிவன்மிகு
நல்லபொழில்சுலவுதொல்லையணிபுகலி
நாதன்மறைமுதல்வன்வேதமலையதனில்
வில்லையிலர்க்கணையுமில்லைபகழியுமு
வேறுமிரக்கைகலேகழல்வினவுறாவர்
செல்லையிலர்விரகர்ல்பார்நழைகொணர்வர்
தோழியிவரொருவராவழிதர்வரே. (௯௮)

வஞ்சித்துறை.

வழிதருபிறவியினூறு
தொழிலமர்துயர்கெடுமிகு
பொழிலணிதருபுகலிய
னெழில்கிணையடியிறைஞ்சினே. (௯௯)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

# ஆளுடையபிள்ளையார்திருத்தொகை.

---

பூவார்திருநுதன்மேற் பொற்சுட்டியிட்டொளிரக்
கோவாக்குதலை சிலம்பரற்ற - மேவார
தழுவான்பசித்தானென் றங்கிறைவன்காட்டத்
தொழுவான்றுயர்தீர்க்குந் தோகை - வழுவாமே
முப்பத்திரண்டறமுஞ் செய்தாண்முதிராத
செப்பொத்தகொங்கைத் திருநுதலி - யப்ப
னருளாலேயூட்டுதலு மப்பொழுதேஞானத்
திரளாகிமுன்னின்ற செம்மல் - விருடாக்க
காழிமுதல்வன் கவுணியர்தம்போரே
ஊழிமுதல்வ னுவனென்றுகாட்டவல்லான்
வீழிமிழலைப் படிக்காசுகொண்டபிரான்
பாழியமணைக் கழுவேற்றினன்பாணர்
யாழைமுரித்தா னெரிவாயிடும்பதிக
மாழியுலகத் தழியாமற்காட்டினா
னேழிசைவித்தகன்வந் தேறும்வானேறுந்
தாழுஞ்சரணச் சதங்கைப்பருவத்தே
பாலையுநெய்தலும் பாடவல்லான் - சோலைத்
திருவாவடுதுறையிற் செம்பொற்கிழியொன்
றருளாலேபெற்றருளு மையன் - மருளாத
தென்னவனுடெல்லாந் திருநீறுபாலித்த
மன்னன்மருகல்விடந் தீர்த்தபிரான் - பின்னைத்தென்
கோலக்காவிற்றாளம் பெற்றிக்குவலயத்தின்
மாலக்காலத்தே மாற்றினான் - ஞாலத்து

முத்தின்சிவிகை யரன்கொடுப்பமுன்னின்று
தித்தித்தபாடல் செவிக்களித்தா - னித்திலங்கள்
மாடத்தொளிரு மறைக்காட்டிறைகதவைப்
பாடியடைப்பித்த பண்புடையா - னீடிய
திருவோத்தூராண்பனையைப் பெண்பனையாகென்னும்
பெருவார்த்தைதானுடைய பிள்ளை - மருவினிய
கொள்ளம்பூதூர்க்குழக் குவாயதுகொடுப்ப
வுள்ளமேகோலாக வூன்றினான் - வள்ளன்
மழவன்சிறுமதலை யான்பெருநோய்தீர்த்த
குழகன்குலமறையோர் கோமா - னிலவிய
வைகையாற்றேடிட்டு வானீரெதிரோட்டுஞ்
செய்கையான்மிக்க செயலுடையான் - வெய்யவிட
மேவியிறந்தவயில் வேற்கண்மடமகளை
வாவென்றழைப்பித்தும் மண்ணுலகில்வாழ்வித்த
சீர்நின்றசெம்மைச் செயலுடையா - னேர்வந்த
புத்தன்றலையைப் புவிமேற்புரள்வித்த
வித்தகப்பாடல் விளம்பினான் - மெய்த்தொளிசேர்
கொச்சைச்சுரன்றன் கோமானைத்தான்செய்த
பச்சைப்பதிகத் துடன்பதினாறாயிரம்பா
சித்தப்பொருளை விளக்கவலபெருமான்
முத்திப்புகலி முதல்வன்றிருவடியை
பத்திக்கும்பத்தநெறி ஞானசமதென்னவல்லான்
சித்தித்திரிபிறவிச் சாகரத்துளாழாமே
பத்திக்கனித்தெப்பம் பார்வாழத்தந்தபிரான்
பத்திச்சிவமென்று பாண்டிமாதேவியொடு
கொற்றக்கதிர்வேற் குலச்சிறையுங்கொண்டாடி
மற்றைப்பொழுதத்தமணரிடுவெந்தீயைப்
பற்றிச்சுடுகபோய்ப் பாண்டியனையென்னவல்லான்
வர்த்தமானீச்சரங் கழல்வணங்கிவாழ்முருகன்
பத்திமையீசன் பதிகத்தேகாட்டினா
னத்தனருகில நக்கருமணமுடையான்
அத்தமொழிந்தருகலித் தியவாயினனுமலி



நித்திலப்பூண்முலைக்கு நீண்டதடங்கண்ணினுக்குங்
கொத்தார்கருங்குழற்குங் கோலச்செங்கைம்மலர்க்கு
மத்தாமரையடிக்கு மம்மென்குறங்கினுக்குஞ்
சித்திரப்பொற்காஞ்சி செறிந்தபேரல்குலுக்கு
முத்தமிழ்நூலெல்லா முழுதுணர்ந்தபிள்ளையார்க்
கொத்தமணமிதுவென் றோதித்தமர்களெல்லாஞ்
சித்தங்களிப்பத் திருமணஞ்செய்காவணத்தே
யற்றைப்பொழுதத்துக் கண்டேனிற்கப்
பெற்றவர்களோடும் பெருமணம்போய்ப்புக்குத்த
னத்தனடியே யடைந்தானமுதே.

திருச்சிற்றம்பலம்.

---

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி

அருளிச்செய்த

# திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை.

---

புலவெருடாத் திரிமனத்தவர், பொறிசெய் காமத் துரிச டக்கய - புனித சேசத் தொடுத்த மக்கையர் புணர்வி லுழற் றுகாரசெயக்குடார், கவலு குழைப் பிணிகெ டுத்தொளிர் சுடு வெண்ணீறிட் டமணர் தெற்றிய - கனவிய குன்றுமப் புரமெரித்த வர் கழலி லேபட் டிடுக வத்தின, குலனென மாயப் பிறவி யை த்தரு முணர்வி லாவப் பெருமை யக்கினை - யொழிய வாய்மை த் கவிதை யிற்பல வுயரி யாகப் பொருள்ப ரப்பிய, வளனின் ஞானக் கடலி டைப்படி மமிர்த யோகச் சிவவொ ளிப்புக - வடிய ரேமுக் கருளி னைச்செயு மரைய தேவத் திருவ டிக்க ளே. (௧)

திருநாவுக் கரசடி யவர்காட்டத் தறிந்தி - தெளிதேனைத் திளியசொன் மடவா ருர்ப்பசி முதல், வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில - வசியாகச் சொலுமவை அகளாகக் கரு திமெய், யுருஞானத் திரண்மன முருகாநெக் கழுதலை ஓர முலராப் படைகையி லுடையானைத் தனதமிழ், குருவா கக் கொடுசிவ னடிசூடத் திரிபவர் - குலகார்பக் கொடிபடு கு டாயோனிக் குழியிலே. (உ)

குழிந்து சுழிபெறுநா பியின்கொண் மயிர்நிரையார் - கு ரும்பை முலையிடையே செலுந்துகைன் மடவார், கழிந்த பொ சியதிலே கிடந்திரவு பகலீ - யனைந்தயரு மதுகி யகிலே கொ ண்மனமே, கழிந்த கழிசெநா ளினைக்கிதய செகவே - கசிந்தி தய மெழுந்தழ தரும்பதிக நிதியே, பொழிந்தருள் திருநா வி லெங்களா விதையே - புரிந்தறிந்து மிதாவே மருந்தபிறி தி லையே. (௩)

இலைமா டென்றிடர் பரியா நிற்பிர னேயொத் தாறுறு அறெழுல, நிலையா திச்செல்வ மெனவே கருதுவர் நீள்சன மக் கட விடைபிறப்புக் கலையார் சென்றா னெறியா ருங்கரை யனைப் பெறுவர்கள் வண்ணத்தின், சிலைமா டத்திருக்கு புகழா மு றுறை திருநா வுக்கர செனப்போரே. (௪)

என்பிட் டிக்கட்டிய விக்கப்பைக் குரம்பையை - யிங்கி ட்டுக் கட்டிவிடுமெனக் குத்தைக் குக்செலுயிது, முன்பிட்டுச் சு ட்டுவ ருந்திக் கெத்தீக் கென - மொய்ம்புற்றுக் கற்றறி வின் றிக்கெட் டுச்சில, வன்பட்டுப் பிட்டர்க நின்புறுப் புத்தியை - வருந்தித்தக கத்தவி முந்தெச்சுத் தட்டுவ, நன்பர்க்குப் பத்தி னர் சென்றாச்சிக் கின்றில ரந்தக்குக் கிக்கிளா மிக்கதித் த மித்தவரே. (௫)

பித்தரை பதையாத கொத்தைக்கை யனார்தோ - பெட்டியு னா செய்குகெறா சுட்டியுமல சமணர்வாயர், மைத்தாசை பதை யாத சித்தமொடு சிவபூசை - கற்றம தியனதேறுசேரமித்தாக



புகழ்நூல, முத்திபெறு திருவாள னெறதுணையின் மிதவாமல் - கற்றுணையில் வருமாதி, பத்தரசு, வசைதிர வைத்தருள் த மிழ்மாலை - பற்பலவு மவையோத நறபதிக மிதானே. (௬)

பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி - பரசமய ராசான பரமகா ரணனீக, னதிகைமா நகர்மேவி யருளினா லமண்மூட - ரவர்செய்வா தைகடரு மனகன்வா கழல்சூடி, னியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை - நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்கால, மதியரா குவர்சடையரா குவர்வான முடையரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே.( )

தாமரைநகு மகவிதழ் தருவன சாய்பெறுசிறு தளிரினை யனையன - சார்தருமடி யவரிடர் தடிவன தாயினுமலு கருணை யையுடையன, தாமதியினை யொருபது கொடுசெய்த சோதி யின்மிருகதிரினை யுடையன - தாயனதவ முனிவர்க டொழு வன தோமறுகுண நிலையின தலையின, வேமசினை மறைகளி ன் முடிவுக ளாலடிபணி சொடுதொடர் வரியன - வேலைறு முன்னர் வொடுசிவ வொளியினை யூறியகசி வொடுகவி செய்தபு க, ழாமரசுய ரகவொரு மவருள் ஞாரசதி கையினராளருளவ - ருமாசுகொ ளரசெனை வழிமுதலா ளரசுத னடியினை ம லர்களே. (அ)

அடிநாயைச் சிவிகைத் தவிசேறித் திரிவித் தறியாவப் ப சுவைச் சிறியோர்பாற் செறியுங், கொடியேனைக் கருணைத் திரு நாவுக் கரசைக் குணமேருத் தனைவிட் டெனையாமொட் டகல் விற், படியாரப் பெறுகர் கார்தாகச் சொலுமப் பினநாவைப் பெருகப் பொருளாகக் கருதஞ், செடிகாயத் துரிகைச் சம ணருடர்க் கெழவுற நதுதேவர்க் கரிதசிவலோகக் கதியே. ( )

சிவசம் பத்திடைத் தவஞ்செய்து திரியும் பத்தியிற் சிறந் தவர் - இவகன் கற்றசிட் டன்வெண்தொளிர் திகழும் பைம் பொடித் தவண்டனி, கவசம் புக்குவைத் தரன்கழல் கருதுஞ் சித்தனிற் குவன்றிய - கரணங் சட்டுதற கடுத்துள ளங்கம் புக்க

நற்கவித்திய, னைவசம் புத்திலிற் [illegible] [illegible] வைத்த [illegible] [illegible] பண்டி [illegible] [illegible] கொள்பற அவர்க்கு, பன்றை [illegible] [illegible] [illegible] நின் [illegible] தொடர்ந்தவர் [illegible] [illegible] பரி சொன் [illegible] [illegible]. (௪௦)

நன்மைதரு [illegible]
வென்றமையா [illegible]
வென்றமையா [illegible]
பொன்றமைவா [illegible]

திருச்சிற்றம்பலம்.

---

116982